
சத்திய முழக்க வெளியீடு

# துவக்கத்தின் துவக்கம்

சத்திய முழக்கம் ஊழியங்கள்,



Rev. S.A. சுந்தரராஜ்,

அசெம்பிளி ஆஃப் காட் சபை

வேலூர்-632 006.

# துவக்கத்தின் துவக்கம்

(ஆதியாகமம் - ஓர் மேலோட்டம்)

**Rev. S.A. சுந்தரராஜ்**
A.G. Church, Vellore - 6.

**சத்திய முழக்க வெளியீடு**
22, முதலாம் குறுக்குச் சாலை,
மேற்கு காந்தி நகர்,
வேலூர் - 632 006.

முதல் பதிப்பு 2008

பிரதிகள் 1000

Rs.75/-

**இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியையும்**
**ஆசிரியரின் முன் அனுமதியின்றி**
**மறுபதிப்பு செய்யக் கூடாது.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | துவக்கங்களின் துவக்கம் | 8 |
| 2. | புதிய சிருஷ்டிப்பு | 13 |
| 3. | மனுசனில்லை | 25 |
| 4. | இரட்டை மரங்களும், கனிகளும் | 28 |
| 5. | ஏற்ற துணை | 32 |
| 6. | தேவன் சொன்னது உண்டோ? | 36 |
| 7. | ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்? | 39 |
| 8. | என்னால் சகிக்கமுடியாது | 41 |
| 9. | கடவுளோடு நடைப்பயிற்சி | 45 |
| 10. | ஜீவப் பேழை | 49 |
| 11. | நோவாவைக் கர்த்தர் நினைத்தருளினார் | 52 |
| 12. | கர்த்தரின் உடன்படிக்கை | 55 |
| 13. | கூடார ரகசியம் தெருவிலே | 59 |
| 14. | ஐக்கிய நாடுகளும் பிரிந்த உலகமும் | 62 |
| 15. | சாத்தானின் திட்டமும் செயற்பாடும் | 65 |
| 16. | உன்னத அழைப்பு | 69 |
| 17. | நீதிமானின் தடுமாற்றம் | 72 |
| 18. | தூரத்து பச்சை | 75 |
| 19. | இருதயக் கூடாரம் | 78 |
| 20. | நித்திய ஆசாரியத்துவம் | 79 |
| 21. | ஆபிரகாமிற்கு வந்த சோதனையும், சாதனையும் | 81 |
| 22. | தேவனின் வாக்குத்தத்தம் | 84 |
| 23. | அடையாளம் தேடும் ஆபிரகாம் | 87 |
| 24. | குறுக்கு வழி | 91 |
| 25. | பாதை மாறுதல் வாதையை உண்டாக்கும் | 94 |

26. கர்த்தருக்கு முன்பு உத்தமனாயிரு 97
27. கர்த்தர் நம் வீட்டிற்கு விருந்துக்கு வந்தால் 100
28. விருத்தசேதன உடன்படிக்கை 103
29. மன்றாட்டின் மாண்பு 106
30. நரகமாகும் நகரம் 110
31. லோத்தின் பரிதாப முடிவு 113
32. மீண்டும் தவறுகின்ற ஆபிரகாமும் அரவணைக்கும் ஆண்டவரும் 117
33. மாம்சீகமே, நீ போய்விடு 122
34. தண்ணீரும், ஜீவத்தண்ணீரும் 126
35. உன் கண்ணைப் பிடுங்கிக் கொடு 131
36. மரணம் நம்மைப் பிரிக்கும் வரையிலும் 138
37. இதோ மணவாட்டி வருகிறாள் ! 144
38. ஆபிரகாமிற்கு நமது இறுதி அஞ்சலி 152
39. சாப்பிட்டதினால் தம்பியான அண்ணன் 156
40. தேவன் காட்டும் இடத்தில் தங்கியிரு. 160
41. தடுமாறும் தகப்பனும் தவறிப்போகும் தாயும் 166
42. நள்ளிரவு ஓர் நல்லிரவு 170
43. ஏமாற்றிய யாக்கோபு ஏமாந்தான் 174
44. நொண்டி நடக்கும் ஓட்டக்காரன் 177
45. குடும்பம் ஜாக்கிரதை ! 182
46. யாக்கோபே, நீ எழு... போ 187
47. சுவரில் படரும் கொடி 194
48. இனிவரும் ஆய்வுகள் பற்றி ஓர் முன்னோட்டம் 203
49. ஆதியாகமும் தியானமும் 205
50. விஞ்ஞானமும் ஆதியாகமும் 215

## என்னுரை

வேத சத்தியங்கள் அனைத்திற்கும் ஆதாரமாகவும் அஸ்திபாரமாகவும் அமைந்திருப்பது ஆதியாகமமே. ஆகவே ஆதியாகமத்தை மிகவும் கவனமாய்ப் படிக்க வேண்டும் என்பது என் ஆசை. ஆதியாகமத்தில் எத்தனையோ முத்துகள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை அள்ளி எடுக்க, சத்தியத்தின் ஆழத்தில் நாம் மூழ்கி எழ வேண்டும். ஆகவே ஆதியாகமத்தை மூன்று பிரிவுகளில் ஆராய என் மனம் என்னைத் துண்டியது.

அவையாவன,

1. ஆதியாகமத் தியானம்
2. ஆதியாகமமும் விஞ்ஞானமும்
3. ஆதியாகமம் ஓர் மேலோட்டம்

முதலாவது ஆதியாகமம் ஓர் மேலோட்டம் என்ற தலைப்பில் இந்த நூல் உருவாகியுள்ளது. புத்தகம் கையடக்கமாக இருக்க வேண்டுமென்ற அவாவினால் முதலாவது இந்த நூலை வெளியிடுகிறோம். இந்த நூல் ஓர் சராசரி கிறிஸ்தவர் எளிதிற் விளங்கிக் கொள்ளவே எழுதப்பட்டிருக்கிறது. ஆதியாகமத்தின் முக்கிய சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. எல்லா சம்பவங்களின் விபரங்களும் இந்த நூலில் இல்லை. ஏனெனில் இது ஓர் மேலோட்டம்.

யோசேப்பு மிகவும் விரிவான ஆய்வின் பாத்திரம். அந்த ஆய்வை இந்த நூலில் சேர்த்தால் கையடக்க நூல் என்ற இலக்கை கைவிட நேரிடும். ஆகையால் யோசேப்பின் வரலாற்றை ஆதியாகமத் தியானம் என்ற நூலில் காண்போம். ஆதியாகமம் பற்றி உள்ளத்தில் எழும் எல்லா கேள்விகளுக்கும் இந்த நூலில் பதிலில்லை என்றாலும் அன்றாடக ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தந்திருக்கிறோம்.

எப்படியும் இந்த நூல் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம். இதனை எழுத எனக்கு ஞானம், நேரம், சக்தி இவை அனைத்தையும் தந்த என் கர்த்தர் இயேசுவுக்கு என் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

துவக்கத்தின் துவக்கத்தை ஆவிக்குரிய விருந்தாக அல்ல நல்ல மருந்தாக உங்களுக்கு அனுப்புகிறோம். பக்க விளைவுகள் ஏற்படாது என்று உறுதி சொல்கிறோம்.

**Rev. S.A. சுந்தரராஜ்**
**A.G. Church,**
**Vellore - 6.**

## எங்கள் நன்றி

ஆதியாகமம் ஓர் மேலோட்டம் என்ற இந்த நூலை எழுத எங்களுக்கு முழு பொருளாதார உதவியைச் செய்த குவைத் தமிழ் கிறிஸ்தவ திருச்சபைக்கு முதலாவது நன்றி கூறுகிறோம்.

கைப்பிரதிகளை எழுதுவதிலும் பிழைகளைத் திருத்துவதிலும் மிகவும் உதவியாயிருந்த சகோதரி அன்னாள் காமாட்சிக்கும், சகோதரர் யோசுவாவிற்கும் எங்கள் நன்றி.

இதைப் புத்தக வடிவிற்குக் கொண்டு வர மிகவும் பிரயாசை எடுத்த போதகர் சாம் நப்தலிக்கும், அவரது துணைவியார் பியூலா சாமிற்கும் நன்றி கூறுகிறோம்.

இதனை அழகாக அச்சடித்துக் கொடுத்த சிவகாசி ஓசன்னா பிரிண்டர்ஸ்க்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**- சத்திய முழக்கம்.**

# துவக்கங்களின் துவக்கம்

ரொம்ப காலத்திற்கு முன்னால் ஓர் ஊரில் என்று சிறு பிள்ளைகள் ஆவலாய் கதைகேட்க விரும்புகிறார்கள். இப்பொழுது இங்கே என்ன நடக்கிறது என்பதை அறிந்துக் கொள்வதைவிட பன்னெடுங் காலத்திற்கு முன்பு என்ன நடந்தது என்பதை அறிய மனிதன் மிகவும் வாஞ்சையோடு இருக்கிறான்.

ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்பு இந்தப் பூமி துவங்கியது. மனிதன் வாழத் துவங்கினான், பாவம் துவங்கியது, பாவத்திற்கும் அதன் கொடுமைகளுக்கும் தப்பும் வழியும் துவங்கியது.

இவை எல்லாம் துவங்குமுன் கடவுள் இருந்தார். துவக்கமே இல்லாதவர் கடவுள். எல்லாவற்றையும் துவக்கிய கடவுளுக்கு துவக்கமே இல்லை.

ஆவியான கடவுளுக்கு இந்த உலகம் தோன்றுமுன் ஓர் ஆவி உலகம் இருந்தது. அதில் கோடிக்கணக்கான தூதர்களும் பணிவிடை செய்யும் ஆவிகளும் இருந்தன. இந்தத் தூதர் கூட்டத்தின் தலைவன்தான் லூசிபர் என்ற பிரதான தூதன்.

கடவுளின் அரசாட்சிக்கு அடித்தளமே அன்புதான். அவரது ஆட்சி பழுதில்லா நீதியின் ஆட்சி. அவருடைய ராஜ்ஜியத்தில் எல்லா சிருஷ்டிகளும் ஒருமித்து இணைந்து, அவரது மகிமையைத் துதித்து, தொழுது மகிழ்ந்திருந்தன.

எல்லா சிருஷ்டிகளும் கடவுளின் வல்லமையையும் துதியையும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. ஆதியிலே கடவுள்

உண்டாக்கின பூமியில் தூதர்களும் ஆவிகளும் நிறைந்திருந்தனர். அவற்றில் மிகப் பெரிய தூதன்தான் லூசிபர்.

இவன் துவக்க நாட்களில் பாவமும் யாதொரு பழுதும் இல்லாதவனாயிருந்தான். ***"நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள்களில் உன் வழிகளில் குறையற்றிருந்தாய்"*** (எசே 28 : 11 - 15) என்று வேதம் லூசிபரைக் குறித்துச் சொல்கிறது. கடவுள் தனக்குத் தந்த சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்த விரும்பினான் லூசிபர்.

கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக கடவுளால் மிகவும் கனப்படுத்தப்பட்டவன் லூசிபர். மிகுந்த அதிகாரத்தைப் பெற்று குறையின்றி, பிழையின்றி கர்த்தரின் கட்டளைகளை நிறைவேற்றின இவனது உள்ளத்தில் பொல்லாப்பு துவங்கியது.

விடிவெள்ளி என்று அழைக்கப்பட்ட இந்த உன்னத தூதன் ஏன் இருண்ட பள்ளத்தாக்கில் விழுந்தான்? ஏன் அவன் கடவுளுக்கு விரோதமாக எழுந்தான்? ஏன் பாவம் செய்யத் துவங்கினான்? இந்தக் கேள்விகளுக்கு வேதம் மௌனமாகவே இருக்கிறது. லூசிபர் மிகவும் அழகானவன், அந்த அழகினால் அவன் இருதயம் மேட்டிமையாயிற்று. (எசே. 28 : 17)

கொஞ்சம் கொஞ்சமாக லூசிபர் தன்னைக் கடவுளுக்கு சமமாக உயர்த்த விரும்பினான். நான் வானத்துக்கு ஏறுவேன், கடவுளுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று லூசிபர் தன் இருதயத்தில் சிந்திக்க ஆரம்பித்தான். (ஏசா. 14 : 13, 14)

ஆனால் இந்த உன்னத இடத்தை கிறிஸ்துவுக்காக பிதா வைத்திருந்தார். கிறிஸ்து மாத்திரமே பிதாவோடு சமமாக சிங்காசனத்தில் அமர முடியும். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்திருக்கிறேன் (வெளி. 3 : 21) என்று இயேசுவைப்போல எவரேனும் கூறமுடியுமா?

கடவுள் தனக்குக் கொடுத்திருக்கும் கிருபை, ஞானம், ஆற்றல், வரங்கள் இவற்றினால் கர்த்தரைத் தொழுது கொள்வதற்குப் பதிலாக கடவுளின் ஸ்தானத்தையே அடைந்து விடலாம் என்ற பெருமையின் எண்ணத்தில் தன்னையே அவன் மறந்து விட்டான். தன் பேராசையால் குருடாகி விட்ட அவன் கடவுளின் ஞானத்தையே கேள்வி கேட்க ஆரம்பித்தான். கடவுளின் சித்தம் அவனுக்குக் கசப்பாகி விட்டது. ஆகவே கடவுளுக்கு விரோதமாக ஆரவாரமாக அவன் எழுந்தான்.

கர்த்தர் தனக்குக் கிருபையாகத் தந்த ஈவுகளைப் பெருமையாக அவன் எடுத்துக் கொண்டபடியால் தானும் கடவுளாக மாற முடியும் என்று மனதார அவன் நம்பினான். மற்ற எல்லா தூதர்களும் அவனுக்கு அடங்கியிருந்தபடியால் லூசிபருக்கு தானும் கடவுளின் சிம்மாசனத்தில் உட்கார முடியும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

மோசேயின் சரீரம் உச்சியில் அடக்கம் பண்ணப்படும்பொழுது, மோசேயின் உடலைக் குறித்து தர்க்கம் செய்யும்பொழுது மிகாவேல் தூதன் லூசிபரைப் பார்த்து, "அப்பாலே போ சாத்தானே" என்று சொல்வதற்குப் பதிலாக முன்பு தனக்குத் தலைவனாக இருந்த அவனைப் பார்த்து "கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக" (யூதா 9) என்று சொன்னதிலிருந்து லூசிபர் எவ்வளவு அதிகாரம் பெற்றவனாக இருந்திருப்பான் என்பது விளங்கும்.

லூசிபர் தன் துர்க்குணத்தினால் சாத்தானாக மாறிவிட்டான். கடவுள் அவனைச் சாத்தானாகப் படைக்கவில்லை. அவன் சாத்தானாக மாறி கடவுளுக்கு விரோதியாக மாறி இன்றும் கடவுளுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் எதிராகவே கிரியை செய்து வருகிறான். கடவுளின் சமுகத்தை விட்டு விலகி தூதர்களிடம் சென்று அவர்களில் மூன்றில் ஒரு பங்கைத் தன்னிடமாகச் சேர்த்துக் கொண்டான்.

இது எப்படி முடிந்தது? கடவுளிடம், சத்தியத்திடம் நம்பிக்கை வைக்கத் தவறும்பொழுது வஞ்சகத்தின் ஆவி பொய்யை நம்பும்படி ஆளுகை செய்கிறது. அதனால் அன்று தூதர்களும் இன்று மனிதர்களும் பொய்யை நம்புகின்றனர்.

இப்படியாக துவக்க உலகில் பாவம் துவங்கியது. பூர்வ காலத்தில் கடவுளுடைய வார்த்தையினாலே வானங்களும் பூமியும் உண்டாயினவென்பதையும் அந்தத் துவக்ககால உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார மக்கள் அறியாமலிருக்கிறார்கள். (2 பேது. 3 : 56)

வானங்களைச் சிருஷ்டித்து பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்தார் என்று (ஏசா 45 : 8) வேதம் சொல்கிறபடியால் துவக்கத்தில் பூமி வெறுமையாகவும் ஒழுங்கின்மையாகவும் படைக்கப்படவில்லை, நன்றாகப் படைக்கப்பட்ட உலகம் இப்படி வெறுமையாக மாறிவிட்டது.

ஏனெனில் சாத்தானின் பாவம், கீழ்ப்படியாமையின் நிமித்தம் கடவுள் அவன் தங்கியிருந்த பூமி, அவனது ஏதேன் தோட்டம் எல்லாவற்றையும் அழித்துப் போட்டதினால் பூமி வெறுமையும் ஒழுங்கின்மையுமாக மாறிவிட்டது. இந்தத் துவக்க கால அழிவைத்தான் பேதுரு இரண்டாம் நிருபத்தில் கூறுகிறாரே தவிர, நோவாவின் காலத்தில் நடைபெற்ற ஜலப்பிரளயத்தை அவர் குறிப்பிடவில்லை என்று கூறுவாரும் உண்டு.

துவக்க கால உலகம் அரைகுறையாகப் படைக்கப்பட்ட ஒன்று அல்ல. முழுமையாக, அருமையாகப் படைக்கப்பட்ட உலகமே அது. இந்த உலகில் கர்த்தரின் தோட்டமான ஏதேன் இருந்தது. சகல விதமான இரத்தினங்களும் அணிந்து லூசிபர் மேளவாத்தியங்களோடு நாகசுரங்களோடு கர்த்தரை ஆராதித்துக் கொண்டிருந்த உலகமே துவக்கக்கால உலகம். அது கடவுளின் கோபத்தால் அழிக்கப்பட்டு உருவமற்று வெறுமையாயிருந்தது. இருள் அதை மூடியிருந்தது. (ஆதி. 1 : 2)

இந்த இருள் சூழ்ந்த உலகத்தின் மேல் ஆவியானவர் அசைவாடினார். பிதாவின் வாயினின்று வல்லமையின் வார்த்தைகள் புறப்பட்டன. வெறுமை விலகியது. மீண்டும் உலகம் உருவெடுக்க

ஆரம்பித்தது. இதுவே துவக்கத்தின் துவக்கம். பரிசுத்த சாயல் துவங்கிய உலகிலேயே பாவம் துவங்கியது. பரிசுத்த ஆராதனை துவங்கிய காலத்திலேயே சாத்தானின் தொழுகையும் துவங்கியது. கடவுளின் சாயலில் மனிதக்குலம் துவங்கிய பொழுதே கீழ்ப்படியாமையும் துவங்கியது.

ஜீவாத்துமா துவங்கிய காலத்திலேயே ஆத்தும மரணமும் துவங்கியது. மனிதன் கடவுளோடு உறவாடத் துவங்கிய காலத்திலேயே சாத்தான் மனிதனோடு உறவாடத் துவங்கினான். மிருகங்கள் துள்ளி ஓடத்துவங்கிய காலத்திலேயே ஓர் இணை மிருகங்களின் சாவும் துவங்கியது.

மனிதன் கடவுளைத் தேடத்துவங்கிய காலத்திலேயே கடவுளின் சத்தத்தைக் கண்டு ஒளியும் காலமும் துவங்கியது. சாத்தானின் வெற்றி துவங்கிய காலத்திலேயே அவனது அழிவின் மார்க்கமும் துவங்கியது.

# புதிய சிருஷ்டிப்பு

(அதிகாரம் - 1)

***"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான்"*** (2 கொரி. 5: 17) என்று வேதம் எடுத்துரைக்கிறது. ஆம்! கிறிஸ்தவன் முற்றிலும் புதிதாகவே ஆண்டவருக்குள் பிறந்து விடுகிறான். அவனுடைய பழைய சுபாவங்கள் எல்லாமே அறவே ஒழிந்துவிடுகின்றன. ஆனால் கிறிஸ்துவுக்கு வெளியே அவன் ஒழுங்கின்மையும் வெறுமையுமாக இருக்கிறான்.

இந்த உலகமும் ஆதியிலே ஒழுங்கும் நிறைவுமாகவே படைக்கப்பட்டது. மனிதனும் கடவுளின் சாயலிலே படைக்கப்பட்டான். ஆனால் பூமி ஒழுங்கின்மையையும் வெறுமையையும் அடைந்தது போல் மனிதனும் தன் ஆதி மேன்மையை இழந்துவிட்டான்.

***"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது."*** (ஆதி. 1 : 2) அதுபோலவே மனிதர்கள் எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள். ***"நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை"*** (சங். 53 : 3) என்ற நிலையை மனுக்குலம் அடைந்தது. பூமியானது கடவுளுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது. ***"பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது"*** (ஆதி. 6:11) என்று பூமியின் அவலத்தை வேதம் சரியாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஏன் இந்த வெறுமை, அவலம், கொடுமை? பிரதான தூதனாகிய லூசிபரின் கீழ்ப்படியாமையால் கடவுள் தன் படைப்பைத் தண்டித்தார். கீழ்ப்படியாமை நம் வாழ்க்கையை அலங்கோலமாக்கி விடும். ***"நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர்***

***என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்"*** (ரூத் 1:21) என்று நகோமியின் வேதனைச் சரித்திரம் அழுகிறது.

ஏன் நகோமிக்கு இந்த நிலை? கர்த்தர் அவளை நிறைவுள்ளவளாக வைத்திருக்கும்பொழுது வாழ்க்கையின் நெருக்கத்தில் சபிக்கப்பட்ட மோவாபை நோக்கி அவள் கால்கள் விரைந்து நடந்தது கீழ்ப்படியாமையல்லவா? அந்தக் கீழ்ப்படியாமை அவளைத் தனித்தவளாக்கியது.

எந்த நெருக்கத்திலும் கர்த்தரைப் பற்றிக் கொள்கிறவர்களை அவர் வெறுமையாக விடமாட்டார். எகிப்தில் இஸ்ரவேலர் அடிமைத் தனத்தில் நெருக்கப்படும் வேளையில் அவர்கள் எகிப்தோடு பின்னிப் பிணையாமல் கர்த்தரையே நோக்கினார்கள். தங்கள் நெருக்கத்தில் அன்னிய தேவர்களிடம் முறையிடவில்லை.

ஆகவே அவர்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கும் பொழுது, ***"நீங்கள் போகும்பொழுது வெறுமையாய்ப் போவதில்லை"*** (யாத். 3:21) என்று கர்த்தர் அவர்களுக்கு வாக்களித்தார். அப்படியே அவர்கள் எகிப்தை விட்டு புறப்படும் வேளையில் பொன்னுடைமைகளையும் வெள்ளியுடைமைகளையும் வஸ்திரங்களையும் எகிப்தியரிடம் ஏராளமாய்ப் பெற்றார்கள்.

சகோதரனே சகோதரியே, நீங்கள் இன்று கடவுளின் நல்வார்த்தைகளைக் கைக்கொண்டும் உங்கள் வேலை ஸ்தலத்தில் நீதி கிடைக்காமல், உத்தியோக உயர்வு கிடைக்காமல், சரியான சம்பளம் கிடைக்காமல் நெருக்கப்படுகிறீர்களா? கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். சரியான நேரத்தில் கடவுள் உங்கள் விடுதலையாக்குவார்.

இருண்ட உலகின் மீது ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். வெளிச்சம் உண்டாகக்கடவது என்றதும் பூமி பிரகாசித்தது. இருள் விலகி ஓடியது. இரட்சிக்கப்படுமுன் மனிதனும் அந்தகாரமாயிருந்தான். மனிதன் அந்தகாரத்திலல்ல; அந்தகாரமாய் இருந்தான். (எபே. 5:8) பாவத்தினால் மனிதனும் இருளாகவே மாறிவிட்டான். அவன் மனசாட்சியும் அந்தகாரமாயிற்று.

இந்த ஒழுங்கற்ற மனிதர்களை வெளிச்சமாக மாற்ற ஆவியானவர் தொடர்ந்து அசைவாடுகிறார். ஆவியானவர் மனிதனை முற்றிலும் புதிய படைப்பாகவே மாற்ற விரும்புகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் எந்தவிதமான சடங்காச்சாரங்களும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம் (கலா. 6 : 15) என்று வேதம் உறுதியாய்ச் சொல்கிறது. இந்தப் புதிய சிருஷ்டியை உலகம் உங்களில் காணுகிறதா?

கர்த்தர் ஆதியில் உலகை மறுபடைப்பாக மாற்றிய விதத்தைப் பார்த்து நாமும் புது படைப்பாக மாறுவோம். சீர்குலைந்த உலகை கடவுள் ஆறு நாள்களில் சீர்ப்படுத்திய வரலாற்றைப் பார்ப்போமா?

## 1. முதலாம் நாள்

***"முதல் நாளில் வெளிச்சம் உண்டாகக்கடவது"*** (ஆதி. 1:3) என்று கர்த்தர் கட்டளையிட்டார். உடனே வெளிச்சம் உண்டாயிற்று. இந்த முதல் நாள் உன் வாழ்க்கையிலும் தோன்ற வேண்டும். இந்த முதல் நாள் வெளிச்சத்தின் நாள்.

***"மனிதனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபம்."*** (நீதி. 2:23) இந்தத் தீபத்தை ஆவியானவர் கர்த்தரின் வார்த்தைகளால் பிரகாசிக்கப்பண்ணுகிறார். இந்தத் தீப வெளிச்சத்தில் மனசாட்சி பிரகாசம் அடைகிறது. அது கர்த்தரின் வழிகளையே நோக்குகிறது. இந்தத் தீபம் அணைந்து விட்டால் மனிதன் அந்தகாரமாய் மாறிவிடுவான். ***"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்."*** (சங். 18 : 18)

அவமானம், தோல்வி, வறுமை என்று உங்கள் வாழ்க்கை இருளாயிருக்கிறதா? கர்த்தர் உங்கள் விளக்கை ஏற்றுவார். முதலாவது உங்கள் ஆவியாகிய தீபத்தை ஒளிரப் பண்ணுவார். வாக்குத்தத்தங்களை வார்த்தைகளை விசுவாசத்துடன் உங்கள் இருதயம் ஏற்றுக் கொள்ளும்பொழுது உங்கள் தீபம் பிரகாசிக்கிறது. உங்கள் இருள் வெளிச்சமாகிறது.

உங்கள் மனசாட்சி வெளிச்சமாயிருந்தால் உங்கள் சொல், செயல், நடை, உடை, பாவனைகளெல்லாம் வெளிச்சமாயிருக்கும். உங்கள் மனசாட்சி எப்படி இருக்கிறது? என் மகள் சொல்வதைத்தான் கேட்பேன், என் மருமகன் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று ஒருசார்பாக உங்கள் மனசாட்சி சாய்ந்து விட்டதா? சமூகப் பிரச்சனை, ஆலயப் பிரச்சனை, குடும்பப் பிரச்சனை இவற்றில் ஒரு சாராருக்கு மட்டும் உங்கள் செவிகள் திறந்திருக்கின்றனவா? அப்படியாயின் உங்கள் மனசாட்சி இருண்ட மனசாட்சி.

கர்த்தரின் வருகையில் மரித்திருப்போமானால் நாம் உயிர்ப்பிக்கப்பட்டு, மறுரூபமாவோம். உயிரோடிருந்தால் அப்படியே மறுரூபமாக்கப்படுவோம் என்பது வேத சத்தியம். ஆனால் கர்த்தரின் வருகையைப் பற்றிய நம்பிக்கை மாத்திரம் ஒருவனை மறுரூபப்படுத்தாது. இந்த நம்பிக்கையினிமித்தம் இதனால் நான் எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்க பிரயாசப்படுகிறேன் (அப். 24 : 16) என பவுல் தூயமனசாட்சியோடு உயிர்த்தெழதலின் நம்பிக்கைக்குக் காத்திருக்கிறார்.

நீங்கள் கர்த்தரின் வருகையில் காணப்பட உங்கள் ஆரவார ஆராதனையும், ஓடிஓடி செய்த ஊழியமும், உங்கள் பாடல் தாலந்துகளும், பிரசங்க முழக்கங்களும் உங்களுக்கு உதவி செய்யா. கிறிஸ்து இயேசுவுக்குள் குற்றமற்ற மனசாட்சியோடு வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருந்தால் மட்டுமே அவர் வருகையில் நாம் காணப்பட முடியும்.

இந்த நல்மனசாட்சி எனும் தீபத்தை நீங்கள் தள்ளி விடுவீர்களானால் உங்கள் வாழ்க்கைக் கப்பல் எதிர்ப்புகள் எனும் பாறைகளில் மோதி சேதமடைந்து, பிரச்சனை என்னும் ஆழ்கடலில் மூழ்கிவிடும். (1 தீமோ. 1 : 19)

**2. இரண்டாம் நாள்** வச. 7,8

ஆகாய விரிவை உண்டு பண்ணி மேலே இருக்கும் தண்ணீருக்கும் பூமியில் இருக்கும் தண்ணீருக்கும் கர்த்தர் பிரிவு உண்டு பண்ணினார்.

ஜனக் கூட்டத்தை தண்ணீர் என்று வேதம் குறிப்பிடுகிறதுண்டு. ***"திரளான தண்ணீர்கள் மேல்"*** என்று வெளி 17:1 ல் குறிப்பிடப்படும் தண்ணீர்கள் உலக மக்களைக் குறிக்கின்றன. வேதம் உலக மக்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறது.

உலகில் கிறிஸ்துவோடு எழுந்த மக்கள் உண்டு. இவர்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு எழுந்தவர்கள். இவர்கள் கடவுளுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளையே தேடுவார்கள். (கொலோ. 3 : 12) உலக வழிகளையே நம்பி அணைத்துக் கொண்டவர்கள் தாழ்விலிருந்து உண்டானவர்கள். அவர்கள் உலகத்திலிருந்துண்டானவர்கள். (யோ. 8 : 23) இவர்கள் உலகத்தார், மாம்சத்துக்குரியவர்கள், இம்மைக்கான நம்பிக்கை மாத்திரம் கொண்ட பரிதாபமான மக்கள்.

இப்படி பிரிந்திருக்கும் ஜனக்கூட்டத்தில் நீங்கள் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்? உலகைத் தெய்வம் என்று வணங்குகிறவர்கள் இந்த உலகிற்குச் சொந்தமான கீழ்மக்கள். பிதாவைத் தன் கடவுளாகத் தொழுகிறவர்கள் விண்மக்கள். இவர்கள் மேன்மக்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வுலகத்தில் வாழும்வரை அன்னியனும் பரதேசியுமாயிருக்கிறான்.

**3. மூன்றாம் நாள்** வச. 9

கடவுள் மூன்றாம் நாளில் வெட்டாந்தரையை உண்டாக்கினார். வெட்டாந்தரை என்றால் பொதுவாக ஜீவனில்லாத இடம் என்று பொருள். புல், பூண்டுகள் இல்லாததினால் எந்த வாழும் பிராணிகளும் இல்லாத இடமே வெட்டாந்தரையாகும். ***"நிர்மூடர்கள் தங்கள் பாதக மார்க்கத்தில் நடப்பதால் கர்த்தர் ஆறுகளை அவாந்தர வெளியாகவும் நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாகவும் மாற்றுகிறவர்"*** (சங். 107 : 33) என்று வேதம் சொல்கிறது.

நம்முடைய வாழ்க்கையில் கடவுள் சில வனாந்தரங்களை உண்டாக்குகிறார். அவை தண்டனையின் விளைவுகள் அல்ல, அவை கடவுளின் நோக்கங்களின் விளைவுகள்.

அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்பொழுது அது வறண்ட இடங்களில் தன் இளைப்பாறுதலைத் தேடி அலைந்து அது கிடைக்காமற்போகவே, தான் விட்டு வந்த மனிதனின் வாழ்க்கையே மிகவும் வறண்டதாகக் கண்டு மேலும் ஏழு ஆவிகளோடு மீண்டும் அவனிடமே குடியேறிவிடும். இந்த வறட்சி பரிசுத்தம், தூய்மை, அன்பு, பக்தி, நம்பிக்கை எனும் எந்த ஆவிக்குரிய கனி மரங்களோ, செடி கொடிகளோ இல்லாத வறண்ட இடம்.

அசுத்தம், குரோதம், மாய்மாலம், அவநம்பிக்கை எனும் முள் மரங்களும், விஷச் செடிகளும் நிறைந்த இடமே பிசாசு விரும்பும் வனாந்தர இடம். இந்த மர நிழல் பிசாசுக்கு இளைப்பாறுதல். உன் இருதயம் பிசாசு தேடும் இளைப்பாறும் இடமா? உன் வாழ்க்கை வனாந்தரமாக மாறிவிடும்.

வஞ்சக குணம் என்ற நரி உன் வனாந்தரத்தில் ஊளையிட்டுக் கொண்டே இருக்கும். துர்க்குணங்கள் நிறைந்த மிருகங்கள் அலையும் வனாந்தரமாக உன் வாழ்க்கை அமைந்து விடக்கூடாது.

இன்னொரு வனாந்தரம் கடவுள் உண்டாக்கும் வனாந்தரம். ***"இதோ உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை"*** (யோ. 14 : 30) என்று இயேசு தன் வாழ்க்கை, பிசாசுக்கு எதுவுமே இல்லாத வனாந்தரமாகவே இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார். நம் வாழ்க்கையும் பிசாசுக்கு இளைப்பாறுதலைக் கொடுக்காத வனாந்தரமாக "உனக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று வனாந்தரத்தின் சத்தம் தொனிக்கும்படி இருக்க வேண்டும். இப்படி உங்கள் வாழ்க்கை சாத்தானுக்கு வனாந்தரமாக இருக்கிறதா? நீங்கள் பாக்கியவான்கள்.

மற்றபடி சாத்தான் உங்கள் வாழ்க்கையை வனாந்தரமாக மாற்றி வறுமை, வியாதி, துன்பம் இவை நிறைந்திருந்தால் பயப்படாதீர்கள். ***"உங்கள் வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப் போலச்***

***செழிக்கும்."*** (ஏசா. 35:1) ஆம்! உங்கள் பின்னிலமை முன்னிலமையிலும் ஆசீர்வாதமாக இருக்கும். ஆகவே வனாந்தர மார்க்கத்தில் நேசர் இயேசுவின் மேல் சார்ந்து கொண்டு நட.

கடவுள் அனுமதிக்கும் வனாந்தரங்கள் பாலும் தேனும் ஓடும் நாட்டிற்கு உங்களை நடத்தும் ஆசீர்வாதப் பாதைகளாகிவிடும். God often digs well of joy with spade of sorrows.

மூன்றாம் நாளில் கடவுள் உண்டாக்கின வெட்டாந்தரைக்கு பூமி என்னும் பெயர் உண்டு. பூமியானது புல், மரம், கனி மரங்கள் இவற்றை மூன்றாம் நாளில் முளைப்பித்தது. இவற்றை ஆவிக்கேற்ற கண்ணோட்டத்தில் பார்ப்போம்.

**புல் :**

காட்டுப்புல் மிகவும் அற்பமானதொன்று. ஆனால் புல்லின் பூக்கள் ராஜ உடைகளிலும் மேன்மையாக இருக்கின்றன. அற்பமான புல் உன்னத கடவுளின் கவனத்தை ஈர்க்குமெனில் அவரது சாயலில் படைக்கப்பட்ட உங்களை எத்தனையாய்க் கவனிப்பார். காற்றில் அசையும் புல் மனிதனுக்குச் சொல்லும் செய்தி, 'கவலைப்படாதீர்கள்'!

**மரங்கள் : ஒலிவ மரம்**

ஒலிவ மரம் மிகவும் அழகான மரம். கடவுள் உண்டாக்கிய மனிதர்களில் தேவ மனிதர்கள் ஒலிவ மரத்தைப் போன்றவர்கள் அதாவது மிகவும் அழகானவர்கள். தேவ மனிதர்களிடம் காணப்படும் அழகு அவர்களது புறத்தோற்றமல்ல.

கர்த்தரின் நற்செய்தியை அறிவிக்கிறவன் ஒலிவமரத்தைப் போலிருப்பான். அவனிடம் காணப்படும் அழகு அவன் பாதங்களே. (ஏசா. 52 : 7) பாடு, உபத்திரவம் இவற்றுக்கு நடுவே அவன் ஊடுருவிச் செல்வது ஆவிக்குரிய அழகை வெளிப்படுத்துகிறது.

**கேதுரு மரம் :**

இந்த மரம் உறுதியானது. ***"நீதிமான்... லீபனோனிலுள்ள கேதுருவைப்போல வளருவான்."*** (சங். 92 : 12) கேதுரு மரம்

மிகவும் உயரமாக வளரக்கூடியது. கர்த்தருடைய பிள்ளையும் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உயரமாக வளருவான். ஆகவே ஒவ்வொரு தேவப்பிள்ளையும் ஓர் கேதுரு மரமாகும். கேதுரு விசுவாசத்தின் கெம்பீரத்திற்கு அடையாளம். கடவுளின் மலையில் நீங்கள் ஓங்கி வளரும் கேதுரு மரங்களாயிருங்கள்.

**தேவதாரு :**

இது மேலோங்கி வளரும் மிகப் பசுமையான மரம். இந்த மரம் பரலோக வாஞ்சைக்கு அடையாளமாயிருக்கிறது. ***"நம் குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. அங்கிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்"*** (பிலி. 3:20) என்ற வாஞ்சையே தேவதாரு மரமாகும்.

**கனிகள் :**

இரட்சிக்கப்பட்ட பின்பு நாம் எவைகளினின்று மனம் திரும்பினோமோ அவை மனம் திரும்பிய கனிகள். பொய் சொல்லாமை, கோபப்படாமை, இச்சியாமை என்பன மனம் திரும்பிய கனிகள். (மத். 3 : 8) திருடாமை மனம் திரும்பிய கனி, குறைவுள்ளோர்க்கு உதவுவது ஆவியின் கனி, பாவம் செய்யாமை மனம் திரும்பிய கனி, நீதி செய்வது ஆவியின் கனி.

மூன்றாம் நாளின் படைப்பு நம் வாழ்வில் நிறைவேறினால் நீதி, பரிசுத்தம் இவைகளில் வளர்ந்து பரலோகத் தரிசனம் பெற்று மகிமையாய் வாழ்வோம்.

## 4. நான்காம் நாள்

நான்காம் நாளில் கடவுள் சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவற்றையெல்லாம் படைத்தார். இந்த படைப்புகளை நம் வாழ்வில் சந்திக்க வேண்டும். நாம் சந்திக்க வேண்டிய சூரியன், சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் அல்ல. எல்லா சிருஷ்டிகளின் மேல் அதிகாரமுள்ள நமது கர்த்தராகிய இயேசுவே நம் மேல் உதிக்க வேண்டிய நீதியின் சூரியன். இந்தச் சூரியனையே நாம் சந்திக்க வேண்டும்.

***"என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்"*** (மல். 4 : 2) என்று கர்த்தர் வாக்களித்த சூரியன் நம்முடைய இயேசுவே. இந்தச் சூரியன் உலகில் உள்ள எந்த மனுஷனையும் பிரகாசிக்கும் மெய்யான ஒளி, நான்காம் நாளில் படைக்கப்பட்ட சூரியன் ஒளி தந்து ஒழிந்துப்போம். ஆனால் நீதியின் சூரியன் நித்திய சூரியன். இந்தச் சூரிய வெளிச்சம் மனிதனின் ஆவி, ஆத்துமாவைப் பிரகாசிப்பிக்கும்.

எப்பொழுது நாம் பிரகாசிக்கப்படுவோம்? பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்துக்கிடக்கிற கூட்டத்தாரோடு ஐக்கியமாய் தூங்குகிற நீ எழுந்திரு. பாவ உணர்வடை. மனம் திரும்பு, ***"அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்."*** (எபே. 5 : 14)

ஆம் ! அசமந்தமான, சோம்பேறியான வாழ்க்கையை விட்டு எழு. அதிகாலையில் எழுந்து கர்த்தரின் சமுகத்தைத் தேடு. அப்பொழுது நீதியின் சூரியன் உன் மேல் உதிக்கும். இயேசு என்கிற சூரிய வெளிச்சத்தில், சத்தியத்தைக் காண்போம்.

**சந்திரன் :**

சந்திரனுக்கு இயற்கையான வெளிச்சம் இல்லை. சூரிய வெளிச்சத்தினால் சந்திரன் பிரகாசிக்கிறது. இந்த வெளிச்சமே சாட்சியின் ஜீவியம். ***"இப்பொழுதோ நீங்கள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்"*** (எபே. 5 : 8) என்று வேதம் சொல்லவில்லையா?

நாம் வெளிச்சமாயிருந்தால், சாட்சியின் வாழ்க்கை உடையவர்களாயிருந்தால் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்கள் நமது வெளிச்சத்தைக் கண்டு மறைவிடத்து அவலட்சணங்களை, கொடுமைகளைச் செய்ய வெட்கப்படுவார்கள். ***"நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்"*** என்று வேதம் சொல்கிறது. மனிதனின் அந்தரங்க வாழ்க்கை அனலாயிருக்கும்படி நாம் பூமிக்கு உப்பாக இருக்கிறோம். (மத். 5 : 13,14) (உப்புப்பாளம் அனல் மூட்ட உதவும்.)

விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட நாம், இரட்சிப்பின் கிரியைகளைக் காட்ட வேண்டும். இந்தக் கிரியையாகிய வெளிச்சத்தைக் கண்டு, காணாத பிதாவை மகிமைப்படுத்துவார்கள். (மத். 5 : 16) இந்த வெளிச்சத்தை நீங்கள் கொடுக்கிறீர்களா?

**நட்சத்திரங்கள் :**

ஆபிரகாம் அண்ணாந்துப் பார்த்து, வானிலே ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைக் கண்டு அவற்றைத் தன் சந்ததியின் அடையாளமாக விசுவாசித்தான். பல கோடி நட்சத்திரங்களை சந்ததிகள் என்று விசுவாசியாமல் சந்ததி என்று ஒருமையில் விசுவாசித்தான். ஏனெனில் அந்த சந்ததி கிறிஸ்துவே. ஆகவே கிறிஸ்துவைப் பெரிய நட்சத்திரமாக ஆபிரகாம் கண்டான்.

கடவுளின் பிள்ளைகளாகிய நாமும் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்போம். ***"பலரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும், என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்"*** (தானி. 12 : 5) என்று சத்தியம் சாட்சி கூறுகிறபடி நாம் ஜீவிக்கிறோமா?

மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. ஆம்! நம் மகிமையின் ஊழியங்கள் வித்தியாசமாயிருக்கும். நாளானது அதை விளங்கப்பண்ணும். அந்த நாளில் நம் மகிமைக்கேற்றப் பலனைக் கர்த்தர் நமக்குத் தருவார்.

**5. ஐந்தாம் நாள் :** வச. 20, 21

கர்த்தர், ***"பூமியின் ஜலமானது நீந்தும் ஜீவ ஜந்துக்களையும் பறக்கும் பறவைகளையும், பூமியானது நடமாடும் மிருகங்களையும் பிறப்பிக்கக்கடவது"*** என்றார்.

ஆவியின் சிந்தனையில் ஜலம் கடவுளின் வார்த்தை. ஜலமானது சாதாரணமான மீன்களையும் பிறப்பிக்கும். ஆகாய விரிவில் பறக்கும் உன்னதமான பறவைகளையும் பிறப்பிக்கும். அதேபோல் வியாதியில் கிடக்கும் மனிதனைச் சுகமாக்கும் சாதாரண

செயலையும், மரித்தோரை உயிர்ப்பிக்கும் உன்னத செயலையும் கர்த்தரின் வார்த்தைகள் செய்து முடிக்கும்.

ஆகவே பரிசுத்த ஆவியினால் வேத வார்த்தைகளை அனுப்புங்கள். அற்புதம் நடக்கும். ஆகவே கர்த்தரின் வார்த்தைகள் ஜீவ வசனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ***"இந்த ஜீவவசனங்களைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவை ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாம்."*** (நீதி 4 : 22) இப்படி வேத வசனங்களைக் கொண்டு அற்புதங்களை உருவாக்கும் அனுபவம் உங்கள் வாழ்க்கையை அலங்கரிக்கட்டும்.

பூமி என்பது கர்த்தரின் பாதப்படி (ஏசா. 66:1) இந்த உலகின் மிருக ஜீவன்களை பூமியாகிய அவரது பாதப்படி உருவாக்கிற்று. சிங்காசனத்திலிருக்கும் கர்த்தரின் பாதபடியினால் உலகின் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்கள் தோன்றின. பாதம் அவரது வல்லமை, ஆளுகை இவைகளைக் குறிக்கின்றது. கொடிய மிருகங்களும் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

கர்த்தரின் பாதத்தில் நாம் நிற்கும்பொழுது அவருடைய பராக்கிரமத்தை, மாட்சிமையை, வல்லமையைக் காண்கிறோம். உலகின் எந்தக் கொடுமைக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. கர்த்தரின் பாதத்தில் அடைக்கலம் தேடுவோம். அங்கே அவரது வல்லமை உண்டு. அந்த வல்லமை நம்மைக் காக்கும்.

**6. ஆறாம் நாள் :** வச. 26

ஆறாம் நாளில் கர்த்தர் மனிதனைப் படைத்தார். கடவுளின் முகம், கால், இடுப்பு இங்கிருந்தெல்லாம் மனிதன் தோன்றினான் என்றும் முகத்தில் தோன்றினவன் பார்ப்பனன் - உயர் சாதியென்றும், பாதத்தில் தோன்றியவன் பள்ளன் தாழ்ந்த சாதியென்றும், மனிதர்களை உயர்வு, தாழ்வு என்று பிறப்பிலே பிரிக்கும் சமூகக் கொடுமைக்கு சாவுமணி அடிக்கும் சத்தியமே கடவுள் மனிதனைத் தன் சாயலில் படைத்தார் என்பது.

கடவுளின் சாயல் பரிசுத்தம். கடவுளின் ரூபம் திரித்துவம். மனிதனும் ஆதியில் பரிசுத்தத்தில் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற திரித்துவத்தில் படைக்கப்பட்டான். கடவுள் மீது அன்பு கூருவோருக்கு சகலமும் நம்மைக்கேதுவாக நடைபெறுகிறது என்கிற சத்தியத்தின் ஆழத்தை சராசரி மனிதன் அறிந்துக் கொள்வதில்லை.

தெருக்கூத்தில் பல சம்பவங்களை நடித்துக்காட்டிய பின் கடைசியில் சுபம் என்று காட்டப்படுவது போல எல்லாமே சுபமாக முடிந்துவிடும் என்றே மனிதன் நம்புகிறான். ஆனால் வேதம் சுட்டிக் காட்டும் உண்மை முற்றிலும் வித்தியாசமானது. எல்லாமே நன்மையாக மனிதன் எண்ணுவதுபோல முடிவதில்லை.

ரோமர் 8:28-ல் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று முடிகிறது. அது என்ன நன்மை என்று ரோமர் 8:29 கூறுகிறது. தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதே அந்த நன்மை. நம்முடைய பாடுகள், வேதனைகள், கஷ்டங்கள் எல்லாமே நம்மை இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக உருவாக்கிவிடும் என்பதே பவுல் கூறும் சத்தியம்.

ஏதேன் தோட்டத்தில் ஆதி மனிதன் இழந்த ஆதி தேவனது சாயலை, கிறிஸ்துவுக்குள் நாம் திரும்பப் பெற்றுவிடுகிறோம். முந்தின ஆதாமில் நாம் இழந்ததைப் பிந்தின ஆதாமின் மூலம் நாம் பெற்றுக் கொள்கிறோம்.

***''நான் விழிக்கும்பொழுது உமது சாயலால் திருப்தியாவேன்''*** (சங். 17 : 5) என்பதின் பொருள், மறுமையில் நான் கண்விழிக்கும் பொழுது என்னில் உமது சாயலைக் கண்டு உலகில் நான் பட்ட பாடுகள், உபத்திரவங்களை மறந்து திருப்தியாவேன் என்பதே.

இத்தகைய மனிதன் நம்மில் உருவாகுவதே கடவுளின் படைப்பின் திட்டம். இந்த மனிதனே கிறிஸ்து இயேசுவுக்குள் தேறியவன். இவனே புதிய சிருஷ்டி. இந்தச் சிருஷ்டியை உடையவன் நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பான்.

# மனுசனில்லை

(அதிகாரம் - 2)

***"கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை, நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை."*** (ஆதி. 2 : 5)

நிலம் செழிக்க வானத்து மழை அவசியம். மழைபெய்தால், பெருகிவரும் தண்ணீரைத் திருப்பிவிட, நிலத்தைப் பண்படுத்த மனிதன் இல்லையே! ஆகவே கர்த்தர் பூமியின்மேல் மழையைப் பெய்யப்பண்ணவில்லை. ஆண்டவரின் கிரியையின் பலனை அனுபவிக்க மனிதன் இல்லாதபடியால், பல ஆசீர்வாதங்களைக் கடவுள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்.

ஏன் ஆதியில் மழை இல்லை? நிலத்தைப் பண்படுத்த இன்னும் மனிதன் படைக்கப்படவில்லை. ஆகவே மழை இல்லை.

மனிதன் உண்டான பின்பே, மனிதனுக்கு வாழ்க்கைத் துணை உண்டாக்கப்பட்டது. அவன் உண்டான பிறகே, ஆண்டவன் மழையைக் கட்டளையிட்டார்.

இன்று பரலோகம் அனுப்ப விரும்பும் ஆசீர்வாதத்தைப் பூமி பெற்றுக்கொள்வதற்கு, மனிதன் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்.

சகோதரனே! கடவுளின் சித்தம் உன்னை எங்கு இருக்கும்படி கட்டளையிடுகிறதோ அங்கே நீ இல்லாவிட்டால், கடும் பிரச்சனைகளும், வேதனைகளும் உண்டாகும்.

அன்று யுத்த களத்தில் தாவீது இல்லை. ***"மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படும் காலம் வந்தபொழுது, தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்."*** (2 சாமு 11:1) இருக்கவேண்டிய இடத்தில் தாவீது இல்லாதபடியால், அவன் வாழ்க்கைச் சரித்திரம் வேதனைக் காவியமாக மாறிவிட்டதே. இருக்க வேண்டிய இடத்தில், அவன் இல்லாதபடியால், இச்சை அவன் இதயத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டதே. "யுத்தத்திற்குப் போ" என்று கடமை கட்டளையிடும்பொழுது, "படுத்து கண்ணுறங்கு" என்று மனமிட்ட கட்டளைக்குத் தாவீது கீழ்ப்படிந்து இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமற்போனானே. அது சாபத்திற்கும், பாவத்திற்கும் வழி திறந்துவிட்டதே

மாலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும், அவன் இருக்க வேண்டிய இடம் தியான அறை அல்லவா? அந்தி வேளையில் ஆண்டவரின் சமுகத்தில் அல்லவா அவன் இருக்க வேண்டும்? ஈசாக்கு சாயங்கால வேளையில் தியானம் பண்ண (ஆதி. 24-63) என்று பரிசுத்தவான்களுக்கு நேரம் குறிக்கப்பட்டிருக்கிறதே. தாவீது தவறிப் போய் விட்டான்! சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையில் உலாத்தினான். (2 சாமு. 11:2)

உப்பரிகையில் உலாத்துவது தவறல்ல, ஜெபவேளையில் தியான நேரத்தில் அவன் அப்படிச் செய்தது தவறு. ஜெபத்தைத் தள்ளிவிட்டு வேதவாசிப்பை உதறிப்போட்டு விட்டு, மனிதன் நடக்கும் நடைகள், பாதாளத்தின் வாசலுக்கு வழிநடத்திவிடும். உப்பரிகையில் வழி தப்பி நடந்த தாவீது, ***"உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்"*** (சங். 51:12) என்று அழுது புலம்பும் நிலையை அடைந்து விட்டானே!

சகோதரனே! இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழந்து விட்டாயா? ஆவியின் அனலை இழந்து விட்டாயா? கடவுள் கட்டளையிட்ட இடத்தில் நீ இருக்கவில்லையா? உடனே எழுந்து விடு.

மழை இல்லாத காலத்தில் மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது. (ஆதி 2:5) ஆனால் இந்த மூடுபனி போதாது. மழை வேண்டும்.

மூடுபனியில் மனிதன் திருப்தி அடையமாட்டான். பயிர் வளர, பூமி செழிக்க மழை வேண்டும். மழை பெய்ய மனிதன் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்.

இருக்க வேண்டிய இடத்தில் லோத்து இல்லாதபடியால் வாக்குத்தத்த ஆசீர்வாதமான மழை பெய்யவில்லை. சோதோமின் ஆசீர்வாதமான மூடுபனியை அவன் நம்பினான். காலக் கதிரவன் வருகையால், அந்த மூடுபனி விலகிப் போயிற்று.

பரிசுத்த ஆவியின் மழை உன் மீது பெய்ய வேண்டும். ஆனால் நீயோ கர்த்தரின் அழைப்பிற்குள் இல்லையே. மாம்சீகத்தில் நீ இருக்கும்வரை இந்த ஆசீர்வாத மழை பெய்யாதே. சொற்பமான மூடுபனியில் திருப்தி அடையாதே.

தூரதேசத்து தவிடு கிடைத்திருந்தால், இளையகுமாரன் அன்னிய நாட்டிலேயே சங்கமம் ஆகியிருப்பானே. அவன் கையிலிருந்த தவிட்டைப் பறித்து எறிந்தவுடன் தானே அவனுக்குப் புத்தி தெளிந்தது.

தவிட்டை ஏன் பறித்து எறிந்தார்? அவன் பூர்த்தியான சாப்பாட்டைப் பெறுவதற்காக. இன்று நீ ஆசையாய்ப் பற்றியிருக்கும் சில ஆசீர்வாதங்களைக் கடவுள் பறித்துவிட்டாரே, ஏன் தெரியுமா? அவை வெறும் தவிடும், உமியும். உனக்காக கர்த்தர் அருமையான பந்தியை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நீ இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டுமே.

# இரட்டை மரங்களும், கனிகளும்

(அதிகாரம் - 2 : 9-17)

***"தோட்டத்தின் நடுவில் ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும், பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார்."*** (ஆதி. 2:9)

மனுக்குலம் முழுவதற்கும் ஓர் அறைகூவலாக விளங்கும் இரண்டு மரங்கள் ஏதேன் தோட்டத்தில். ஒன்று ஜீவ மரம், மற்றொன்று அறிவு மரம். தேவனை அறிகிற அறிவு அல்ல, நன்மை தீமை எவையென்று அறியும் அறிவு. இவை ஆதி பெற்றோர்களுக்கு முன்பு மாத்திரமல்ல, இன்றும் மனிதனுக்கு முன்பாக நிற்கின்றன.

எந்த மரத்தின் கனியைப் புசிக்கிறோமோ அந்த கனியைத் தரும் மரத்தையே நாம் சார்ந்திருப்போம். நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கும் பாவங்கள் எவை என்று இந்த மரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நன்மை, தீமை அறியும் கனியைக் கர்த்தர் சோதனைக்காக வைக்கவில்லை. அதாவது ஆதாம், ஏவாள் அந்தக் கனியைச் சாப்பிடுவார்களா, மாட்டார்களா என்று சோதித்துப் பார்க்க, அந்த மரத்தை ஏதேன் தோட்டத்தில் வைக்கவில்லை, அந்தக் கனியைச் சாப்பிடவே கூடாது என்ற கட்டளையோடுதான் அந்த மரத்தைக் கர்த்தர் படைத்தார். ஆகவே அதைச் சோதித்துப் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை.

அந்த மரத்தின் அருகே அவன் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. அதை ***"நீ புசிக்கும் நாளில் நான் உன்னைக் கொன்றுபோடுவேன்"*** என்று கர்த்தர் ஆதாமைப் பார்த்து சொல்லவில்லை. 'புசிக்கும் நாளில் நீ சாகவே சாவாய்' என்றுதான்

சொன்னார். ஆகவே மரணம் கடவுளிடமிருந்து வரவில்லை அந்தப் பழத்திற்குள்ளிருந்துதான் மரணம் வந்தது.

அந்தப் பழத்திற்குள் மரணத்தை வைத்தது கடவுள்தானே? இல்லை, பழத்திற்குள் நன்மை, தீமை அறியும் அறிவைக் கர்த்தர் வைத்தார். இந்த அறிவு தான் மரணத்தைக் கொண்டு வந்தது. இந்த அறிவு பகுத்தறிவு. இது நல்லதில்லையா? இதையும் கர்த்தர் தானே அந்தப் பழத்திற்குள் வைத்தார்?

எல்லாமே நல்லது என்றிருக்கும்பொழுது, தீமையை அறியும் அறிவு மனிதனுக்குத் தேவையே இல்லை. மேலும் அது தேவையெனில், அது தேவைப்படும்பொழுது கர்த்தரே கொடுப்பார். குறுக்கு வழியில் அதனை ஆதாம் பெற்றிருக்க வேண்டிய அவசியமே இல்லை.

எது நன்மை, எது தீமை என்று அறியும் அறிவுதான் நியாயப்பிரமாணம். செய் அல்லது செய்யாதே என்பது நியாயப் பிரமாணத்தின் கட்டளை, நியாயப்பிரமாணம் கிறிஸ்துவாகிய ஜீவமரத்தை மறைக்கிறது.

இன்று மனிதன் நற்கிரியைகளினால் பரலோகம் அடையலாம். அதாவது தீமையை விட்டுவிட்டு, நன்மையே செய்வதால், இறைவனை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையே இந்த நன்மை, தீமை அறியும் கனி. இந்தக் கனி மரணத்தையே உருவாக்குகிறது.

நன்மை தீமை அறியும் அறிவினால், நன்மை எது என்று மனிதன் கண்டு கொள்வதால், மனிதன் நன்மையே செய்கிறானா? தீமை எது என்று கண்டுக் கொண்டதால் மனிதன் தீமையை விட்டு விலகி விட்டானா? இல்லையே. நான் விரும்புவதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன் என்ற நிர்ப்பந்தமான மனுஷனாகத்தானே அவன் இருக்கிறான்? (ரோ. 7:15)

இன்றும் மனிதன் வேதாகமத்தின் உபதேசங்களைத் தேடிப்பிடித்து அதைத் தன் வாழ்க்கையில் நிறைவேற்றுகிற வேத

அறிவிலே நேரத்தைச் செலவழிக்கிறான். வேத அறிவு எழுத்தின் வல்லமை. எழுத்து கொல்லும். ஆனால் இயேசுவோ உயிர்ப்பிக்கிற ஆவியானவர். இயேசுவாகிய ஜீவ விருட்சத்தைத் தள்ளிவிட்டு, நன்மை தீமை எனும் உபதேசங்களாகிய மரத்தின் கனியையே மனிதன் நாடுகிறான். ஆகவே மனிதனின் தலை நிறைவாகவும், இதயமோ வெறுமையாகவும் இருக்கிறது. மனிதனின் ஆத்துமா வேத எழுத்துக்களில் உலாவி வந்தாலும், அவன் ஆவி கிறிஸ்து எனும் ஆவியில் தங்கியிருப்பதில்லை. ஆகவே கிறிஸ்தவன் வேதப் பண்டிதனாக இருக்கிறான். தேவப் பிள்ளையாக இருக்கத் தவறி விடுகிறான். பிரமாணங்களை நிறைவேற்ற மனிதன் துடிக்கிறான். ஆனால் பிரமாணங்களைத் தந்த இயேசுவோடு உறவைத் துண்டித்து விடுகிறான்.

நியாயப்பிரமாணத்தில் மிகவும் வைராக்கியமானவன் பரிசுத்த பவுல். நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன் (பிலி. 3:6) என்று தன்னை மேன்மையாகச் சொல்லும் பவுல், ***"பாவிகளில் பிரதான பாவி நான்"*** என்றே தன்னை விளங்கிக் கொள்கிறான். ஆம்! நன்மை, தீமை எனும் அறிவாகிய கனி பவுலை மரணத்திற்குள் தள்ளியது. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு வந்தார் என்ற நம்பிக்கையான ஜீவ விருட்சத்தின் கனியே பவுலுக்கு ஜீவனாக விளங்கியது.

வேதப் புத்தகம் நமது இலக்கு அல்ல. வேதப் புத்தகத்தின் நாயகனான இயேசுவே நமது இலக்கு. எனக்கு இயேசு வேண்டாம், அவருடைய மலைப்பிரசங்கமே போதும் என்றார் காந்தியடிகள். அதாவது நன்மை, தீமை அறியும் கனி எனக்குப் போதும் என்கிறார் காந்தி. அதனால் அவருக்கு ஒரு லாபமும் இல்லை. கிறிஸ்துவை அறிவதே நித்திய ஜீவன். ***"எழுத்து கொல்கிறது; ஆவியோ உயிர்ப்பிக்கிறது."*** (2 கொரி 3:6)

அப்படியெனில் எழுத்தே வேண்டாமா? நன்மை தீமை அறியும் அறிவு மனிதனுக்கு மரணத்தை மட்டுமே தரமுடியும். பாவி என்று உணர்ந்த மனிதர்களெல்லாரும் விடுதலை பெற்று

விட்டார்களா? வெறும் பாவ உணர்வு மனக்கிலேசத்தையும் முடிவில் மரணத்தையுமே உருவாக்குகிறது. ஆவியினால் வேத எழுத்துக்களை ஆராய்ந்தால், கிறிஸ்துவாகிய ஜீவனைக் காணமுடியும். ஆவியின் உதவியின்றி வேதத்தை வாசித்தால், நாம் இரட்சிப்பின் வஸ்திரமில்லாமல் நிர்வாணிகளாக இருக்கிறோம் என்பதை மாத்திரம் வேதம் நமக்கு உணர்த்தும். நாமோ கடவுளை விட்டு ஓடி ஒளிந்துக்கொள்ள முயற்சிப்போம்.

போலியான எழுத்துக்கள் உண்டு, போலியான வரங்கள் உண்டு. ஆனால் ஆவியின் கனியாக கிறிஸ்தவரில் போலியாக ஒன்றையுமே உருவாக்க முடியாது. அந்தந்த மரம் அதனதின் கனியைப் பிறப்பிக்கும். நன்மை, தீமை எனும் மரத்தின் கனி கேட்டின் மகனான அந்திக்கிறிஸ்து, ஜீவ விருட்சத்தின் கனி இயேசுகிறிஸ்து.

எழுத்தைப் பின்பற்றி பலி செலுத்தினவன் காயின், ஆவியைப் பின்பற்றி பலி செலுத்தினவன் ஆபேல். காயீன் நன்மை, தீமை அறியும் கனியைப் புசித்தான். ஆபேல் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்தான்.

நீங்கள் எந்த மரத்தின் நிழலில் நிற்கிறீர்கள்?

# ஏற்ற துணை

(அதிகாரம் - 2:18-25)

***"பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லது அல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்."*** (ஆதி. 2:17)

மனிதன் சிந்திக்கும் ஆற்றல், உணர்வுத்திறன் இவையோடு பிறந்தவன்தான். ஏற்ற துணையை ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாக இவையிரண்டும் தேவை. ஆதாம் மனநிலையில் ஓர் குழந்தையைப்போல இருந்தான். அந்த நிலை பரலோகம் செல்ல ஏற்றதாயிருந்தாலும், குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை. குடும்ப வாழ்விற்கு மற்றவர்களைப் புரிந்துக்கொள்ளும் தன்மை மிகவும் அவசியம். ஆதாம் மற்றவர்களைப் புரிந்துக்கொள்ள மற்றவர்கள் என்று எவருமே இல்லை. அவனைச் சுற்றிலும் மிருகங்களும், பறவைகளுமே இருந்தன.

***"ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான்."*** (ஆதி. 2:20) வேதாகமத்தில் பெயர் என்பது அந்தப் பெயருடையதின் குணத்தினைக் குறிக்கிறது. ஆகவே ஆதாம் எல்லா ஜீவ ராசிகளின் சுபாவத்தை, குணத்தை அறிந்து அவற்றிற்கு ஏற்ற பெயரிட்டான்.

இப்பொழுது அவனுக்கு சுபாவங்களைப் பற்றிய அறிவும், அனுபவமும் உண்டாயிருந்தன. ஆகவே அவன் தன் வாழ்க்கைத் துணையின் சுபாவத்தை அறிந்துக்கொள்ளவும் அதற்கு ஒத்து

நடக்கவும் கூடிய மனத்திறனைப் பெற்றான். அப்பொழுதுதான் கர்த்தர் அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார்.

உங்கள் வாழ்க்கைத் துணையின் பலம், பலவீனம், ஆற்றல் இயலாமை இவற்றை நீங்கள் அறிந்துக் கொள்ளாத நிலையில், உங்கள் துணை உங்களுக்கு ஏற்ற துணையாக இருக்க முடியாது. ஏற்ற துணையை கர்த்தர் எப்படி உண்டாக்கினார்?

***"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தான் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்."*** (ஆதி. 2:21,22)

ஆதாமிலிருந்து ஏவாள் உண்டாக்கப்பட்டதினால் ஏவாள் எந்த நிலையிலும் ஆதாமைவிடக் குறைந்தவளல்ல. அவர்கள் இருவரையும் பார்த்துத்தான், "ஆண்டு கொள்ளுங்கள்" என்று ராஜரீகத்தைக் கட்டளையிட்டார்.

ஏவாள் உண்டாக்கப்பட்டதினால் ஆதாமுக்கு கஷ்டம்தான். ஏனெனில் ஏவாள் உண்டாக்கப்பட்டவுடனேயே ஆதாம் ஓர் எலும்பை இழந்துவிட்டான் என்று பரிகாசம் பண்ணுவோரும் உண்டு. ஆனால் மருத்துவத்தின்படி, அந்த விலா எலும்பின் இழப்பினால் மனிதனுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிகிறது. மனைவியினால் புருஷனுக்கு எந்த நஷ்டமும் இல்லை.

விலா எலும்பிலிருந்து ஏவாள் உண்டாக்கப்பட்டிருப்பதைப் பற்றி தேவமனிதர் மாத்யூ ஹென்றி என்பவர் கூறுகிறார், *"அவள் மனிதனின் தலையிலிருந்த எலும்பிலிருந்து எடுக்கப்படாததால், அவள் புருஷனை ஆளக்கூடாது, காலிலிருந்து எடுக்கப்படாததால் அவள் புருஷனுக்கு அடிமை அல்ல, விலாவிலிருந்து எடுக்கப்பட்டதால் அவள் சமமாகவே இருக்கிறாள், அவள் இருதயத்திற்கு சமீபமான இடத்திலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறபடியால், அவள் இதயத்திற்குப் பிரியமானவளாக உண்டாக்கப்பட்டிருக்கிறாள்."*

ஏன் இவள் ஏற்ற துணை? மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று திரித்துவத்தில் படைக்கப்பட்டிருப்பதால், இம்மூன்று நிலைகளிலும் சரியான துணையாக இருக்கவே மனுஷி படைக்கப்பட்டிருக்கிறாள். இதில் பிரதானமாக இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரே ஆவியாயிருப்பார்கள், ஒரே ஆத்துமாவாக இருப்பார்கள் என்று சொல்லப்படவில்லை. ஆகவே சரீர ஐக்கியம் முக்கியமானது. அதனால்தான் மரணம் திருமண உடன்படிக்கையை செல்லாததாக்கிவிடுகிறது. ஆகவே மரணம் பிரிக்கின்ற வரையிலும் இருவரும் ஒரே மாம்சமாக இருந்து புதிய குடும்பத்தின் தலைவன், தலைவியாக மாறப்போவதால் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள்.

***“இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்”*** (ஆதி. 3:24) என்று வேதம் சொல்கிறது. தாயையும் தகப்பனையும் விட்டுப் பிரிந்து தன் மனைவி வீட்டில் போய் உட்கார வேண்டும் என்று வேதம் சொல்லவில்லை. தனிக்குடித்தனம் என்பது கணவன், மனைவி தங்கள் பெற்றோர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. கணவன், மனைவி இருவரும் இனி உண்டாகப்போகும் குடும்பத்திற்குத் தலைவனும் தலைவியுமாகப் போவதினால் பழைய தலைமையிலிருந்து விடைபெறுகிறார்கள்.

தாயையும் தகப்பனையும் கனம் பண்ணுவாயாக என்பது ஆயுள் தண்டனை அல்ல. ஆயுள் கால கட்டளை. இந்த வசனத்தை இன்றைய இளம் தம்பதியினர் தவறாகப் புரிந்துகொள்கின்றனர். மாமனார், மாமியார் தங்கள் எல்லைகளுக்குள்ளே வரக்கூடாது என்று அவர்களை மோவாபியர்களாகக் கருதுகின்றனர். தன் கணவன் அவருடைய தகப்பனாருடைய ஆலோசனையைக் கேட்பது பதினோராம் கற்பனையின் மீறல் என்று மனைவி எண்ணுகிறாள். இத்தகைய போக்குகள் மாறவேண்டும்.

சில போதகர்களும் தாய் தந்தையரை மதிக்க வேண்டாம் என்ற நிலையிலேயே ஆலோசனை சொல்லுகிறார்கள். ஒரு திருமண விழாவில் நடைபெற்ற சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துக் கொள்கிறேன். திருமணம் முடிந்து புகைப்படங்கள் எடுக்கும்போது புகைப்படம் ஒன்றில் மட்டும் மணமக்களுக்கு நடுவில் மணமகனின் தாய் இருக்கும்படி போஸ் கொடுக்க அதைக் கவனித்த போதகர் ஓடோடி வந்து தாயைப் பார்த்து, "இதுவரை நீங்கள் உங்கள் மகனின் வாழ்க்கையில் தலையிட்டது போதும் அம்மா, நீங்கள் இப்படி வந்துவிடுங்கள்" என்று தாயைப் பிரித்துவிட்டார். இதுவரை வளர்த்த தாயை அவமானப்படுத்தியதாகவே நான் கருதுகிறேன். இது போதகரின் எல்லை மீறல்.

***"தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அந்தக் கனியை எனக்குக் கொடுத்தாள்"*** என்று ஆதாம் ஏவாளைக் குற்றப்படுத்தியது உண்மைதான். ஆனால் தொடர்ந்து அவன் ஏவாளைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கவில்லை. பாவத்தின் விளைவாக ஆதாமைக் கடவுள், "நீ மண்ணுக்குத் திரும்புவாய்" என்று சொன்னவுடனே இன்றைய விசுவாசியைப் போல "பாவி உன்னாலேதானே வந்தது" என்று ஏவாளைத் திட்டவில்லை.

அவன் ஏவாளைப் பார்த்து, "நீ மரணத்திற்கெல்லாம் தாய்" என்று சபிக்கவில்லை. மாறாக ***"ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்"*** என்றான். ஸ்திரீயின் வித்தானவர் சாத்தானின் தலையை நசுக்குவார் என்ற வாக்குத்தத்தத்தைக் கேட்டவுடனே ஆதாமுக்கு விசுவாசம் உண்டாயிற்று. ஆகவே தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஜெயமாக ஸ்திரீயின் வித்தானவரால் விழுங்கப்படும் என்பதை ஆதாம் விசுவாசித்தான்.

குடும்பத்தில் ஓர் பிரச்சனை ஏற்பட்டவுடன் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டி, குடும்பச் சமாதானத்தைக் கெடுத்து குட்டி அர்மெகெதானை உருவாக்கும் பரிதாப மக்களுக்கு ஆதாம் நல்வழி காட்டியாயிருக்கிறான்.

# தேவன் சொன்னது உண்டோ?

(அதிகாரம் - 3:1)

***"சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?"*** (ஆதி 3:1)

இது சாத்தானின் சத்தம். சாத்தான் தேவனின் வார்த்தைகளைக் குறித்து கேள்வி கேட்க என்ன உரிமையிருக்கிறது? கடவுளின் உத்தரவின்பேரில் சாத்தான் நம்மைக் கோதுமையைப் போல புடைக்கும் உரிமையைப் பெற்றுவிடுகிறான் என்றாலும் நம்முடைய நம்பிக்கை கடவுளின் பேரிலேயே.

சாத்தான் கடவுளை எதிர்த்து மனிதனிடம் பேசுவான். யோபு போன்ற பக்தனைக் குறித்து குற்றம் சாட்டி கடவுளிடம் பேசுவான். வனாந்திரத்தில் கடவுளையே எதிர்த்துப் பேசுகிறான். ஆகவே நாம் கேட்கும் சத்தத்தைக் குறித்து மிகவும் தெளிவாக இருக்கவேண்டும்.

பிதாவுக்குரிய மகிமையைத் தனக்கு என்று சாத்தான் உரிமை பாராட்டி, தன்னைப் பணிந்துக் கொள்ளும்படி இயேசுவைக் கேட்கும்பொழுது, இயேசு "அப்பாலே போ சாத்தானே" என்று துரத்தினார். ஆனால் சாத்தான் ஏவாளிடம் கடவுளைப் பொய்யன் என்று துணிந்து சொல்லும்பொழுது, ஏவாள் சாத்தானை எதிர்க்கவில்லை.

தேவன் சொன்னது உண்டோ என்ற கேள்வியோடு சாத்தான் மனிதனை ஆதியில் அணுகுகிறான். இன்றும் பல கேள்விகளோடு மனுக்குலத்தை அணுகி சந்தேக விதைகளை விதைப்பான். ஆகவே நாம் கேட்கும் சத்தத்தைத் தெளிவாய் நாம் கவனிக்கவேண்டும். ஏவாள் அந்தச் சத்தத்தை சாத்தானின் சத்தம் என்று அறியவில்லை.

இன்று சாத்தான் நம்மிடம் நேரிடையாகப் பேசாவிட்டாலும், பல எண்ணங்களை நம் மனதிற்குள் கொண்டுவருவான்.

தாவீதைப் படை வீரர்களை எண்ணும்படி சாத்தான் தூண்டினான். படைவீரர்களை எண்ணுவது தவறல்ல. ஆனால் அப்படி எண்ணுவது ஆசாரியனின் வேலை. தாவீது அப்படி செய்யக்கூடாது, ஆனால் சாத்தான் தாவீதின் எண்ணத்தைத் தேவனுக்கு விரோதமாகத் தூண்டினான். சாத்தான் மற்றொரு மனிதன் மூலமாகவும் பேசுவான். இயேசுவை நோக்கி பேதுரு, "நீர் சிலுவைக்குப்போவது உமக்கு நேரிடவே கூடாது" என்று சொன்னவுடன் கர்த்தர் அந்தச் சத்தத்தின் அடையாளத்தைக் கண்டு கொண்டார். ஆகவே "அப்பாலே போ சாத்தானே" என்று அவனைத் துரத்தினார்.

சகல மரங்களின் கனிகளைப் புசிக்கக்கூடாது என்று தேவன் சொன்னதுண்டோ என்பதே சாத்தானின் கேள்வி. கர்த்தர் அப்படி சொல்லவேயில்லை. மாறாக சகல மரங்களின் கனிகளையும் புசிக்கலாம் என்றுதான் கர்த்தர் சொல்லியிருந்தார். ஆகவே சாத்தான் கடவுளைப் பற்றி பொய்யே பேசினான். அவன் பொய்யன் என்பதை மறந்து விடக்கூடாது.

கர்த்தர் நம் வியாதியை சுகமாக்குவேன் என்று சொல்லியிருந்தால் "கர்த்தர் நம்மை சுகமாக்கமாட்டார்" என்று அவன் சொல்லுவான். நம்முடைய வியாதி மரணத்தில் முடியும் என்றும் அந்த வியாதி கர்த்தரை மகிமைப்படுத்தும் என்றும் சொல்லி இருந்தால், "நீ அந்த வியாதியில் பிழைத்து எழுந்திருப்பதே மகிமை" என்று அவன் சொல்லுவான். சாத்தானோடு நாம் கொஞ்ச நேரம் பழகினாலும் அவன் சுபாவம் நமக்கும் வந்துவிடும்.

சாத்தானோடு பேசிய ஏவாள் "அந்தப் பழத்தைத் தொடவும் கூடாது" என்று பொய் சொன்னாள். இந்த ஆதாம் ஏவாள் கதையையெல்லாம் நீ நம்புகிறாயா என்ற ஒரு சத்தம் உங்கள் காதுகளில் கேட்கிறதா? சாத்தான் உங்களோடு பேச ஆரம்பித்து விட்டான் என்று பொருள். ஏவாள் புசித்தது ஒரு ஆப்பிள் பழம்

என்று சொல்லப்படுகிறது. வேதம் அப்படிச் சொல்லவில்லையே. நன்மை தீமை அறியும் கனி என்றுதான் வேதம் சொல்லுகிறது. சாத்தான் திடீரென்று கட்டுக் கதைகளைச் சொல்ல மாட்டான். வேத வசனங்களை சுற்றியே தன் கட்டுக் கதைகளை அமைப்பான்.

"என் அடிமைப் பெண்ணோடு சேரும்" என்று சாராள் ஆபிரகாமோடு சொன்னது மனைவி மூலம் சாத்தான் பேசும் சத்தம். "தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" என்பதும் மனைவி மூலம் சாத்தான் பேசும் மற்றொரு சத்தம். சாராளைப் பார்த்து, "நீ என் சகோதரி என்று சொல்" என்பது கணவன் மூலமாய் சாத்தான் பேசும் சத்தம்.

''இராஜாவுக்கு சம்மதியானால் யூத ஜனங்களை அழிக்கவேண்டுமென்று எழுதி அனுப்பவேண்டியது'' என்று ஆலோசனை சொன்ன ஆமானின் சத்தம், அரசியலில் சாத்தானின் சத்தம். நாம் சாத்தானின் சத்தத்தை அடையாளம் கண்டுக் கொள்ள வேண்டும்.

சாத்தானின் சத்தத்தை அடையாளம் கண்டுக்கொள்ள ஆதாம் தவறிப்போனதால், கடவுளோடு உள்ள உறவை இழந்தான். அவன் மனசாட்சி இருண்டது. அவன் ஆத்துமா மரித்தது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாள் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டாலும், இன்னும், "தேவன் சொன்னது உண்டோ?" என்ற எதிரொலி கேட்டுக்கொண்டே இருக்கிறது. விழிப்போடு இருப்போம்.

# ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?

(அதிகாரம் - 3:9)

கடவுள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும்படி ஆதாம் ஒரு சூழ்நிலையை உருவாக்கினான். ஆதாம் இருந்த இடம் தெரியாமல் கடவுள் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. ஆவிக்குரிய நிலையில் அவன் எங்கே இருந்தான் என்று அவன் அறியும்படி இந்தக் கேள்வியைக் கர்த்தர் கேட்டார். ஆதாம் பயத்திலும் திகைப்பிலும் இருந்தான். தேவ சமுகத்தில் இருக்க வேண்டிய ஆதாம், தேவ சமுகத்திற்கு வெளியே இருந்தான்.

வற்றாத ஜீவநதிகள், கனிமரங்கள், மலர்கொடிகள், பாடும் பறவைகள், அவனைச் சுற்றித் திரியும் மிருகங்கள், தேவன் தந்த ஏற்ற துணை இவையோடு எழில் மிகுந்த ஏதேன் தோட்டத்தில் ஆதாம் பயத்திலும் திகிலிலும் இருந்தான். தனிமைச் சிறை பல்வேறு வேதனைச் சூழல்கள், பசிதாகம் இவற்றின் மத்தியில் இருந்தப் பவுலைப் பார்த்து கர்த்தர், "பவுலே நீ எங்கே இருக்கிறாய்" என்று கேட்பாரெனில் அவர் "நான் மனமகிழ்ச்சியில் இருக்கிறேன்" என்று சொல்லுவார்.

சூழ்நிலைகள் அல்ல கர்த்தருக்குள் இருப்பதே நம் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. கர்த்தருக்குள் இல்லாத ஐசுவரியம் சாபத்தின் வாசலாகவும், கர்த்தருக்குள் இருக்கும் மனிதரின் வறுமை ஆசீர்வாதத்தின் வாசலாகவும் மாறிவிடும். ஆகவே நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் தேடும் நிலையை உருவாக்கிவிடக்கூடாது.

சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து பாவத்தில் வீழ்ந்ததினால் ஆதாமும் ஏவாளும் தங்களைக் குறித்தே வெட்கப்பட வேண்டியதாயிற்று. "நீ

ஓர் நிர்வாணி" என்று மனசாட்சி அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது மனசாட்சியின் கடிந்துக்கொள்ளுதலினாலே தனக்குள்ளிருந்த தேவ சமுகத்தை ஆதாம் இழந்தான். இந்தத் தேவ சமுகமே அவன் மகிழ்ந்திருந்த குளிர்ச்சியான வேளை. ஆத்துமாவின் குளிர்ச்சியான வேளையே தேவனோடு உறவாடும் இனிய நேரத்தை உருவாக்குகிறது. மரத்தினடியில் உட்கார்ந்து தேவனோடு பேசி மகிழவேண்டிய ஆதாம் மரத்துக்குப் பின்னால் ஒளிய வேண்டியக் காரணம் மனசாட்சியின் வேதனையே.

"நீ கடவுளைப் போல இருப்பாய்" என்ற சாத்தானின் வார்த்தையை நம்பினதின் விளைவு அவன் கடவுளைவிட்டே தூரமாய்ப்போக வேண்டியதாயிற்று. அவன் வாழ்ந்த ஏதேன் தோட்டமே அவனுக்குத் தூரத்தேசமாயிற்று. தேவ சாயலில் உருவான அவன் கெட்டக்குமாரனானான்.

சகோதரனே! சகோதரியே! நீயும் சாத்தானுக்கு செவி கொடுப்பாயானால் நீ ஆனந்தமாய் ஆராதித்த சபையே உனக்கு தூரத் தேசமாகிவிடும். நீ வாஞ்சையோடு கேட்ட போதகரின் பிரசங்கங்கள் கசப்பாய் மாறிவிடும். உற்ற நண்பனாய் நல்ல தகப்பனாய் உனக்கு இருந்த போதகர் உனக்கு விரோதியாய் காட்சியளிப்பார். காரணம் என்னவெனில் ஆவிக்குரிய நிலையில் நீ இடம் பெயர்ந்துவிட்டாய். உன்னைப் பார்த்துப் பரலோகம் கேட்கிற கேள்வி "நீ எங்கே இருக்கிறாய்?"

உன் பதிலென்ன?

# என்னால் சகிக்கமுடியாது

(அதிகாரம் - 4)

***"அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி, எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது"*** (ஆதி. 4:13) என்றான்.

பாவம் செய்த ஆதாம் வெட்க உணர்வினால் ஓடி ஒளிந்தான். காரணம் பாவத்தைப் பற்றிய வெட்க உணர்வும், கடவுள் பயமும், ஆதாம் வீழ்ந்துப்போன நிலையில் இந்த உணர்விலும், தெய்வ பயத்திலும் இருந்தது நல்லது. இல்லையெனில் தெய்வ பயமற்ற துன்மார்க்கனாய் அவன் வாழ்வு முடிந்திருக்கும்.

இன்று உலகில் கொலைகளும், கொடுமைகளும் வேசித்தனங்களும் பெருகக் காரணம், பாவத்திற்கு வெட்கப்படாத நிலையும், தெய்வ பயமின்மையுமே. பாவி இன்றைய உலகில் தலை நிமிர்ந்தே நடக்கிறான். குற்றவாளிக் கூண்டு, சிறைச்சாலை இவ்விடமெங்கும், பாவி எந்தவித வெட்கமுமன்றி, தலைநிமிர்ந்தே நிற்கிறான். பாவத்தை ஓர் சாதனையாகவே மனிதன் எண்ணுகிறான்.

ஆதாம் வெட்க உணர்வு கொண்டதினால், கர்த்தர் அவன் பாவத்தையும், பாவத்தின் விளைவான நிர்வாணத்தையும் மூடினார். மிருகத்தின் இரத்தத்தினால் பாவத்தையும், மிருகத்தின் தோலினால் உண்டாக்கப்பட்ட உடையினால் ஆதாமின் நிர்வாணத்தையும் கர்த்தர் மூடினார்.

காயீன் தன்னுடைய காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று அறிந்ததும், தன் தவறை எண்ணி வெட்கப்பட்டு, ஆதாமைப்

போல ஓடி ஒளியவில்லை, மாறாக மாவீரன் போல் நடந்து வருகிறான்.

"காயீனே, நீ எங்கே இருக்கிறாய்" என்று கர்த்தர் தேடவேண்டிய அவசியமில்லாமற்போயிற்று. மேலும் நான் கொலைகாரனாய் இருப்பதினால் பயந்து ஒளிந்துக்கொண்டேன் என்ற தெய்வபயமும் காயீனிடத்தில் இல்லாமற்போயிற்று.

வெட்கமற்ற காயீனை நோக்கி கர்த்தர், "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?" என்றார். அதற்கு அவன், "நான் அறியேன், என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்றான். (ஆதி. 4:9) இந்தப் பதில் வெட்கமோ, தெய்வப்பயமோ இல்லாத காயீனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆகவே காயீனின் பாவம் மூடப்படவில்லை. மாறாக தேவ தண்டனை அவன் மீது வந்தது, ***"நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்"*** (ஆதி. 3:12) என்பதே அந்தத் தண்டனை.

தண்டனையைக் கேட்டதும், தன் குற்றத்தை உணர்ந்து "தேவரீர் என் பாவம் உம்மாலே சகிக்க இயலாது, ஆகவே என்னைத் தண்டித்துவிட்டீர். என்னை மன்னியும்" என்று காயீன் அழுவதற்குப் பதிலாக, "எனக்கு இட்ட தண்டனை பெரியது" என்று கர்த்தரையே குற்றப்படுத்தினான்.

பாவ உணர்வில்லா இதயம், கர்த்தரை மிக எளிதிற் குற்றப்படுத்தும். சகோதரனே, சகோதரியே! நீங்கள் உங்கள் பாவங்களை உணர்ந்து வெட்கப்படுகிறீர்களா? அல்லது எனக்குக் கோபம் வந்தால் என்ன நடக்கும் தெரியுமா என்று வெட்கமில்லாமல் கர்ஜிக்கிறீர்களா? "இதெல்லாம் என்னிடம் வேண்டாம், என் சுயரூபத்தைக் காட்டினால் உன்னால் தாங்கமுடியாது" என்று வெட்கம் கெட்ட பெருமையில் நிமிர்ந்து நிற்கிறீர்களா?

காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்று போடாதபடிக்குக் கர்த்தர் அவன் மேல் ஓர் அடையாளத்தைப்

போட்டார். இது கடவுளுடைய கிருபை. ஆனால் இம்மைக்கான பாதுகாப்பான - இந்த ஆயுள் காப்பீட்டிலேயே காயீன் திருப்தி அடைந்தான். ஆம்! இந்த பாலிஸியே தனக்குப் போதும் என்றிருந்துவிட்டான்.

சகோதரனே உன் வீடு, தோட்டம், துரவு, ஆடு, மாடு இவை பத்திரமாக இருந்தாலே போதும், இதுவே வாழ்வு என்று நம்பி, நித்தியத்தைக் குறித்து கவலையற்றிருக்கிறீர்களா? வேண்டாம் இந்த மனநிலை. இந்த மனநிலை காயீனை நிரந்தரமாகத் தேவனைவிட்டே பிரித்துவிட்டது.

காயீன் பட்டணத்தைக் கட்டினான் பரலோகத்தை இழந்தான். "ஆபேலைப்போல பலிசெலுத்த ஆட்டிற்காக நான் அலைந்து திரியமாட்டேன். நிலையாக ஓர் இடத்தில் இருந்துக்கொண்டே நிலத்தின் விளைவுகளைக் காணிக்கையாய் செலுத்துவேன்" என்று காயீன் திட்டமிட்டான். கர்த்தருக்காக நான் அலையமாட்டேன். நான் நிலைபெற்று ஓர் இடத்தில் இருந்து என் காணிக்கையைச் செலுத்துவேன் என்றான் காயீன்.

ஆனால் கர்த்தரோ, ***"நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்"*** என்று அவனைத் தண்டித்தார்.

நிலத்தில் விளைந்த முதற்கனிகளை காயீன் கர்த்தருக்கு செலுத்தவில்லை. வேதம் சொல்கிறது, ***"சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்"*** (ஆதி. 4:3) கனிவர்க்கங்களை வீட்டில் சேர்த்தவுடன் அவனுக்குக் கர்த்தரின் ஞாபகம் வரவில்லை. ***"சிலநாள் சென்றபின்பு..."*** ஒருவேளை பழங்கள் அழுகத் தொடங்கினவுடனாக இருக்கலாம். சகோதரனே உன் காணிக்கையை எப்பொழுது செலுத்துகிறாய்? எல்லா செலவினங்களையும், சந்தித்தப்பிறகு மிச்சம், மீதியை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குப் போகிறாயா?

பழத்தட்டை கையில் எடுத்தான். ஆபேலை அலட்சியமாய்ப் பார்த்தான். மிகப் பெருமையுடன் காணிக்கைத் தட்டை எடுத்து ஆலயப்படியில் காலெடுத்து வைத்தவுடன், "நில் உள்ளே வராதே" என்று ஓர் சத்தம் கேட்கிறது.

"ஏன்?"

''காணிக்கை செலுத்த வரும் நீ தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை" இதை அவனால் சகிக்கமுடிந்தது. ஆனால் ஆபேலின் காணிக்கையை கர்த்தர் அங்கீகரித்தபொழுது, "இதை என்னால் சகிக்க இயலாது" என்றான். உன்னால் எதைச் சகிக்க இயலாது சகோதரனே?

# கடவுளோடு நடைப்பயிற்சி

(அதிகாரம் - 5)

***"ஏனோக்கு முந்நூறு வருஷம் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்."*** (ஆதி. 5:23) கடவுளோடு நடப்பது என்றால், அவரோடு ஒத்துப்போதல் என்று பொருள். கடவுளின் சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்தான் என்றும் பொருள்படும். தேவனோடு நடப்பது ஏனோக்கிற்கு மட்டும் கிடைத்த சிலாக்கியமல்ல. ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் இந்தச் சிலாக்கியம் உண்டு. ஆனால் ஏனோக்கு மாத்திரம் இந்தச் சிலாக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாக்கியவான்.

இது சாதாரண நடைபயிற்சி அல்ல. அவன் முன்னூறு ஆண்டுகள் கடவுளின் சித்தத்தின் மையத்தில் வாழ்ந்தான் என்பதையே இது காட்டுகிறது. முன்னூறு ஆண்டுகள் தொடர்ந்து தேவசித்தமே செய்வது மிகப்பெரிய சாதனை. ஞாயிற்றுக்கிழமையில் தேவ சித்தம் என்ற உப்பரிகையில் நின்று எதிர்காலம் என்ற தரிசனத்தைக் காணும் பலர், திங்கட்கிழமை மாம்சீகம் என்ற பள்ளத்தாக்கில் விழுந்துக் கிடப்பதைக் காண்கிறோம்.

தன்னுடைய அறுபத்தைந்தாம் வயதில் மெத்தூசலா என்ற மகனைப் பெற்றதும், ஏனோக்கின் வாழ்க்கையில் ஓர் பெரிய மாற்றம் ஏற்பட்டது. "மெத்தூசலா" என்ற பெயருக்கு "அவன் போனபிறகு அது சம்பவிக்கும்" என்று பொருள். அப்படியே மெத்தூசலாவின் மறைவிற்குப் பிறகு ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போனது. ஏனோக்கு இதைக்குறித்த வெளிப்பாட்டைப் பெற்று, தேவனோடு நெருங்கி வாழ்ந்தான்.

அவன் பெற்ற வெளிப்பாட்டை அவனைச் சுற்றிலும் இருந்த மக்களுக்கு எச்சரிப்புடன் பிரசங்கித்தான். கடவுளின் நியாயத் தீர்ப்பையும், பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினி-மித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று ஏனோக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து முதல்முதலாக அறிவித்தான். (யூதா 15)

வெளிப்பாட்டைப் பிரசங்கிக்க பலர் உண்டு. ஆனால் அந்த வெளிப்பாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்து ஜீவிப்பவர் மிகச் சிலரே. ஏனோக்கு அந்த வெளிப்பாட்டைப் பெற்றவுடன், மிகவும் எச்சரிக்கையுடன் வாழத் தொடங்கினான்.

ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவனென்று சாட்சியுடைய மனிதன். பொல்லாத மக்கள் வாழ்ந்த அந்நாள்களில் ஏனோக்கு தன்னைப் பொல்லாப்புக்குக் காத்துக்கொண்டு, கர்த்தருக்குப் பிரியமானவன் என்று சாட்சி பெற்றான். (எபி. 11:5)

சகோதரனே, உன்னால் பரிசுத்த வாழ்க்கை வாழ முடியாததற்கு சூழ்நிலையைக் குற்றப்படுத்துகிறாயா? வேதப்புத்தகம், ஆராதனை, நற்செய்திக்கூட்டம் இவை ஒன்றுமே இல்லாத காலத்தில் ஏனோக்கு வேத வெளிப்பாட்டோடு, பரிசுத்தமாய் வாழ்ந்தானே!

ஆரம்பத்தில் அற்புதமாக ஓட ஆரம்பித்தவர்கள் நாளடைவில், நடை தளர்ந்து விசுவாசத்தில் சோர்ந்துப்போவதை நடைமுறையில் நாம் காண்கிறோமே. ஏனோக்கோ முன்னூறு ஆண்டுகள் நடை தளராது விசுவாசப் பாதையில் தொடர்ந்து நடந்தான்.

ஒருநாள் ஏனோக்கைக் காணவில்லை. காடு, மேடு இங்கெல்லாம் தேடியும் அவனைக் காணவில்லை. அவனுக்கு என்ன நேரிட்டது என்று எவருக்குமே தெரியாது.

"பாவம் ஞானக்கிறுக்குப் பிடித்து அலைந்தான். எங்கு விழுந்து செத்தானோ" என்று சிலர் பரிகாசம் பண்ணியிருப்பார்கள்.

ஏனோக்கைக் காணவில்லை என்பதே பரபரப்பான பேச்சாக இருந்திருக்கும். தேவன் அவனை எடுத்துக் கொண்டார் என்பது அன்றைய உலகிற்குத் தெரியாது. இன்றும் பரிசுத்தவான்கள் மரிக்கும் பொழுது, அவர்கள் கடவுளின் ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கிறார்கள் என்பது உலகம் அறியாத ரகசியம். இயற்கையோடு கலந்துவிட்டார்கள், மண்ணோடு மண்ணாய் ஐக்கியமாகிவிட்டார்கள் என்றே உலகம் எண்ணுகிறது.

ஏனோக்கு காணாமற்போனது உலகிற்குத் திடுக்கிடும் காரியம். ஆனால் ஏனோக்கிற்கு அவன் எதிர்பார்த்த காரியமே அது. உலகம் புரிந்துக்கொள்ள முடியாத ரகசியம் அது. ஆனால் ஏனோக்கு அறிந்து விளங்கிக் கொண்ட சத்தியம் அது. ஏனெனில் வேதம் சொல்கிறது, ***"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்'.'*** (எபி. 11:5)

ஆம்! தான் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்பதை ஏனோக்கு அறிந்து அதை விசுவாசித்து, வாழ்ந்து வந்தான். அவன் விசுவாசித்தபடியே அவன் எடுத்துக்கொள்ளப்பட்டான். விசுவாசத்தில் மாத்திரமல்ல, தேவனுக்குப் பிரியமாகவும் ஏனோக்கு வாழ்ந்தான். ஒவ்வொரு செயலிலும் அவன் கடவுளைப் பிரியப்படுத்தினபடியால் அவன் பரிசுத்தத்திலும் தன்னைக் காத்துக் கொண்டான்.

ஜலப்பிரளயத்திற்கு முன்பு ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போல, நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று வேதம் சொல்கிறது. நாம் எப்படி ஜீவிக்கிறோம்? மெத்தூசலாவின் முடிவிற்குப் பிறகுதான் ஜலப்பிரளயம் வரும். மெத்தூசலாவின் வாழ்க்கை மிக நீண்ட காலம். தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது (969) வருடங்கள். இன்றைய கிருபையின் காலம் மிக நீண்ட காலம். இக்காலம் முடிந்தவுடன் உபத்திரவம் என்ற பிரளயம் வரும். அதற்குத் தப்பிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமா? கொஞ்ச வெளிப்பாட்டில் ஏனோக்கு உண்மையாயிருந்தானே.

சபை எடுத்துக்கொள்ளப்படும் மாபெரும் சத்தியத்திற்கு ஏனோக்கு முன்னடையாளமாக இருந்தானே! “திருமணமாகாத பரிசுத்தவான்களின் உபதேசத்தில் வளர்ந்தவர்கள் மாத்திரமே கர்த்தரின் வருகையில் காணப்படுவார்கள்” என்ற தவறான கொள்கையை உடைத்தெறிகிறது ஏனோக்கின் எடுத்துக் கொள்ளப்படுதல்.

கர்த்தரின் வருகையில் திருமணமானவர்கள் எடுத்துக்கொள்ளப் படமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. “கர்ப்பவதிகளுக்கு ஐயோ! பால் கொடுக்கிறவர்களுக்கு ஐயோ” என்று வேதம் எச்சரிப்பதற்கு தவறாக விளக்கம் கொடுப்பவர்களின் உபதேசமே அப்படி கற்பிக்கிறது. இவையெல்லாம் பொய்யான உபதேசம் என்று பறைசாற்றுகிறது ஏனோக்கின் வாழ்க்கையும், எடுத்துக் கொள்ளப்படுதலும்.

# ஜீவப் பேழை

(அதிகாரம் - 6)

*''தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா (பேழையை) செய்து முடித்தான்''* (ஆதி. 6:22)

பூமியானது கொடுமையினால் நிறைந்திருந்தது. யாவரும் உலகமெங்கும் தங்கள் வாழ்வைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே கடவுள் பூமியை அழித்துப்போட எண்ணினார். மனிதர்களை உண்டாக்கினது தனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது (ஆதி 6:7) என்று கர்த்தர் நினைத்தார்.

அப்படியாயின் கடவுள் தன் சிருஷ்டியினால் ஏமாற்றம் அடைந்துவிட்டாரா? சீர்கெட்டப்பிள்ளைகளின் பெற்றோர்கள் ஏன்தான் இவர்களைப் பெற்றோமோ என்று அங்கலாய்ப்பது போல், கர்த்தரும் மனிதனைப் படைத்ததற்காக வருத்தப்படுகிறாரா? தன் படைப்பையே தவறான செயல் என்று வருத்தப்படுகிறாரா? கடவுள் மனிதனைப்போல இப்படி வருத்தப்படுவது அவருடைய பலவீனத்தை, அறியாமையையே காட்டுகிறது என்று சிலர் தர்க்கம் செய்கின்றனர்.

கர்த்தர் வருத்தப்பட்டது மனிதனின் தோற்றத்தை, படைப்பை எண்ணி அல்ல. அவனுடைய கீழ்ப்படியாமையினால் அவன் அடையப்போகும் பயங்கரமான முடிவை எண்ணியே தேவன் வருத்தப்பட்டார். மனிதன் இப்படி சீர்கெட்டுப்போனது வருத்தமேயன்றி கடவுளுக்கு ஏமாற்றமில்லை.

பூமி கொடுமையால் நிறைந்திருந்தபடியால் கொடுமையான உலகத்தை முற்றிலும் அழிக்கவே தேவநீதி விரும்பியது. ஆனாலும்

தேவ இரக்கம் நீதிமானை அந்த அழிவிலிருந்து காப்பாற்ற விரும்பியது. ஆகவே நீதிமானான நோவாவையும் அவன் குடும்பத்தையும் கர்த்தர் காப்பாற்ற விரும்பினார். ஆகவே ஒரு பேழையைக் கட்டும்படி நோவாவின் இருதயத்தைக் கர்த்தர் ஏவினார். ஜலப்பிரளயத்தில் அமிழ்ந்துப் போகாதபடியான வடிவமைப்பை கர்த்தர் கட்டளையிட்டார்.

அப்படியே நோவா பேழையை கொப்பேர் மரத்தினால் வடிவமைத்தான். கொப்பேர் மரம் சவப்பெட்டி செய்வதற்கு பயன்படும் மரம். நோவா பேழையை ஆயத்தம் பண்ணினபோது நோவா ஒரு பெரிய சவப்பெட்டியை உருவாக்குகிறான் என்றே ஊர்மக்கள் விளங்கிக் கொண்டனர். சவப்பெட்டி என்று நினைத்த அந்தப் பேழையே மனிதனைக் காக்கும் ஜீவப்பெட்டியாயிற்று.

சாபத்தின் விளைவு, மரணத்தின் அகோரம் என்று விளங்கிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையே மனுக்குலத்திற்கு ஜீவனாயிற்று. பேழை உருவானபொழுது நோவா ஜனங்களின் பாவங்களை எச்சரித்தான். ஜனங்களோ வெள்ளங்கள் வந்து வாரிக்கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள்.

எல்லாவிதமான மிருகங்களும் ஒரே வாசல் வழியாய்ப் பிரவேசித்தன. மாம்ச உணவை எடுக்காத யானையும், மாம்சத்தை உண்ணும் சிங்கமும் ஒரே வாசல் வழியாய் பிரவேசித்தன. சீறிப்பாயும் புலியும், பதுங்கி ஒளியும் ஆடும் பேழைக்குள் ஒன்றாகவே இருந்தன. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எந்த வேற்றுமையும் இல்லை.

ரோமர் ஆதிக்கத்தையும் அவர்களுக்கு ஆதரவாய் இருந்தவர்களையும் கொன்றுபோடும் வெறிகொண்ட செலாத்தே பிரிவைச் சேர்ந்த சீமோனும், ரோமருக்காக வரி வசூலிக்கும் ஆயக்காரனான மத்தேயும், தெருவில் கிறிஸ்துவுக்கு வெளியே சந்தித்திருப்பார்களெனில் மத்தேயு படுகொலை செய்யப்பட்டிருப்பான். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளே இருவரும் சமாதானமாயிருந்தார்கள்.

நோவாவின் பேழையிலும் இந்தச் சமாதானம் ஆளுகை செய்தது. ஏனெனில் பேழை தேவனது வடிவமைப்பு. இன்று திருச்சபைகளில் அப்படி ஒரு சமாதானம் இருக்கின்றதா? உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகளை மறந்து கிறிஸ்துவுக்குள் சமாதானமாய் இருக்கின்றார்களா? உண்மையான சமத்துவபுரம் நோவாவின் பேழையே. கடவுளின் ஆளுகை இல்லாமல், சமத்துவமும் அன்பும் ஏற்படாது.

கடவுளைத் தள்ளிவிட்டு மனிதன் உலக சமாதானம் ஏற்பட பாடுபடுகிறான். உலகின் பல்வேறு தலைவர்களை பலநாடுகளில் இருந்து சிலமணி நேரங்களில் ஒரு அறைக்குள் கூட்டிச் சேர்த்துவிடலாம். இது விஞ்ஞானத்தின் வெற்றி. ஆனால் அனைத்து இதயங்களையும் ஒன்றாக்குவது மெய்ஞானத்தின் வெற்றி.

அன்று உலகமுழுவதும் புரண்டு வந்த ஜலப்பிரளயத்திலிருந்து நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றியது இந்த ஜீவப் பேழை. வரப்போகின்ற உபத்திரவக் காலத்தினின்று தேவப் பிள்ளையை காப்பாற்றுவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. இந்தப் பேழைக்குள் நீ இப்பொழுது இருக்கின்றாயா?

# நோவாவைக் கர்த்தர் நினைத்தருளினார்

(அதிகாரம் - 8)

***"தேவன் நோவாவையும் அவனுடனே பேழையிலிருந்த சகலக் காட்டு மிருகங்களையும், சகல நாட்டு மிருகங்களையும் நினைத்தருளினார்."*** (ஆதி. 8:1)

நோவாவைப் போல பரிதாபமான நிலையில் எந்த மனிதனும் இருந்திருக்க முடியாது. மரணத்தின் கோர முத்திரைப் பதிந்த உலகத்தின் மேல் அவன் மிதந்துக் கொண்டிருந்தான். அவன் செல்லும் படகை வேகமாய் செலுத்தவோ, திசைத்திருப்பவோ, நிலைநிறுத்தவோ அப்படகில் சுக்கானில்லை. எங்கு போகும், எங்கு நிற்கும் அவனுக்குத் தெரியாது.

படகில் இருந்த உணவுப் பொருள்கள் குறைந்துக்கொண்டே வந்தன. இந்நிலை தொடருமானால் பசியினால் மிருகங்கள் ஒன்றை ஒன்று அடித்து சாப்பிடும். வெறிகொண்ட மிருகங்கள் நோவாவின் குடும்பத்தையே பட்சித்துவிடும். அப்படகே மிதக்கும் கல்லறையாகி விடும். நோவா ஜன்னல் வழியாய் நோக்கினான். மழை இன்னும் பெய்துகொண்டே இருக்கிறது. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எந்த நிலமும் காணப்படவில்லை. அப்பொழுது கர்த்தர் நோவாவை நினைத்தருளினார்.

சகோதரனே, சகோதரியே! நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருக்கிறீர்களா? வறுமையும் வெறுமையும் உங்களைப் பட்சிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனவா? இனி தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையே இல்லையா? இன, ஜனங்கள் உங்களை

முற்றிலும் மறந்துவிட்டார்களா? கர்த்தர் உங்களை நினைத்திருக்கிறார். இதுவே மிகப்பெரிய ஆசீர்வாதம்.

கர்த்தர் நோவாவை நினைத்தவுடன் அந்த நினைவே பலத்தக் காரியங்களைச் செய்தது. பூமியின்மேல் காற்று வீசத்தொடங்கியது. தண்ணீர் வற்றியது. ஆழத்தின் ஊற்றுக்கண்கள் அடைப்பட்டன. வானத்தின் மதகுகளும் மூடப்பட்டன. வானத்தின் மழையும் நின்றது. தேவனின் ஒரு நினைவு இத்தனைக் காரியங்களைச் செய்து முடித்தது.

கர்த்தர் உன்னையும் நினைத்திருக்கிறார். அவருடைய நினைவு உன் வெறுமையையும், வறுமையையும் மாற்றும். அவர் உன்னை நினைப்பது சுத்த கிருபை என்றாலும் நோவாவிடமிருந்து சில காரியங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

***“நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபைக் கிடைத்தது.”*** நோவாவோ உத்தமனும் நீதிமானுமாய் இருந்தான். இந்த உத்தமமும் நீதியும் தேவனுடைய கிருபையைக் கொண்டு வரவில்லைதான். ஆனாலும் அவை கடவுளின் இரக்கத்தை, கிருபையை நியாயப்படுத்துகின்றன. உனக்குக் கடவுள் இரக்கம் பாராட்டினால் அது அநியாயம் என்று உலகம் சொல்லாதபடி நீ வாழுகிறாயா?

கர்த்தரின் நினைவு நோவாவின் பேழையை அரராத் மலையில் தங்க வைத்தது. அரராத் என்றால் “பரிசுத்த பூமி” என்று அர்த்தம். கொடுமையும் அக்கிரமமும் நிறைந்த உலகம் நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று. நோவா பரிசுத்த பூமியில் தன் புதுவாழ்வைத் தொடங்கினான்.

பேழையிலிருந்து புறப்பட்ட காகம் மாம்சீக சுபாவத்தைக் குறிக்கிறது. சபிக்கப்பட்ட உலகத்திற்கும், பேழைக்கும் போக்கும் வரத்துமாயிருந்தது. அதுபோல மாம்சீகமானவன் ஆவியின் நடத்துதலுக்கும் மாம்சீக இச்சைக்கும் போக்குவரத்துமாய்

நிலையற்றவனாய் இருக்கிறான். பேழையில் இருந்துப் புறப்பட்ட புறா இளைப்பாறுதலைக் காணவில்லை. தேவ சமுகமாகியப் பேழைக்குத் திரும்பிவிட்டது. ஆவிக்குரிய மனிதன் மாம்சீக வழிகளில் இளைப்பாறுதலைத் தேடமாட்டான்.

பேழைக்குள் ஏறும் முன் நோவா தன் சுற்றுப்புற சூழ்நிலைகள், நண்பர்கள், உற்றார் உறவினர் யாவரையும் விட்டுப் பிரிந்தான். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களோடு எந்த உறவையும் அவன் வைத்துக்கொள்ளவில்லை. கடைசி முறையாக அவர்களைப் பார்த்துவிட்டு கண்ணீரைத் துடைத்து பேழைக்குள் ஏறினான். சகோதரனே, சகோதரியே கிறிஸ்துவுக்காக சொந்தக் குடும்பம், உற்றார், உறவினர்களை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். உன் கண்ணீரை கர்த்தரே துடைப்பார்.

பேழையை விட்டு இறங்கினவுடன் சுத்தமானப் பறவைகளைத் தெரிந்துக்கொண்டு பரிசுத்த பூமியில் பலியிட்டான். பலியின் இரத்தத்தோடு புது வாழ்வு தொடங்கியது. சகோதரனே, சகோதரியே! கிறிஸ்துவின் இரத்தத்திற்குள்ளாக உன் புதுவாழ்வைத் தொடங்கு. உன் நம்பிக்கைகள் சங்கரிக்கப்படுவதில்லை. நன்மையும் கிருபையும் உன்னைவிட்டு என்றுமே ஒழிவதில்லை. ***"கர்த்தருடைய வீட்டிலே நித்தியமாய் நிலைத்திருப்பாய்."***

# கர்த்தரின் உடன்படிக்கை

(அதிகாரம் - 9)

***"இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்."*** (ஆதி. 9 : 11)

***"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்."*** (ஆதி. 9 :13)

வானவில் உடன்படிக்கையல்ல, "நான் இனி பூமியை ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்க மாட்டேன்" என்பதே கடவுளின் உடன்படிக்கை. இந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில்லைக் கர்த்தர் வைத்தார். "என் வில்லை" என்று கர்த்தர் குறிப்பிடுவது புராணங்களில் சொல்லப்படுவது போன்றதல்ல. பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது சூரிய வெளிச்சத்தினால் வானவில் தோன்றும். ஜலப்பிரளயம் இனி உண்டாகாது என்பது வானவில் தரும் செய்தி.

சுனாமி அலைகள் எழும்பும்போது, நதிகள் வெள்ளத்தினால் பெருகி ஓடும்போது, பெருமழை பெய்து நகரங்கள் கிராமங்கள் தண்ணீரில் மிதக்கும்போது வானத்தில் வானவில் தோன்றாவிட்டாலும், எந்த வெள்ளப் பெருக்கும் ஜலப்பிரளயமாய் மாறி உலகத்தை அழிக்காது. உடன்படிக்கையை நினைவு கூருவேன் என்று சொல்லுகிற கர்த்தர், அதை நினைவு கூருவதற்காக வானவில்லைப் பார்ப்பேன் என்று சொல்லுகிறார். தன் உடன்படிக்கையை கர்த்தர் மறக்கவே

மாட்டார். ஆகவே அவருக்கு ஞாபகப்படுத்த வானவில் தேவையில்லை. "கர்த்தர் நம்மை நினைக்கிறார்" என்று நாம் நினைக்கவே வானவில்.

அநேக சம்பவங்கள் நம் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன. ஒரு பக்தன் கூறுகிறார், "கர்த்தர் உன் கண்களில் கண்ணீரை வரவழைக்கக் காரணம், உன் இதயத்தில் ஒரு வானவில்லை உண்டாக்க." சந்தர்ப்ப சூழ்நிலைகள் நம்முடைய நம்பிக்கைக்கு எதிராக கார்மேகங்களாய் எழும்பும்போது கலங்கிப் போய்விடாதீர்கள். அந்த மேகங்களுக்கு மேல் வானவில்லைப் பாருங்கள். ***"ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்."*** (சங். 46 : 2, 3)

இந்தத் தைரியம் சங்கீதக்காரனுக்கு எப்படி வந்தது? சங்கீதக்காரனுடைய உள்ளத்திலே ஒரு வானவில் இருந்தது. ***"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்"*** (சங். 46:1) என்ற நம்பிக்கையே அந்த வானவில்.

பெருங்காற்று மழையில் கப்பல் தடுமாறிச் சென்றது. பல நாளாய் பகலிலே சூரியனோ, இரவிலே நட்சத்திரங்களோ காணப்படவில்லை. சுற்றிச் சூழ கார்மேகங்கள். தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை முழுவதும் அற்றுப்போயிற்று. இந்த இருண்ட நேரத்தில் - மரண இருளின் பள்ளத்தாக்கிலே கப்பல் சென்றுக் கொண்டிருந்தபோது, தேவமனிதனாகிய பவுலின் இதய வானத்தில் ஒரு வானவில் தோன்றிற்று. "உங்களில் ஒருவனுக்கும் உயிர்ச் சேதம் வராது" என்ற தேவனது வார்த்தையே தேவனது வானவில். ஆகவே மேகங்களைப் பார்க்காதே; அந்த மேகத்திற்கு மேல் வானவில்லைப்பார்.

மருத்துவமனையில் டாக்டரால் கைவிடப்பட்டு பிழைக்கும் நம்பிக்கை இனி இல்லையென்ற நிலையில், மருத்துவ அறிவு

என்ற மேகங்களுக்கு நடுவில், கடவுளின் வார்த்தையாகிய வானவில்லை நோக்கிப் பார். வானவில் தேவனது உடன்படிக்கை. சின்னக் குழந்தைகள் வானவில்லின் வண்ணங்களைப் பார்த்து மகிழும். அவர்களுக்கு உடன்படிக்கையின் இரகசியம் தெரியாது. இன்றைக்கும் கிறிஸ்தவ உலகில் சத்தியத்தின் ஆழம் தெரியாமல் தீர்க்கதரிசன மத்தாப்புகள் விளையாடுகிறார்கள். வர்ண ஜாலங்களில் மகிழும் குழந்தைகள் போல், தேவ அறிவில் குழந்தைகளைப் போன்றிருக்கும் கிறிஸ்தவர்கள் இன்று ஆவிக்குரிய மேடைகளில் வார்த்தை விளையாட்டில் நேரம் போக்குகின்றனர்.

ஆதாமின் வலது பக்க விலாவிலிருந்து அவனுடைய மனைவியான ஏவாள்! பிந்தின ஆதாமின் வலப்பக்க இரத்தத்திலிருந்து அவருடைய மணவாட்டியான சபை! இது சத்தியமல்ல, வீண் வார்த்தை விளையாட்டு. இயேசுவின் வலப்பக்க இரத்தம், அவர் மரித்த பிறகு சிந்திய இரத்தமே தவிர, இயேசுவே பலியாகக் கொடுத்த இரத்தமல்ல. வேதத்தின் ஆழத்தை நோக்குகிறவனே, வானவில்லை உடன்படிக்கையாகப் பார்க்கிறவன்.

சகோதரனே! நீ எப்படி வேதத்தைப் பார்க்கிறாய்? வெறும் மேகங்களைப் பார்ப்பதைப் போலப்பார்க்கிறாயா? வேத எழுத்துக்களை வெறும் மேலோட்டமாய்ப் பார்த்தால், நீ வெறும் மேக மூட்டங்களையே பார்க்கிறாய். இவை காற்றுகளினால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களே, ஆவியின் வெளிப்பாடு இன்றி வேதத்தை வாசித்தால் ஓடுகின்ற மேகங்களைப் பார்க்கின்றீர்களே தவிர, உடன்படிக்கையின் வானவில்லைப் பார்க்கமாட்டீர்கள்.

எடுத்துக்காட்டாக, ***"இரட்டிப்பான நன்மையைத் தருவேன் இன்றைக்கே தருவேன்"*** (சகரியா 9 : 12) என்ற வசனத்தை இன்றைய வாக்குத்தத்தமாக பிரசங்கிக்கின்றனர். இரண்டு மடங்கு சம்பளம், இரண்டு மடங்காக பணி உயர்வு, இரண்டு மடங்கு ஆத்தும ஆதாயம் - இவையெல்லாவற்றையும் தான் இந்த வசனம் குறிப்பிடுகின்றது என்று பிரசங்கிக்கின்றார்கள். இந்தப் பிரசங்கம் தெய்வீக வெளிப்பாடற்ற தண்ணீரற்ற மேகம்.

இஸ்ரவேலர் அந்நிய நாட்டில் அடிமைகளாக இருப்பார்கள். சிலர் எருசலேமுக்குத் திரும்பியிருப்பார்கள். சிலர் அங்கேயே இருப்பார்கள். ஆனாலும் இந்த இருத்தரப்பினருக்கும் நம்பிக்கையுண்டு. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இவர்கள் ஆயிர வருட அரசாட்சியிலும் இருப்பார்கள், தேவனது நித்திய இராஜ்ஜியத்திலும் இருப்பார்கள். இதைத்தான் இன்றைக்கே தருவேன் என்று தேவன் உடன்படிக்கைப் பண்ணுகிறார். இந்த உடன்படிக்கையே வானவில்.

அரணாகிய கிறிஸ்துவுக்கு வெளியே சம்பவங்களை வெறும் மேகங்களாகவே மனிதன் பார்க்கின்றான். அரணாகிய கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன், கர்த்தரின் உடன்படிக்கையாகிய வானவில்லைக் காண்கிறான். ஆகவே வேதம் சொல்லுகிறது, ***"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன் இன்றைக்கே தருவேன்".*** (சகரியா 9 : 12)

# கூடார ரகசியம் தெருவிலே

(அதிகாரம் - 9)

***"நோவா திராட்ச ரசத்தின் வெறி தெளிந்து விழித்தபொழுது தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து, கானான் சபிக்கப்பட்டவன்; தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்."*** (ஆதி. 9 : 24, 25)

நோவா குடிகாரன் அல்ல. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு உள்ள சீதோஷ்ண நிலையில் திராட்ச ரசத்தின் தன்மை மாறிவிட்டது. இதையறியாது வழக்கம்போல அதனைக் குடித்த நோவா வெறி கொண்டு தூங்கிவிட்டான். அப்பொழுது குடி வெறியில் நிர்வாணமாக அலங்கோலமாகக் கிடந்தான். உள்ளே வந்த காம் தன் தகப்பனின் நிர்வாணத்தைக் கண்டு வெளியே சென்று தன் சகோதரருக்கு அறிவித்தான். ஆனால் தன் தகப்பனின் நிர்வாணத்தை அவன் மூடவில்லை. மாறாக அதனை வெளிப்படுத்தினான். ஆனால் மற்ற இரு சகோதரர்களும் பின்னாகத் திரும்பி வந்து தன் தகப்பனின் நிர்வாணத்தைக் காணாமல் அதனை மூடினார்கள்.

நோவா குடிகாரன் அல்ல. அப்படி இருந்திருப்பாரெனில் அவன் மீது தீர்க்கதரிசன ஆவி இறங்கியிருக்காது. கானானுக்கு சாபத்தையும் தமது மற்ற இரு மகன்களுக்கு ஆசீர்வாதத்தையும் தீர்க்கதரிசனமாக அறிவித்தான். தவறு செய்த தன் மகன் காமை நோவா சபிக்கவில்லை. மாறாக அவன் மகனாகிய கானானை சபித்தான். நோவா மாத்திரம் அல்ல, கடவுளும் இதற்கு உடந்தையாக இருக்கிறார். ஏற்கனவே நோவா தன் மூன்று குமாரர்களையும் ஆசிர்வதித்திருக்கிறார். (ஆதி. 9:1)

ஆகவே இப்பொழுது அந்த ஆசிர்வாதத்தை நோவாவினால் நீக்க முடியாது. முடிவிலிருந்து தொடக்கத்தை அறிகிற தேவன், கானானும் அவன் சந்ததியாரும் சாபக்கேடாக இருப்பதை அறிந்து கானானை சபித்தார். தேவன் சபித்ததினாலே அவர்கள் பொல்லாதவர்களாக மாறிவிடவில்லை. அவர்கள் பொல்லாதவர்களாக இருப்பார்கள் என்று அறிந்துதான் தேவன் சபித்தார்.

இதிலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். கூடாரத்துக்குள் நடக்கும் தவறை வெளி உலகிற்குக் காட்டுவது தவறு. தனி மனிதனின் வாழ்க்கைப் பிழைகளை (உபதேசப் பிழைகளை அல்ல) வெளியே சொல்லக்கூடாது. கூடாரம் பொதுவாக ஆவிக்குரிய ஸ்தலத்தைக் குறிக்கும். கூடாரத்தில் உள்ள தவறுகளை, குற்றங்களை வெளியே பறைசாற்றுவது நாகரீகமல்ல. அதனை மறைப்பதே நியாயமும் நாகரீகமும் ஆகும்.

யோசேப்பு தனக்கு நியமிக்கப்பட்ட மனைவியாகிய மரியாள் திருமணத்திற்கு முன்பே கர்ப்பவதியாக இருப்பதை கேள்விப்பட்டான். இதனைத் தவறாக விளங்கிக் கொண்ட யோசேப்பு மரியாளை தனக்கு மனைவியாக ஏற்றுக்கொள்ள மனதில்லாதிருந்தான். ஆனால் மரியாளை வெளியரங்கமாக அவமானப்படுத்த அவனுக்கு மனதில்லை. மரியாளை இரகசியமாக தள்ளிவிட விரும்பினான். ஏனெனில் மரியாளின் நல்மதிப்பு யோசேப்பின் கையில் பத்திரமாக இருந்தது. யோசேப்பு மரியாளைக் குறித்து தூற்றித் திரிந்திருப்பாரெனில் அது எத்தனை வேதனையான சரித்திரத்தை உருவாக்கியிருக்கும்.

கூடாரம் வாழும் வீடாகவோ, தொழும் ஆராதனை ஸ்தலமாகவோ இருக்கலாம். கூடாரத்தின் கண்ணியத்தை நாம் எப்பொழுதும் காப்பாற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறோம். மோசே எத்தியோப்பிய தேசத்துப் பெண்ணாகிய கேத்தூராளை விவாகம் பண்ண விரும்பினான். ஆனால் இது மோசேயின் அக்காவாகிய மீரியாமுக்குப் பிடிக்கவில்லை.

வீட்டுப் பிரச்சனையான இதனைக் கூடாரத்தில் அதாவது ஆராதனை ஸ்தலத்தில் எதிரொலித்தாள். கர்த்தரோ மீரியாமைத் தண்டித்தார். ஏனெனில் அவள் குடும்பக் காரியத்தை ஆராதனை ஸ்தலத்தில் கொண்டு வந்தாள். ஆகவே தண்டிக்கப்பட்டாள்.

சகோதரனே! சகோதரியே, உங்கள் போதகரின் தனிப்பட்ட வாழ்க்கையின் தவறுகளை (துணிகரமான பாவங்களையல்ல) சபைகளில் எழுப்பாதீர்கள். அப்படிச் செய்தால் ஆராதனை கெட்டுப்போகும். ஊழியம் தாறுமாறாகிப்போகும். கடவுளுக்கு மகிமைக் குறைச்சல் ஏற்படும். இன்றைய விசுவாசிகள் போதகரின் ஆவிக்குரிய வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை என்று பிரித்துப் பார்க்காது அவருடைய குடும்ப வாழ்க்கையிலுள்ள சில தவறுகளை சபைகளில் சுட்டிக்காட்டி பிரச்சனையை உண்டாக்குகிறார்கள். கூடாரத்தின் தவறுகள் கூடாரத்திலேயே சரி செய்யப்படவேண்டும். திருமண வீட்டில் திராட்சை ரசம் குறைவுபட்டது. வெளியுலகிற்குத் தெரிவதற்கு முன்பு அங்கேயே சரி செய்யப்பட்டது. இப்படி கூடாரத்தின் கண்ணியத்தை நாம் காப்பாற்ற வேண்டும்.

# ஐக்கிய நாடுகளும் பிரிந்த உலகமும்

(அதிகாரம் - 10)

கானானைக் கர்த்தர் சபித்திருந்தார். கர்த்தர் சபித்த அந்த இனத்திலிருந்து நிம்ரோத் என்கிற பராக்கிரமசாலி எழும்பினான். இவனைக் கொண்டு கர்த்தரின் சாபத்தை சாத்தான் அர்த்தமற்றதாக மாற்ற முயற்சித்தான். இவன் கர்த்தருக்கு முன்பாக துணிகரமாய் இருந்தான். இவன்தான் பாபேல் என்னும் இராஜ்ஜியத்தை ஏற்படுத்த முயற்சித்தான். இது கர்த்தருக்கு விரோதமான ஒரு ஐக்கியம்.

நிம்ரோத் என்ற பெயருக்கு "கலகக்காரன்" என்று பொருள். உலகத்திலேயே முதன்முதலாக இராஜ்ஜியத்தைக் கட்டினவன் இவன்தான். இவன் மனைவி செமிராமிஸ்தான் உலகில் முதன் முதலாக விக்கிரகாராதனையைக் கொண்டு வந்தது.

நிம்ரோத் ஆதி உலகில் தேவனுக்கு விரோதமாக எழுந்த பராக்கிரமசாலி. இவன் கர்த்தருக்கு விரோதமான வேட்டைக்காரன். இவன் ஆத்துமாக்களை வேட்டையாடி விக்கிரகாராதனையில் விழச் செய்தான். இவன் ஸ்தாபித்த சாம்ராஜ்யம் பாபேல். பாபேல் என்றால் "கடவுளிடத்திற்கு போகும் வாசல்" என்று பொருள். "நானே வாசல்" என்று கர்த்தராகிய இயேசு வெளிப்படும் முன் இந்தத் திருட்டு வாசல் திறக்கப்பட்டது. பிற்காலத்தில் பாபிலோன் மிகப்பெரிய விக்கிரகாராதனை ஸ்தலமாயிற்று. ஆதி உலகில் நிம்ரோத் ஒரு பெரிய பராக்கிரமசாலி. இந்தப் பராக்கிரமமும் வல்லமையும் தேவனுக்கு விரோதமாகவே இருந்தன. நிம்ரோத்தின் ஆரம்ப வெற்றி தேவனுக்கு விரோதமாக பறக்கும் கொடியாகவே இருந்தது. ஆகவே தீமை ஜெயிக்கும், அநீதி வெல்லும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. தேவன்

கொஞ்சக்காலம் காணாதவர் போலிருப்பார். அப்பொழுது சில கொடிகள் வெற்றிகரமாகப் பறக்கலாம், காலச்சக்கர வேகத்தில் கர்த்தர் அவைகளைக் கிழித்துப்போடுவார்.

அந்நாட்களில் காலாகு என்ற பட்டணம் இருந்தது. (ஆதி. 10 : 11) வாழ்வும், வளமும் மிக்க இந்தப் பட்டணம் சீரும் சிறப்புமாக விளங்கியது. ஆனால் இது தேவனுக்கு விரோதமாக எழும்பிய பட்டணம். ஆனால் இந்தப் பட்டணம் அடையாளம் தெரியாமல் அழிந்துப் போயிற்று. தேவனுக்கு விரோதமாக எழும்பின பராக்கிரமசாலிகளான ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் இவர்கள் மெல்ல மறக்கப்பட்டு வருகின்றனர். மனிதனின் நினைவு, உலக வரலாறு இந்தப் பராக்கிரமசாலிகளை ஒதுக்கித் தள்ளுகின்றன. என்றைக்கும் நிலைத்து நிற்கிறவர் சரித்திரத்தின் நாயகரான இயேசு கிறிஸ்துவே.

தேவனுக்கு விரோதமாக ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்க நினைத்தவன் நிம்ரோத். கர்த்தரோ அதனைச் சிதறப் பண்ணினார். பேலாகு என்பவனின் நாள்களில் உலகம் பகுக்கப்பட்டது. (ஆதி. 10 : 25) ஆகவே பல்வேறு தேசியங்கள் மக்கள், வித்தியாசமான மொழிகள் பூமியில் தோன்றின.

ஒற்றுமை என்பது நல்லதே, ஆனால் தேவனுக்கு விரோதமான ஒற்றுமையைக் கர்த்தர் சிதறடிப்பார். இன்று சபைப் பாகுபாடின்று அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றுபட வேண்டுமென்று குரல் கேட்கிறது. இந்த ஒற்றுமையின் குரலை கர்த்தரின் சத்தமாகவே எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் இது கர்த்தரின் சத்தமல்ல. ***"நாம் எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று"*** கர்த்தர் இயேசு ஜெபித்தது, உபதேசங்களை மறந்த ஒற்றுமைக்காக அல்ல. சத்தியத்தில் நாம் ஒன்றாயிருக்க வேண்டுமென்றே கர்த்தர் ஜெபித்தார். வேத சத்தியத்தை தூர எறிகிற சபைகளோடு எப்படி ஒற்றுமையாய் இருப்பது?

தேவனுக்கு விரோதமான ஒரு சபை ஐக்கியம் எழும்பும் அது மகா பாபிலோன். அவள் வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என அழைக்கப்படுவாள். ***"என் ஜனங்களே, நீங்கள் அவளுடையப் பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்"*** (வெளி. 18 : 4) என்ற சத்தம் உங்கள் காதுகளில் தொனிப்பதாக.

# சாத்தானின் திட்டமும் செயற்பாடும்

(அதிகாரம் - 11)

கடவுள் நமக்கு சிலத் திட்டங்களைத் தந்து தமது நோக்கத்தை நமக்கு வெளிப்படுத்தியிருந்தும் நாம் செயற்படாது விருதாவாகவே காலத்தைக் கழிக்கிறோம். "பகற்காலத்தில் நீங்கள் சும்மா நிற்கிறதென்ன" என்று தேவன் கேள்வி கேட்கிறார். நாம் எத்தனையோ காரணங்களை அவர்முன் வைக்கிறோம். பணமில்லை, நேரமில்லை, பொருளில்லை, வழியில்லை என்று எப்பொழுதும் சாக்கு போக்கு சொல்லுகிறவர்களாயிருக்கிறோம். சாத்தானோ மிகுந்தக் கட்டுப்பாட்டோடு திட்டமிட்டு வேலை செய்கிறான். அவ்வாறு அவன் கட்ட முயற்சித்த பாபேல் கோபுரத்துக்கான திட்டங்கள் நமக்குப் பல பாடத்தை கற்றுக் கொடுக்கின்றன.

இக்கட்டிடப் பின்னணிக்கு பின்னாக மறைந்திருக்கிறவன் நிம்ரோத். இது வெறும் பட்டணமும் கோபுரமும் மாத்திரம் அல்ல, ஒரு பெரிய சமுதாயத்தையே உருவாக்கும் பணிதான் இது. ஆனால் இந்தச் சமுதாயம் கடவுளை வெளியே தள்ளி கதவடைத்துவிடும். "நமக்கு ஒரு நகரத்தையும்" என்று திட்டமிட்டதினால் அரசியல் ஒற்றுமையையும், நமக்கு ஒரு "வானத்தை அளாவும் கோபுரத்தை" என்று திட்டமிட்டதினால் மத ஒற்றுமையையும் உருவாக்க நினைத்தனர்.

கோபுரத்தின் உச்சியே பரலோகமாய் இருக்க வேண்டுமென்பது அவர்களது எண்ணம். வானத்தை எட்டும் கோபுரத்தை அவர்கள் கட்டமுடியாது என்று அவர்களுக்குத் தெரியும், உண்மையில் வானசாஸ்திர கோபுரத்தையும், ஜோதிட சாஸ்திர கோபுரத்தையும்

கட்டவே விரும்பினர். கடவுளைப் பற்றிய சிந்தையே அவர்களுக்குக் கிடையாது.

நகரத்தையும், கோபுரத்தையும் அவர்கள் கட்டிய விதத்தையும் நாம் ஆராய்வோம். அவர்கள் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சையும் உடையவர்கள். (ஆதி. 11 : 1) ஆகவே, ஒரு கலாச்சார ஒற்றுமையும் இருந்தது. தேவனில்லாத எந்தக் காலச்சாரமும் ஜீவனற்றது.

நம் இந்திய நாட்டிலும் கலாச்சாரம் என்ற வெறியினால் சத்தியங்களைத் தூர எறிகிறோம். தெய்வ நம்பிக்கையை கலாச்சாரப் பின்னணியில்தான் ஏற்றுக்கொள்வோம் என்பது அறிவுடைமையல்ல. ஆனாலும் இந்த அஸ்திபாரத்தின் மீது அவர்கள் கட்ட ஆரம்பித்தார்கள். கலாச்சாரம் தெய்வ நம்பிக்கைக்கு ஜீவனானால் அது மதவெறியை உண்டாக்கும்.

முதலாவது கிடைத்தவற்றைப் பயன்படுத்தினார்கள். (Availability) கட்டிடத்திற்கு வேண்டிய கல்லும், சாந்தும் அங்கு இல்லை. இவை கிடைத்தால் கட்டலாம் என்று அவர்கள் காத்திருக்கவில்லை. கல்லுக்கு பதிலாக செங்கல்லையும், கிடைக்காத சாந்துக்கு பதிலாக கிடைக்கின்ற நிலக்கீலையும் பயன்படுத்தினார்கள்.

கடவுளுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுகிற நாம் எப்படி இருக்கிறோம்? நமக்கு தேவன் தந்திருக்கும் தாலந்துகளைக் கொண்டு கட்ட ஆரம்பிக்கிறோமா? அல்லது விசேஷமான வரம் கிடைத்தால்தான் ஊழியம் செய்வேன் என்று தாமதிக்கிறோமா? பணம், வாகனம், வசதி இவையெல்லாம் இருந்தால் தான் ஊழியம் செய்வோம் என்று காலத்தை வீணக்குவோர் நம் மத்தியில் இல்லையா?

கோலியாத்தை வீழ்த்த தாவீதுக்கு ஒரு பட்டயம் தேவை. பட்டயமில்லாததினால் தாவீது காத்திருக்கவில்லை கிடைத்த கூழாங்கல்லையே தாவீது பயன்படுத்தினான். முடிவில் கோலியாத்தின்

பட்டயமே தாவீதுக்கு வந்தது. சாத்தான் தன்னுடைய மக்களை இருப்பதைக் கொண்டு காரியத்தை ஆரம்பிக்க திட்டமிட தூண்டுகிறான்.

இரண்டாவதாக அவன் திட்டமிடுகிறான். "திட்டமிடத் தவறுகிறவன், தவறுவதற்காகவே திட்டமிடுகிறான்" என்று ஒரு பழமொழி உண்டு. சாத்தான் அரசியல் ஒற்றுமைக்காகவும் (நகரம்) மத ஒற்றுமைக்காகவும் (கோபுரம்) திட்டமிட்டு செயல்பட்டான். ஏனோதானோ என்று செயற்படவில்லை. ஜனங்கள் சிதறிப்போகாதிருக்க ஒரு நகரத்தைத் திட்டமிட்டான். தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணியிருக்கும் நித்திய நகரத்திற்கு ஜனங்களை அழைத்துச் செல்ல திட்டமிட்டிருக்கிறோமா?

***"தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்கு காத்திருந்தான்."*** (எபி. 11 : 10) இந்த நகரத்தையே இலக்காக வைத்து நாம் பிரயாசப்படுகிறோமா? ஆலயக் கட்டிடத்திற்குள் சேர்க்கத் திட்டமிட்டோம், ஆண்டவர் வருகைக்கு ஆயத்தப்படுத்தத் திட்டமிட்டோமா, கோபுரத்தைக் கட்டி எழுப்பி மதத்தை உருவாக்க சாத்தான் திட்டமிட்டான். சுவிசேஷத்தை அறிவித்து சத்தியத்தை வளர்க்கத் திட்டமிட்டோமா?

இன்று சில கிறிஸ்தவ தலைவர்கள் வானத்தை அளாவும் கோபுரத்தைக் கட்டி, தேவ ஞானத்தை இழந்து நிற்கிறார்கள். கோபுரமும் கோயிலும் கடவுளின் திட்டம் அல்ல. சபையும் சத்தியமுமே தேவனின் திட்டங்கள். சாத்தான் திட்டமிடுகிறான். நாமும் எச்சரிக்கையோடு இருப்போம்.

மூன்றாவதாக சாத்தான் பிரிவினையில்லாமல் தன் ஜனங்களைக் காத்துக்கொண்டான். ***"இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்"*** (ஆதி. 11:6) என்று வேதம் சொல்லுகிறது. ***"தனக்குத் தானே பிரிந்துபோகும் எந்த இராஜ்யமும் விழுந்துப்போகும்"*** இன்று சாத்தானின் இராஜ்யம் விழுந்துப் போகாமைக்குக் காரணம் அவன் ஏற்படுத்திய ஒற்றுமை. எந்தப் பிரிவினையும் இன்றி சாத்தானுக்காக ஒரே இலக்கை நோக்கி

அசுத்த ஆவிகள் கிரியைச் செய்கின்றன. கர்த்தருடையப் பிள்ளைகளாகிய நமக்குள் எத்தனைப் பிரிவினைகள், எத்தனைச் சண்டைகள்? சபை வழக்குகள் நீதிமன்றத்தை நிரப்புகின்றன.

ஒரு அசுத்த ஆவியும் சாத்தானுக்கு விரோதமாக நிற்பதில்லை. ஆனால் சபை மக்கள் தேவ அதிகாரத்திற்கு விரோதமாகக் கொடி பிடிக்கிறார்கள். கர்த்தரின் பணியை புதிய விசுவாசித் திறமையாய்ச் செய்தால் பழைய விசுவாசி பொறாமைத் தீயில் வெந்துப்போகிறானே. சாத்தான் ஒற்றுமையாக கிரியை செய்கிறான் என்பதை நினைவில் வையுங்கள்.

கடைசியாக, சாத்தானின் செயல்பாட்டில் முக்கியமான காரியத்தை நினைவில் வைக்கிறோம். தாங்கள் செய்ய நினைத்தது "ஒன்றும் தடைப்படமாட்டாது" (ஆதி 11:6) என்று உறுதியாய் இருந்தார்கள். இந்தப் பலமான விசுவாசம் நமக்கு உண்டா? கர்த்தர் செய்ய நினைத்தது தடைபடாது என்று உறுதியாய் நம்புகிறோமா? சாத்தான் விசுவாசித்து செயல்படுகிறான். நாமும் விசுவாசத்தில் செயல்படுவோம். விசுவாசமில்லாத யாவும் பாவமே.

# உன்னத அழைப்பு

(அதிகாரம் - 12)

கடவுளுடைய முதல் குடும்பம் அவரை ஏமாற்றியது. முழு சமுகமே அவரை ஏமாற்றி ஜலப்பிரளயத்தில் அமிழ்ந்தது. தேவனுக்கு விரோதமாகவே தேசியம் எழுந்தது. பாபேலில் சிதறடிக்கப்பட்டது. இப்படி எல்லாமே கடவுளை ஏமாற்றின. இவை ஒன்றுமே தேவனை அதிர்ச்சியடைய வைக்கவில்லை. ஐயோ! என மனம் சோர்ந்து உட்கார நம்முடைய தேவன் மனிதனுடைய கற்பனை தெய்வமல்ல. இந்த ஏமாற்றங்களுக்கு மத்தியில் தன் நோக்கத்தை நிறைவேற்ற கடவுள் ஒரு தனி மனிதனைத் தேடினார். கல்தேய நாட்டின் ஊர் பட்டணத்தில் விக்கிரகத்தை வழிபடாத ஒரு மனிதன் இருந்தான்.

அன்று பௌர்ணமி. பல்வேறு விக்கிரகங்களைச் சுமந்து அலங்காரப் பல்லக்குகள் வீதி வழியாய்ச் சென்றுக்கொண்டிருக்கின்றன. பௌர்ணமிச் சந்திரத் திருவிழாக் கோலாகலத்துடன் நடந்துக் கொண்டிருக்கின்றது. இக்கொண்டாட்டத்திற்கும் ஆரவாரத்திற்கும் அந்த மனிதன் விலகியேயிருந்தான். அப்பொழுது கர்த்தர் ***"ஆபிராமே நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ"*** (ஆதி. 12 : 1) என்றார்.

இந்த அழைப்பை ஏற்று ஆபிரகாம் உடனே புறப்பட்டான். போகும் இடம் எதுவென்று தெரியாமலே அவன் புறப்பட்டது விசுவாசமே. ஆனாலும் ஆபிரகாமின் ஆரம்ப நடைகளில் தவறுகள் உண்டு அதனைக் கவனிப்போம். "உன் இன ஜனத்தை விட்டு நீ விலக வேண்டும்" என்று கர்த்தர் ஆபிரகாமிற்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் இக்கட்டளைக்கு ஆபிரகாம் முற்றிலும் கீழ்ப்படியவில்லை.

ஊர்ப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகும்பொழுது, தன் இனத்தானாகிய லோத்துவையும் அழைத்துக்கொண்டு போவது கீழ்ப்படியாமை. மேலும் அவன் தன் தகப்பனையும் கூட அழைத்துக் கொண்டுபோனான். தாயையும் தகப்பனையும் கனம் பண்ண வேண்டுமென்பது கடவுளின் கட்டளை. இக்கட்டளையைக் கர்த்தருக்குள்தான் நிறைவேற்ற வேண்டும். ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகுவை அழைத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை.

சில மைல்கள் கடந்துப்போனபின், ஆனாலும் இன்னும் மெசொப்பொத்தாமியா நகரத்தில் இருக்கும்போதே, ஆபிரகாமுடைய சகோதரனாகிய ஆரானின் மரணச் செய்தியை தேராகுக் கேட்டான். மனம் சோர்ந்து அந்த இடத்திலேயே தேராகு தங்கிவிட்டான். அந்த இடத்திற்கு ஆரான் என்று பேரிட்டான். பல வருடங்கள் ஆபிரகாம் தேராகுடன் அவ்விடத்தில் தங்க வேண்டியதாயிற்று. அந்த இடம் மெசொப்பொத்தாமியா தேசத்தின் ஒரு பகுதிதான். ஆகவே, அவன் உண்மையில் அந்தத் தேசத்தைவிட்டு வரவேயில்லை.

கர்த்தர் சொன்னபடி ஊர்ப்பட்டணத்தை விட்டான். ஆனால் தேசத்தை விடவில்லை. கர்த்தர் சொன்னபடி தகப்பனுடைய தேசத்தை விட்டான். ஆனால் தகப்பனை விடவில்லை. கர்த்தர் சொன்னபடி இனத்தை விட்டான்; இனத்தானாகிய லோத்துவை விடவில்லை. ஆகவே இது கீழ்ப்படிதலில் ஒரு கீழ்ப்படியாமை. உலகம் இந்தக் கீழ்ப்படிதலைக் காணும்போது தேவன் இந்தக் கீழ்ப்படியாமையையும் காண்பார்.

அன்பான சகோதரனே, சகோதரியே! உங்கள் வாழ்க்கையிலும் கீழ்ப்படிதலில் ஒரு கீழ்ப்படியாமை இருக்கின்றதா? மனந்திரும்பி இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு இருக்கும் நீங்கள் ஞானஸ்நான கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருக்கின்றீர்களா? அப்படியாயின் நீங்கள் எகிப்தை விட்டு வெளியே வந்துவிட்டீர்கள்; ஆனால் செங்கடலைக் கடக்கவில்லை. ஆகவே விரைவில் சாத்தானாகிய பார்வோன் கையில் சிக்கிக் கொள்வீர்கள். கடவுளுக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள்.

ஆரம்பத்தில் ஒன்றினை நாம் சரியாய்ச் செய்யாவிட்டால் சில சமயங்களில் முடிவிலும் அதைச் சரிசெய்ய முடியாது. “முதல் கோணல் முற்றும் கோணல்” என்ற பழமொழி சிந்தனைக்குரியது. தேராகுவை ஆபிரகாம் ஊர்ப்பட்டணத்திலேயே விட்டுவந்திருக்க வேண்டும். ஆரானில் தேராகு மிகுந்த பெலவீனமாய் இருக்கின்றான். கானானை நோக்கிய நீண்டப் பிரயாணத்தை இனி அவனால் செய்யமுடியாது. ஆபிரகாம் தேராகுவை இவ்வூரிலேயே விட்டுவிட்டுக் கானானுக்குப் போனால் அது துரோகம். ஆரம்பத்தில் எச்சரிக்கையோடு இருக்க ஆபிரகாம் தவறிவிட்டான்.

தேவப்பிள்ளையே திருமணம், வேலைவாய்ப்பு, ஊழிய அழைப்பு இவற்றின் ஆரம்ப நிலையில் நீ சரியான முடிவெடுக்கத் தவறிவிட்டால் கடும் பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். சந்தோஷமாய் தொடர வேண்டிய உன் வாழ்க்கைப் பயணம் துக்க சாகரத்தில் தடுமாறி விடும். தேராகு மரிக்கும் வரையிலும் ஆபிரகாம் ஆரானை விட்டுப் புறப்பட முடியவில்லை. ஆரம்பத்தில் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாததினால் ஆபிரகாமுக்கு வாழ்க்கையில் வருத்தமும், வேதனையும், தாமதமும் ஏற்பட்டன. அவனது அழைப்பு உன்னதமானதாய் இருந்தும், பள்ளத்தாக்கிலே தரிசனமிழந்து நிற்க வேண்டியதாயிற்று.

# நீதிமானின் தடுமாற்றம்

(அதிகாரம் 12)

தேவதரிசனம் பெற்று புறப்பட்ட ஆபிரகாம், தேவன் தனக்கு தரிசனமான ஒரு இடத்தில் பலிபீடத்தைக் கட்டிக் கர்த்தரைத் தொழுதுகொண்டான். நெருக்கத்தில் கர்த்தரைத் தேடவேண்டிய ஆபிரகாம், நெருக்கத்திற்குத் தீர்வுகாண எகிப்து நோக்கி நடந்துவிட்டான். தேவன் தனக்கு தரிசனமான இடமாகிய கடவுளின் வீட்டை விட்டு விட்டான். (பெத்தேல்) பலிபீடத்தையும் விட்டு விட்டான்.

அதாவது, அவன் எகிப்திற்கு சமீபமாய் வந்தபோது, ***"எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள். ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்."*** (ஆதி. 12:12,13)

தன்னுடைய மனைவியின் அழகின் நிமித்தம் தனக்குப் பிரச்சனை உண்டாகும் என்று எண்ணியது தவறல்ல. ஆனால் அதற்கு அவன் தேடிய பரிகாரம் மிகப் பெரிய தவறு. ஆபிரகாம் தனக்குப் பிரச்சினை வரும் என்று எண்ணிய நேரத்தில் கர்த்தரைத் தேடியிருக்க வேண்டும். மாறாக மானசீகமான வழியை மேற்கொண்டான். சாராளைத் தன் சகோதரி என்று சொல்லும்படி ஆபிரகாம் ஆலோசனைச் சொன்னான். தன் உயிருக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்ட ஆபிரகாம் தன் மனைவியின் கற்புக்கு ஆபத்தை உண்டாக்கினான். "உன்னிமித்தம் எனக்கு நன்மையுண்டாக

வேண்டுமென்று" ஆபிரகாம் சாராளிடம் மன்றாடியது மிகவும் தரங்கெட்ட செயல். எந்த ஒரு சராசரி மனிதனும் இந்தத் தவறை செய்யமாட்டான்.

நெருக்கத்தில் கர்த்தரைப் பற்றிக் கொள்ளத் தவறியதால், நீதிமானாகிய அவன் உள்ளத்தில் பெரியத் தடுமாற்றம் ஏற்பட்டது. அந்தத் தடுமாற்றம் இந்த நாள்வரை தேவ மக்களைப் பாதிக்கிறது.

சகோதரியே! நீயும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். தன் புருஷன் தன்னை அவனுக்குச் சகோதரன் என்று சொல்லும்பொழுது, "ஆண்டவனே, அப்படியே செய்கிறேன்" என்று தகாத செயலுக்கு அடிப்பணியவில்லை. முடியாது என்று எதிர்த்து ஆரவாரமும் செய்யவில்லை. அந்த நெருக்கடியான நேரத்தைக் கர்த்தரின் கையில் கொடுத்து விட்டாள். எப்படி இந்தக் கருத்தை உறுதியாகச் சொல்லலாம் என்று நீங்கள் கேட்கலாம். வேதத்தில் ஒரு வசனத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

***"நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்திற்கும் பயப்படாதிருந்தீர்களானால் சாராளுக்குப் பிள்ளைகளா-யிருப்பீர்கள்."*** (1 பேது. 3:6) பார்வோனின் அரண்மனைக்கு சாராள் அழைத்துச் செல்லப்பட்ட பொழுது, தனக்கு ஒரு ஆபத்துவரும் என்று பயப்படாதபடிக்கு கர்த்தரை உறுதியாக நம்பினாள். அவளுடைய விசுவாசத்தின் விளைவு கர்த்தர் பார்வோனைத் தண்டித்தார். சாராள் பத்திரமாக ஆபிரகாமோடே திருப்பியனுப்பப்பட்டாள். ஆகவே சகோதரிகளே! நீங்கள் எப்பொழுதும் ஞானமுள்ளவர்களாய் நடவுங்கள். உங்கள் திராணிக்கு மிஞ்சிய ஒரு சோதனை வரும்பொழுது பயப்படாதீர்கள்! கர்த்தரே ஒரு போக்கையும் உண்டாக்குவார்.

எல்லாவற்றையும் தன் தேசத்தில் விட்டுவிட்டு ஆபிரகாமும் சாராளும் புறப்பட்டார்கள். தேவ அழைப்பை இதயத்தில் சுமந்த பொழுது இலாபமானவைகளையும் நஷ்டமானவைகளாக எண்ணினார்கள். ஆனால் எகிப்திற்குப்போன பிறகோ

நஷ்டமானவைகளையும் இலாபமென்று எண்ணத் தொடங்கினர். பார்வோன் அனுப்பிய ஆடு மாடுகளையும், கழுதைகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும் மனதார ஏற்றுக் கொண்டான். பிற்காலத்தில் சோதோம் ராஜா தந்த பொருளை வேண்டாம் என்று தள்ளி, கர்த்தருக்கு நேராக தன் கைகளை உயர்த்துகிறவன், இப்பொழுது இருகரம் நீட்டி பார்வோன் ராஜாவின் ஐசுவரியத்தை ஏற்றுக் கொண்டான். பார்வோனின் ஐசுவரியத்தில் ஒரு சாபமும் இருந்தது.

கர்த்தரோ ஆசீர்வாதத்தோடு ஒரு வேதனையையும் கூட்டமாட்டார். பார்வோனுடைய ஆசீர்வாதத்தோடு வந்தக் கூட்டத்தில் தான் ஆகாரும் வந்து சேர்ந்தாள். ஆகாரினிமித்தமாய் எழுந்தப் பிரச்சினை மத்தியக் கிழக்கு நாடுகளில் இன்றுவரை தீர்ந்தபாடில்லை. ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரின் தடுமாற்றத்தால் ஏற்பட்ட உலக சரித்திரத்தின் துன்ப அதிகாரங்களே இஸ்ரேலுக்கு விரோதமாய் எழும்பும் யுத்தங்களும், போராட்டங்களும். சகோதரனே! உன் ஆவிக்குரிய தீர்மானத்தில் எச்சரிக்கையாயிரு. நீ எடுக்கும் தீர்மானத்தினால் உன் சந்ததியே பாதிக்கும்.

# தூரத்து பச்சை

(அதிகாரம் - 13)

கடவுளின் அழைப்பு, தேவதரிசனம் இவை ஒன்றும் இல்லாமல் ஆபிரகாமோடு லோத்தும் புறப்பட்டான். "குட்டிக்கும் நாய்க்கும் குடிபோக சந்தோஷம் உண்டு" என்ற பழமொழி உண்டு. வேறொரு இடத்திற்கு குடிபோக வேண்டும் என்ற ஒரு நோக்கம் இல்லாமல், பிரயாண சுகத்திற்காக மனிதன் இடம்விட்டு இடம் போவதை இந்தப் பழமொழி குறிக்கிறது.

பஸ் பிரயாணமோ, இரயில் பிரயாணமோ சுகமாக இருக்கிறது என்பதற்காக ஏதாவது ஒரு இடத்திற்கு பிரயாணம் பண்ணுகிறவன், இலக்கு இல்லாதவன், தரிசனம் இல்லாதவன். தரிசனம் இல்லாமல் ஆராதனைக்குப் போகிறவனும், இலக்கு இல்லாமல் ஊழியம் செய்கிறவனும் பரிதாபமானவன். இப்படித்தான் லோத்து இருந்தான்.

கானானை நோக்கி ஆபிரகாம் நடந்துக்கொண்டிருக்கும் போது, லோத்தின் கண்கள் வழியோரத்துக் காட்சிகளில் சிக்கிக் கொண்டன. கொஞ்ச நாள்கள் எகிப்திலே தங்கியிருந்ததின் விளைவு லோத்து முற்றிலும் மாம்சீகமாக மாறிப்போனது. லோத்து இப்பொழுது பரலோகத்தில் தான் இருக்கின்றான். ஆனால் இம்மைக்கான ஆசீர்வாதத்தை மட்டும் விரும்புவோருக்கு அவன் தகப்பனாய் இருக்கின்றான். அவனது சரித்திரம் இழப்பும் ஏழ்மையுமே.

அவன் இரட்சிக்கப்பட்டவன்தான். ஆனால் கடவுளின் அக்கினிச் சோதனையில் அவனுடைய ஆவிக்குரிய அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டன. ஆகவே லோத்துப் பரலோகத்தில் இருந்தாலும்

தன் கிரீடத்தை இழந்தவனாகவே இருக்கிறான். ***"நீ மரணப் பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவக்கிரீடத்தை உனக்குத் தருவேன்"*** என்ற ஜீவ வார்த்தைகளை நாம் மறந்துவிடக்கூடாது.

இவ்வுலகில் ஜீவ நாட்களை விரும்பி பரலோகத்தின் ஜீவகிரீடத்தை இழப்பது மதிகேடு இல்லையா? அப்படிப்பட்ட மதிகேடனாகவே லோத்து இருந்தான்.

ஐசுவரியம் நல்லதுதான், ஐசுவரியத்தினால் ஆபிரகாம் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. லோத்தின் ஐசுவரியமோ பிரச்சனையை உருவாக்கிற்று. பரிசுத்தவானாகிய ஆபிரகாமோடு உள்ள உறவை லோத்தின் ஐசுவரியம் துண்டித்தது. இதனால் லோத்து அடைந்த நஷ்டங்கள் பல. இம்மைக்கான உறவுக்காக ஆவிக்குரிய உறவைத் துண்டித்துவிடாதே.

***"நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன்"*** (ஆதி. 13 : 9) என்று ஆபிரகாம் தேவன் வாக்குத் தத்தம் பண்ணின தேசத்தை லோத்தோடு பங்கிட்டான். இப்படிச் செய்ய ஆபிரகாமுக்கு என்ன அதிகாரமுண்டு? தேவன் நமக்கு தந்த ஆவிக்குரிய சுதந்திரத்தை ஒருவரோடும் பங்கிடக்கூடாது. பொருளாசையினால் லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்தான்.

***"அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப்போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது"*** என்றான். (ஆதி 13 : 10)

ஓர் இடம் கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், அதே சமயத்தில் சோதோமைப் போலவும் இருக்காது. பரிசுத்த அசுத்தம், பாவ பரிசுத்தம் என்று எப்படி இருக்காதோ அதுபோன்று லோத்தின் காட்சியும் பொய்யானது. தன் மனக்காட்சியையே தேவன் தந்த காட்சியென லோத்து எண்ணினான்.

சிலர் தங்கள் மனோவாஞ்சையை கர்த்தருடைய அழைப்பு என்று எண்ணி ஊழியத்தில் துணிகரமாய் நுழைந்து தடுமாறுகிறார்கள். லோத்தின் தடுமாற்றம் அவனை ஆபிரகாமை விட்டுப் பிரித்து விட்டது. கானானைவிட சோதோம் லோத்துக்கு பச்சைப்பசேலென்று இருந்தது. இது அழைப்புக்குத் தூரமான பச்சை தேவ தரிசனத்துக்கு மாறான ஒரு பச்சை. இந்தப் பச்சையே அவனுக்கு எதிரான எச்சரிக்கையான சிவப்பு நிறமாயிற்று.

# இருதயக் கூடாரம்

(அதிகாரம் - 13 : 14)

உன் இருதயம் எதை நோக்கி கூடாரம் போடுகிறதோ, அதில் நீ சிக்கிக்கொள்வாய். நீ எங்கு இருக்கிறாய் என்பதைவிட உன் இருதயம் எதைப் பற்றியிருக்கிறது என்பதே முக்கியம். லோத்து ஆபிரகாமோடு இருந்தான். ஆனால் அவன் இருதயமோ சோதோமை நோக்கி கூடாரம் போட்டது. லோத்து சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான் என்று வேதம் சொல்கிறது. ***"சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்."*** (ஆதி 13:13)

இந்தப் பொல்லாத ஜனங்களோடு லோத்து ஐக்கியமாகா விட்டாலும், அவர்களை நோக்கியே அவனின் இருதய கூடாரம் இருந்தது. சில நாட்களுக்குள்ளாக சோதோமை நோக்கியிருந்த அவன் சோதோமில் குடியேறிவிட்டான். இருதயத்தில் தரிசனமில்லாத லோத்து கண்ணின் காட்சியில் நடந்தான். முடிவில் அவன் தன்னையே இழந்து விட்டான். சோதோமுக்கு எதிரிடையான யுத்தத்தில் தான் சம்பாதித்த ஐசுவரியம் யாவையும் இழந்தான். அவனும் சிறைபிடிக்கப்பட்டான்.

கர்த்தரை விட்டு விலகி தேடும் ஐசுவரியத்தின் முடிவு இதுதான். விசுவாச சிகரத்தின் மீது வெற்றிக்கொடி பறக்கவிட்டு நின்றான் ஆபிரகாம். தரிசனம் இழந்த லோத்தோ கண்ணீரின் பள்ளத்தாக்கில் புதைந்துப் போனான். லோத்தின் இதயக்கூடாரம், உபத்திரவத்தின் கூண்டாக மாறிவிட்டது. ஆகவே உங்கள் இதயச் சிந்தனைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

# நித்திய ஆசாரியத்துவம்

(அதிகாரம் 14 : 18-23)

லோத்தை சிறைபிடித்த ராஜாக்களை வீழ்த்திவிட்டு லோத்துவையும் அவன் பொருள்களையும் விடுவித்து, வெற்றி நடையோடு ஆபிரகாம் திரும்பினான். அப்பொழுது உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக் ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சை ரசமும் கொண்டு வந்தான். கறைப்பட்ட இராஜாக்களை வென்று திரும்பிய ஆபிரகாமை பரிசுத்த ராஜாவாகிய உன்னத தேவனின் ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு சந்தித்தான். மெல்கிசேதேக்கு கறைபடாத ராஜா. மெல்கிசேதேக்கு தாயும் தகப்பனும் இல்லாதவனல்ல, தாய் தகப்பனின் வரலாறு இல்லாதவன். (மெல்கிசேதேக்கு கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்தவன்.)

லோத்தைப் போலல்லாது ஆபிரகாம் உலகத்தோடு ஒத்துப் போகாமல் ஆண்டவருக்காக உறுதியாக நின்றபடியால், கடவுள் அவனுக்குத் தன்னை வெளிப்படுத்தினார். அநீதியான ராஜாக்களை ஆபிரகாம் எதிர்த்தபடியால், நீதியின் ராஜாவான மெல்கிசேதேக் ஆபிரகாமிற்குத் தரிசனமானார். அதுபோலவே உத்தம வழியில் நாம் நடப்போமேயானால், நாமும் கடவுளைத் தரிசிப்போம்.

மெல்கிசேதேக் ஆபிரகாமிற்கு ***"அப்பமும் திராட்சை ரசமும் கொண்டுவந்து அவனை ஆசீர்வதித்தான்."*** (ஆதி. 14: 18-19) அப்பம் ஜீவனையும், திராட்சை ரசம் மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றன. ஆசாரியனான மெல்கிசேதேக், ஆபிரகாமிற்கு இதன் மூலம் ஓர் முக்கியமான செய்தியைத் தெரிவிக்கிறான். அது என்னவெனில் தேவனே அவனுக்கு ஜீவனும், மகிழ்ச்சியுமாக இருப்பார். ஆகையால் உலகின் சோதனைக்குப் பலியாகிவிடக்கூடாது என்பதே.

ஆபிரகாம் ஆசாரியனுக்குத் தசமபாகம் கொடுத்தான். ஆபிரகாமின் காலத்தில் நியாயப்பிரமாணமில்லை. ஆகவே தசமபாகம் நியாயப்பிரமாணக் கட்டளையில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். இது தவறு. ஆபிரகாம் மனசாட்சியின் காலத்தில் வாழ்ந்தவன். ஆகவே தசமபாகம் என்ற கட்டளை அவன் மனசாட்சியில் எழுதப்பட்டிருந்தது. இன்றும் மனசாட்சி உள்ள அனைவரும் தசமபாகம் செலுத்த வேண்டும்.

ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்குத் தசமபாகம் செலுத்தினான். இப்பொழுது பழைய ஏற்பாட்டின்படியான ஆசாரியத்துவம் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார். இயேசு, மாம்சத்தின்படி யூதா கோத்திரம், யூதா கோத்திரத்தார் ஆசாரியராக வரமுடியாது. ஆனால் இயேசு மெல்கிசேதேக் முறைமையின்படி, நித்தியமாய் நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார். இவரே சபைக்கு தலைவராக இருக்கிறார். ஆகவே சபைக்குத்தான் தசமபாகம் கொடுக்க வேண்டும். இதுவே நித்திய ஆசாரியனுக்கு நாம் செய்யும் உதவி அல்ல கடமை.

பல ஊழியங்கள் இருக்கலாம். எல்லா ஊழியங்களையும் கர்த்தர் சபையில் தான் வைத்தார். (எபே4:13) ஆகவே சபைக்கே தசமபாகம் செலுத்த வேண்டும். சபையின் தலைவராகவே கர்த்தர் இயேசு நமது நித்திய ஆசாரியராக இருக்கிறார்.

# ஆபிரகாமிற்கு வந்த சோதனையும், சாதனையும்

(அதிகாரம் 14:21-24)

சோதோமின் ராஜா தன் சோதனையோடு ஆபிரகாமைச் சந்திக்கிறான், சாலேமின் ராஜா மெல்கிசேதேக்கு அவனைச் சந்தித்து ஆசீர்வதித்தபடியால், ஆபிரகாம் பிசாசின் சோதனையில் விழாமல் உறுதியாக நின்றான்.

நம் வாழ்க்கையில் திடீரென்று சோதனைகள் நம்மைச் சந்தித்துவிடும். சாத்தான் நம் விழுகையை ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் நாம் விழிப்போடு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

ஆகாப் என்னும் பொல்லாத இஸ்ரவேல் ராஜாவை எலியா சந்திக்குமுன், ஜீவனுள்ள தேவனை முன்னதாகவே சந்தித்து தைரியமும், பலமும் அடைந்தான். (1இரா 17 : 1) இப்படி எலியா தேவனைச் சந்தித்திருக்காவிட்டால், எலியா ஆகாபைச் சந்திக்கும் மன தைரியத்தைப் பெற்றிருக்கமாட்டான்.

கடவுளின் ஆசீர்வாதத்தை, மெல்கிசேதேக்கு மூலம், ஆபிரகாம் பெற்றான். அந்தச் சமயத்தில் சோதோமின் ராஜா ஆபிரகாமைச் சந்திக்கிறான். போரில் ஆபிரகாம் ஜனங்களையும் (ஆத்துமாக்கள்) பொருள்களையும் கைப்பற்றினான். சோதோம் ராஜா தந்திரமாக, "ஆத்துமாக்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக் கொள்ளும்" (ஆதி 14: 21) என்று ஆபிரகாமிடம் சொன்னான். இதுதான் சாத்தானின் மிகப்பெரிய தந்திரம். உலகப் பொருள்களை வாக்களித்து, ஆத்துமாவைப் பறிப்பதே அவன் வேலை.

தேவ மனிதனாகிய ஆபிரகாம் விழிப்போடு இருக்கிறான். சோதோமின் ராஜா (பிசாசானவன்) தன்னை ஐஸ்வரியவானாக்கக் கூடாது என்பதில் ஆபிரகாம் உறுதியாயிருந்தான்.

சகோதரனே! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? பதவிக்காக, பணத்திற்காக, புகழுக்காக சத்தியத்தைவிட்டு விலகிய நாள்கள் உங்கள் வாழ்க்கையில் உண்டா? குடும்பத்தாரின் அன்பிற்காக ஞானஸ்நானக் கட்டளையைத் தூர எறிந்தவர்கள் இருக்கிறார்கள்! ஆபிரகாம் சோதோமின் பொருள் ஒன்றையும் விரும்பவில்லை. மோசே எகிப்தின் பொக்கிஷத்தை வெறுத்தது போல், ஆபிரகாமும் சோதோமின் ஐஸ்வரியத்தை முற்றிலும் வெறுத்தான்.

வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக தன் கையை உயர்த்தினான். (ஆதி. 14 : 23) தன் கைகள் சுத்தமாக இருக்கின்றன என்று, தேவனுக்கு முன்பாக அவற்றை ஆபிரகாம் உயர்த்தினான். அப்படி நம்மால் செய்ய முடியுமா? கைகளை உயர்த்தி தேவனை ஸ்தோத்தரிக்கிறோமே, நம் கைகள் பரிசுத்தமாக இருக்கின்றனவா? பரிதானத்தை நம் கைகள் உதறியிருக்கின்றனவா? தவறான கடிதம், கள்ளக் கணக்கு இவற்றை எழுதிய அசுத்தக் கரங்களோடு, கர்த்தரைத் துதிக்கிறோமா?

உலக ராஜாக்களுக்கு ஓர் குறிப்பிட்ட தேசம் மட்டுமே சொந்தம். நம் கர்த்தரோ வானத்திற்கும், பூமிக்கும் சொந்தக்காரர்! ஆகவே நம் கர்த்தர் நம் தேவைகளைச் சந்திப்பார். நாம் ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் விளங்கப் பண்ணுகிறோம் (11 கொரி 6:10) என்பது உண்மைதானே?

அர்தசஷ்டா ராஜாவிடம் எந்த உதவியும் கேட்க மறுத்த எஸ்றா கூறுகிறான், ***"வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும்படி நான் ராஜாவினிடத்தில் சேவகரையும், குதிரை வீரரையும் கேட்க வெட்கப்பட்டி-***

***ருந்தேன்; எங்கள் தேவனுடைய கரம் எங்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்."*** (எஸ்றா 8 : 22)

இப்படி பொருளுக்காக, ஜீவனுக்காக நம்மை உலகிற்கு அர்ப்பணிக்கும் சோதனைகளுக்குத் தப்புவோமாக! ஆபிரகாம் இந்த உன்னத அர்ப்பணிப்பில் தன் வீட்டிலுள்ள சிலருக்கு விதிவிலக்குக் கொடுத்தான். ***"என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்கு மாத்திரமே வரவேண்டும். இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக் கொள்ளட்டும்"*** (ஆதி. 14-26) என்று ஆபிரகாம் திட்டம் பண்ணினான்.

ஆபிரகாம், இந்த வாலிபர்களை தன் உடன்படிக்கையில் சேர்க்கவில்லை. ஏனெனில் இவர்கள் தேவனிடத்தில் அர்ப்பணிப்பும், தேவதரிசனமும் இல்லாதவர்கள். இரட்சிப்பு இல்லாதவர்கள் ஞாயிறுதோறும் ஒரு ஆலயக் கட்டிடத்திற்குள் வருவதினால், தேவ மக்களின் கணக்கில் எடுக்கக்கூடாது. கிறிஸ்தவ மதத்தில் இருக்கும் எல்லாருக்கும் விசுவாசிகள் என்ற பொது முத்திரையைக் குத்திவிடக்கூடாது. அரசாங்கப் புள்ளி விபரத்தில் இவர்கள் இருக்கலாம். ஆனால் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவப்புஸ்தகத்தில் அவர்கள் பெயரில்லை.

மேற்கூறப்பட்ட வாலிபர்கள் ஆபிரகாமின் சேனையில் இருந்தார்கள். ஆனால் அவனுடைய விசுவாசக் குடும்பத்தில் இல்லை. இந்த வித்தியாசத்தை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

# தேவனின் வாக்குத்தத்தம்

(அதிகாரம் - 15)

வாக்குத்தத்தங்கள் தேவனது முழுக்கிருபை. வாக்குத்தத்தங்களை தரவேண்டுமென்று கடவுளுக்கு எந்தக் கட்டாயமுமில்லை. வாக்குத்தத்தங்கள் பரலோக வங்கியின் காசோலைகள். பார்வைக்குக் காசோலைகள் வெறும் தாள்கள். ஆனால் உண்மையில் அவை வாங்கும் சக்திகள். பார்வைக்கு வாக்குத்தத்தங்கள் வெறும் வார்த்தைகள். ஆனால் உண்மையில் அவை தேவனின் வல்லமைகள்.

***"உன் கர்ப்பப் பிறப்பாய் இருப்பவனே, உனக்கு சுதந்திரவாளி"*** என்பதுதான் தேவனின் வாக்குத்தத்தம். வாழ்க்கை வனாந்திரத்தில் இந்த வாக்குத்தத்தம் வெறும் கானல் நீராய்த் தோன்றிற்று ஆபிரகாமிற்கு. ஏனெனில் ஆபிரகாம் வயது சென்றவனாயும், அவன் மனைவி கர்ப்பம் செத்தவளாயுமிருந்தாள். அந்தச் சூழ்நிலையில் கர்த்தர் அந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். வெற்றியோ, தோல்வியோ மனிதனை எளிதில் திசைத் திருப்பிவிடும். சோதோமின் வெற்றி ஆபிரகாமை திசைத் திருப்பக்கூடும். தன்னை தேவன் பெரிய ஜாதியாக்குவார் என்பதை மறந்து தன் படைபலத்தால் தேசத்தை ஸ்தாபிக்கலாம் என்ற எண்ணம் வந்துவிடலாம்.

போர் முரசுக்கொட்டி, பட்டயமேந்தி நிறுவப்படுவது அல்ல கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த தரிசனமான தேசம். கர்த்தருடைய தரிசனத்தினாலும், கர்த்தர் மேல் உள்ள விசுவாசத்தினாலும் கட்டப்படுவதே அந்தத் தேசம். ஆபிரகாமின் கர்ப்பப்பிறப்பான சொந்தக் குமாரனே அந்த தேசத்தின் அஸ்திபாரமாய் இருக்க

வேண்டும். ஆகவே "உன் கர்ப்பப்பிறப்பாய் இருப்பவனே சுதந்திரவாளியாய் இருப்பான்" என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.

இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கும் முன் ***"ஆபிரகாமே, நீ பயப்படாதே, நான் உனக்கு கேடகமும் மகா பெரிய பெலனுமாயிருக்கிறேன்"*** (ஆதி 15:1) என்று கர்த்தர் ஒரு பாதுகாப்பைக் கட்டளையிட்டார். வெற்றிக்குப் பிறகு ஆபிரகாமின் இருதயத்தைப் பயம் சூழ்ந்தது. தோல்வியடைந்தவர்கள் அவனுக்குச் சத்துருக்களாக மாறினார்கள். ஆகவே கர்த்தர் அவனுக்கு அந்தப் பாதுகாப்பைக் கொடுத்தார்.

சூரைச் செடியின் கீழ் சும்மா படுத்திருந்தாலோ, அல்லது ஆமணுக்குச் செடியின் கீழ் ஆறுதலைத் தேடி உறங்கி விட்டாலோ, நமக்குச் சத்துருக்களே இருக்கமாட்டார்கள். சத்தியத்தைச் சொன்னதினாலே சத்துருவானேனோ என்று பவுல் கேட்பதுபோல, ஊழியப் பாதையில் நமக்குச் சத்துருக்கள் நிச்சயமுண்டு. நமக்கு விரோதமாய் அணிவகுக்கும் பார்வோன்கள், பட்டயத்தை உருவும் ஏரோதுக்கள், அலட்சியமாய் போகும் அகரிப்பாக்கள் இவர்களுக்கு முன்பு தேவப் பிள்ளைகளாகிய நம் காதில் விழும் சத்தம் "பயப்படாதே" என்பதே.

தம் சொத்துக்கு வாரிசில்லை என்பதல்ல ஆபிரகாமின் கவலை. தன் மூலம் தேவன் ஸ்தாபிக்கப் போகும் தேசத்திற்கு தனக்கு வாரிசில்லையே என்பதே அவன் கவலை. மேசியா வரப்போகும் குடும்பத்தின் ஆரம்பம் தன் கர்ப்பப்பிறப்பாக இல்லையே என்பதே ஆபிரகாமின் கவலை.

எத்தனையோ துவக்க விழாவில், நீ இருந்திருக்கலாம். எத்தனையோ சமுக நலத்திட்டங்களை உன் கரமே துவக்கி வைத்திருக்கலாம். இவை குறித்து நீ மகிழ்ந்திருக்கலாம். ஆனால் உன் கரம் இரட்சிப்பின் பணியைத் துவங்கியதா? ஆவிக்குரியக் காரியங்களைத் துவங்குவதில் உன் முன்னேற்றமென்ன?

ஆபிரகாமின் சந்ததி பூமியின் தூளைப் போல பெருகியிருக்குமென்று கர்த்தர் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். (ஆதி. 13:16) ஆனால் இப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "வானத்து நட்சத்திரங்களைப் போல அவ்வளவாய் இருக்குமெனச் சொன்னார்." கடற்கரை மணலத்தனையாய் அவன் சந்ததி இருக்குமென்றும் கர்த்தர் சொன்னார். ஆபிரகாமின் மாம்சமான சந்ததி இஸ்ரவேல் தேசம்.

***"பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும்"*** என்ற வாக்குத்தத்தத்தின்படி அந்த மக்களெல்லாரும் கடற்கரை மணலத்தனையாயிருப்பார்கள் என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார். இவற்றிற்கு என்ன அர்த்தம்? பிள்ளையே இல்லாத ஆபிரகாமின் உலக சந்ததி கடற்கரை மணலைப்போல, பூமியின் தூளைப்போல மிகப் பெரியதாயிருக்கும். ஆனால் ஆபிரகாமின் ஆவிக்குரியச் சந்ததியோ நட்சத்திரங்களைப் போலிருக்கும்.

ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி விண்ணுக்குரியது. ஆபிரகாமின் மாம்ச சந்ததி மண்ணுக்குரியவர்கள். பிள்ளையேயில்லாத ஆபிரகாமின் வெறுமையில் ஆண்டவர் இவ்வளவாய் ஆசீர்வதித்தார் என்பது வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்.

# அடையாளம் தேடும் ஆபிரகாம்

(அதிகாரம் 15 : 8 - 15)

வாக்குத்தத்தத்தைப் பெற்ற ஆபிரகாம் "கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன்" என்றான். ஆகாயத்து நட்சத்திரங்களைப் போன்று அவ்வளவு பெரிதாக ஆபிரகாம் சந்ததி இருக்குமென்று கர்த்தர் சொன்னதை ஆபிரகாம் விசுவாசித்தான். கர்த்தரோ அவன் விசுவாசத்தை நீதி என்று எண்ணினார். அப்படியிருக்க நான் அதை எப்படி சுதந்தரிப்பேன் என்று ஆபிரகாம் கேட்பது அவிசுவாசத்தினால் அல்ல, ஆவலினால்.

இதே கேள்வியைத்தான் சகரியாவும் கேட்டான். கர்த்தர் அவனைத் தண்டித்தார். அந்தத் தண்டனையின் விளைவாக மகனைப் பெற்றெடுக்கும் வரையில் அவன் ஊமையனாக இருந்தான். வளர்ந்த ஊழியக்காரனாகிய சகரியா அவிசுவாசத்தினால் அதைக் கேட்டான். ஆபிரகாமோ விசுவாசத்தினாலே கேள்வியைக் கேட்டான். சகரியா எப்படி நடக்கும் என்று எதிர்த்துக் கேட்டான். ஆபிரகாமோ நடக்கப் போவதின் விபரம் அறியக் கேட்டான்.

சகோதரனே, கடவுளை கேள்வியே கேட்கக்கூடாது என்றல்ல. சகரியாவைப் போல் கேட்காதே. தான் கொடுத்த வாக்குத்தத்தம், நிறைவேறும் என்பதற்கு அடையாளமாக தேவன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். எழுத்து வடிவிலான ஆவணங்கள் இன்று உடன்படிக்கையின் அடையாளங்களாய் இருக்கின்றன. ஆபிரகாம் காலத்தில் அவை பலி வடிவத்தில் இருந்தன. ஆபிரகாம் செலுத்திய பலி கர்த்தருக்கும் அவனுக்கும் இடையேயான உடன்படிக்கை.

இன்று நமக்கும் கடவுளுக்கும் உள்ள உறவும் உடன்படிக்கையும் கல்வாரி சிலுவையின் பலியினால் மாத்திரமே. கடவுளின் வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிப்பதற்கும், இந்தப் பலியைத் தவிர வேறு வழியே இல்லை. இதற்கு முன் அடையாளமாக ஆபிரகாம் இந்தப் பலியைச் செலுத்தினான். தன் திறமையையோ, சாமர்த்தியத்தையோ சார்ந்திராமல் தேவனது வார்த்தையையே சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த உடன்படிக்கையை கர்த்தர் ஏற்படுத்தினார்.

பலி மிருகங்கள் அனைத்தும் மூன்று வயதுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இந்த வயதில் பலி மிருகங்கள் பூரணமான பலமுடையதாயிருக்கும். மூன்று வயதுக்குக் குறைவான மிருகத்தின் பலியைக் கர்த்தர் ஏற்றுக் கொள்ளமாட்டார். அதாவது முழு மனஸ்தாபத்தோடு முழு மனதோடு ஒப்புக்கொடுக்காத வாழ்க்கையை தேவன் ஏற்றுக்கொள்கிறதில்லை.

ஆபிரகாம் மிருகங்களைத் துண்டித்து இரு குவியலாக்கினான். ஆனால் ஆபிரகாம் எதிர்பார்த்த அடையாளம் இன்னும் தோன்றவில்லை. ஆனாலும் பொறுமையோடு ஆபிரகாம் கர்த்தருக்குக் காத்திருந்தான். அப்பொழுது பறவைகள் அந்த உடல்கள் மேல் இறங்கின. அவைகளை ஆபிரகாம் துரத்தினான். (ஆதி 15:11) வாக்குத்தத்தத்தை சுதந்தரிப்பது எளிதானக் காரியமன்று. பல எதிர்சூழ்நிலைகள் வரும் என்பதற்கு அடையாளமாகவே பறவைகள் வந்து இறங்கின. அந்தப் பறவைகளை அவன் துரத்தியதுபோல், வாழ்க்கையின் எதிர் சூழ்நிலைகளை எதிர்த்து நிற்கவேண்டும்.

தனது மகனைக் குறித்த வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் பெற்றபோது சாராளின் கர்ப்பம் செத்திருந்தது. ஆபிரகாமின் சரீரம் சாகவில்லை. இஸ்மவேலை அவனால் பெறமுடிந்தது. ஆனால் கொஞ்ச நாட்களில் அவன் சரீரம் செத்துப்போயிற்று. ஆம்! அவன் உடல்மேல் பறவை இறங்கியது. அப்பொழுதும் அவன் சூழ்நிலையை எதிர்த்து தேவனை விசுவாசித்தான்.

இன்னும் அடையாளம் தோன்றவில்லை. சூரியன் அஸ்தமித்தது, ஆனால் ஆபிரகாமுடைய நம்பிக்கை அஸ்தமிக்கவில்லை. அந்த இரவிலும் வானத்து நட்சத்திரங்களைப் போல தன் சந்ததி பெரிதாயிருக்கும் என்பதையே விசுவாசித்தான். ஆபிரகாமிற்கு அயர்ந்த நித்திரை வந்தது. அவன் தன் நினைவை இழந்துப்போனான். இந்தக் காரிருள் அவனோடு பேசினது.

கடவுள் தன் வாக்குத்தத்தத்தை எப்படி நிறைவேற்றுவார் என்று நீ விளங்கிக்கொள்ளவே முடியாது. "நீ விசுவாசி தேவனுடைய மகிமையைக் காண்பாய்." தன் வாழ்க்கைத் துணை உருவாக்கப்படும்போது அது ஆதாமுக்கு தெரியாத இரகசியம். ஏனெனில் அவன் அயர்ந்த நித்திரையில் இருந்தான்.

தேவனது எல்லா காரியங்களையும் நாம் விளங்கிக் கொள்ள இயலாது. அடையாளத்திற்குக் காத்திருந்த ஆபிரகாமை திகிலும் காரிருளும் சூழ்ந்துக்கொண்டன.

மகிமையின் இராஜாவாக இயேசு வருவார் என்று எதிர்பார்த்த நிலையில், இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டு காரிருள் சூழ்ந்தது. அவரை நம்பினவர்களுடைய மனதில் திகிலும் பயமும் சூழ்ந்தன. இந்த நிலமையில்தான் ஆபிரகாம் இருந்தான். மூன்றாம் நாளில் கர்த்தர் உயிரோடு எழுந்தது போல குறித்த நாளிலே ஆபிரகாம் சந்ததி பிறப்பான். ஆபிரகாமுடைய ஒரே வேலை காத்திருப்பதே.

***"சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டான பின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினி ஜுவாலையும் தோன்றின."*** (ஆதி. 15:17) ஆபிரகாம் இரு குவியலாகப் பிரித்த துண்டங்களின் நடுவே கர்த்தர் கடந்துப் போனார். இதற்கு என்ன அர்த்தம்? பலி செலுத்தினவர்கள் உடன்படிக்கையை மீறி நடந்தால் அவர்களும் இரண்டு துண்டாக வெட்டப்படுவார்கள் என்பதே இதற்கு அர்த்தம். (எரே 34:18)

ஆபிரகாமிற்கு கர்த்தர் சொன்னது, "இந்த உடன்படிக்கையை நீயோ, நானோ மீறினால் இந்தப் பலி மிருகங்களுக்கு ஏற்படும் நிலைதான் நமக்கும்" என்பதைத் தெரியப்படுத்தினார். தன் எதிர்காலத்தை தேவனுடைய கரத்தில் ஒப்புவித்து கர்த்தருக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு எந்த அடையாளத்தையும் கர்த்தர் ஆபிரகாமிற்குக் கொடுக்கவில்லை.

சகோதரனே சகோதரியே கர்த்தரிடத்தில் அடையாளம் தேட முற்படாதே. உனக்கு ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு குற்றவாளி தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வராமலேயிருந்தான். அவனுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்புகள் நிராகரிக்கப்பட்டன. கடைசியில் நீதிமன்றம் அந்தக் குற்றவாளியின் மகனை வரவழைத்து அவன் தகப்பன் வராததற்கானக் காரணங்களைக் கேட்டது. மகன் நீதிபதியைப் பார்த்து "என் தகப்பனார் நீதிமன்றத்திற்கு வராததற்கு நான்கு காரணங்கள் உண்டு.

முதல் காரணம் அவர் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்துப்போனார். இரண்டாவது காரணம்..." இப்படி அவன் சொன்னபொழுதே நீதிபதி குறுக்கிட்டு இனி எந்தக் காரணமும் தேவையில்லை என்றார். அதுபோல கர்த்தரின் வாக்குத்தத்தத்திற்கு அடையாளம் கர்த்தரே. அந்த நீதிபதி சொன்னதுபோல நமக்கும் வேறு அடையாளங்கள் தேவையேயில்லை. கர்த்தர் சொன்ன வார்த்தையே போதும்.

# குறுக்கு வழி

(அதிகாரம் - 16)

ஒரு குமாரனைக் கொடுப்பேனென்று கர்த்தர் வாக்குப் பண்ணினதை ஆபிரகாம் விசுவாசித்தான். காலதாமதமானதால் சாராள் விசுவாசத்திலிருந்து வழுவிப்போனாள். காத்திரு என்று கர்த்தர் சொல்லிக் கொடுத்த பாடத்தை சாராள் கற்கவேயில்லை. ஆபிரகாம் மூலம் கர்த்தர் ஒரு குழந்தையைக் கொடுப்பார் என்று விசுவாசித்த சாராள், தன் மூலம்தான் அந்தக் குழந்தை பிறக்கும் என்பதை விசுவாசியாமல் போனாள். இதனை பாதி விசுவாசம் அல்லது அற்ப விசுவாசம் என்று உலகம் அங்கீகரிக்கலாம். ஒன்றுமில்லாமையைவிட பாதி அளவு இருப்பது மேலானதுதானே என்று மனிதன் எண்ணக்கூடும். ஆனால் தேவனது வாக்குத்தத்தத்தைப் பொறுத்த வரையில் இது விசுவாசமேயில்லை.

இயற்கையான சூழ்நிலையில் ஈசாக்கு பிறக்க வேண்டுமெனில் அதற்கொரு வாக்குத்தத்தம் தேவையில்லை. சாராளின் கர்ப்பம் செத்திருந்த நிலையில் ஆபிரகாமின் சரீரமும் சாக வேண்டும். இந்தச் சூழ்நிலைக்குக் கர்த்தர் காத்திருந்தார். ஆபிரகாம் சரீரம் சாவதற்கு முன்பு சாராள் ஆத்திரப்பட்டாள்.

***"சாராய் ஆபிரகாமை நோக்கி நான் பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிரகாம் செவிகொடுத்தான்."*** (ஆதி. 16:2)

அக்கால வழக்கத்தின்படி அடிமையினிடத்தில் பிறந்த குழந்தை எஜமாட்டிக்கு சொந்தம். ஆகவே ஆகாருக்கு பிறக்கப்போகும் குழந்தை சாராளுக்குத்தான் சொந்தம். ஆனால் தேவன் உலக வழக்கத்தின்படி செயல்படுகிறவரல்ல. மூத்தவளிருக்க இளையவளைத் திருமணத்திற்கு கொடுப்பது எங்கள் வழக்கமல்ல என்று லாபான் யாக்கோபுக்கு சொன்னது உலகத் தந்திரம். இந்தத் தந்திரங்களை எல்லாம் கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

வரதட்சணை வாங்குவது எங்கள் வழக்கம் என்று சொல்வதை தேவன் அங்கீகரிப்பதில்லை. செவ்வாய்க்கிழமை திருமணம் நடத்துவது எங்கள் வழக்கமல்ல என்று சொல்வதை தேவன் ஒத்துக்கொள்ள மாட்டார். உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல என்று சொல்வதை தேவன் ஒத்துக்கொள்ளமாட்டார்.

தன்னை தன்னுடைய கணவனுடைய சகோதரி என்று சொல்லும்படி ஆபிரகாம் வற்புறுத்தியபொழுது அதனை எதிர்த்து சாராள் வாக்குவாதம் பண்ணினதாகத் தெரியவில்லை. ஆபிரகாமுடைய ஆலோசனையை அவள் ஏற்றுக்கொண்டாள் என்றும் சொல்ல முடியாது. அந்த இக்கட்டான நேரத்தில் சாராள் மௌனமாயிருந்தாள். அந்த மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியல்ல, கர்த்தரின் வழிநடத்துதலுக்குக் காத்திருந்தாள் என்பதே அந்த மௌனத்திற்கு அறிகுறி. கர்த்தரின் வழி விளங்காத நேரத்தில் அவசரப்பட்டு ஒரு திடீர் முடிவை எடுப்பதைவிட கர்த்தரின் பாதத்தில் காத்திருப்பதே நலம்.

கணவன் மனைவி வழி தவறும்போது ஒருவருக்கொருவர் ஆலோசனை சொல்ல வேண்டும். அனனியா காணிக்கையின் ஒருபங்கை வஞ்சித்து எடுத்து தேவ சமுகத்தில் பொய் சொல்வதற்கு அவன் மனைவியும் உடந்தையாய் இருந்தது பெரிய தவறு. சப்பீராள் தன் கணவனுக்கு நல்ல ஆலோசனை சொல்லியிருக்க வேண்டும். வீட்டில் கடுமையான பண நெருக்கடி இருந்திருக்கலாம். அப்பொழுது சப்பீராள் என்ன செய்திருக்க வேண்டும்? அவள் தன் கணவனைப்

பார்த்து, "இப்பொழுது நாம் ஒரு பொருத்தனையும் செய்ய வேண்டாம், நிலத்தை விற்று நம் செலவுக்கே வைத்துக்கொள்வோம். இன்னொரு முறை நாம் பொருத்தனையை செய்யலாம்" என்று தான் சொல்லியிருக்கவேண்டும்.

நிலத்தை விற்று தேவனுக்குக் காணிக்கை கொடுப்பது தேவனுடைய கட்டளையல்ல. அது மனப்பூர்வமான பொருத்தனை. அப்பொருத்தனையை செய்யவோ செய்யாமலிருக்கவோ அவர்களுக்கு உரிமையுண்டு. பொருத்தனை பண்ணிய பிறகு வஞ்சிப்பது தவறு. இப்படித் தவறு செய்ய அனனியா துணியும்போது சப்பீராள் தடுத்திருக்க வேண்டும். தாவீதினிடத்தில் நாபால் மதிகெட்டவனாய் நடந்தபோது, அவன் மனைவி அபிகாயில் ஞானமாய் நடக்கவில்லையா?

உத்தமத்தில் தொடர்ந்து யோபு ஜீவிக்கும்போது, நீர் கடவுளை தூஷித்து ஜீவனைவிடும் என்று சொன்னது துர் ஆலோசனைதானே. இயேசுவிற்கு அநியாயத்தீர்ப்பு செய்ய பிலாத்து நியாயாசனத்தில் அமர்ந்தபோது அவன் மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி எச்சரிக்கவில்லையா? தன் மனைவியின் தவறான ஆலோசனையைக் கண்டிக்க வேண்டிய ஆபிரகாம் அவளுக்கு மனதாரக் கீழ்ப்படிந்தது பரிதாபமே.

***"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."*** (எபே. 5:16,20, 19-21)

# பாதை மாறுதல் வாதையை உண்டாக்கும்

(அதிகாரம் 16:4-16)

சாராளின் தவறான ஆலோசனையின்படி ஆபிரகாம் நடந்து அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். இக்குழந்தையின் பிறப்பினால் தன் வீடு கட்டப்படும் என்று எண்ணிய சாராள் வீட்டை விட்டே அந்தக் குழந்தையையும் தாயையும் விரட்ட வேண்டியதாயிற்று. தேவனது வழியைவிட்டு விலகுவது எப்பொழுதும் பிரச்சனையே. ஆபிரகாம் வீட்டில் கடும் பிரச்சனை உருவாயிற்று. வீட்டின் அமைதியான சூழ்நிலைக் கெட்டது. அடங்கியிருந்த ஆகார் ஆரவாரம் செய்ய ஆரம்பித்தாள். எஜமாட்டியாகிய சாராளையே அவள் அற்பமாக எண்ணினாள்.

சகோதரனே, தேவனுடைய ஆலோசனையின்றி ஒருவரையும் உயர்த்தாதே. உன் மாம்சீக வாஞ்சையினால் நீ ஒருவரை உயர்த்தினால் அதுவே உன் சமாதானத்துக்குக் கண்ணியாகும். அடிமைப்பெண்ணை சாராள் உயர்த்தியதே மதிகேடு. சாத்தான் ஒரு பொல்லாத எஜமான். திடீரென்று சம்பளத்தை நிறுத்தி அபராதத்தை விதிப்பான். அந்நிய தேசத்தில் கெட்ட குமாரனைப் பஞ்சத்தில் தவிக்கவிட்டு பசியாற்றும் தவிட்டையும் பிடுங்கினவன் அவன். சாராள் மூலமாய் தவறான ஆலோசனையைச் சொன்ன அவன், அவளையே தூண்டி ஆபிரகாமைக் குற்றப்படுத்துகிறான்.

ஆகார் சாராளை அற்பமாக எண்ணினபோது, அவள் ஆபிரகாமை நோக்கி, ***"எனக்கு நேரிட்ட அநியாயம் உமது பேரில் சுமரும். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள்."*** (ஆதி. 16:5) தன்னுடைய தவறான ஆலோசனையின் நிமித்தம் ஏற்பட்ட விளைவை எண்ணி தன்னைக்

கடிந்துக்கொள்ள வேண்டிய சாராள், ஆபிரகாம் மீது ஆத்திரம் கொள்கிறாள். இதுதான் பாவத்தின் விபரீதம். பாவம் ஆபிரகாம் என்று பரிதாபப்படாதீர்கள்! ஆபிரகாம் செய்தது பாவம் என்று நினைவில் வையுங்கள்.

மாம்சீகம் தன் தவறை ஒத்துக்கொள்ளாது. பழியை பிறர் மீதுதான் சுமத்தும். சாராள் ஆபிரகாமைக் குற்றப்படுத்தினாள். இது புதிதல்ல. பாவம் செய்த ஆதாம் ஏவாளைக் குற்றப்படுத்தினான். ஏவாள் சாத்தானைக் குற்றப்படுத்தினாள். இருவரும் பாவத்திற்கு வருந்தினாலும் இதற்குக் காரணம் தாங்கள்தான் என்று ஒத்துக் கொள்ளவில்லை.

ஆபிரகாம் மறுமனையாட்டியாகக் கொடுக்கப்பட்ட ஆகாரை அடிமைப் பெண்ணாகவே சாராளிடம் திரும்பக் கொடுக்கிறான். ஆபிரகாம் சாராளை நோக்கி, ***"இதோ உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள். உன் பார்வைக்கு நலமானபடி செய் என்றான்."*** (ஆதி. 16:6) ஆகாரைக் கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுக்காதபடியினால் அவளை அவன் தக்கவைக்க முடியவில்லை. காலம் தன் பொல்லாத ஆலோசனையினால் மடியில் போடும் ஆசீர்வாதங்களைக் கர்த்தர் தூக்கி எறிவார்.

அவருடையத் திட்டத்துக்கு வெளியே மனிதன் செய்துக்கொள்ளும் ஏற்பாடுகளை தேவன் அங்கீகரிப்பதேயில்லை. தாவீதின் மனைவியாகிய மீகாளை அவளது தகப்பனாகிய சவுல் தாவீதினிடமிருந்து பிரித்து பல்திக்கு திருமணம் செய்து வைத்தான். ஆனால் கர்த்தரோ பல்தியின் மனைவி மீகாள் என்று சொல்லாமல், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் என்றே அழைத்தார்.

சாராள் கடுமையாக நடத்தினபடியால் ஆகார் வீட்டை விட்டு ஓடிப்போனாள். அவளை வழியிலே சந்தித்த கர்த்தருடைய தூதனானவர், ஆகாரைப் பார்த்து, "ஆபிரகாமின் மறுமனையாட்டி" என்று அழைக்காமல் "சாராயின் அடிமைப்பெண்ணே" என்றுதான் அழைத்தார். ஆகாரை ஆபிரகாமின் மறுமனையாட்டி என்று கர்த்தர்

ஒத்துக் கொள்ளவேயில்லை. இதை இன்றைய கிறிஸ்தவம் உணரவேண்டும்.

திருமண உடன்படிக்கைக்கு வெளியே தகாத உறவில் இருக்கும் ஆண், பெண் பின்னர் திருமணம் செய்துக் கொள்வதினால் அவர்கள் முன்பு செய்த பாவத்தை கர்த்தர் நினைக்கமாட்டார் என்று நினைக்கின்றனர். நாம்தாம் திருமணம் செய்து கொண்டோமே, நம்முடைய பழைய உறவை கர்த்தர் நினைக்கவே மாட்டார் என்பது அவர்களுடைய துணிவு. திருமணம் பழைய அசுத்த வாழ்க்கைக்கு பரிகாரமல்ல.

கைவிடப்பட்ட எகிப்திய அடிமைப்பெண்ணை வழியிலே சந்தித்தது நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே. (கர்த்தருடைய தூதனானவர் என்பது இயேசு கிறிஸ்துவையே குறிக்கும்.) தேவ கிருபை மனிதனைத் தேடுவதற்கு மிக உயர்ந்த உதாரணம் ஆகாரைக் கர்த்தர் தேடினது. ஆபிரகாம் நிமித்தமாக ஆகாரின் சந்ததியைக் கர்த்தர் ஆசீர்வதிக்க விரும்பினார். கர்த்தருடைய உடன்படிக்கைக்கு வெளியே ஆகார் இருந்தபோதிலும், அவளுக்கு செய்யப்பட்ட அநீதிக்கு கர்த்தர் பரிகாரம் செய்ய விரும்பினார். கர்த்தருடைய இரக்கம் ஆகாரின் சந்ததியைப் பெரிதாக்கியது.

ஆனால் ஆபிரகாமின் பாவம் ஆகாரின் சந்ததியைக் காட்டுக்கழுதையாக்கியது. ஆகாரின் மகனாகிய இஸ்மவேலுக்கு "காட்டுக் கழுதை" என்று அர்த்தம். இன்று இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பும் அரேபியன் காட்டுக்கழுதையின் வம்சமே. பாதையை விட்டு விலகியபடியால் இன்றுவரை இந்த வாதை நீடிக்கிறது.

# கர்த்தருக்கு முன்பு உத்தமனாயிரு

(அதிகாரம் 17)

ஆகார் ஆபிரகாம் வீட்டுக்கு திரும்பி வந்தபோது 13 ஆண்டுகள் ஓடிமுடிந்தன. இந்த நீண்ட காலத்தில் கர்த்தர் ஆபிரகாமோடு பேசவேயில்லை. கடவுளுடைய மௌனம் அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமானதல்ல. தேவனது மௌனம் கர்த்தரின் பிள்ளையின் ஆத்துமாவை சஞ்சலப்படுத்தும்.

தேவனது மௌனத்தை தாங்கிக்கொள்ளாத தாவீது ***"என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் நீர் கேளாதவர்போல் மௌனமாயிராதேயும். நீர் மௌனமாயிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன்"*** (சங் 28:1) என்று புலம்புகிறான். ஆபிரகாம் செய்த தவறினிமித்தம் கர்த்தர் ஆபிரகாமோடு பேசவில்லை. உண்மையாகவே இது ஆபிரகாமுக்கு வருத்தமும் சஞ்சலமுமாயிருந்திருக்கும்.

சகோதரனே, எத்தனையோ நாள்கள் கர்த்தர் உன்னோடு பேசவில்லை என்பதைக் குறித்து வருத்தமுண்டா? தேவனது மௌனம் உன்னைத் துக்கப்படுத்துகின்றதா? கர்த்தர் எனக்கு அதைத் தரவில்லை, இதைத் தரவில்லையென்று பாரப்படுகிறாயே, அவர் உன்னோடு பேசுவதேயில்லை என்பதைக் குறித்து உனக்கு பாரமேயில்லை.

ஆபிரகாமின் தொன்னுற்றொன்பதாம் வயதில் கர்த்தர் திடீரென்று ஆபிரகாமோடு பேசினார். ***"நீ எனக்கு முன்பாக நடந்துக்கொண்டு உத்தமனாயிரு"*** (ஆதி. 17:1) என்பதே ஆபிரகாமுக்கு உண்டான தேவசத்தம். தொன்னுற்றொன்பதாவது

வயதில் மனிதன் தவறு செய்யலாம். ஆகவே அந்த வயதிலும் கர்த்தர் ஆபிரகாமை எச்சரித்தார். முதிர்ந்த வயது பரிசுத்தத்திற்கு முத்திரையல்ல. காலம் மனிதனைப் பரிசுத்தமாக்கும் என்பது தவறு.

ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறோம். 60 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் வியாதிப்படுக்கையில் கிடந்தார். கை கால்கள் அசைவற்று முடங்கிக் கிடந்தன. அவரோடு ஜெபிக்கும்படி போதகர் சென்றிருந்தார். உங்களுக்கு ஏதேனும் ஜெப விண்ணப்பம் இருக்கின்றதா என்று கேட்டார். உடனே அவர் "ஆம் போதகரே, எனக்கு இச்சையில் இருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்!" கை,கால்கள் செயல்படாத அந்தக் காலத்திலும், அவர் பாவ சிந்தனையில் மூழ்கிக்கிடந்தார். ஆகவே ஆபிரகாமைப் பார்த்து, வயதான காலத்திலும் உத்தமனாயிரு என்று சொன்னது ஆச்சரியமானதல்ல.

இவ்வுலகில் நாம் வாழுகின்ற நாள் வரையிலும் தேவனைப்போன்ற முழு பரிசுத்தத்தில் இருக்க முடியாது. ஏனென்றால் தேவனைப்பற்றிய நம் அறிவும் முழுமையானதல்ல. முழுமையான அறிவு இல்லாததால் முழுமையான பரிசுத்தமும் இல்லை. எனக்கு முன் உத்தமனாக நில் என்று கர்த்தர் சொல்லவில்லை. எனக்கு முன்பு உத்தமனாய் நட என்று கர்த்தர் சொல்லுகிறார். "உத்தமம்" என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சி. ஆம் "பரிசுத்தம்" என்பது ஒரு வளர்ச்சியே. நாம் எந்த வயதிலும் பரிசுத்தத்தில் வளரவேண்டும்.

இந்தக் கட்டளைக்குப் பிறகு கர்த்தர் ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அந்த வாக்குத்தத்தம் ***"நீ திரளான ஜாதிகளுக்கு (தேசங்களுக்கு) தகப்பனாவாய்"*** (ஆதி 17:4) ஆபிரகாம் உத்தமனாய் இராவிட்டால் அவன் திரளான தேசங்களுக்கு தகப்பனாய் இருக்க முடியாது. வாக்குத்தத்தத்தைக் குறித்து கவனமாயிருக்கும் நாம் தேவ கட்டளைக்கும் விழிப்போடு இருக்கவேண்டும்.

ஆரானில் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்" என்றார். பெத்தேலில் கர்த்தர், "உன் சந்ததி பூமியின் தூளத்தனையாயிருக்கும்" என்றார். மம்ரேயில் கர்த்தர்,

"உன் சந்ததி ஆகாயத்து நட்சத்திரங்களைப்போல இருக்கும்" என்றார். இப்பொழுதோ, கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "நீ திரளான ஜனங்களுக்கு தகப்பனாவாய்" (ஆதி 17:6) என்று கூறுகிறார். இப்படி வாக்குத்தத்தமானது வளர்ந்துக்கொண்டே போனது. இப்படி வளரும் வாக்குத்தத்தைக்கு ஏற்ப நமது உத்தமமும் வளரவேண்டும்.

இந்த வளர்ச்சிக்கு அடையாளமாக அவனுடைய பெயரை ஆபிராம் என்பதிலிருந்து ஆபிரகாம் என்று மாற்றினார். ***''ஜெயங்கொள்ளுகிறவனுக்கு பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தை கொடுப்பேன்''*** என்ற தேவனது வாக்குத்தத்தம் உங்களில் நிறைவேறுவதாக. (வெளி. 2:17)

கர்த்தர் ஆபிரகாமுக்கு தேசத்தையும் ஒரு சந்ததியையும் வாக்களித்தார். இவற்றை விட மேலான ஒன்றையும் அவர் வாக்களித்தார். அதுவென்னவென்று தெரியுமா? ***"நீ பரதேசியாய்த் தங்கி வருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்"*** (ஆதி. 17:8) என்று வேதம் சொல்லுகிறது.

தேசமும், சந்ததியும் தேவனது நல்ல ஈவுகள். ஆனால் இவற்றிலும் மேலான ஒன்றை தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார். தன்னையே அவர்களுக்கு தேவனாகக் கொடுத்தார். இது மிகப்பெரிய ஈவு. இந்த மிகப்பெரிய ஈவைப்பற்றி நாம் எச்சரிக்கையாயிருப்போமானால் நாம் உத்தமமாயிருப்போம். கொடுக்கிற கர்த்தரைவிட, அவர் கொடுத்தவற்றின் மீதே அதிக அன்பு செலுத்தினால் நாம் இம்மைக்குரியவர்களாய் மாறி அநித்தியத்தையே நோக்கி ஓடுகின்ற பரிதாபக் கூட்டமாக இருப்போமே!

# கர்த்தர் நம் வீட்டிற்கு விருந்துக்கு வந்தால்

(அதிகாரம் 18 : 1 - 15)

ஒருவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை அவர் செல்லும் சபை, அவருடைய வீட்டின் குடும்ப ஜெப அறை இவற்றை விட மிகத் துல்லியமாகக் காட்டுவது, அவர் வீட்டின் சமையல் அறை.

வரவேற்பு அறையில்..... ஸ்தோத்திரம் வாருங்கள்..... வாருங்கள்.... "இன்று நம்ம வீட்டில் சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டும்! எவ்வளவு நாள்களுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள்" என்று உற்சாக உபசரிப்பு. அதே சமயம் சமையலறையில் "விவஸ்தை கெட்ட மனுஷன் இப்போ பார்த்து வந்து தொலைச்சிருக்காரு. ஏதாவது இருப்பதைக் கொண்டு கொட்டு" இப்படி ஓர் ஆத்திரப் புலம்பல். இது ஆவிக்குரிய வீடா?

மம்ரே சமவெளியில் வீட்டின் எதிரே வந்த மூன்று ஆடவர்களைக் கண்டதும் ஆபிரகாம் ***"ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியானை விட்டுக் கடந்துபோக வேண்டாம்"*** (ஆதி. 18:3) என்று கனிவுடன் கேட்கிறான்.

இந்த நிகழ்ச்சி ஆபிரகாமின் ஆவிக்குரிய நிலைக்கு ஓர் சோதனை. பல சோதனைகள், பரீட்சைகள் இவற்றிற்கு பிறகு ஒருவர் இறையியலில் டாக்டர் பட்டம் பெறுகிறார். அந்தப் பட்டம் அவருடைய வேத அறிவுக்குக் கிடைத்தப் பட்டமே தவிர அவருடைய ஆவிக்குரிய முதுமைக்கு கிடைத்த பட்டமல்ல. பகலின் கடுமையான வெயில் நேரத்தில் திடீரென்று மூன்று விருந்தாளிகள் வருவது ஆபிரகாமுக்கு

மிகப்பெரிய சோதனை. பல்வேறு வேலைகளுக்கிடையில் இந்த விருந்தை அவர்களுக்கு செய்வது அவன் பொறுமையைச் சோதிக்கும் செயல்.

கடவுள் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டு சோதிக்கமாட்டார். நம்மை சோதித்துத்தான் அவர் ஆயத்தப்படுத்துகின்றார். ஒருவர் வீட்டில் அமைதியாய் அமர்ந்து வேதம் வாசித்துக்கொண்டிருக்கிறார். அப்பொழுது தொலைபேசி மணி அடிக்கின்றது. ஓடிபோய் எடுக்கின்றார். "இது பெத்தேல் ஒயின்ஷாப் தானே என்று குரல் கேட்கிறது. "No Wrong Number" என்று சொல்லிவிட்டு ரிசீவரைக் கீழே வைக்கிறார். மீண்டும் வேதத்தை வாசிக்கிறார். 'இங்க பாருங்க கேஸ் தீர்ந்துப்போச்சு' என்று மனைவியின் அபயக் குரல். உடனே ஹீட்டரை எடுத்து சமையலறையில் வைக்கிறார். வைத்த மறு நிமிடமே மின்சாரமே தடைபடுகிறது. வீடு இருட்டில் மூழ்குகிறது.

அப்பொழுது அவருடைய சின்ன மகள் கேட்கிறாள் 'அப்பா, பூனை ஏன் நாய் மாதிரி குரைக்கிறதில்லை?' 'அடச்சீ போ! இதுவா கேள்வி கேட்கிற நேரம். போய்த் தொலை' என்று ஆவேசமாய்க் கத்துகிறார். மீண்டும் மின்சாரம் வருகிறது. விளக்குகள் எரிகின்றன. அவர் தொடர்ந்து வேதம் வாசிக்கிறார். "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.... எந்த நிலைமையில் இருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன்...." வேத வாசிப்புக்கும் அவருடைய வாழ்க்கைக்கும் சம்மந்தமேயில்லை. ஏனெனில் சூழ்நிலை தரும் நெருக்கடியை அவரால் சமாளிக்க முடியவில்லை.

ஆபிரகாமோ அந்த உச்சிவெயிலில் விருந்தாளிகளை மனதார உபசரித்தான். வீட்டில் 318 வேலைக்காரர்கள் இருந்தும், அவனும் அவன் மனைவி சாராளுமே இந்த விருந்தை ஆயத்தம் பண்ணினார்கள். ஆகாரைப் பார்த்து ஏதாகிலும் சமைத்துக் கொடு என்று அவர்கள் எளிதாகச் சொல்லியிருக்கலாம். ஆபிரகாம் ஏனோ தானோ என்று இந்த விருந்தைச் செய்யவில்லை. அவன் வீட்டுக்குள்

தீவிரமாய்ப் போனான். மந்தையை நோக்கி ஓடிப்போனான். ஒரு இளங்கன்றைப் பிடித்து வேலைக்காரனிடத்தில் சமைக்கச்சொன்னான். இந்த விருந்திற்கான மிகுதியான வேலையை ஆபிரகாம், சாராளுமே செய்தார்கள். இந்த உற்சாக ஆவி நம் எல்லோருக்கும் வேண்டும். ஆபிரகாமினுடைய விருந்தின் சுவையல்ல அவனது உபசரிப்பும் உற்சாகமுமே விருந்தாளியை மகிழ்வித்தது.

நம்முடைய ஜீவியம், ஊழியம் இவை இரண்டுமே தேவனுக்காய் நாம் ஏற்படுத்தும் விருந்துகள். இந்த விருந்தை அசதியாகவோ, முறுமுறுப்போடோ நாம் செய்தால், நாம் சபிக்கப்பட்டுப்போவோம். "ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்" என்றுதான் வேதம் சொல்லுகிறது. பகல் வேளை மிக அனலாயிருந்தது. ஆபிரகாமின் ஆவியோ அதைவிட அனலாயிருந்தது. ஆகவே, அவன் கர்த்தருக்கு உற்சாக விருந்து வைத்தான்.

கர்த்தர் உங்கள் வீட்டிற்கும் விருந்திற்கு வந்தால்..... கதவைத் தட்டிக்கொண்டே இருந்துவிட்டு, நீ திறவாததினால் திரும்பிப்போய் விடுவாரா? நீ ஏன் கதவைத் திறக்கவில்லை? நீ என்ன பதில் சொல்வாய் என்பது தெளிவாகவே கேட்கிறது. "அவர் சத்தம் என் காதில் விழவில்லை" என்பதுதானே உன் பதில். உன் வீட்டில் விருந்துண்ண வந்தக் கர்த்தர் வருத்தத்தோடு சொல்லுகிறார், "காதிருந்தால் என் சத்தத்தைக் கேட்கட்டும்."

# விருத்தசேதன உடன்படிக்கை

(அதிகாரம் 17:10-27)

***"எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்."*** (ஆதி. 17:10)

இந்த விருத்தசேதனம் தேவன் ஆபிரகாமோடே செய்த உடன்படிக்கை. இந்த விருத்தசேதனம் வெறும் சடங்காச்சாரமல்ல. இந்த விருத்தசேதனத்தில் மறைந்திருக்கும் உண்மைகள் தேவனுக்காகப் பிரிந்து விடுதல், கர்த்தருக்கான தூய்மை, கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் இம்மூன்றிற்கும் அடையாளமாக ஓர் ஆண்பிள்ளையின் சரீரத்தில் செய்யப்படுவதுதான் விருத்தசேதனம். இந்த உடன்படிக்கைக்குள் வராதவர்கள் தேவனது பிள்ளைகளல்ல. விருத்தசேதனம் இல்லாதவர்களை யூதர்கள் அருவெறுப்பார்கள். யூதருடையப் பார்வையில் விருத்தசேதனமில்லாதவர்கள் அசுத்தமானவர்கள். இந்த விருத்தசேதன உடன்படிக்கையில் ஆபிரகாமும் அவன் சந்ததியும் கருத்தாய் இருக்க வேண்டுமென்பது தேவனது கட்டளை.

கர்த்தரின் கட்டளையை ஏற்று எத்தனையோ தடைகளுக்குப் பிறகு மோசே ஊழியத்திற்கு புறப்படுகிறான். ஆனால் வழியிலே தங்குமிடத்தில் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொல்லப்பார்த்தார். (யாத் 4:24) ஏனெனில் அவன் மகன் விருத்தசேதனம் பண்ணப்படாமல் இருந்தான். கர்த்தர் ஊழியக்காரனின்

கீழ்ப்படியாமையைச் சகிக்கவே மாட்டார். அவனுடைய மனைவி உடனே அவள் பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணுவித்தாள். மோசே உயிர்ப் பிழைத்தான்.

விருத்தசேதனம் என்பது வாழ்நாளில் மனிதன் அனுபவிக்கிற முதல் வேதனை. நமது கர்த்தரும் முதலாவது சிந்திய இரத்தம் இந்த உடன்படிக்கையின் போதுதான். அதாவது கிறிஸ்தவ வாழ்க்கை பாடுகளோடு ஆரம்பிப்பது என்பதுதான் இது தரும் செய்தி. ஆபிரகாம் இந்த உடன்படிக்கையில் கருத்துள்ளவனாய் இருந்து ஒரே நாளில் அவனும் அவன் குமாரன் இஸ்மவேலும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். ***"வீட்டிலே பிறந்தவர்களும் அந்நியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும் அவனோடே கூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்."*** (ஆதி. 17:27)

வனாந்திரத்தில் எகிப்திலிருந்து புறப்பட்ட சந்ததி அழிந்து யோசுவாவின் தலைமையில் புதிய சந்ததி கானானுக்குள் பிரவேசிக்க இருந்தது. இஸ்ரவேலர்கள் கில்காலை அடைந்தவுடன் கர்த்தர் யோசுவாவை நோக்கி, **"நீ கருக்கான கத்திகளை உண்டாக்கி திரும்ப இரண்டாம் விசை இஸ்ரவேல் புத்திரரர்களை விருத்தசேதனம் பண்ணு என்றார்."** (யோசு. 2:2) வழியில் வனாந்திரத்தில் நடந்த சகல ஜனங்களும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். **"இவ்விதமாய் இஸ்ரவேலுடைய நிந்தை விருத்தசேதனத்தால் நீங்கிப்போயிற்று."** (யோசு 5:9) இந்த உடன்படிக்கை நிறைவேறாமல் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழைவதை தேவன் அனுமதிக்கவில்லை.

புதிய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமின்மையும் ஒன்றுமில்லை. ஆனாலும் கையினால் செய்யப்படாத ஒரு விருத்தசேதனம் கிறிஸ்தவர்களுக்குத் தேவை. மாம்சீகமான வழிகளை விட்டு விலகுவதே இந்த விருத்தசேதனம். கிறிஸ்துவினிமித்தமாக பெற்றத் தாயின் அன்பை

விட்டுப் பிரிய நேர்வது இருதயத்தில் செய்யப்படும் விருத்தசேதனம். இது வேதனையைத் தரும். கிறிஸ்துவுக்காய் இப்படி எத்தனையோ வேதனைகளை தாங்கித்தான் ஆக வேண்டும். இவை ஆவிக்குரிய விருத்தசேதனம். மாம்சத்தில் விருத்தசேதனமில்லாதவன் இஸ்ரவேலனல்ல, ஆவியில் விருத்தசேதனமில்லாதவன் கிறிஸ்தவனல்ல.

# மன்றாட்டின் மாண்பு

(அதிகாரம் 18:20-33)

சோதோமின் பாவம் மிக உக்கிரமாக இருந்தது. அதின் ஜனங்கள் மகா பொல்லாதவர்களாய் இருந்தார்கள். “சோதோம் கொமோராவின் கூக்குரல் மிகவும் கொடிதாயிருந்தது.” (ஆதி. 18:20) ***“நான் இறங்கிப்போய் பட்டணத்தின் கூக்குரலின்படியே செய்திருக்கிறார்களோ, இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.”*** (ஆதி. 18:21) அப்படியாயின் அவர்களுடைய பாவங்கள் எத்தகையது என்று கடவுளுக்குத் தெரியாதா? பூமியில் இறங்கி வந்து பார்ப்பேன் என்று கர்த்தர் சொல்வதிலிருந்து அவர் பரலோகத்திலிருந்து பார்க்கமுடியாது என்று பொருளா? இப்படி பல கேள்விகள் எழலாம்.

பாவத்தின் கூக்குரல் என்பதே ஒரு கற்பனை. பாவத்தை ஒரு உருவமாக சித்தரித்து அதன் கொடுமையைக் கூக்குரலாக வேதம் படம் பிடித்துக் காட்டுகிறது. அதுபோல நான் இறங்கிவந்து பார்ப்பேன் என்று கர்த்தர் சொல்லுவது, அவர் நேரிடையாக சோதோமைப் பார்த்து விசாரிப்பது என்று பொருள். அப்பட்டணத்தின் முறைகேட்டை மற்றவர்கள் முறையிடுவதினால் அல்ல, தானே நேரில் பார்த்து தீர்ப்பு செய்வார் என்பதே “நான் இறங்கி வருவேன்” என்பதின் பொருள்.

பரலோகத்தில் உட்கார்ந்தவாறு தேவன் கிரியை செய்கிறதில்லை. இரக்கம், தயை, கிருபை என்ற சுபாவங்களினால் கர்த்தர் நீதிபதியின் ஸ்தானத்திலிருந்து இறங்கி இரட்சகர் என்ற நிலையில் சோதோமைப் பார்க்கிறார். இதனுடைய முழுப் பரிமாணம்தான் பெத்லகேமில் பிறந்த கர்த்தராகிய இயேசு.

சோதோமின் அழிவைத் தேவதண்டனையைத் தடுக்க ஆபிரகாம் கர்த்தரை நோக்கிப் பார்த்தான். சோதோமில் லோத்து சிக்கியிருந்தபடியால், அவனை விடுவிப்பது ஆபிரகாமுடைய முதல் நோக்கம். ஒரு குற்றவாளி தண்டிக்கப்படாமல் போகலாம். ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக்கூடாது. இது நீதிமன்றத்தில் நிலவும் உணர்வு. இந்த உணர்வை ஆபிரகாம் பெற்றிருந்தான்.

சோதோம் பட்டணத்திற்கு கடவுள் என்ன செய்வாரென்று ஆபிரகாமுக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பட்டணத்திற்கு வரும் தண்டனை பெரிதாயிருக்கும் என்று ஆபிரகாமுக்குத் தெரியும். ஏனெனில் அடங்காத இச்சையும், தவறான பாலியல் உறவுகளும், ஒழுக்கக் கேடுகளும் சோதோமின் பாவங்கள். ஆகவே தேவ தண்டனையென்பது நியாயமானதே. பிறகு ஏன் ஆபிரகாம் சோதோமை அழிக்காதவாறு கடவுளிடத்தில் மன்றாடினான்? ஒரு நீதிமான்கூட சோதோம் பட்டணத்தில் அழியக்கூடாது என்பது ஆபிரகாமின் பாரம்.

துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தில் மடிவது ஆண்டவருக்கும் பிரியமில்லை, ஆபிரகாமுக்கும் பிரியமில்லை. ஐம்பது நீதிமான்கள் அல்லது நாற்பது நீதிமான்கள் அல்லது முப்பது நீதிமான்கள் அல்லது இருபது அல்லது பத்து நீதிமான்கள் இருந்தால் கர்த்தர் சோதோமை அழிப்பீரோ என்று மன்றாடினான். கர்த்தருடைய இரக்கத்தை உணர்ந்தவனாய் தன் மன்றாட்டில் கர்த்தரின் கிருபையை அதிகரித்துக்கொண்டே போகிறான். கர்த்தரும் நீதிமான்கள் சோதோம் பட்டணத்திலிருந்தால் அந்தப் பட்டணத்தைதான் அழிப்பதில்லை என்று வாக்களித்தார்.

நீதிமான்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறதினாலே, அதை மிதித்துப் போட கர்த்தர் விரும்பமாட்டார். நீதிமான்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறதினாலே கர்த்தர் அந்த விளக்கை அணைத்துப் போடமாட்டார். பவுல் என்ற ஒரு நீதிமானினிமித்தம் பயணிகள் யாவருக்கும் கிருபை செய்த தேவன் இன்றைக்கும் அப்படியே செய்வார்.

நீ பிரயாணம் பண்ணுகிறதினிமித்தம் அந்த வாகனங்கள் காப்பாற்றப்படுகிறதென்பதை நினைவில் வையுங்கள். சோதோமின் மக்கள் காப்பாற்றப்படும் பொருட்டு பத்து நீதிமான்களாவது இருக்கக்கூடாதா என்று ஆபிரகாம் அங்கலாய்க்கிறான், ஜெபிக்கிறான்.

தீவிரவாதம், பலாத்காரம், கொடுமைகள் நிறைந்த உலகத்திற்காக நீங்கள் ஜெபிக்கிறீர்களா? இந்த உலகம் உருப்படாது என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் சராசரி மனிதன். இருண்ட உலகத்திற்காக ஜெபிக்கிறவனே கடவுளின் மனிதன். இரவெல்லாம் ஆபிரகாம் பாரத்தோடு ஜெபித்தான். பத்து நீதிமான்களாவது இருப்பார்கள். கர்த்தர் சோதோமை அழிக்கமாட்டார் என்பது ஆபிரகாமின் நம்பிக்கை.

"சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான். அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப் போல எழும்பிற்று." (ஆதி. 19:28) சோதோம் பட்டணம் அழிந்தது. அப்படியானால் ஆபிரகாம் மன்றாட்டின் பலன் என்ன?

சோதோம் பட்டணம் முற்றிலும் எரிந்து சாம்பலாயிற்று. அப்படியாயின் ஆபிரகாமுடைய ஜெபத்தின் மேன்மையென்ன? இப்படி ஒரு கேள்வி நம் உள்ளத்தில் எழுவது நியாயம்தான். சோதோமிலிருந்து எழும்பிய புகையானது ஆபிரகாமுடைய ஜெபத்திற்கு சொல்லிய பதில், "இங்கே நீதிமான்கள் இல்லை". ஆபிரகாம் ஜெபம் வீணாகி விடவில்லை. சோதோமோடு சேர்ந்து லோத்தும் அழிந்துப்போகாதபடி நீதிமானாகிய லோத்தை அவன் ஜெபம் தப்புவித்தது.

லோத்துவினுடைய நீதி அவனை மாத்திரமே தப்புவித்ததே தவிர சோதோம் பட்டணத்தை தப்புவிக்கவில்லை. பவுலுடைய நீதி அவனையும் தப்புவித்தது, அவனோடிருந்த பிரயாணிகளையும் தப்புவித்தது. லோத்தினுடைய நீதி சோதோமைத் தப்புவிக்கும்

வல்லமையுள்ளதல்ல. சோதோமின் பாவங்களுக்காக அவன் வருந்தினானே தவிர, அவற்றை வெளியரங்கமாக அவன் கண்டிக்கவில்லை.

"நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட லோத்து" என்று வேதம் அவன் நீதியை வெளிப்படுத்துகிறது. (1 பேதுரு 2:8) ஆனால் அவனுடைய நீதி சோதாமைக் கண்டிக்கவுமில்லை. சோதோமின் உறவைத் துண்டிக்கவுமில்லை. ஆகவே அவனுடைய நீதி மெச்சிக்கொள்ளத் தக்கதாகயில்லை. ஆனாலும் ஆபிரகாமுடைய ஜெபம் தோற்றுப்போகவில்லை.

சகோதரனே! சகோதரியே! உங்கள் ஜெபம் நீங்கள் எதிர்ப்பார்த்திருக்கிற பலனைக் கொண்டுவராவிட்டாலும் தேவனது நோக்கத்தை நிறைவேற்றும். தேவநோக்கம் நிறைவேறுவதே மன்றாட்டின் மாண்பு.

# நரகமாகும் நகரம்

(அதிகாரம் - 19)

வானத்தையளாவிய கட்டடங்கள், கருப்புக் கம்பளம் விரித்ததுப்போல அகன்றப் பாதைகள், கப்பல் போன்ற கார்கள், கண்ணைப்பறிக்கும் மின் விளக்குகள், இத்தனையும் நிறைந்த அழகான நகரங்கள், விபச்சாரம், கொலை வெறி, கொள்ளையடிக்கும் கொடுமைகள் இவற்றைத் தனக்குள் மறைத்து வைத்திருப்பதினால் இந்தப் பகட்டான நகரங்கள் பாதாளத்தின் வாசல்களாக இருக்கின்றன. அப்படித்தான் சோதோம் பட்டணமும் இருந்தது. இந்தப் பட்டணத்தின் தலைவாசலில் லோத்து அமர்ந்திருந்தான். அதாவது அந்த நகரத்தில் தலைமையதிகாரியாக அமர்ந்திருந்தான். லோத்து சோதோம் நகரத் தந்தை.

சோதோமின் பிரபுக்கள் அவர் வீட்டு விருந்து சாலைகளை நிரப்பினர். ஆனால் வீட்டு வாசலுக்கு வந்த தேவதூதர்களோ, அவன் வீட்டுக்குள் பிரவேசிக்க விரும்பாமல் வீதியிலே இராத்தங்க விரும்பினார்கள். (ஆதி. 19:2) உலக மக்கள் லோத்தின் வீட்டை ஆக்ரமித்திருக்க பரலோகத் தூதர்களோ வீட்டிற்குள் பிரவேசிக்க மனதற்றிருந்தார்கள். ஏனெனில் லோத்து தன் சாட்சியை இழந்திருந்தான். சாட்சியிழந்த வீட்டிற்குள் தேவன் பிரவேசிக்கமாட்டார்.

சகோதரனே! உன் வீட்டில் கர்த்தர் தங்கியிருக்கிறாரா? அல்லது லவோதேக்கியா சபையின் வாசலில் நின்றதுபோல உன் வீட்டின் வாசலில் நிற்கிறாரா? உங்கள் வீட்டிற்கு யார் யாரோ வந்தும், கர்த்தர் வராதிருந்தால் அது எத்தனை பரிதாபம்! சில வீடுகளில் இப்படி ஒரு பலகை தொங்கும். எப்படியெனில் "இயேசுவே இவ்வீட்டின் தலைவர், மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருப்பவர், மறைவான விருந்தாளி."

இயேசு நம் வீட்டின் தலைவரானால் வீட்டில் அவர் மௌனமாய் இருக்கமாட்டார். எல்லாவற்றிலும் அவர் தலையிடுவார். நம் வீட்டிற்கு விருந்தாளியல்ல; விருந்துக் கொடுப்பவர். அந்தப் பலகையில் இருக்கிறபடி இயேசு அமைதியாய் இருப்பாரென்றால் அவர் தலைவரல்ல. அந்த வீடும் ஒழுங்கானது அல்ல.

சோதோமிற்கு லோத்து செயல்படாத தலைவனாயிருந்தான். அதாவது மௌனமாக வேடிக்கைப் பார்ப்பவன், மௌனமாகவே கேட்பவன், நகரம் பாவத்தினால் நிறைந்திருந்தும் நகரத் தந்தையான லோத்து எதையுமே கேட்கவில்லை. சோதோமின் பாவங்களான கர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமும் (எரே 16:49) லோத்தை அதிகமாய்ப் பாதிக்கவில்லை. சோதோம் நகரத்தின் தந்தையாய் இருந்தும் இதைக் குறித்து கொஞ்சமேனும் லோத்து அக்கறைப் படவில்லை.

உலகத்தில் எவ்வளவோ அக்கிரமங்கள் நடக்கின்றனவே, இவற்றிற்கெல்லாம் கடவுள்தானே காரணம். உலகத்தை உண்டாக்கிய அவர் இவற்றைக் குறித்துக் கவலையற்றிருக்கலாமா? கடவுள் லோத்தைப் போல செயல்படாத தலைவராகத்தான் இருக்கிறாரே என்று கேள்வி கேட்கலாம். கடவுள் கவலையற்றவரல்ல. பாவத்தைக் கண்ஜாடையாகக் கர்த்தர் விடவே மாட்டார். கடவுளின் நீதி ஆதி உலகத்தை ஜலப்பிரளயத்தில் அழித்தது, சோதோம் பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கியது. இப்பொழுதும் கடவுள் உலகத்தை அக்கினிக்கு ஒப்புக்கொடுக்க முடியும். அது நியாயம்.

அவரால் அழிக்கத்தான் முடியும், சீர்த்திருத்த முடியாதா என்று மற்றொரு கேள்வி எழலாம். இந்த அநியாயங்களையெல்லாம் கடவுளால் தடுக்கமுடியாதா என்பதே உலகத்தின் கேள்வி. சோதோம் பட்டணத்தின் அதிபதி லோத்து. ஆகவே அதன் குற்றங்களுக்கு கொடுமைகளுக்கு அவன்தான் பொறுப்பு. கடவுள் இந்த உலகத்தை உருவாக்கியிருந்தும் இப்பொழுது உலகத்தின் அதிபதி பிசாசே. உலகத்தின் எந்தத் தீமைக்கும் கடவுள் பொறுப்பாகவே மாட்டார். அப்படியாயின் இந்த உலகத்தை சாத்தான் கையில் அப்படியே விட்டுவிடுவாரா என்ற கேள்வியும் எழுகிறது. இதின் பதிலை வேதத்தில் கண்டுக் கொள்வோம்.

***"பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்."*** (லூக். 12:49) இது இயேசுகிறிஸ்துவின் நீதியின் வெளிப்பாடு. இவ்வுலகத்தின் பாவத்திற்காக அதின் மேல் நீதியின் நியாயத்தீர்ப்பின் அக்கினி பற்றியெரிய வேண்டும். இப்பாவ உலகத்தை அக்கினிக்கு இரையாக்கும் அவருடைய நீதி சாத்தானையும் அக்கினிக் கடலில் தள்ளும். கர்த்தர் நிர்விசாரமாக இருக்கவே மாட்டார். ஆனால் அவருடைய நீதியை அவருடைய இரக்கம் தடுக்கிறது. அவருடைய இரக்கத்தின் சத்தத்தைக் கேட்போம்.

***"ஆனாலும் நான் மூழ்கவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு. அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்."*** (லூக். 12:50) தாம் சிலுவையில் மரணத்தில் மூழ்கி, உலகத்தை பாவத்திலிருந்து மீட்க அவருடைய இரக்கம் கெஞ்சுகிறது. அவருடைய இரக்கம், அவருடைய நீதி இந்த இரண்டிற்கும் நடுவில் நெருக்கப்படுகிறார். உலகத்தை அழிப்பதா? காப்பதா? இதுதான் தேவனுடைய நெருக்கம். அவருடைய இரக்கமே மேலோங்கி நின்றது. அதனுடைய விளைவே கல்வாரி சிலுவை. இந்த இரக்கத்தின் காலத்தில் தேவன் நியாயத்தீர்ப்பை நிறுத்திவைத்துள்ளார். ஆகவே இப்பொழுது அநியாயங்களுக்கு உடனே தீர்ப்புக் கிடைப்பதில்லை.

ஆனால் சோதோம் கொமோராவின் காலம் கிருபையின் காலம் அல்ல. ஆகவே தேவ தண்டனை நகரத்தின் மீது விழுந்து, அது எரிந்து சாம்பலாயிற்று. அந்த நகரத்தைத் திருத்த வேண்டிய லோத்து அதைத் திருத்தாதபடியினால் அது நெருப்பிலே அழிந்துப்போவதை தூரத்திலேயிருந்துப் பார்க்கவேண்டியதாயிற்று. ஜீவனுக்குள் பிரவேசிக்கிற ஒரு சிற்றூரில் வேலைக்காரனாயிருப்பது, அழிந்துபோகிற நகரத்திற்கு தலைவனாயிருப்பதைவிட எவ்வளவோ மேலானது.

# லோத்தின் பரிதாப முடிவு

(அதிகாரம் 19:15-38)

கர்த்தர் சோதோமை அழிக்கத் தீர்மானித்தார். பரலோகத்திலிருந்து இரண்டு தூதர்கள் சோதோமை அழிக்க லோத்தின் வாசல்படியில் நின்றார்கள். காயீனின் வாசற்படியில் பாவம் படுத்திருந்தது, லோத்தின் வாசற்படியில் நியாயத்தீர்ப்புக் காத்திருந்தது. நிலையான நகரம் என்று சோதோமை லோத்து நினைத்திருந்தான்.

தேவன் தாமே அஸ்திபாரமிட்ட நித்திய நகரத்தை நோக்கி ஆபிரகாமின் கால்கள் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, அக்கினியில் அழியப்போகும் பரிதாபமான நகரத்தில் லோத்தின் கால்கள் தாபரித்துக் கொண்டிருந்தன. கர்த்தர் நிச்சயமாய் நகரத்தை அழிக்கப்போகிறாரென்று அவன் இதயம் திகைத்தது.

தன் இருமகள்களை திருமணம் செய்யும் வாலிபர்களை தப்புவிக்க முயற்சி செய்தான். ***"அந்த வாலிபர்களை நோக்கி கர்த்தர் இந்நகரத்தை அழிக்கப்போகிறார். சீக்கிரம் இந்நகரத்தைவிட்டு அகன்றுப்போவோம் என்று லோத்து கூறினான். அந்த வாலிபர்களுக்கு லோத்து பரியாசம் செய்வது போலிருந்தது."*** (ஆதி. 19:14) சாட்சியிழந்தவனின் பிரசங்கம் வேடிக்கையாகத்தான் இருக்கும்.

காலமெல்லாம் சோதோமின் சுகத்தை அனுபவித்துக்கொண்டே, சோதோமின் உயர்ந்த பதவியில் உட்கார்ந்துக்கொண்டே கர்த்தர் சோதோமை அழிக்கப்போகிறார் என்று சொன்னால் யார் நம்புவார்? காலமெல்லாம் உலகத்தோடு இணைந்தும் பிணைந்தும் வாழ்கிற மனிதன் திடீரென்று உலகம்

அழியப்போகிறது என்று கூக்குரலிட்டால் யார் நம்புவார்? சில ஊழியக்காரருடைய ஆத்துமாக்கள் மண்ணோடு ஒட்டிக்கிடக்கின்றன. இவர்கள் மேடையேறி மேகங்கள் நடுவே இயேசு வருகிறாரென்று சொன்னால் யார் ஏற்றுக்கொள்வார். சாட்சியிழந்தவர்களுடைய பிரசங்கம் பரியாசமாகத்தான் இருக்கும்.

அந்த வாலிபர்கள் சோதோமை விட்டு வெளியேறத் தாமதித்தபடியால் லோத்தும் தயங்கி நின்றான். இன்னும் கொஞ்சம் நேரத்தில் அக்கினி நகரத்தின் மீது விழப்போகிறது. சோதோமை விட்டு வெளியேறுமாறு லோத்துவைக் கர்த்தர் துரிதப்படுத்தினார். கர்த்தரின் கரம் லோத்துவின் குடும்பத்தை சோதோமை விட்டு வெளியே கொண்டுவந்தது.

***"உன் ஜீவன் தப்ப ஓடிப்போ... பின்னிட்டுப் பாராதே. நீ அழியாதபடி மலைக்கு ஓடிப்போ."*** கர்த்தரின் வார்த்தைக்கு லோத்தின் குடும்பம் கீழ்ப்படிந்திருந்தால் எத்தனை ஆசீர்வாதமாயி-ருந்திருக்கும். நீ ஜீவன் தப்ப மலைக்கு ஓடிப்போ என்று கர்த்தர் சொன்னார். ***"மலைக்கு என்னால் ஓடிப்போக முடியாது. தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப் போவேன்"*** (ஆதி. 19 : 19) என்று லோத்து கர்த்தருக்கு பதில் சொன்னான்.

கர்த்தரின் வார்த்தையை விசுவாசிக்கவுமில்லை, அதற்குக் கீழ்ப்படியவுமில்லை. கர்த்தர் லோத்துவைப் பார்த்து கட்டளையிடும் பொழுது, அக்கட்டளைக்கு கீழ்ப்படிவதை விட்டு அப்படியல்ல ஆண்டவரே! என்று எதிர்தர்க்கம் பண்ணுகிறான்.

சகோதரனே! சகோதரியே! கர்த்தர் உனக்கு கட்டளையிடும் போது, அப்படியல்ல ஆண்டவரே என்று எத்தனை தரம் தர்க்கம் செய்திருக்கிறாய். "ஊழியத்திற்கு வா" என்று உன்னைக் கர்த்தர் அழைக்கும்போது, "அப்படியல்ல ஆண்டவரே" என்று இன்று கூட சொல்லிக் கொண்டிருக்கின்றாயே! இந்தப் பெண்ணை உன் வாழ்க்கைத் துணையாகத் தெரிந்தெடுக்காதே என்று ஆண்டவர்

சொல்லும்போது, அப்படியல்ல ஆண்டவரே என்று எதிர் தர்க்கம் செய்யாதே. எதிர் தர்க்கம் வாழ்க்கையை நரகமாக்கிவிடும்.

லோத்து சோதோமைவிட்டு ஓடவேண்டியதாயிற்று. சோதோமில் அவன் செலவழித்த நாட்கள் வீணான நாட்களாயின. அவன் சம்பாதித்தப் பொருட்கள் அனைத்தையும் அங்கே விடவேண்டியதாயிற்று. "நகரத் தந்தையே, நீர் வாழ்க" என்று வரவேற்பு கூறியது சோதோம் பட்டணம் அன்று. "அப்பாலே போ, பரதேசியே" என்று துரத்துகிறது இன்று. கர்த்தரை விட்டுவிட்ட மனிதர்களுக்கு இப்படித்தான் நடக்கும்.

லோத்தை நோக்கி சில கேள்விகள். லோத்தே, பொல்லாத நகரத்தையும் நல்ல கர்த்தரையும் ஒரே நேரத்தில் நேசித்தாயே! லாபமென்ன? நகரத்தை சீர்திருத்திவிடுவேன் என்று பதவியில் அமர்ந்தாயே! செய்து முடித்தாயா? எவ்வளவு பணம் சம்பாதித்தாய் லோத்தே! அந்தப் பணம் இப்பொழுது உன்னிடம் இருக்கின்றதா? நீ நகரத்தையா? நகரம் உன்னையா? யார், யாரைப் பாதித்தது? லோத்து பதில் சொல்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறான்.

சகோதரனே, சகோதரியே! உன்னிடத்திலும் சில கேள்விகள். கடவுள் சித்தத்திற்கு மாறாக ஒரு வேலையில் அமர்ந்தாயே, உன் வாழ்க்கை அமைதியாய் இருக்கின்றதா? சகோதரியே, இரட்சிப்பில் நடத்திடுவேனென்று ஒரு இந்து சகோதரனை மணந்தாயே, இரட்சிப்பில் நடத்தினாயா? உன்னோடு உன் கணவர் சபைக்கு வருகின்றாரா? அல்லது நீ அவரோடு விக்கிரகாராதனைக்குப் போகின்றாயா? யார், யாரைப் பாதித்தது?

ஊரைவிட்டு லோத்தின் குடும்பம் வெளியே வந்துவிட்டது. ஆனால் "பின்னிட்டுப் பாராதே" என்ற தேவகட்டளையை மீறி லோத்தின் மனைவி சோதோமைப் பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூணானாள். லோத்தின் மனைவி சோதோமை விட்டு வெளியே நின்றாள். நீதிமானாகிய தன் கணவன் லோத்தோடு கொஞ்சதூரம் ஓடினாள். ஆனால் ஒரு சின்னக் கட்டளையை மீறி பெரிய தண்டனையை அடைந்தாள்.

லோத்தின் மக்கள் சரீரப்பிரகாரமாக இன்னும் கன்னிகைகளே. ஆனால் அவர்கள் இருவரும் இதயத்தில் கறைப்பட்டவர்கள். அவரோடு வர மறுத்த அந்த இரண்டு வாலிபர்கள் இல்லாததினால் தனக்கு எதிர்காலமே இல்லையென்று மதிகேட்டின் பள்ளத்தாக்கில் விழுந்தார்கள்.

சகோதரனே! சகோதரியே! நீ விரும்பும் வாழ்க்கைத் துணையைக் கர்த்தரின் ஆவியானவர் வேண்டாமென்று தடுக்கும் பொழுது அவரில்லாமல் எனக்கு எதிர்காலமே இல்லை, நான் மரித்துப் போவேன் என்று மதிகேடாய் தர்க்கம் செய்யாதே.

லோத்தின் மக்கள் உலகத்தில் எவரும் செய்யாத ஒரு பெரிய தவறைச் செய்து தேவனுக்கு விரோதமான அம்மோன் சந்ததியை உருவாக்கினார்கள்.

# மீண்டும் தவறுகின்ற ஆபிரகாமும் அரவணைக்கும் ஆண்டவரும்

(அதிகாரம் - 20)

பழைய சுபாவங்கள் மரிப்பதில்லை. அடிக்கடி அவை தலை தூக்கி, நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் பல பிரச்சனைகளை உருவாக்கிவிடும். ஆகவே நாம் நம் பழைய சுபாவங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எபிரேய நிருபமும் நம்மை எச்சரிக்கிறது. ***"சுற்றி நெருங்கி நிற்கும் பாவத்தைத் தள்ள வேண்டும்"*** (எபி. 12:1) என்று நம்மை வற்புறுத்துகிறது. எத்தனை ஆண்டுகளானாலும், எவ்வளவு பெரிய தேவ மனிதனாக இருந்தாலும் சரி, பழைய சுபாவம் வாழ்க்கையில் திடீரென்று கிரியை செய்ய ஆரம்பித்துவிடும்.

ஆபிரகாம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக எந்தத் தவறைச் செய்தானோ, அதே தவறை மீண்டும் செய்தான். அவன் கேராரூரிலே குடியேறினவுடன் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரூரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பி, சாராளை அழைப்பித்தான். (ஆதி. 20:2)

சோதோமின் அழிவைக் கண்ட பின்பு, அங்கிருந்து இந்த இடத்திற்கு ஆபிரகாம் வந்தான். இந்தப் புதிய இடத்தில், ஆபிரகாம் செய்த முதல் காரியம் பொய் சொன்னதே! அந்தத் தேசத்து ராஜாவாகிய அபிமெலேக்கிடம், சாராளைத் தன் சகோதரி என்று சொன்னான்.

வாக்குத்தத்தக் குழந்தையைத் தன் கர்ப்பத்தில் சுமக்கப்போகும் சாராளுக்காக கடவுள் அபிமெலேக்கைச் சந்தித்தார். தான் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையைக் காக்கும்படி, ஆபிரகாமிற்காகக் கர்த்தர் இடைப்பட்டார். ***"இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி, நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே'*** (ஆதி. 20:3) என்று தேவன் அபிமெலேக்கைக் கடிந்துக்கொண்டார்.

அவனை நோக்கி, "நீ செத்தாய்" என்று கடவுள் சொன்னார். பாவத்தில் வாழ்கிற மனிதனின் ஆத்துமா செத்ததாகவே இருக்கிறது. ஆகவே எல்லா பாவிகளும், கடவுளின் பார்வையில் செத்தவர்களாகவே இருக்கிறார்கள். அபிமெலேக்கு பிறனின் மனைவியை எடுத்துக்கொண்டபடியால், கடவுளின் பார்வையில் செத்தவனே.

சகோதரனே! பாவிகளைக் குறித்து அலட்சியமாக இராதே. உலகப் பிரகாரமாக எத்தனையோ பெருமைகளை, சிலாக்கியங்களை, அவர்கள் பெற்றிருக்கலாம். ஆனால் கர்த்தரை அறியாதபடியினால் அவர்கள் பிணமாகவே இருக்கிறார்கள். அவர்கள் சரீரப் பிரகாரமாக உலாவி வருவதால், அவர்கள் நடைபிணங்களாக இருக்கிறார்கள். இந்த நடைபிணங்களை ஜீவனுள்ளவர்களாக மாற்றுவதே நாம் சந்திக்க வேண்டிய அறைகூவல்.

ஆபிரகாம் மட்டுமல்ல, சாராளும் பொய் சொன்னாள். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்திருந்தும் தேவ அழைப்பைப் பெற்றிருந்தும் ஜென்ம சுபாவத்திலிருந்து இன்னும் விடுதலைப் பெறவில்லை. ஆகவே இருவரும் இணைந்தே பொய் சொன்னார்கள். அனனியாவும் சப்பீராளும் இணைந்து பொய் சொல்லி தேவ தண்டனைக்குள்ளானார்கள். ஏனெனில் அவர்கள் சொல்லியது துணிகரமானப் பொய். ஆனால் ஆபிரகாமும் சாராளுமோ சூழ்நிலையின் நெருக்கத்தினாலே பொய் சொன்னார்கள். ஆனாலும் கர்த்தர் இதைப் பாவமில்லை என்று சொல்லவில்லை.

ராகாப் பொய் சொன்னதையும் தேவன் ஆதரிக்கவில்லை. நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவோ, தேவன் நீதியுள்ளவர் என்பதைக் காட்டவோ நாம் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தினாலும் அது பொய்க் கல்யாணமே.

அறியாமையுள்ள காலத்தைத் தேவன் காணாதவர் போல இருந்ததுபோலவே ஆபிரகாம், சாராளுடைய அறியாமையைத் தேவன் காணாதவர் போலிருந்தார். (தேவன் தண்டிக்கும்படியாக) அபிமெலேக்கின் பாவத்தைக் கர்த்தர் கண்டிக்கவில்லை. ஏனெனில் அவனுக்கு சாராள் ஆபிரகாமின் மனைவி என்று தெரியாது. சாராளும் தன்னை ஆபிரகாமின் சகோதரியென்றே சொல்லியிருந்தாள். ஆகவே உத்தம இருதயத்தோடுதான் அபிமெலேக்கு இதைச் செய்தான் என்று கர்த்தரும் சொல்லியிருந்தார்.

ஆனாலும் சாராளை அவனுடைய மனைவியாக்கி இருந்தால் அது கர்த்தரின் பார்வையில் பாவமே. அறியாமையைக் கர்த்தர் ஒரு காரணமாகவே எடுக்கமாட்டார். ஆபிரகாமுடைய செயல் பாவம். ஏனெனில் அவனுடைய உள் மனம் அவன் செயலை எதிர்த்தது. ஆனால் இந்த உள்ளுணர்வு அபிமெலேக்குக்கு இருக்க நியாயமில்லை. அறியாமையினாலே அவன் பாவம் செய்யப்போவதைக் கர்த்தர் தடுத்தார். ***"நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன். ஆகையால் நீ அவளைத் தொட நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை."*** (ஆதி. 20:6) என்று தேவன் கூறுகிறார்.

இன்றும் மனிதன் பாவம் செய்யாதபடி ஒவ்வொரு மனிதனோடும் அவன் மனசாட்சியில் போராடுகிறார். மனசாட்சியின் குரலுக்குக் கீழ்ப்படிகிறவன் பாவத்திற்குத் தப்புகிறான். "உன் மனைவியை சகோதரி என்று சொல்லாதே" என்று ஆபிரகாமோடும் "நீ உன்னை ஆபிரகாமின் சகோதரி என்று சொல்லாதே" என்று

சாராளோடும் ஆவியானவர் போராடியிருப்பார். மனசாட்சியின் சத்தத்தை இருவரும் மீறிவிட்டார்களே!

கேராரூரிலே தெய்வ பயமில்லை என்று குற்றஞ்சாட்டின ஆபிரகாம் தெய்வ நம்பிக்கையில்லாதவனாக நடந்து கொண்டானே! இந்தப் பொல்லாப்புக்கு சாராள் ஏன் உடன்பட்டாள்? வாக்குத்தத்தப் பிள்ளைக்கு தாயாகப் போகும் தனக்கு எந்த ஆபத்தும் நேரிடாது என்று உறுதியாய் நம்பினாள். மேலும் ஊர் பட்டணத்தைவிட்டு புறப்படும்போதே தன்னை எவ்விடத்திலும் சகோதரி என்றே சொல்ல வேண்டுமென்று சாராள் கேட்டுக் கொள்ளப்பட்டாள்.

ஆயினும் இந்த நெருக்கமான நேரத்தில் கர்த்தர் தமது ஆதரவு கரத்தை சாராளுக்கு நீட்டினார். இந்த ஆதரவு ஒரு விதிவிலக்கே தவிர ஆவிக்குரிய விதியல்ல. சாராளின் நிலைமை மிக தர்ம சங்கடமானது. எல்லார் முன்னிலையிலும் சாராள் கடிந்து கொள்ளப்பட்டாள். அவளது அடிமைப் பெண்ணாகிய ஆகாரின் முன்பும் கடிந்துக்கொள்ளப்பட்டாள். அபிமெலேக்கு சொல்வதைக் கவனியுங்கள், ***"உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன். இதோ, உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும் மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக என்றான். இப்படி அவள் கடிந்து கொள்ளப்பட்டாள்."*** (ஆதி. 20:16)

அபிமெலேக்கு சாராளைப் பரிகாசம் பண்ணுகிறான். "ஆயிரம் வெள்ளிக்காசை உன் புருஷனிடத்தில் தான் கொடுக்கவேண்டும். உனக்கு புருஷனில்லாதபடியினால் உன் சகோதரனிடத்தில் கொடுத்தேன்" என்று மறைமுகமாக அவள் சொன்ன பொய்யைச் சுட்டிக்காட்டினான். அந்த ஆயிரம் வெள்ளிக்காசைக் கொண்டு சாராளும் அவளுடைய தோழிகளும் முகத்துக்கு முக்காடு வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும். "வாய்திறந்து உன்னை ஒருவனுடைய மனைவி என்று சொல்லமுடியாத நிலையில் உன் அழகையே

மூடிக்கொள்ளும்படி உன் முகத்தை, அழகை மறைத்துவிடு," என்று அபிமெலேக்கு சாராளைக் கடிந்துக்கொண்டான். அந்நிய தேசத்தில் இப்படி தலைகுனிய வேண்டியதாயிற்று.

அபிமெலேக்கு வீட்டில் சாராள் தங்கியிருக்கும்போது அவர்களுக்குள் ஏதேனும் உறவு ஏற்பட்டிருக்குமோ என்று சிலர் நினைக்கலாம். சாராளின் நல்மதிப்பைக் காப்பாற்ற அவள் நிமித்தம் அபிமெலேக்கு வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் கர்த்தர் அடைத்தார். சாராள் சாதாரணப் பெண்ணல்ல, கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரம் என்று கர்த்தர் விளங்கப்பண்ணினார். ஆபிரகாமையும் பேதையான மனிதனாக கர்த்தர் காட்டவில்லை. "ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசி. நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்" (ஆதி 20:7) என்று அபிமெலேக்கைக் கர்த்தர் ஆபிரகாமின் ஜெபத்தில் அடைக்கலம் தேட வைத்தார்.

# மாம்சீகமே, நீ போய்விடு

(அதிகாரம் - 21)

கர்த்தர் வார்த்தையின் கடவுள். அவர் வார்த்தை தவறவே மாட்டார். தான் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார். (ஆதி. 21:1) காலதாமதமோ, எதிர் சூழ்நிலைகளோ கடவுளின் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைத் தடுத்து நிறுத்தவே முடியாது.

***"ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்."*** (ஆதி. 21:2) செத்துப்போன சரீரம், செத்துப்போன கர்ப்பம் இவை ஒன்றும் தேவன் வாக்களித்த ஈசாக்கின் பிறப்பைத் தடுத்து நிறுத்தமுடியாது.

வாக்குத்தத்தத்தின் பிள்ளை பிறந்தவுடன் வீட்டில் பிரச்சனை தோன்றியது. ஆம்! இரட்சிக்கப்பட்டவுடன் பிரச்சனை தோன்றும். இதுவரை பாவ உந்துதலுக்குக் கீழ்ப்படிந்திருந்த ஆத்துமா இப்பொழுது மாம்சீகத்தை எதிர்க்கிறது. பாவ வாழ்க்கையில் கிடைத்த போலி சமாதானம் மறைந்து மனசாட்சியில் போராட்டம் நடக்கிறது. ஐயோ! நான் விரும்புவதைச் செய்யாமல் விரும்பாததையே செய்கிறேனே (ரோமர் 7:15) என்று மனிதன் நிர்ப்பந்தமான நிலையில் துடிக்கிறான். இப்பொழுது அவனுக்கு விடுதலை தேவை. மாம்சீகம் துரத்தப்படவேண்டும்.

ஆபிரகாம் வீட்டில் மாம்சீகத்தின் பிறப்பான இஸ்மவேல் பரிகாசம் பண்ணுகிறான். உடனே சாராள் ஆபிரகாமை நோக்கி, ***"இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை. அவளையும்,***

*அவள் மகனையும் புறம்பே தள்ளும்"* (ஆதி 21:10) என்று சொல்லி பிரச்சனையை எழும்புகிறாள். இஸ்மவேல் அந்த வீட்டில் நீடிப்பதால், ஈசாக்கு எந்த விதத்தில் பாதிக்கப்படுவான், வீட்டில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதெல்லாம் விளங்கவே இல்லை. ஆனால் மாம்சீகமும், தேவசித்தமும் ஒன்றாய் வாழ முடியாது என்பதை விளங்கிக்கொள்கிறோம்.

விசுவாசப் பாதையில், நாம் பல தியாகங்களைச் செய்ய வேண்டியதிருக்கும். விசுவாசப் போட்டியில் நாம் பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதிருக்கும். இப்பொழுது ஆபிரகாம் பெரிய விலையாக, இஸ்மவேலை வீட்டை விட்டுத் துரத்த வேண்டும். இது ஆபிரகாமிற்கு மிகவும் இதய வேதனை தரும் ஒன்று. இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது. (ஆதி. 21:11)

தேவதிட்டத்திற்கு மாறாக இஸ்மவேல் பிறந்திருந்தாலும் தகப்பன் என்ற நிலையில் அவனை ஆபிரகாம் நேசித்தது இயற்கையே. ஆபிரகாமுடைய பிள்ளையைக் கர்த்தர் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாக மாற்றமாட்டார். தேவனது வாக்குத்தத்தம்தான் பிள்ளையாக பிறக்கவேண்டும். நம்முடைய அவசரமான முடிவுகள் தேவ அங்கீகாரத்தைப் பெறாது. தேவ திட்டத்தையும் மாற்றி அமைக்காது. தேவ திட்டத்திற்கு மாறான திருமணங்கள் நடந்து முடிந்துவிட்ட ஒரே காணத்தினால் தேவ அங்கீகாரம் பெறா.

தாவீதின் மனைவியாகிய மீகாளை பல்த்தியிடம் கொடுத்ததினாலே பல்த்தியின் மனைவி என்று வேதம் அழைக்காமல் சவுலின் குமாரத்தி என்றே வேதம் அழைக்கிறது. இஸ்மவேல் ஆபிரகாமுடைய குமாரன் என்பது சமூக ரீதியாக மாற்றப்படாத உண்மை. ஆனால் ஆவிக்குரிய நிலையில் ஈசாக்கு மாத்திரமே ஆவிக்குரிய சந்ததி. சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் பல காரியங்கள் ஆவிக்குரிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இன்றைய ஆவிக்குரிய சட்டப்படி ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கக் கூடாததுபோல, ஆபிரகாம் வீட்டில் ஈசாக்கும், இஸ்மவேலும் ஒன்றாக வளரக்கூடாது. இஸ்மவேல் வெளியே தள்ளப்பட வேண்டும். இது ஆபிரகாமுடைய மாம்சத்திற்கு மிக விசனமாயிருந்தது. இஸ்மவேலை ஆபிரகாம் வீட்டைவிட்டுப் புறம்பாக்குவது ஆபிரகாமுடைய இருதயத்தில் செய்யப்படும் விருத்தசேதனம். இது வேதனையானது.

கிறிஸ்துவுக்காக, மாம்சத்திற்கு லாபமானதை ஆவிக்கு நஷ்டமென்று கருதித் தள்ளவேண்டும். இப்படித் தள்ளுவது எளிதானக் காரியமல்ல. எகிப்தின் பொக்கிஷங்களை வெறுத்த மோசேயைப் போல ஆபிரகாமும் இஸ்மவேலைத் தள்ளவேண்டும். அதுபோல இஸ்மவேலையும் அவன் தாயாகிய ஆகாரையும் அவன் தள்ளினது சரி. ஆனால் தள்ளின விதம் சரியல்ல.

இயேசுவின் தாயாராகிய மரியாள் பரிசுத்தமானப் பாத்திரம். திருமணத்திற்கு முன்பு மரியாள் கர்ப்பமானது யோசேப்புக்கு புரிந்துக்கொள்ளமுடியாத ஒன்று. ஆகையால் மரியாளைத் தள்ளிவிட யோசேப்பு நினைத்தது உலகப்பிரகாரமாக நியாயமான செயல். அன்றைய சமூக சட்டத்தின்படி மரியாளை அவமானப்படுத்தலாம். ஆனால் இரகசியமாக தள்ளிவிட நினைத்தது யோசேப்பினுடைய நீதி.

ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் வீட்டை விட்டுத் துரத்தியது நியாயம். ஆனால் அப்பத்தையும் ஒரு துருத்தித் தண்ணீரையும் எடுத்து ஆகாரினுடைய தோளின் மேல் வைத்து பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து அவளை அனுப்பிவிட்டான். (ஆதி. 21:14). இப்படி அனுப்பியது செல்வச் சீமானான ஆபிரகாமுக்கு அழகல்ல. இன்னும் கொஞ்சம் வசதி செய்து அனுப்பியிருக்கலாம். கால்நடையாய் அனுப்பினதை விட ஒரு ஒட்டகத்தில் அனுப்பியிருக்கலாம்.

இஸ்மவேலுக்கோ, ஆகாருக்கோ மனித அடிப்படையில் இரக்கமே காட்டக் கூடாது என்பது தேவனின் நோக்கமல்ல.

ஆவிக்குரியக் கடமைகளை ஆற்றும்போது நம் மனித நேயத்தை மீறக்கூடாது. தூக்கு மேடைக்குக் குற்றவாளிகளை அனுப்பும்போதுகூட அவர்களுக்குத் தேனீரும், பிஸ்கட்டும் கொடுக்கின்றனர். பாவத்தை வெறுத்துத் தள்ளும்போது பாவியையும் சேர்த்துத் தள்ளிவிடக்கூடாது. பாவியையும் பாவத்தையும் பிரிக்கக்கூடிய ஒரு மெல்லியக் கோடிருக்கிறது. அதை அறிய பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டும்.

# தண்ணீரும், ஜீவத்தண்ணீரும்

(அதிகாரம் 21:15-34)

மாம்சீகமான அன்பை நம்பினவர்கள் உலகில் நிலையற்று அலைவார்கள். ஆபிரகாமை நம்பின ஆகாரும் பெயர்செபா வனாந்திரத்தில் அலைந்து திரிந்தாள். ஆபிரகாம் கொடுத்த தண்ணீர் செலவழிந்துபோயிற்று. உலகம் தரும் தண்ணீர் நம்மை மீண்டும் தவிக்கவிடும்.

***"இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்."*** (யோவான் 4:13,14)

ஆபிரகாம் ஆகாருக்குக் கொடுத்த தண்ணீர் செலவழிந்ததுப் போல, உலகம் நமக்குத் தந்த சமாதானம் இல்லாமல் போய்விடும். செழிப்பான தோட்டத்தில் வாழும் இரட்சிப்பற்ற ஐசுவரியவானின் ஆத்துமா நம்பிக்கையற்ற வனாந்திரமாயிருக்கும். அவன் மனமோ சமாதானத்தைத் தேடி அலைந்துக் கொண்டேயிருக்கும். ஆகார் பெயர்செபா வனாந்திரத்தில் அலைந்துத் திரிந்தாள்.

தாகத்தினால் குழந்தை மடிந்துவிடுமோ என்று பயந்து சத்தமிட்டு அழுதாள். ஆபிரகாம் வீட்டில் இஸ்மவேல் ஈசாக்கைப் பரிகாசம்பண்ணி சிரித்தான். அதன் விளைவாக இப்பொழுது வனாந்திரத்தில் அழுதுக் கொண்டிருக்கிறான். இன்றும் கர்த்தரின் மகத்துவத்தை பரிகாசம் பண்ணுகிறவர்கள் வாழ்க்கையின்

வனாந்திரத்தில் அலைகிறார்கள். அவர்களுக்கு நிறைவான தானியக் கிடங்குகள் உண்டு. ஆனால், தூக்கமில்லாத இரவுகளாய் கழிந்துப்போகின்றன.

உலகம் தரும் தண்ணீர் செலழிந்துப்போனது. உலக மக்கள் ஜீவநதியை மறந்து வெடிப்புள்ளத் தொட்டிகளை தங்களுக்கு உண்டாக்கிக் கொண்டார்கள். தேவ சமுகம் இல்லாத ஆராதனை வெடிப்புள்ளத்தொட்டி. வேத வெளிச்சம் இல்லாதப் பிரசங்கமேடை வெடிப்புள்ளத்தொட்டி.

ஆகாருக்காக தேவன் ஒரு புதுத் துரவை உண்டு பண்ணவில்லை. இன்று மனிதன் புதிய ஊற்றுகளுக்காக அலைகிறான். தத்துவ ஊற்று, சீர்த்திருத்த ஊற்று, புரட்சி ஊற்று இப்படி எத்தனையோ ஊற்றுகளைத் தேடித்தேடி அலைகிறான். கர்த்தரோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வாரி ஊற்றை மனிதனுக்காகத் திறந்துவிட்டார். ஆனால் இந்த ஊற்று மனிதனின் அறிவுக் கண்களுக்குப் புலப்படவில்லை. இதனை அந்நிய ஊற்றென்றும், ஆழமான ஊற்றென்றும், நமக்கு வேண்டாத ஊற்றென்றும் மனிதன் தள்ளிவிடுகிறான்.

***"தேவன் அவளுடையக் கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர் துரவைக் கண்டாள்."*** (ஆதி. 21:19) கதறியழுத ஆகாருக்கு கர்த்தர் வழிகாட்டினார். இன்றும் பாவத்தின் கோரத்தினால் சிக்கித் தடுமாறி அலைந்துத் திரியும் மக்களுக்கு இயேசு ஒரு அற்புதமான வழி. தாகத்தினால் அலையும் ஆத்துமாவுக்கு இயேசு ஜீவத்தண்ணீர். ஆகாருக்கு ஒரு துரவைக் கொடுத்த தேவன், இயேசு கிறிஸ்துவின் புண்ணிய இரத்தமானத் துரவை நமக்குத் தந்திருக்கிறார்.

மேலும் துரவு என்பது கர்த்தருடைய வார்த்தையைக் குறிக்கும். மனித வார்த்தைகள் வற்றிப்போகும்போது "உன்னாலே என் வீடு கட்டப்படும்" என்று சாராள் ஆகாரிடம் சொன்ன வார்த்தைகள்

வற்றிப்போயின. நீயே என் வீட்டைக் கட்டுவாய் என்று சொன்ன நாவே, அவளை வீட்டை விட்டே துரத்தியது. மனித வார்த்தைகள் அர்த்தமற்றவைகள், நம்பமுடியாதவைகள்.

ஆபிரகாம் கொடுத்தத் துருத்தி ஆகாரைத் தவிக்கவிட்ட பொழுது கர்த்தர் காட்டின துரவு அவளை ஜீவன் தப்பவைத்தது. அதுபோல நம்பிக்கையற்ற வேளையிலும், ஆதரவற்ற நிலையிலும் நமக்கு ஜீவனும் பெலனுமாயிருப்பது கர்த்தரின் வார்த்தை. ***"பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன்"*** என்று தள்ளி உட்கார்ந்து காலத்தையெண்ணி அழுதுக்கொண்டிருந்த ஆகாரைத் தேற்றியது தேவனது வார்த்தை. 'பயப்படாதே' என்ற தேவ வார்த்தை அவளைத் தூக்கி நிறுத்தியது.

மரணம் நிகழ்ந்த வீட்டில் உற்றார், உறவினர் அழுபவரின் கண்ணீரைத் துடைத்து, "அழாதீர்கள், பயப்படாதீர்கள்" என்று சொல்லும் ஆறுதல் வார்த்தைகள், செலவழிந்துப்போகும் துருத்திகள். ***''இந்த வார்த்தைகளினால் ஒருவரையொருவர் தேற்றுங்கள்"*** என்று பவுல் சுட்டிக்காட்டுவது தேவ வார்த்தைகளின் துரவு. உலகம் என்னும் துருத்தியை நம்பாதீர்கள். கர்த்தரின் துரவாகிய கல்வாரியை நம்புங்கள்.

ஆவிக்குரிய நிலைமையில் வெற்றிமேல் வெற்றிப்பெற்ற ஆபிரகாமை, அபிமலேக்கு சந்தித்து அவன் தயவை நாடி நின்றான். தன்னோடு ஆபிரகாம் உடன்படிக்கைப் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினான். எத்தனையோ காரியங்களை அபிமெலேக்குக்கு விட்டுக்கொடுத்த ஆபிரகாம், அபிமெலேக்குக் கைப்பற்றின துரவைக்குறித்து மாத்திரம் மிக உறுதியாக இருந்தான்.

துரவு என்றால் தேவனது வார்த்தை. எத்தனையோ சிலாக்கியங்களை நாம் விட்டுக்கொடுக்கலாம். ஆராதனை ஸ்தலங்களையோ, ஊழியக் களங்களையோ நாம் விட்டுக் கொடுக்கலாம். ஆனால் உபதேசங்களையோ விட்டுக்கொடுக்கவே கூடாது.

ஆபிரகாம் அபிமெலேக்கோடு உடன்படிக்கைப் பண்ணவும் அதற்காக ஆணையிடவும் ஆயத்தமானான். அபிமெலேக்குக்காக சில சிலாக்கியங்களை ஆபிரகாம் விட்டுக்கொடுத்திருக்கலாம். ஆனால் தான் தோண்டின துரவைக் குறித்து மிக உறுதியாய் இருந்தான். இந்தத் துரவு தனக்கு சொந்தம் என்று இந்த உலகம் அறியும்படியாக ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளை தனியே நிறுத்தினான். துரவைக் குறித்து அவன் மிக உறுதியாய் இருக்கிறான் என்பதற்கு இந்த ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளே அடையாளம்.

சகோதரனே! ஆலயக் கட்டிடத்தை நமக்கு சொந்தமாக்க பத்திரப்பதிவு செய்கிறீர்கள். உபதேசத்தை பாதுகாக்க என்ன அக்கறையெடுத்தோம். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டே இருக்கின்றார்களே, விசுவாசித்த பின்புதான் ஞானஸ்நானம் என்ற உபதேசம் பறக்க விடப்படுகின்றதே. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய உபதேசங்கள் காலத்தினால் மறக்கப்பட்டு விட்டனவே. இப்படி துரவுக் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றதே. இதைக்குறித்து உங்களுக்குக் கவலையுண்டா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக (விசுவாச உபதேசங்களுக்காக) நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று யூதா எழுதியிருந்தானே? (யூதா-3) அது உங்கள் நினைவில் இருக்கின்றதா?

துரவு கிடைத்ததும் அங்கு நிரந்தரமாக தங்கலாம் என்று ஆபிரகாம் திட்டமிட்டான். சரியான உபதேசமும் வசனமும் கிடைக்குமிடத்தில் நீங்கள் நிரந்தரமாய்த் தங்கிவிடலாம். ஆபிரகாம் ஒரு வழிப்போக்கன் துரவுள்ள இடத்தில்தான் அவன் நீண்ட நாள் தங்குவான். ஆவிக்குரிய உலகத்தில் நீங்கள் தொடர்ந்து வழிப்போக்கனாய் இருக்கக்கூடாது. நல்ல வசனமும் உபதேசமும் கிடைக்குமிடமே உங்கள் துரவு.

ஆபிரகாம் பெயர்செபாவிலே மரம் நட்டான். வழிப்போக்கனாய் அவன் அலைந்துத் திரிந்த இடத்தில் அவன் மரம் நடவேயில்லை.

பெயர்செபாவில்தான் “ஏசல்” மரத்தை நட்டான். அதாவது அங்கு அவன் நீண்ட நாள் தங்கப்போகிறான் என்று அர்த்தம். அவ்விடத்தில் தான் நித்திய தேவனுடைய வெளிச்சத்தைப் பெற்றான்.

சகோதரனே! நீயும் அடிக்கடி சபையை மாற்றிக் கொண்டிராதே. ஆவிக்குரிய நல் உபதேசங்கள் கிடைக்கும் நல் உறவை விட்டுவிடாதே. அங்கேயே விசுவாச வாழ்க்கையென்னும் ‘ஏசல்’ மரத்தை நடு. சத்திய வெளிச்சத்திலே நித்திய தேவனைத் தொழு.

# உன் கண்ணைப் பிடுங்கிக் கொடு

(அதிகாரம் - 22)

சோதனையில்லா வாழ்க்கை மலிவு வாழ்க்கை. சோதனையைக் கடந்து கிறிஸ்துவுக்குள் வளரும் வாழ்க்கையே உன்னத வாழ்க்கை. சோதனையைக் கடவுள் உருவாக்க மாட்டார். மனிதனைச் சோதனையைச் சந்திக்கச் செய்கிறவர் கடவுள். உலகம் தரும் சோதனைகள், மனிதனிடம் உள்ள தீமையை வெளிப்படுத்தும். கடவுளின் சோதனைகளோ மனிதனில் மறைந்திருக்கும் நன்மைகளை வெளிப்படுத்தும்.

***"தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்."*** (ஆதி. 22:1) பாடுகள், வேதனைகள் இவையெல்லாவற்றையும் கடந்து, அமைதியாய் ஆபிரகாம் இளைப்பாறிக் கொண்டிருக்கும் பொழுது, ***"உன் புத்திரனும் உன் ஏக சுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனப்பலியாகப் பலியிடு"*** (ஆதி. 22:2) என்று திடீரென்று ஓர் பெரிய அம்பு அவன் இதயத்தை ஊடுருவியது. இப்படியொரு சோதனையை அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் வலது கண்ணையே பிடுங்குவது போலிருந்தது இந்தச் சோதனை.

சோதனைகள் கடவுளைப் பற்றிய புதிய வெளிப்பாடுகளைத் தரும். கடவுள் ஜீவனை எடுக்கிறவரல்ல என்று ஆபிரகாம் அறிந்துக் கொண்டான். சோதனைகள் திடீரென்று வந்துவிடும். நம்முடைய பலவீனமானப் பகுதியைச் சோதனைகள் தாக்கிவிடும். சோதனைகள் நம் விசுவாசத்திற்குப் பெரிய அறைகூவலாக அமைந்துவிடும். சோதனை நம்மைத் தேவசித்தத்திற்குக் கீழ்ப்படியவைக்கும்.

சோதனைகள் இயற்கையாக நம் ஆத்துமாவில் கிடக்கும் மாம்சீக சுபாவங்களைத் தூண்டிவிடக்கூடாது.

தன் எதிர்காலத்தை, தன் திட்டத்தை, நோக்கத்தை, எதிர்பார்ப்பை எல்லாவற்றையுமே ஈசாக்கின் மீதே ஆபிரகாம் வைத்திருந்தான். ஆனால் இப்பொழுது எல்லாமே இடிந்து நொறுங்குவது போல் ஓர் பெரிய சோதனை அவனைச் சந்திக்கிறது.

சில வருடங்கள் கழித்து உன் மகனைப் பலியிடு என்று கடவுள் சொல்லியிருந்தால் காலப்போக்கில் கடவுளுடைய மனம் மாறிவிடும் என்று ஆபிரகாம் எண்ணியிருப்பான் அல்லது ஜெபித்து கடவுளுடைய நோக்கத்தை மாற்றிவிடலாம் என்றும் நம்பியிருப்பான். ஆனால் கர்த்தரோ, "இப்பொழுது" என்று உத்தரவிட்டு விட்டார். பல சமயங்களில் கடவுள் நம்மிடம் உடனடியானக் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். பாவத்தைவிட்டு விடு என்று வேதம் வற்புறுத்தும்பொழுது நாளைக்கு விட்டுவிடுகிறேன் என்பது கீழ்ப்படியாமை.

ஆபிரகாமின் உள்ளத்தில் எந்த எதிர் சிந்தனையும் எழவில்லை. உடனே கீழ்ப்படிய ஆயத்தமுள்ளவனான். தன் அன்பு மனைவியிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. தன் மகனை பலி செலுத்திவிட்டு அவனை மீண்டும் உயிரோடு அழைத்து வரப் போகிறோமே என்ற நம்பிக்கையில் ஆபிரகாம் அமைதியாய் இருந்துவிட்டான்.

**"அதிகாலையில் ஆபிரகாம் எழுந்தான்."** (ஆதி. 22:3) அவன் இருதயம் கர்த்தர் இட்ட கட்டளையை முடிக்க மிகவும் ஆர்வம் கொண்டது. பகலின் நெருக்கமான பணிகள் கடவுளின் கட்டளைக்கு குறுக்கே வந்துவிடாதபடி அதிகாலையிலே ஆபிரகாம் புறப்பட்டான். ஆம்! அன்றைய தினத்தை தேவனுக்குக் கீழ்ப்படிவதிலேயே ஆபிரகாம் ஆரம்பித்தான்.

சகோதரனே, அதிகாலையில் கர்த்தரைத் தேடுகிறாயா? மற்ற நேரங்களில் அவர் காணப்படமாட்டார் என்று அல்ல. மற்ற நேரங்களில்

வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு மத்தியில் கர்த்தரின் வெளிப்பாடுகளை நீ புரிந்துக் கொள்ளமுடியாது. ஆகையால் காலையிலேயே அவரைத் தேடு.

யாருக்கும் பயந்து கொண்டு காலைப்பொழுதின் இருளில் தன்னை மறைத்துக்கொண்டு அவன் செல்லவில்லை. நரபலி இடுவது அப்பகுதி மக்களுக்கு வழக்கம். ஆகையால் ஆபிரகாம் காலை வேளை பயணத்தின் காரணத்தை அவர்கள் அறிந்தாலும் அதனால் ஆபிரகாமிற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஆகவே முழு தீர்மானத்தோடு ஆபிரகாம் புறப்பட்டு விட்டான்.

**"மூன்றாம் நாளில் ஆபிரகாம் தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான்."** (ஆதி. 22:4) கடந்த இரண்டு நாள்களின் பயணத்திலும் மூன்றாம் நாளிலும் அவன் மனம் மாறவே இல்லை. இரண்டாம் சிந்தனைக்கு இடம் கொடுக்காமல் கர்த்தரின் கட்டளையை நிறைவேற்ற ஆபிரகாம் முன்னேறிக் கொண்டிருந்தான். ஆம்! அவன் கண்ணைப் பிடுங்கிப்போட ஆயத்தமானான்.

சகோதரனே கர்த்தரின் கட்டளைக்கு நீ கீழ்ப்படிய ஆரம்பத்தில் எடுத்தத் தீர்மானத்தில் நீ உறுதியாய் இருக்கிறாயா? சத்தியமில்லாத இந்தக் கூட்டத்தைவிட்டு ஆவிக்குரிய சபையில் சேர வேண்டுமென்று நீ தீர்மானித்தாயே! உன் இரண்டாம் சிந்தனை உன்னை அங்கேயே நிறுத்திவிட்டதே! ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை இரண்டு நாட்களில் மாற்றி விட்டு மூன்றாம் நாளில் குழந்தை ஞானஸ்நானமே போதுமென்றிருந்துவிட்டாயே! கர்த்தருக்கு விரோதமான இரண்டாம் சிந்தனையை இஸ்மவேல் என்று எண்ணி புறம்பே தள்ளு.

***"ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி, நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய் தொழுதுகொண்டு உங்களிடத்துக்குத் திரும்பிவருவோம் என்றான்."*** (ஆதி. 22:6) திரும்பி வருவோம் என்று ஆபிரகாம் சொன்னது சம்பிரதாய சொல் அல்ல, வழக்கமான விடை பெறுதல்

அல்ல, 'வருவோம்' என்று சொன்னதினாலே நிச்சயமாய்த் தானும் தன் மகனும் திரும்பி வருவதை அவன் உறுதியாக நம்பினான். ஆபிரகாம் பேசும்பொழுது தன் வார்த்தைகளில் உண்மையுள்ளவனாய் இருந்தான்.

சகோதரனே உங்கள் வார்த்தைகளில் நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? ஒருவரைக் கண்டதும் Praise the Lord என்று சொல்லுகிறீர்களே, உண்மையில் அவரைக் கண்டதும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றீர்களா? அல்லது வழக்கமான காலை, மாலை வணக்கத்திற்குப் பதிலாக அதைச் சொல்லுகிறீர்களா? ஜெபத்துடன் முடிக்கிறேன் என்று கடிதம் எழுதுகிறீர்களே, ஜெபித்தீர்களா?

***"ஆபிரகாம், ஈசாக்கு இருவரும் கூடிப் போனார்கள்."*** (ஆதி. 22:6) இருவரும் மனமொத்து செல்லுகிறார்கள் என்று இதிலிருந்து அறிந்துக் கொள்ளுகிறோம். தன்னைத்தான் பலியிடப்போகிறார் தன் தகப்பன் என்று ஈசாக்குக்குத் தெரியாதுதான். பலிக்கு வேண்டிய நெருப்பும் கட்டையும் மாத்திரம் அவர்களிடம் இருந்தன. ஆனால் தகனபலிக்கான ஆடு இல்லை. என்றாலும் ஈசாக்கு அது குறித்து எந்தத் தர்க்கமும் செய்யாமல் தன் தகப்பன் எதையுமே சரியாய்ச் செய்வான் என்றே நம்பினான். ஆபிரகாம் தன் வீட்டில் நம்பிக்கைக்குரிய தகப்பனாக இருந்தது குடும்ப வாழ்க்கையில் ஓர் சாட்சி. அதனால் விசுவாசிகளின் தகப்பன் என்ற நிலைக்கு அவனால் உயர முடிந்தது.

***"தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?"*** என்று ஓர் கட்டத்தில் ஈசாக்கு ஆபிரகாமைக் கேட்டான். ஈசாக்கு தன் தகப்பன் மேல் ஏற்பட்ட சந்தேகத்தினால் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. இந்த இடம் வரும்வரையில் மலையில் ஆடுகள் மேயும் மேய்ச்சலிடங்கள் உண்டு. காலையிலேயே மேய்ப்பர்கள் ஆடுகளை மேய விட்டிருப்பார்கள். அவற்றில் ஓர் ஆட்டை வழியில் தன் தகப்பன் தெரிந்துக்கொள்வான். ஆகையால் வீட்டில் இருந்தோ மலையடிவாரத்திலிருந்தோ ஆட்டைச் சுமக்க வேண்டியதில்லை என்று ஈசாக்கு நினைத்திருப்பான்.

ஆனால் இப்பொழுது அவர்கள் இருவரும் வந்து சேர்ந்திருக்கிற இடத்திலிருந்து மலையுச்சிவரை ஆடுகளே கிடைப்பதில்லை. ஏனெனில் இங்கு மலை விலங்குகள் அதிகம். விலங்குகள் ஆடுகளை அடித்து பட்சித்துவிடும். ஆகையால் இங்கு ஆடுகள் மேய்வதில்லை. ஆடுகளே கிடைக்கக்கூடாத இடத்திற்கு வந்தவுடன் ஆட்டுக்குட்டி எங்கே என்று ஈசாக்குக் கேட்டது நியாயம்தான். தகப்பனுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவே இந்தக் கேள்வியை ஈசாக்குக் கேட்டான்.

***"அதற்கு ஆபிரகாம் என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்."*** (ஆதி. 22:8) இது ஒரு மழுப்பல் பதிலல்ல. எந்தவித வெளிப்பாடுமின்றி வழக்கச் சொல்லாக, "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என்று சொல்வது மனிதனின் வாடிக்கை. ஆபிரகாம் தன் மகனுக்கு வாடிக்கையான பதிலைச் சொல்லவில்லை. இந்தப் பலியைக் கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று ஆபிரகாம் நம்பினான்.

"உன்னைத்தான் பலியிடப் போகிறேன்" என்று ஆபிரகாம் ஈசாக்கிடம் ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி எழலாம். இப்படி சொல்லாமல் அவனைப் பலியிடச் செய்வது தந்திரமான செயலில்லையா? இதில் எந்தத் தந்திரமும் இல்லை. இந்தத் தகனபலி கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்த இரகசியக் கட்டளை. தேவன் குறித்த மலைக்கு வருகிற வரையிலும் ஆபிரகாம், அந்த இரகசியத்தைக் காத்துக்கொண்டான்.

கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று ஆபிரகாம் சொன்னதும், ஈசாக்கு எதிர் தர்க்கம் செய்யவில்லை. இனி ஆடுதான் கிடைக்காதே, கர்த்தர் எப்படிப் பார்த்துக் கொள்வார் என்றெல்லாம் ஈசாக்குக் கேட்கவில்லை. இதுகுறித்து கர்த்தர் தன் தகப்பனிடம் நிச்சயம் பேசியிருப்பார் என்று ஈசாக்கு நம்பினான். ஆகவே, ஆபிரகாமுடைய பதிலைக் கேட்ட பிறகும் ஈசாக்கு தகப்பனோடே நடந்தான். இருவரும் கூடிப்போனார்கள் என்றே வேதம் இப்பொழுதும் சொல்கிறது. (ஆதி 22:8)

தேவன் அவனுக்குச் சொல்லிய அந்த இடத்திற்கு ஆபிரகாம் வந்தான். இப்பொழுது அவன் இதயம் கலங்கியிருக்கும். நாம் சற்று கற்பனையாகப் பார்ப்போம். கண்ணீரோடு ஆபிரகாம் கற்களை அடுக்கி பலிபீடத்தை உண்டாக்குகிறான். பலிபீடத்தில் விறகுகளை அடுக்குகிறான். தன் ஒரே மகனுக்கு முத்தமிட்டு கண்ணீர் வழிய, "மகனே, உன்னைத்தான் கர்த்தருக்குப் பலியிடப் போகிறேன்" என்றான். கண்கலங்க ஈசாக்கு மௌனமாக நின்றான்.

அவனைக் கட்டி பலிபீடத்தின் மேல் கிடத்தினான். தன் மகனை வெட்டும்படி கையை நீட்டி கத்தியை எடுத்தான். கர்த்தரை நோக்கிப் பார்த்தான். பலியின் நேரத்தில் கர்த்தர் தன்னைத் தடுத்துவிடுவார் என்று அவன் நினைக்கவேயில்லை. அவனைப் பலியிட்டு, பலியின் மீது நெருப்பைப் பற்ற வைத்தவுடன் அது கொழுந்துவிட்டு எரியும். ஈசாக்கு சாம்பலாய்ப் போவான். அப்பொழுது பெருங்காற்று ஒன்று வீசுமெனில் அத்தனை சாம்பலும் காற்றோடு கலந்துவிடும். இனி ஈசாக்கு இல்லை. ஆனால், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற கர்த்தர் மீண்டும் ஈசாக்கை உயிரோடு கொண்டு வருவார் என்பதே ஆபிரகாமின் விசுவாசம்.

ஆனால் கர்த்தரோ, அந்தப் பலியையே தடுத்துவிட்டார். மனிதனைப் பலியிடுவதை கர்த்தர் ஒருபோதும் விரும்புகிறதில்லை. கீழ்ப்படிதலில் நாம் எப்படியிருக்க வேண்டுமென்று பாடம் கற்பிக்கவே கர்த்தர் இந்தச் சரித்திரத்தை மோரியா மலையில் உருவாக்கினார். கல்வாரியின் சிலுவை பலியே இச்சரித்திரத்தின் மறுபக்கமாயிற்று. ஆம்! மரணபரியந்தம் குமாரனாகிய இயேசு பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தாரே.

இந்த நிலையிலேயே ஆபிரகாம் தன் மகனோடு மலையைவிட்டு கீழே இறங்கியிருந்தால் ***"தொழுதுகொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்"*** (ஆதி 22:5) என்று தன் வேலைக்காரர்களிடம் ஆபிரகாம் சொன்னது அப்படியே நிறைவேறியிருக்காது. திரும்பி வந்தது உண்மையென்றாலும், பலி செலுத்தாமல் தானே ஆபிரகாம் திரும்பியிருப்பான்.

ஆனால் தன் கட்டளையை நிறைவேற்றினவனாகவே அவன் மலையிலிருந்து இறங்கி வர கர்த்தர் விரும்பினார். ஆகவே ஈசாக்கைப் பலியிட கர்த்தர் ஆபிரகாமைத் தடுத்ததும், ***"அவன் பின்னிட்டுத் திரும்பிப் பார்த்து, புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைக் கண்டான்."*** (ஆதி. 22:13)

ஆடுகளே கிடைக்கக்கூடாத இந்த மலை உச்சியில், வன விலங்குகளுக்குத் தப்பி இந்த ஆடு எப்படி இங்கே வந்தது? "கர்த்தர் பார்த்துக் கொள்வார்" என்று ஆபிரகாம் விசுவாச அறிக்கை செய்வதற்கு முன்பே, கர்த்தர் இந்த ஆட்டை முள் புதர்களில் சிக்க வைத்தார்.

சகோதரனே, கர்த்தரின் வழியில் நடந்தால், விசேஷ வெளிப்பாடு அவரிடத்திலிருந்து வராத சூழ்நிலையிலும், உன் விசுவாச அறிக்கையைக் கர்த்தர் கனம் பண்ணுவார். ஆவியானவரின் நடத்துதல்படி உங்கள் வாழ்க்கை அமைந்தால், உங்கள் வார்த்தைகளைப் பரலோகம் அங்கிகரிக்கும். ***"என் வாக்கின்படியே அன்றி மழை பெய்யாது"*** என்ற வார்த்தைகள் அப்படியே நிறைவேறக் காரணம் எலியா, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நின்றதே. (1இரா. 17:1)

கர்த்தரின் வார்த்தையின்படி உன் கண்ணைப் பிடுங்கிக் கொடுக்க நீ ஆயத்தமானால், விண்ணும் உன் வாசற்படியில் காத்திருக்கும் உன் உத்தரவை நிறைவேற்ற.

# மரணம் நம்மைப் பிரிக்கும் வரையிலும்

(அதிகாரம் - 23)

ஓர் வாலிபனிடம் இருபது வயதான ஒரு பெண் தன் பிறந்த நாளுக்கு ஒரு மலர்ச் செண்டு வாங்கி வரச் சொன்னாள். அந்த மலர்க் கொத்தில் அவளுடைய வயதைக் குறிக்கும்படி அத்தனை மலர்கள் இருக்க வேண்டும் என்றாள். அவள் சொன்னபடியே கடையில் ஆர்டர் கொடுத்தான். கடைக்காரன் தனது வாடிக்கையாளனான அந்த வாலிபனை சந்தோஷப்படுத்த அறுபது மலர்களை அந்த மலர்க்கொத்தில் வைத்தான். அதையறியாத அந்த வாலிபனும் அறுபது மலர்கள் கொண்ட பூங்கொத்தை அவளுக்குப் பரிசளித்தான். பூங்கொத்தை ஆவலாய் வாங்கிய அவள் மலர்களை எண்ணிப் பார்த்தவுடன், அதனைத் தூக்கி எறிந்துவிட்டு, "ஏண்டா, நான் அறுபது வயது பாட்டியா" என்று ஆத்திரமுடன் கேட்டாள். விபரம் புரியாமல் வாலிபன் விழித்தான்.

சாராளுக்கு நூற்றிருபத்தேழு வயது. இந்த வயதிலும் ஆபிரகாம் அவளை மிகவும் நேசித்தான். ஆனால் ஓர் நாள் மரணம் சாராளைத் தட்டிப் பறித்து சென்றுவிட்டது. ஆபிரகாம் சாராளுக்காகப் புலம்பி அழுதான். (ஆதி. 23:2) வருத்தம், அழுகை, புலம்பல் இவையெல்லாமே இயற்கையானது தான். விசுவாசியென்றால் இயற்கைக்கு மாறாக நடக்க வேண்டும் என்று நியதி இல்லை.

ஒரு போதகர் தன் மனைவியை இழந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு கூட்டத்திற்குச் சென்றார். அங்கு வந்திருந்த ஓர் விசுவாசி, "பாஸ்டர்...... எப்படி இருக்கிறீர்கள்.... சந்தோஷமாக இருக்கிறீர்களா?" என்றார். "இல்லை... அவள் போன பிறகு வீடே வெறுமையாயிருக்கிறது" என்று போதகர் சோகத்தில் பதில் சொன்னார்.

உடனே அவர், "பாஸ்டர் நீங்களா இப்படி பேசுகிறீர்கள். அப்படியானால் நீங்கள் சராசரி மனிதன்தான்'' என்றார். இப்படி விசித்திர எதிர்பார்ப்புடைய விசுவாசிகளும் உண்டு.

இயற்கையின் விபரீதங்களுக்கு அஞ்சுவதோ, மரணத்திற்கு வருந்துவதோ விசுவாசத்திற்கு எதிரிடையானவை அல்ல. லாசருவின் கல்லறை அருகே இயேசு அழவில்லையா? உலகத்தாரைப் போன்று நம்பிக்கையில்லாமல் துக்கித்து அழக்கூடாதே தவிர, பாசத்தால், பிரிவின் கொடுமையினால் அழுவது இயற்கையானதே.

ஆபிரகாம் தன் மனைவிக்காகப் புலம்பும்பொழுது அவனுடைய மனக்கண்கள் "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை நோக்கியிருந்தன." (எபி. 11:10) அந்த நகரத்தில் சாராளைக் காண்போம் என்ற நம்பிக்கையை அவன் இழந்துவிடவில்லை.

சாராள் எபிரோனில் மரித்தாள். எபிரோன் என்றால் ஐக்கியம் என்று அர்த்தம். அவள் கர்த்தரோடுள்ள ஐக்கியத்தில் மரித்தாள். பாக்கியவதி.

அப்னேர் மதிகேட்டில் மரித்தான். யூதாஸ் பாவத்தில் மரித்தான். இஸ்மவேல் துஷ்டனாய் மரித்தான். காயீன் கொலைகாரனாய் மரித்தான். சாராள் கர்த்தருக்குள் மரித்தாள். (எபிரோனில் மரித்ததினால் அல்ல).

நாம் எப்படி வாழ வேண்டும் என்று திட்டமிடுகிறோம். ஆனால் நாம் எப்படி மரிக்க வேண்டும் என்று திட்டமிடுகிறோமா? "நான் நீதிமான் மரிப்பதுபோல மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவு போல் இருப்பதாக" (எண். 23:10) என்று அறைகூவல் விட்ட பிலேயாம் துன்மார்க்கனாக மடிந்து விட்டான். நீதிமானைப் போல மரிக்க வேண்டும் என்ற வாஞ்சை மாத்திரம் போதாது. அப்படி மரிக்க அவன் நீதிமானாக வாழவேண்டுமே. ஆனால் பிலேயாம் நீதிமானாக வாழவில்லையே! பரிதாபமாக இருந்ததே அவன் முடிவு. சந்திர வழிபாட்டுக்குரிய சாராள் ஜீவனுள்ள தேவனுக்குள் மரித்தது எத்தனை பாக்கியம்?

அந்தத் தேசம் முழுவதும் ஆபிரகாமுக்குச் சொந்தம். ஆனாலும் தன்னை ஓர் அன்னியனாகவும், பரதேசியுமாகவே ஆபிரகாம் எண்ணினான். நாமும் இவ்வுலக சிலாக்கியங்கள், மேன்மைகள் இவற்றின் மத்தியில், நம்மை இந்த உலகிற்கு அன்னியராகவே எண்ணவேண்டும், ***"இங்கே பரதேசியாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்"*** (1 பேது. 1:17) என்று வேதம் சொல்கிறது.

அன்னிய நாட்டில் வாழும்பொழுது அந்த நாட்டை நாம் நேசிக்க வேண்டும், அந்த நாட்டின் நல் வாழ்விற்காக நாமும் பிரயாசப்பட வேண்டும். ஆனால் அந்த நாட்டின் உள் விவகாரங்களில் அரசியலில் நாம் சிக்கி விடக்கூடாது. ஏனெனில் அப்படி நாம் சிக்குண்டால் நமது சொந்த நாட்டிற்குத் திரும்ப முடியாதபடி தடை ஏற்படும்.

ஆவிக்குரிய மக்களாகிய நம்முடைய குடியிருப்பு பரலோகம். அங்கிருந்து ஓர் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். (பிலி. 3:20) ஆகவே நாம் பரலோகம் போக இந்தப் பூமியை அன்னியமாகவே நாம் எண்ண வேண்டும்.

***"இந்தப் பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம் பண்ணவேண்டும்"*** என்று ஆபிரகாம் ஆயத்தப்பட்டான். சாராள், ஆபிரகாமின் கண்ணுக்குப் பிரியமானவள் தான். ஆனால் அவள் பிணமானவுடன் அவளைத் தன் கண்முன் இராதபடி அடக்கம் பண்ணவே விரும்புகிறான். ஆவிக்குரிய நிலையிலும் நமக்கு இந்த அவசரம் வேண்டும்.

இரட்சிக்கப்படும்பொழுது, நாம் பாவத்திற்கு மரித்து விடுகிறோம். இந்த நிலையில் நாம் கிறிஸ்துவின் மரண சாயலில் இணைக்கப் பட்டவர்களாயிருக்கிறோம். இது போதாது. நாம் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட வேண்டும். கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பு அடக்கம் பண்ணப்பட்டது போல, நாமும் அடக்கம் பண்ணப்பட வேண்டும். எப்படி? ஞானஸ்நானத்திலே

கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட வேண்டும். (ரோமர் 6 : 5,4)

ஞானஸ்நானம் என்பது புறம்பான அடையாளம். ஆகவே ஸ்நானம் என்பதை எழுத்தின்படி எடுத்துக்கொண்டு மூழ்க வேண்டும் என்று சொல்லக்கூடாது என்றும் சிலர் சொல்கிறார்கள். திருவிருந்தில் முழு சாப்பாட்டையா சாப்பிடுகிறோம்? இல்லையே. அதுபோல் ஞானஸ்நானத்தில் மூழ்க வேண்டிய அளவுக்கு தண்ணீர் அவசியமில்லை. திருவிருந்தில் ஒரு துண்டு அப்பம் போதுமானதாய் இருப்பதுபோல ஞானஸ்நானத்திலும் ஒரு குவளைத் தண்ணீர் போதும், என்று தர்க்கம் செய்கின்றனர்.

திருவிருந்து என்பது நினைவு கூருதலின் ஆராதனை. இந்த ஆராதனையில் அப்பமும், ரசமும் அடையாளங்களாகக் கொடுக்கப்பட்டால் போதும். ஞானஸ்நானம் விசுவாச உடன்படிக்கை. இதை நிறைவேற்ற முழுக்கு ஸ்நானம் தேவை. பாவத்திற்கு மரித்த ஒருவன் உடனே ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டும். இதில் நாம் அவசரம் காட்ட வேண்டும். ஆபிரகாம் சாராளை அடக்கம் பண்ண அவசரப்பட்டது போலவே நாமும் ஞானஸ்நானத்திற்கு அவசரப்பட வேண்டும்.

ஆபிரகாம் கர்த்தரோடு சஞ்சரித்தபடியால் அவன் நல்ல சாட்சிப் பெற்றான். சாட்சியில்லாத லோத்துவை சோதோம் பட்டணத்தார், பரதேசியே என்றழைத்தனர். உலக வழிகளைப் பின்பற்றி ஒரு பிரபுவாக மாற லோத்து விரும்பினான். ஆனால் ஒரு பரதேசியைப்போல அவன் ஓட வேண்டியதாயிற்று. ஆபிரகாம் தேவனுடைய வழிகளிலே நடந்து மகாபிரபுவாக விளங்கினான். தேசம் முழுவதும் வாக்குத்தத்தத்தின்படி அவனுக்கு சொந்தமாயிருந்தும் ஒரு கல்லறை பூமியை விலைக்கு வாங்கினான். ஆரம்பத்தில் இந்தக் கல்லறை பூமி மாத்திரம் அவனுக்குச் சொந்தமாயிருந்தது. விரைவில் அந்தத் தேசம் முழுவதும் அந்தச் சந்ததிக்கு சொந்தமாயிற்று. நமக்கு இரட்சிப்பு இலவசமென்றாலும் சத்தியத்தை வாங்க வேண்டும்.

கொடுக்கல் வாங்கலில் கிறிஸ்தவன் உண்மையுள்ளவனாய் இருக்க வேண்டும். கல்லறை பூமியை ஆபிரகாம் இலவசமாகவோ, மலிவு விலையிலோ கேட்கவில்லை. மாறாக, அதன் பெறுமான விலைக்கே அதை வாங்க விரும்பினான். இன்று ஊழியக்காரன், கர்த்தரின் ஊழியத்திற்காக உலக மனிதனிடம் பொருளுக்காக கெஞ்சி நிற்கிற அவல நிலையைப் பார்க்கிறோம். "கிறிஸ்துவுக்காக இதைச் செய்கிறேன். தயவு செய்து விலையைக் குறைத்து கொடுங்கள்" என்று இந்து சகோதரனிடம் கிறிஸ்தவ சகோதரன் கேட்பது பரிதாபமாக இல்லையா? நிலத்தை இலவசமாகத் தர ஜனங்கள் முன்வந்தும் அதை இலவசமாகப் பெற்றுக்கொள்ள ஆபிரகாமுக்கு மனதில்லை.

நாமும் கடவுளுக்காகப் மலிவுப் பொருளைத் தேடி அலையக்கூடாது. நாம் விலை கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்தச் சுபாவம் ஆபிரகாமிற்குத் திடீரென்று வரவில்லை, அதில் அவன் பழக்கப்பட்டிருந்தான். சோதோமின் ராஜா கொடுத்த எந்தப் பொருளையும் வாங்க ஆதியிலேயே அவன் மறுத்துவிட்டான்.

பாபிலோனிய ராஜா தானியேலுக்கு இரத்தாம்பரமும் பொன் ஆபரணமும் வாக்களித்தார். தானியேலோ, ***"உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்"*** (தானி. 5:17) என்று பதிலுரைத்தான். இவர்கள் எல்லோரும் அந்நியரிடம் ஏதேனும் ஒன்றைப் பெற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். தேவனுடைய ஊழியத்திற்காக அஞ்ஞானிகளிடம் எதையும் இலவசமாகப் பெறக்கூடாது.

***"என் ஆண்டவனே! நான் சொல்லுகிறதைக் கேளும்; அந்த நிலம் நானூறு சேக்கல் நிறை வெள்ளி பெறும்; எனக்கும் உமக்கும் அது எவ்வளவு காரியம்; நீர் உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம் பண்ணும்"*** என்று எப்பெரோன் ஆபிரகாமுக்குச் சொன்னான். (ஆதி. 23 : 15) உலகம்

இலவசமாய்த் தரப் பிரயாசப் படலாம். ஆபிரகாமுக்கு நிலம் இலவசமாகவே மீண்டும் வருகிறது. ஆபிரகாமோ அதன் பெறுமான விலையைக் கொடுக்க உறுதியாயிருந்தான். அப்படியே கொடுத்துத் தீர்த்தான்.

சகோதரனே ! சகோதரியே !! கர்த்தரை வேண்டாம் என்று தள்ளுவோரிடம் ஆண்டவருக்காய் இலவசமாய் எதையும் பெறாதீர்கள். இதில் உறுதியாயிருங்கள். ஊழியக்காரர்களே! ஊழியத்திற்காக நீங்கள் வாங்கும் நிலம், பொருள் இவற்றின் விலையை அநியாயமாய்க் குறைக்காதீர்கள். ஆலயம் கட்ட அந்நியர்கள் இலவசமாய்த் தந்த நிலத்தை தாவீது இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளவில்லை. உலக மனிதரிடத்தில் உங்கள் சாட்சியைக் காத்துக் கொள்ளுங்கள்.

***"என் வார்த்தையைக் கேளும், நிலத்தை உமக்குத் தருகிறேன். குகையையும் உமக்குத் தருகிறேன். மற்றவர்களுடைய கண்களுக்கு முன்பாகத் தருகிறேன்."*** (ஆதி. 23 : 11) இப்படி அஞ்ஞானிகள் கர்த்தரின் பிள்ளைகளுக்குத் தருகிறேன், தருகிறேன், தருகிறேன் என்று வாக்களிக்கும் காரியங்களில் நாம் விழிப்போடு இருக்க வேண்டும். தருகிறேன் என்று பார்வோன் தந்ததின் நஷ்டத்தை ஆபிரகாம் மறக்கவில்லை. நீங்களும் மறந்து விடாதீர்கள்.

தன் சொந்த நிலத்தில் தன் மனைவி சாராளை அடக்கம் பண்ணினான். ஆபிரகாம் தன் மனைவியை இழந்தானே தவிர சாராளை இழக்கவில்லை. நித்திய நம்பிக்கையில் அவளை அடக்கம் பண்ணினான். கர்த்தரின் இராஜ்ஜியத்தில் தன் மனைவியைப் பார்ப்பேன் என்று மக்பேலா குகையை விட்டு நீங்கிப் போனான். மரணம் பிரிக்கின்ற வரையிலும் இருவரும் உண்மையாயிருந்தார்கள்.

# இதோ மணவாட்டி வருகிறாள் !

(அதிகாரம் - 24)

வயது செல்ல, செல்ல தகப்பன் தன் வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்துவான். அவற்றில் மிக முக்கியமான ஒன்று பிள்ளைகளின் திருமணம். அதிலும் பெண் பிள்ளைகளின் திருமணம் அவர்களது சரியான வயதில் நடக்கவேண்டும் என்பது.

நம் இந்தியக் கலாச்சாரத்தின்படி பெண்ணைப் பெற்றோர், மாப்பிள்ளையைத் தாங்களே தேடி அலைய மாட்டார்கள். இந்த சம்பிரதாய சங்கோஜம், பல பெண் பிள்ளைகளின் திருமணத்தை நிறுத்தி விட்டது. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கின் திருமணத்தைக் குறித்துக் கரிசனையுள்ளவனானான்.

***"நான் குடியிருக்கிற கானானியருடையக் குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்வேன் என்று, வானத்துக்கு தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர் பேரில் எனக்கு ஆனையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின் கீழ் வை என்றான்".*** (ஆதி. 24 : 3,4)

இந்தத் திருமணத்தில் முக்கியமான ஆபிரகாமின் வேலைக்காரன், பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக இருக்கிறான். திருமண வாழ்க்கையில் வாழ்க்கைத் துணைகளைத் தேர்ந்தெடுப்பதில் பிரதானமானப் பங்கு பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்தது. புறம்பான சிலாக்கியங்களான படிப்பு, அழகு, பணம்

இவற்றைக் கொண்டு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கக்கூடாது.

மாம்சீகமாகவே வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொண்டு திருமண அழைப்பிதழில் "இது கர்த்தரால் வந்தது" என்று வசனத்தைச் சொல்வது துணிகரமானது. ஆபிரகாமோ தன் மகன் ஈசாக்கின் திருமணத்திற்கு கர்த்தரையே முழுமையாய் நம்பியிருந்தான். தன் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படிக்கு தம்முடைய தூதனை தன் வேலைக்காரன் முன்பாக அனுப்புவார் என்று முழு நிச்சயமாய் நம்பியிருந்தான்.

***"பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு போனான். தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன; அவன் எழுந்து புறப்பட்டுப் போய், மெசொப்பொத்தோமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்தான்".*** (ஆதி. 24 :10)

இவன் கையில் எடுத்துக் கொண்டு போன பொக்கிஷங்களெல்லாம், ஆபிரகாமை உயர்த்திக் காட்டின. அதுபோல நம்முடைய பரம தகப்பன் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குத் தந்தருளியிருக்கும் நமது சுபாவங்கள், வரங்கள் ஆகிய கனிகள் நமது கர்த்தரை உயர்த்திக் காட்ட வேண்டும். ஒருவனுடைய வழிகள் உத்தமமாயிருந்தால் கர்த்தர் அவனுடைய நடைகளைக் காத்துக் கொள்வார். ஆபிரகாமின் வேலைக்காரர் பதான் அராமை நோக்கிச் செல்லும்போது ரெபெக்காள் துரவண்டை வந்து நின்றது தற்செயலாய் நடந்த செயலல்ல. கர்த்தரே ரெபெக்காளை அந்த வேளையில் அழைத்து வந்தார். ஆபிரகாமின் ஜெபம் ரெபெக்காளை இவ்வாறாக அங்கே கொண்டு வந்து நிறுத்தியது.

திருமண வயதில், திருமணத்திற்காக காத்திருந்த ரெபெக்காள் ஏற்ற சமயத்தில் ஆபிரகாமின் வேலைக்காரனுடையக் கண்களுக்கு வெளிப்பட்டது தேவனது மகத்தான செயல். பெண்கள் வீண்

அலுவல்காரிகளாய் வீடுகள் தோறும் செல்வதை வேதம் கண்டிக்கிறது. ரெபெக்காளோ நல்ல உழைப்பாளி, வீட்டுக் காரியங்களில் நல்ல ஒழுங்குள்ளவள். ஒட்டகத்துக்கு தண்ணீர் வார்ப்பது கடினமான செயல். ரெபெக்காளோ ஆபிரகாமுடைய ஒட்டகங்கள் பலவற்றிற்கு தண்ணீர் வார்க்க ஆயத்தமானாள்.

ஆகவே இந்தப் பெண்ணாகிய ரெபெக்காளே தன் எஜமானுடைய மகனாகிய ஈசாக்கிற்கு கர்த்தர் நியமிக்கிற பெண் என்று வேலைக்காரன் அறிந்துக் கொண்டான். நம் வாழ்க்கையில் பல சம்பவங்கள் தற்செயலாய் நடப்பதில்லை.

ஆபிரகாமுடைய ஜெபத்தின் பலனாக அவனுடைய மகனுக்கு ஒரு பெண்ணைக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினார். தேவன் ஆயத்தம் பண்ணின இந்தப் பெண் எல்லாத் தகுதியையும் பெற்றிருந்தாள். ***"ரெபெக்காள் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள். அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்."*** (ஆதி. 24:16)

**"கர்த்தர் ஒரு காரியத்தை நிர்ணயம் பண்ணினால் அது நமக்கு நிலை வரப்படும். அவருடைய பாதையில் வெளிச்சம் பிரகாசிக்கும்."** (யோபு 22:28) இப்படி பிரகாசித்த வெளிச்சமே ரெபெக்காள்.

சகோதரனே ! சகோதரியே ! உங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்போது ஆவியானவரை சார்ந்திருப்பீர்களா? அல்லது பணம், அழகு இவற்றையே குறிக்கோளாய் வைத்து வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பீர்களா?

படிப்பு வேண்டாம், பொருள் வேண்டாம், நகை வேண்டாம், பணம் வேண்டாம், இரட்சிப்பு மாத்திரம் இருந்தால் போதும் என்று நியாயமாய் பேசும் பெற்றோர்கள் தங்கள் பேச்சை முடிக்கும் முன் "ஒரு காரியம் மிக முக்கியம்" என்பார்கள். அது என்னவென்று கேட்டால், தன் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணை தன்

ஜாதிக்காரராய் இருக்க வேண்டும் என்பார்கள். இப்படிச் சொல்பவர்கள் தங்கள் ஜாதிப்பற்றுக்கு ஆபிரகாமையே துணைக்கு அழைப்பார்கள். ஆபிரகாம் என்ன இருந்தாலும் தன் இனத்தில் தானே பெண்கொண்டான் என்று வாதிடுவார்கள்.

தன் இனம் என்று ஆபிரகாம் சொல்லும்போது தன் மாம்சீகமான உறவை முன் நிறுத்தவில்லை. மாம்சீகமான உறவை அவன் பெரிதாக எண்ணியிருப்பானேயானால், ஆபிரகாமோ அவனது மகனோ பெண் பார்க்க அந்தத் தேசத்திற்கே திரும்பிப் போயிருப்பார்கள். தேவன் எதை விட்டு தங்களைப் பிரித்தாரோ, அதில் மீண்டும் ஐக்கியம் கொள்வது கூடாது என்பதில் ஆபிரகாம் வைராக்கியமாயிருந்தான்.

ஈசாக்கைத் திருமணம் செய்யப்போகும் பெண் தன் தேசத்தை விட்டு ஆபிரகாமின் அழைப்பிற்குள் வரவேண்டும். கல்தேய இனமென்று அவர்கள் இனி அழைக்கப்படக்கூடாது. ஆகவே இங்கு ஜாதிப் பிரச்சினைக்கே இடமில்லை. ஒருவர் தன் இனத்தவருக்குள்ளே வாழ்க்கைத் துணையைத் தேடுவது தவறல்ல. உணவுப் பழக்கம், வாழ்க்கை முறை இவற்றிற்காக தங்கள் இனத்தவரிடையேப் பெண் கொள்ளுவது தவறல்ல.

ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்ப்பேன் என்று சொல்லுகிறவளே தன் எஜமானுக்கு மருமகளாய் வர வேண்டுமென்று வேலைக்காரன் ஒரு வெளிப்படையான அடையாளத்தைத் தேடினான். தேவனது வழிகாட்டலை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி அவன் இப்படி ஒரு அடையாளத்தைத் தேடியது தவறல்ல. வேதத்தின் முழு வெளிச்சமும் தெரியாத நிலையில் அடையாளம் தேடியது குற்றமல்ல. ஆனால் அவன் அடையாளம் தேடியது நமக்கு முன்மாதிரியல்ல.

என் நண்பன் வீட்டிற்கு ஒரு ஊழியக்காரர் வந்தார். நண்பர் தன் மகனுக்குப் பெண் பார்க்க அடுத்த ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இதற்காக வந்திருந்த ஊழியக்காரரிடம் நண்பர் ஜெபிக்கச் சொன்னார். "அந்த வீட்டிற்குள் நுழையும்போது, எதிரே

நீல நிறப் புடவைக் கட்டிக் கொண்டு ஒரு பெண் வருவாள். அவளே நண்பருடைய மகனுக்கு வாழ்க்கைத் துணையாவாள்" என்று ஜெபத்திற்குப் பிறகு ஊழியக்காரர் சொன்னார். அந்த வீட்டிற்குள் என் நண்பர் நுழைந்தபொழுது ஊழியக்காரர் சொன்னபடியே ஒரு நீல நிறப் புடவைக் கட்டிக்கொண்டு ஒரு பெண் வந்தாள். ஆனால் அவளுக்கு வயது அறுபது!!

அவள் மகா ரூபவதியாய் இருந்ததினால் அவளை மணவாட்டியாகத் தெரிந்தெடுக்கவில்லை. அவள் ஓடி ஓடி உழைத்ததும் ஒட்டகங்களுக்கெல்லாம் தண்ணீர் வார்த்ததும் அவளுடைய அருமையான சுபாவங்களை வெளிப்படுத்தியது. இதுவே அவளை மணவாட்டியாகத் தெரிந்தெடுத்தது.

குடும்ப வாழ்க்கையிலும், மனைவிகளின் போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே கணவன்கள் ஆதாயப் படுத்தப்பட வேண்டும். எப்படியெனில் தலைமுடியைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பினால், கணவன்மார்களைப் பிரியப்படுத்தாமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள உள்ளான அலங்காரத்தினாலேயே கணவன்மார்களைப் பிரியப்படுத்த வேண்டுமென்று புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. இந்த விலையேறப் பெற்ற அலங்காரத்தை ரெபெக்காள் பெற்றிருந்தாள்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் பொன் நகைகளை ரெபெக்காவிற்குப் பரிசாகக் கொடுத்தான். தன் எஜமான் ஓர் ஐசுவரியவான் என்பதை அவன் ரெபெக்காளுக்குக் கொடுத்தப் பரிசுகள் விளங்கப் பண்ணின. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையும் கிறிஸ்து இயேசுவின் ஐசுவரியமாகிய பரிசுத்தம், மன்னிப்பு, இரக்கம், சாந்தம் இவற்றை விளங்கப் பண்ணவேண்டும்.

ஒட்டகங்களுக்கும் அந்த மனிதனுக்கும் ரெபெக்காள் தண்ணீர் வார்த்தது வீணாய்ப் போய்விடவில்லை. கர்த்தர் அதைத் தன்

கணக்கில் எடுத்து இப்பொழுது ரெபெக்காளை ஆசிர்வதித்தார். ***"அவர் நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதன் பலனை அந்தத் தண்ணீரைக் கொடுத்தவன் அடையாமற் போவதில்லை"*** என்பது சத்தியமல்லவா? (மத் 10 : 42)

நீ யாருடைய மகள் என்ற கேள்விக்கு தன் முகவரியை மட்டும் பதிலாக ரெபெக்காள் கொடுக்கவில்லை. தன் தகப்பன் வீட்டு சிறப்பையே பதிலாகக் கொடுத்தாள். அதாவது ***"நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்று சொன்னதுமன்றி எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டிய மட்டும் இருக்கின்றது. இராத்தங்க இடமும் உண்டு"*** (ஆதி. 24 : 24,25) என்று தன் தகப்பன் வீட்டு சிறப்பையும் அவள் விவரித்தாள். நம்மைக் கடவுளின் பிள்ளைகள் என்று சொல்லும்போது இந்த முகவரியினாலே யாரும் திருப்தியடைய மாட்டார்கள். நம்முடைய பிதாவின் சிறப்பினை நம்முடைய வாழ்க்கை விவரிக்க வேண்டும்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் உடனே தான் வந்த நோக்கத்தை அவர்களுக்கு அறிவிக்கவில்லை. தன் எஜமானின் மகனான ஈசாக்கைப் பற்றியும் அவன் ஒன்றும் அறிவிக்கவில்லை. ஆனால் பொதுவாகத் தன் பிரயாணத்தைப் பற்றியும் தன் எஜமானின் கர்த்தரையும் குறித்துப் பேசினான். ஆனால் உடனே ஈசாக்கைப் பற்றிப் பேசவில்லை. (ஆதி. 24:27,35-36)

மனதைப் பக்குவப் படுத்தியபின் நல்ல உறவை உண்டாக்கியபின், அவன் தன் நோக்கத்தை வெளிப்படுத்தினான். நாமும் மற்றவர்களுக்கு இரட்சிப்பை அறிவிக்கும்பொழுது உலக நடப்புகளைப் பேசி, நல் உறவுகளை உண்டாக்கியப் பின் உலகப் பிரச்சனைக்குத் தீர்வு உலக இரட்சகராகிய இயேசுவே என்று தொடங்க வேண்டும்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் தன் நோக்கத்தை விவரித்துச் சொன்னவுடன், ரெபெக்காளின் சகோதரன் லாபான், "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும்

சொல்லக்கூடாது" (ஆதி 24:50) என்று சொன்னான். இது லாபானின் வெளிப்பாடு அல்ல, தன் சகோதரி தரித்திருந்த காதணி, கடகங்கள் இவற்றைப் பார்த்து நல்ல வரன்தான் என்ற முடிவிற்கு வந்தான். ஆகையால் இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்று சொன்னான்.

இன்றும் எந்த வெளிப்பாடும் இல்லாமல் பஸ் ஸ்டாண்டில் நிச்சயிக்கப்பட்டு, திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண அழைப்பிதழில் "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" என்று கௌரவ வார்த்தைகளாக ஜொலிக்கின்றன. "ஆசிர்வதிக்கும் கர்த்தரே, உள்ளே வாரும். நீர் வெளியே நிற்பானேன்" என்று கர்த்தரை அழைத்தால் அவர் என்ன சொல்வார் தெரியுமா ? உனக்கும் எனக்கும் என்ன என்றுதான் சொல்வார்.

ஆவியானவரின் நடத்துதலின்படி ஈசாக்கிற்கு ரெபெக்காள் கிடைத்தது கர்த்தரால் வந்தது என்ற வார்த்தைக்குப் பொருத்தமானது. கிறிஸ்தவ குடும்பங்களின் திருமணங்கள் ஆவியானவரின் நடத்துதலின்படி நடந்திருந்தால் திருமணமே முறிந்துவிடும் அளவிற்கு பிரச்சனைகள் கடுமையாய் இருக்காது.

***"உமது எஜமானுடையக் குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக் கொண்டு போ என்றார்கள்."*** (ஆதி. 24:51) பெண் பார்க்கும்பொழுது மிகுந்த தெய்வ பயத்தோடும் மனித நேயத்தோடும் நடந்துக்கொள்ள வேண்டும். ஜவுளிக் கடையில் பட்டுப் புடவைத் தேர்ந்தெடுப்பதுபோல் செய்யக்கூடாது. வியாபார ரீதியான வார்த்தைகள் வாழ்க்கைத் துணையைத் தேடும் விஷயத்தில் இருக்கக்கூடாது.

ஓர் வீட்டில் ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயித்தப் பிறகு இன்னொருப் பெண் இவளைவிட பணக்காரி என்றோ, படித்தவள் என்றோ கண்டு அவளையும் போய்ப் பார்க்கக்கூடாது. ஒரு பெண்ணை நிச்சயித்தப்பிறகு அவள் மனைவியாகப் போகிறாள் என்பதில் உறுதியாயிருக்க வேண்டும். நிச்சயதார்த்தம் முடிந்தவுடன் ரெபெக்காளின் உறவினர் ஆபிரகாமின் ஊழியக்காரரைப் பார்த்து

"உமது எஜமானுடையக் குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக் கொண்டுப் போ என்றார்கள்." (ஆதி. 24:51)

ஓர் வாலிபன் ஓர் பெண்ணை மிகவும் நேசித்தான். அந்தப் பெண்ணிடம் அவன் ஓர் நாள் காலையில், "நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன் அதின் அர்த்தம் எனக்கு விளங்கவேயில்லை என்றான்." உடனே அந்தப் பெண் "நீ உன் கனவைச் சொல், நான் அர்த்தம் சொல்கிறேன்" என்றாள். வாலிபன் தன் கனவை விவரித்தான். "நான் உன்னுடையப் பெற்றோர்களிடம் உன்னைப் பெண் கேட்கப்போகிறேன். உன் வீட்டில் என்னை வரவேற்கிறார்கள்" என்று சொன்னாள். உடனே அந்தப் பெண் அவனுக்குச் சொன்னாள், "தூங்கும்போதுதான் உனக்கு மூளை வேலை செய்கிறது என்று. இதுதான் இந்தக் கனவின் அர்த்தம்." ஏனெனில் அவளை நேசித்தானே தவிர திருமணத்திற்கான எந்த முயற்சியையும் செய்யவில்லை.

***"ரெபெக்காளை அழைத்து, நீ இந்த மனிதனோடு கூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள், போகிறேன் என்றாள்."*** (ஆதி. 24:58) அந்த நாள் வரையிலும் அவளுடைய வீடுதான் அவளுக்கு உலகம். பெற்றோர்களைத் தவிர மற்றவர்களுடைய உறவை அறியாதவள். அவள் முன்பின் தெரியாத ஒரு மனிதனோடு தான் இதுவரைப் பார்த்திராத ஒரு மனிதனைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு நிரந்தரமாய் அவனோடுத் தங்கியிருக்கத் தீர்மானித்து "போகிறேன்" என்றாள்.

நாமும் இதுவரைத் தங்கியிருந்த இந்த உலகத்தை விட்டு நிரந்தரமாய் கர்த்தர் இயேசுவிற்கு மணவாட்டியாய் ஜீவிக்கப் போகிறோம். "போகிறாயா" என்று காலம் நம்மிடத்தில் கேட்கும்போது. போகிறேன் என்று மகிழ்ச்சியோடு சொல்கிறோமா?

## ஆபிரகாமிற்கு நமது இறுதி அஞ்சலி

(அதிகாரம் - 25)

ஆபிரகாம் ஈசாக்கைப் பெறுவதற்கு முன்பு ஒரு குழந்தையையும் பெற்றெடுக்க முடியாத சரீரம் செத்தவனாயிருந்தான். ***"அநேகம் ஜாதிகளுக்கு தகப்பனாவதை நம்புவதற்கு ஆபிரகாம் ஏதுவில்லாதிருந்தான்."*** (ரோம. 4:18) இப்படிப்பட்ட ஆபிரகாம் கேத்தூராளை மணந்து ஈசாக்குக்குப் பிறகு ஆறு பிள்ளைகளைப் பெற்றான். இந்த ஆறு பிள்ளைகளும் ஆறு தேசங்களாக உருவாயின. இவர்கள் இஸ்மவேல் சந்ததியாரோடு கலந்தார்கள். ஆகவே ஈசாக்குக்கு எதிரான சந்ததி வலுவாயிற்று.

வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கைப் பெற்ற பிறகு இஸ்மவேலைப் பெற்றது போலவே மேலும் ஆறு மாம்சீகமானப் பிள்ளைகளைப் பெற்றான். ஆகவே இப்பொழுது ஆபிரகாமிற்கு அடிமைத்தனத்தின் பிள்ளைகள் ஏழு. வாக்குத்தத்தத்தின் பிள்ளை ஒன்று. கடவுள் ஆபிரகாமிற்கு ஈவாகக் கொடுத்த சரீர பலத்தை ஆபிரகாம் தவறாகப் பயன்படுத்தினான். நல்ல ஆவிக்குரிய மனிதனாக ஆபிரகாம் மாறிய பிறகு அவனது பழைய சுபாவம் அவனில் கிரியை செய்ய ஆரம்பித்தது.

ஆபிரகாமுடைய சந்ததியில் ஈசாக்கு என்ற கோதுமையும், இஸ்மவேல் மற்றும் இந்த ஏழு மகன்களான களைகளும் வளர்ந்தன. பிற்காலத்தில் அரேபிய இனமாக இது வளர்ந்து பெருகினாலும் இது தேவ சித்தமல்ல. முறை தவறிய வாழ்க்கையில் பிறக்கும் குழந்தை கர்த்தருடைய சுதந்திரம்தான் என்றாலும் அந்த வாழ்க்கை தேவனுக்குச் சித்தமானது அல்ல. குழந்தைப் பிறந்ததினால் கர்த்தர்

அந்த வாழ்க்கை முறையை அங்கிகரிக்கிறார் என்று பொருள் அல்ல. நம்முடைய தாலந்துகளை, சக்திகளை, வரங்களை நாம் தவறாகப் பயன்படுத்திவிட முடியும்.

தவறு செய்தபோதிலும் சரியான நேரத்தில் ஆபிரகாம் எச்சரிப்பை அடைந்தான். ***"தனக்கு உண்டான யாவையும் ஆபிரகாம் ஈசாக்குக்குக் கொடுத்தான்."*** (ஆதி. 25:5) ஈசாக்கின் ஆவிக்குரிய சுதந்திரத்தை ஆபிரகாம் பெரிதும் மதித்தான். பெற்றோர்கள் தேவனுடைய நீதியின்படிதான் சொத்துக்களைப் பிள்ளைகளுக்குப் பங்கிடவேண்டுமே தவிர, தங்களுடைய மனவிருப்பத்தின்படியல்ல.

மாம்சீகமும் ஆவியும் ஒன்றாக இருக்கக்கூடாது என்பதில் ஆபிரகாம் உறுதியாயிருந்தான். இந்த ஆவிக்குரியப் பிரிக்கப்பட்ட வாழ்க்கையின் பாடங்களை ஆபிரகாம் மிகவும் அதிகம் கற்றிருந்தான். எகிப்திலிருந்து பிரிவு, வளமான நிலங்களிலிருந்து பிரிவு, இரத்த உறவான லோத்துவிடம் இருந்து பிரிவு, இஸ்மவேலிடம் இருந்து பிரிவு, கானானியரிடம் இருந்து பிரிவு இவையெல்லாம் ஆபிரகாம் கற்றக் கடினமான பாடங்கள்.

ஆகவே ***"ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து தான் உயிரோடிருக்கும்போதே அவர்களை தன் குமாரனாகிய ஈசாக்கை விட்டுக் கிழக்கே போகக் கீழ்தேசத்துக்கு அனுப்பி விட்டான்."*** (ஆதி. 25:6) இப்படி மாம்சீகத்தின் வழியையும் அதின் விளைவுகளையும் விட்டு ஆபிரகாம் முற்றிலும் பிரிந்தான்.

இப்படி வாழ்ந்த ஆபிரகாம் தன் வாழ்க்கையின் முடிவை நெருங்கி விட்டான். கண்ணீரின் பள்ளத்தாக்காகிய உலகத்தில் கர்த்தருக்காக வாழ்வதைவிட சந்தோஷ தேசமாகிய பரலோகத்தில் நித்தியமாய் கர்த்தரோடு வாழ்வது மேலானது. ஆபிரகாம் தன்னுடைய நூற்றெழுபத்தைந்தாம் வருஷம் மரித்து தன் ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான்.

நீண்ட வயது தேவனது வாக்குத்தத்தம். ***"உன் நாட்கள் நீடிப்பதற்கு உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக"*** (யாத். 20:12) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ***"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்... நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்குவேன்"*** (சங். 91:1,16) என்று வேதம் கூறுகிறது.

ஆகவே பிறந்த மனிதர்கள் எல்லாரும் நீண்ட வாழ்வு வாழ்வார்கள் என்று வேதம் சொல்லவில்லை. "பாதி வயதில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும்" என்று தாவீது ஜெபித்ததினால், பாதி வயதில் ஒருவரும் மரிக்க மாட்டார்கள் என்று பொருளல்ல. தாவீது எழுபது வயதிலேயே மரித்துவிட்டான். அது நீண்ட நாள்களல்ல.

மரிக்கும்போது ஒருவன் திருப்தியாய் மரிப்பானானால் அவனுடைய வாழ்க்கை தீர்க்காயுசுள்ளது. நித்தம் நித்தம் மரணக் கண்ணிகளோடு போராடி நூறு வயது வாழ்ந்து என்ன பயன்? அவன் அனுதினமும் செத்தானே என்றுதானே உலகம் சொல்லும். அதைவிட கிறிஸ்துவுக்குள் ஒரே தரம் மரித்து பின்பு நியாயத்தீர்ப்படைவது சரியல்லவா? ***"நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்"*** என்ற நம்பிக்கையில் நம் இமைக்கதவை மூடுவது பாக்கியமல்லவா! (சங். 17:15)

பரிசுத்த பவுல் ஜீவனாலாகிலும் சாவினாலாகிலும் கிறிஸ்து தன் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று நம்பியிருந்தார். கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜீவனும் சாவும் ஒன்றே என்று அவர் எண்ணியிருந்தார். வாழ்வது, மரிப்பது என்று இரு நோக்கங்களுக்கிடையே அவர் மிகவும் நெருக்கப்பட்டார். இவற்றில் எதைத் தெரிந்துக் கொள்வதென்று அவருக்குத் தெரியவில்லை. தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடு இருப்பது பவுலுக்கு அதிக நன்மை. சரீரத்தில் பவுல் தங்கியிருப்பது விசுவாசிகளுக்கு நன்மை.

ஆகவே வாழ்வதா, மரிப்பதா என்பதைப் பவுல் கர்த்தருடைய கரத்தில் விட்டுவிட்டான்.

மிகுந்த சமாதானத்தோடு, ஆத்ம திருப்தியோடு ஆபிரகாம் மரித்தான். மரித்தவுடன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான். (ஆதி. 25:8) தன் ஜனத்தாரோடு சேர்க்கப்பட்டான் என்பது தன் இன ஜனங்களை அடக்கம் பண்ணியிருந்த இடத்தில் அவன் சரீரம் சேர்க்கப்பட்டது என்று பொருளல்ல. சாராள் வைக்கப்பட்ட மக்பேலா குகையிலேயே வைக்கப்பட்டான் என்றும் பொருளல்ல. ஏற்கனவே நித்தியத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்ட ஆத்துமாக்களோடு அவனுடைய ஆத்துமாவும் சேர்ந்தது என்பதுதான் பொருள்.

மக்பேலா குகையருகே ஆபிரகாம் குடும்பத்தார் நிற்கிறார்கள். துரத்தி விடப்பட்ட இஸ்மவேலும், அணைத்து வளர்க்கப்பட்ட ஈசாக்கும் மக்பேலா குகையருகே நிற்கிறார்கள். கொழுந்துவிட்டு எரிந்த பகை நெருப்பு சற்றுநேரம் அணைந்திருந்தது. ஆபிரகாமின் தேசமாகிய அந்த வாக்குத்தத்த மண்ணிலே அரேபியரும் யூதரும் ஒருவரையொருவர் எதிர்த்து இரத்தம் சிந்துகின்றனர்.

மத்தியக் கிழக்குப் பாலைவனங்கள் போர்க்களங்களாக மாறிவருகின்றன. இடிந்து விழும் மாளிகைகள், எரிந்து சாம்பலாகும் வாகனங்கள், உடைத்தெறியப்படும் பாலங்கள், தெருக்களிலே கருகி சாகும் மக்கள் இப்படி நாள்தோறும் அவலங்களைக் காண்கிறோம். இதற்குக் காரணமான இரண்டு சந்ததிகளும் ஆபிரகாமின் மரண நேரத்தில் அமைதிக் காக்கின்றன. அப்படியாயின் கர்த்தர் இயேசுவின் நிழலில் நாம் எவ்வளவாய் அமைதிக் காக்க வேண்டும். விசுவாசிகளின் தகப்பன் மரித்தான். நம்பிக்கை அவனை அடக்கம் செய்தது. அன்பு கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.

# சாப்பிட்டதினால் தம்பியான அண்ணன்

(அதிகாரம் 25 : 23 - 34)

சாப்பிட்டதினால் தம்பியான அண்ணன் என்பது வேடிக்கையான தலைப்பு. உண்மையில் வேதனையான சீர்குலைப்பு. மனிதன் தெய்வ நோக்கத்தை அலட்சியம் பண்ணி, துணிகரமாய்ச் செய்யும் சில சம்பவங்கள் எவ்வளவாய்ப் பாதித்து விடுகிறது என்பதைப் பார்ப்போம்.

கடவுள் எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்கிறார். காலதாமதமெல்லாம் நமது எதிர்பார்ப்பைப் பொறுத்ததே. உண்மையில் காலதாமதமே இல்லை. காலம் நிறைவேறின பின்பு கர்த்தர் இயேசு கன்னியிடத்தில் பிறந்தார் என்பது தெய்வத்திட்டத்தின் பூரணமான நிறைவேறுதல். ஆதாம் பாவம் செய்தவுடன், பாவப்பலியாக ஸ்திரீயின் வித்து, உடனே தோன்றிவிடும் என்றும், காயீன்தான் அந்த வித்து என்றும் கருதப்பட்டதாக ஓர் கருத்தும் கிறிஸ்தவ உலகில் உண்டு. ஆதாமிற்குப் பிறகு சுமார் நாலாயிரம் ஆண்டுகள் கழித்துத்தான் இயேசு பிறந்தது காலதாமதம் அல்ல.

ஈசாக்கின் மனைவி மலடியாயிருந்தாள். இஸ்மவேலுக்கு குழந்தைகள் பிறந்து அவர்கள் வளர்ந்து கொண்டிருக்கும்பொழுது ஈசாக்குக்கு பிள்ளையே இல்லை. இனி குழந்தை பிறக்காது என்று ஈசாக்கு விரக்தியடையவில்லை. திருமணமாகி இருபது ஆண்டுகள் ரெபெக்காள் மலடியாயிருந்தும் ஈசாக்கு நம்பிக்கை இழக்கவில்லை. அந்தப் பிரச்சினையை தேவனது கரத்தில் கொடுத்தான். ***"மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்."*** (ஆதி. 25:21)

சகோதரனே, சகோதரியே வாழ்க்கையின் நெருக்கங்கள் எவ்வளவு கடுமையாயினும், வருடங்கள் பல ஓடி முடிந்தாலும் உன் ஆசீர்வாதத்தின் கதவுகள் மூடப்படவில்லை. இப்பொழுதும் உன் பிரச்சனையை தேவனது கரத்தில் கொடு. உன் வேலை வாய்ப்பு, உன் உத்தியோக உயர்வு, உன் திருமணம், உன் சரீர சுகம் இவற்றில் எது உன் பிரச்சனையாயிருந்தாலும் சரி, அதை நீ இப்பொழுதே தேவனுடைய கரத்தில் கொடுக்கலாம். தேவன் பதிலளிக்க வல்லவர்.

கர்த்தர் ஈசாக்கின் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். ஈசாக்கின் நம்பிக்கை வீண்போகவில்லை. கர்த்தரின் இரக்கத்தினாலே கர்ப்பவதியான ரெபெக்காள் பிரச்சனைக்குள்ளானாள். ***“அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன.”*** (ஆதி25:22) இருபது ஆண்டுகள் கழித்து அவள் கர்ப்பவதியானாள். நீண்டகால நிந்தை நீங்கியது. ஆனால் எதிர்பாராத பிரச்சனை தலைதூக்கியது.

சகோதரனே, சகோதரியே விடிவு என்று ஒன்று ஏற்பட்டுவிட்டது என்று நீ மகிழ்ந்து கொண்டிருக்கும்போது அந்த விடிவு உன் பிரச்சனைக்கு முடிவு என்றில்லாமல் போகலாம். அப்பொழுது நீ சோர்ந்து விடாதே. இப்பொழுதும் கர்த்தர் உனக்கு அடைக்கலமாகவே இருக்கிறார்.

எனக்கு எப்படியோ என்று சொல்லி கர்த்தரிடத்தில் விசாரிக்கப் போனாள். பிரச்சினைகளைச் சந்தித்ததும் “எனக்கு ஐயோ!” என்று சோர்ந்து உட்காரக்கூடாது. ரெபெக்காள் தன் கர்ப்பத்திலும் அசாதாரணமான ஒரு பிரச்சனையை சந்தித்த உடன் தேவசமுகத்தில் விசாரிக்கத் தொடங்கினாள். இது தன் உயிருக்கே ஆபத்து என்று எண்ணி அவள் கருக்கலைப்பு செய்திருப்பாளானால் தேவனது திட்டமே கருவில் கலைந்து போயிருக்கும். இருவகையான ஜாதிகள் அவள் மூலமாய் உலகத்தில் தோன்றும் என்பதைக் கர்த்தர் அவளுக்கு வெளிப்படுத்தினார்.

"அவர்களில் ஒரு ஜனத்தார் மற்றொரு ஜனத்தாரை விட பலத்திருப்பார்கள். மூத்தவன் இளையவனை சேவிப்பான்" (ஆதி. 25:23) என்றும் தேவன் தெரியப்படுத்தினார். ஓர் வாக்குத்தத்த சந்ததியையும் ஓர் முரட்டு சந்ததியையும் தேவன் ரெபெக்காளுடைய கர்ப்பத்தில் வளரவிட்டார். இப்படி தேவன் செய்யலாமா என்றவொரு கேள்வி எழும்புகிறது. முதலாவது நாம் தேவனைக் கேள்வி கேட்க உரிமையற்றவர்கள். மறைபொருளாயிருப்பவைகள் எல்லாம் கர்த்தருக்கு சொந்தம்.

***"யாக்கோபைச் சிநேகித்தேன், ஏசாவையோ வெறுத்தேன்"*** (மல். 1:2,3) என்று கர்த்தர் சொல்வதால் கர்த்தர் பட்சபாதம் உள்ளவர் அல்ல. ஏசாவின் நோக்கம், செயல் இவற்றை முன் அறிந்த தேவன், தன்னுடைய திட்டத்திற்கு யாக்கோபையே தெரிந்தெடுத்தார். "வெறுத்தார்" என்றால் வேண்டாம் என்று தள்ளினார் என்று பொருள் அல்ல. ஏசாவைவிட, யாக்கோபையே முதன்மைப்படுத்தினார். (Prefernce) இந்த உரிமை ஆண்டவருக்கு இல்லையா? தனி மனிதன் தன் ஈவுகளைக் கொடுப்பதில் தன் உரிமை, தன் பிரியம் என்று சொல்ல உரிமை எடுத்துக்கொள்ளும்பொழுது, ஆண்டவருக்கு மட்டும் அந்த உரிமை கிடையாதா? ***"நீரே இதைச் செய்தீர்"*** என்று மனிதன் தெய்வத்தின் முன் அமைதியாயிருக்க வேண்டுமென்பதே கடவுளின் எதிர்பார்ப்பு.

மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்பது தேவன் தன் ஞானத்தினால் கண்ட உண்மை. இதை ஈசாக்குக்கும், ரெபெக்காளுக்கும் கர்த்தர் முன்னறிவித்தார்.

யாக்கோபு, ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக் கொண்டு தன் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டான். குதிங்கால் எபிரேய மொழியில் (akob) எகோப் என்று சொல்லப்படும். இவன் பல காரியங்களைப் பற்றிக் கொள்வான் என்று பொருள். மாம்சீகத்தில் பற்றிக்கொண்ட யாக்கோபு, வளர வளர, ஆவியில் சுதந்தரிக்கத் தொடங்கினான்.

ஏசா முற்றிலும் மாம்சீகமானவனாகவே வளர்ந்தான். யாக்கோபோ குணசாலியும், கூடாரவாசியுமாக இருந்தான். (ஆதி. 25:27) யாக்கோபுக்கு நிலையான நகரம் இந்தப் பூமியில் இல்லை. கூடாரம், பலிபீடம் என்று பரலோக யாத்திரிகனாகவே அவன் இருந்தான்.

ஓர் நாள் யாக்கோபு சிவப்பான பாயாசத்தைச் செய்திருந்தான். உணவைக் கண்டதும், மிகுந்த ஆசைப்படும் ஏசா, தன் தம்பியிடம், "சிவப்பான கூழிலே நான் சாப்பிட கொஞ்சம் தா" என்று கேட்டான். உடனே யாக்கோபு அந்தக் கூழிற்கு விலைபேச ஆரம்பித்தான்! அண்ணன் என்ற முறையில் ஏசாவிற்குச் சொந்தமான சேஷ்ட புத்திர பாகத்தை தனக்கு விற்கும்படி யாக்கோபு கேட்கிறான்! அந்தப்பாகம் ஆவிக்குரிய மற்றும் உலகப் பிரகாரமாக இரட்டைத் தனையான ஆசீர்வாதமானது. இது யாக்கோபிற்கு ஏற்கனவே தேவன் வாக்களித்தது. இதனை உணராமல் தன் ஆசீர்வாதத்திற்கே அவன் விலை கூறுகிறான்.

"கூழைக் குடிப்பதினால், அண்ணனாகிய நான் தம்பியாகி விடுவேனா" என்று எள்ளி நகையாடி தன் சேஷ்டப் புத்திரப் பாகத்தை ஆணையிட்டுக் கொடுத்தான். கூழைக்குடித்து, பசியாற்றினான் ஏசா! ஆனால் மூத்தவன் என்ற சிலாக்கியத்தை இழந்து, தம்பி என்ற நிலையில், யாக்கோபுக்கு சேவை செய்ய வேண்டியதாயிற்று.

தேவனுக்கு வெளியே கிடைக்கும் சிறிய லாபம், ஆவிக்குரிய பெரிய நஷ்டத்தை உருவாக்கிவிடும். உலகம் தரும் சமாதானமென்கிற கூழுக்காக ஆவிக்குரிய ஆராதனை, ஜெபம், ஐக்கியம் இவற்றை விட்டு விடாதே! மாம்சீக இச்சையினால் ஏசா மூத்தவன் என்ற சிலாக்கியத்தை இழந்தான்.

# தேவன் காட்டும் இடத்தில் தங்கியிரு

(அதிகாரம் - 26)

ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிகழ்ச்சியுமே நமக்கு ஓர் பரீட்சையே. சந்தர்ப்பங்களில் நம் செயலாற்றும் தன்மை நம் ஆவிக்குரிய வாழ்க்கையை உருவாக்கும் அல்லது உருவழித்து விடும். ஈசாக்கு இப்பொழுது பஞ்சத்தைச் சந்திக்கிறான். (ஆதி. 26:1)

பஞ்சம் என்பது கடுமையானப் பிரச்சினை. ஈசாக்கின் அருகில் பஞ்சத்திற்கு - பிரச்சனைக்கு ஓர் தீர்வு இருந்தது. அதுதான் எகிப்தின் தானியக் களஞ்சியம். ஆனால் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி "நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்தில் குடியிரு" (ஆதி. 26: 2) என்றார்.

நம் அறிவு நல்வழியென்றும் பிரச்சனைக்குத் தீர்வு என்றும் எண்ணும்பொழுது, தேவன் அதற்கு மாறாகப் பேசும் சந்தர்ப்பங்களில், நாம் சோர்ந்து விடக்கூடாது. பஞ்சத்தின் கொடுமையை எகிப்தின் தானியக் களஞ்சியம் தீர்த்துவிடும் என்பது அறிவின் தீர்ப்பு. ஆனால் எகிப்துக்குப் போகாதே என்பது கர்த்தரின் கட்டளை. இப்பொழுதுதான் சராசரி மனிதன் தடுமாறிப்போய் விடுகிறான். அறிவுக்கு செவிசாய்த்து, ஆண்டவரின் கட்டளையை உதறிவிடுவான்.

சகோதரனே! உன் வாழ்க்கையின் கடுமையான சோதனைகளில் மாம்சீகமானத் தீர்வுகளை நாடாதே! கர்த்தர் என்ன சொல்கிறார் என்று தெளிவாய்க் கேள். இதோ கர்த்தரின் வார்த்தைகள் ***"எகிப்துக்குப் போகாமல் நான் உனக்குச் சொல்லும் தேசத்தில் குடியிரு. இந்தத் தேசத்திலே நீ வாசம்பண்ணு."*** (ஆதி. 26:3,4)

குடியிரு என்றால் சஞ்சரி என்று பொருள். (Sojourn) அதாவது கொஞ்ச நாள்கள் மாத்திரம் இந்த இடத்தில் இரு என்று பொருள். வாசம்பண்ணு என்றால் தங்கி இரு என்று பொருள். கேராரூரிலே அவன் தங்கியிருக்கும்பொழுது ஓர் பரதேசியைப் போல் தங்கியிருக்க வேண்டும். கேராரூர் அவனுடைய நிரந்தர வாசஸ்தலம் அல்ல.

ஈசாக்கு பஞ்சத்தைக் கண்டதும், பாதை தவறினான். கர்த்தரிடம் ஓடிப்போய் ஆலோசனைக் கேட்பதற்குப் பதிலாக பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் போனான். கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக, உலக ராஜாவை நம்பிப் போனான்.

பிரச்சனை ஏற்பட்டதும், கதவைத் திறந்து உற்றார், உறவினர் என்று அவர்களிடம் அடைக்கலம் தேடி ஓடாதீர்கள். கதவை அடைத்து, உள்ளே நின்று கர்த்தரிடம் பேசுங்கள். ஈசாக்கைத் தேடி கர்த்தரே வருகிறார். "கேராரூரை விட்டு எகிப்துக்குப் போகாதே! இங்கேயே தங்கியிரு ஆனாலும் இது உனக்கு நிரந்தர வாசஸ்தலமல்ல" என்றார்.

நம்முடைய நிரந்தர வாசஸ்தலம் பரலோகம். இந்த உலகம் நாம் சஞ்சரிக்குமிடமே என்றாலும் இந்த உலகில் நாம் கருத்தாய் ஜீவிக்க வேண்டும். இந்த உலகத்திலும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதே தேவசித்தம். ஆனால் உலக ஆசீர்வாதங்கள் பரம தரிசனத்தை மறைத்து விடக்கூடாது. ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் நாம் பரதேசியாய் ஜீவித்து நமது பரம தேசத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

பஞ்சத்திற்குப் பயந்து ஈசாக்கு எகிப்து தேசத்திற்குப் போகவில்லை. தன் தகப்பனார் ஆபிரகாம் செய்த தவறை ஈசாக்கு செய்யவில்லை. தேவன் சொன்ன கேராரூரிலே அவன் தங்கிவிட்டான். ஆகவே அவனைக் கர்த்தர் ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார்.

***"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவானாகி,***

*வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்.''* (ஆதி. 26 : 12,13) இப்படி ஈசாக்கு ஆசீர்வதிக்கப்பட்டதற்கு காரணம் தன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவர் காட்டிய இடத்தில் நிலைத்து நின்றதே.

ஊழியக்கார சகோதரனே, சகோதரியே சபையின் பிரச்சனையை எண்ணி ஊழியத்தை மாற்றாதே. ஊழிய ஸ்தலம் உன் மனோவாஞ்சையின் தெரிந்தெடுப்பல்ல. தேவன் உனக்குக் கொடுத்த ஊழிய ஸ்தலத்தின் தரிசனத்தை விட்டுவிடாதே. பிரச்சனையைக் கண்டு பயந்து அழைப்பை தூர எறிந்து, புதிய ஊழிய ஸ்தலத்தைத் தேடி ஓடாதே. கர்த்தர் தந்த இடமே பிரச்சினையாயிருப்பின் நீ தேர்ந்தெடுக்கும் இடம் பிரச்சினையில்லாமல் இருக்குமென்று என்ன உத்திரவாதம்? சபையின் பிரச்சனைக்கு பயந்து தேவன் காட்டாத ஒரு புதிய ஸ்தலத்திற்கு நீ செல்வாயானால் புதிய இடம் உன்னை ஊழியத்தை விட்டே துரத்திவிடும். ஆகவே கர்த்தர் சொல்லும் இடத்தில் தங்கியிரு.

**"ஈசாக்கு ஐசுவரியவனான பிறகு ஊர்க்காரர் அவன் மீது பொறாமை கொண்டனர். அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி, நீ எங்களை விட்டுப் போய்விடு. எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய் என்றான்."** (ஆதி. 26: 16) பிரச்சனையோடு இருக்கும்போது உலகம் சிநேகிக்கும், பரிதாபமும் படும். ஆனால் பிரச்சினையினின்று விடுதலையாகி ஒருவனுக்கு வாழ்வும் வளமும் உண்டானால் பரிதாபப்பட்ட அதே சமூகம் இப்பொழுது எரிச்சலோடு பார்க்கும். தாழ்மையில் இவ்விடத்தில் இரு என்று சொன்ன சமூகம் சற்று வாழ்வைக் கண்டவுடன் இவ்விடம் விட்டுப் போய்விடு என்று சொல்லும்.

சகோதரனே, சகோதரியே உன் ஆரம்ப ஊழியத்தில் அனேக நேசக் கரங்கள் உன்னை நோக்கி நீளும். பாசப்பிணைப்புகள் உண்டாகும். ஆனால் நீ விருத்தியடைந்து உன் ஊழியம் ஆசீர்வதிக்கப்பட்டு ஆலயக் கட்டிடம், வாகனம் என்று வசதிகள்

பெருகினால் நேசக்கரங்கள் விரோதக் கரங்களாய் மாறிவிடும். எங்கள் ஊருக்கு நீங்கள் போதகராய் வந்தது நல்லது என்று சொன்ன நாவுகள் இங்கிருந்து நீங்கள் போய்விடுவது நல்லது என்று சொல்லும். கலங்காதே, அழைத்தவர் உண்மையுள்ளவர். "இங்கேயே நீ தங்கியிரு" என்று சொன்ன அவர் வார்த்தையையே நீ கேள்.

"கேராரூரிலே நீ தங்கியிரு" என்று கர்த்தர் ஈசாக்குக்கு சொல்லியிருந்தாலும் கர்த்தர் அவனைக் கேராருக்கு அனுப்பவில்லை. தேவனைத் தேடாமல் ஈசாக்கு கேராரூரைத் தேடிப் போனான். கேராரூருக்குப் போனது தவறு. அவன் மேலும் தவறு செய்து எகிப்துக்குப் போகாதபடி ஈசாக்கைக் கர்த்தர் கேராரூரிலே நிறுத்தினார். ஆகவே ஈசாக்கு கேராரூரிலே நீடிப்பது கர்த்தருக்கு சித்தமல்ல. ஆனால் ஐசுவரியமும் வாழ்க்கையின் விருத்தியும் ஈசாக்கை கேராரூரிலே தங்க வைத்துவிட்டன. இங்கிருந்து ஈசாக்கை புறப்படச் செய்வதே தேவ நோக்கம், ஆகவே கர்த்தர் ஈசாக்கின் வாழ்க்கையில் பிரச்சனைகளை அனுமதித்தார்.

ஆபிரகாமின் துரவுகளை பெலிஸ்தியர்கள் தூர்த்து மண்ணினால் நிரப்பிப் போட்டார்கள். இது பொறாமையின் விளைவுதான். ஆனால் கேராரூரிலிருந்து பிடித்து இழுக்கும் தேவக் கரமுமாயிற்று. கடுமையான பிரச்சனைகளில் தேவ கரத்தைப் பார்க்கத் தவறிவிடாதே. புதிதாக வெட்டின துரவுகளையும் ஈசாக்கு இழக்க வேண்டியதாயிற்று. இந்த இழப்புகளெல்லாம் ஈசாக்கை தேவ சித்தத்திற்கு இழுக்கும் தேவனின் அன்பின் கயிறுகள்.

கடைசியாக ஈசாக்கு ஒரு துரவை உண்டு பண்ணினான். அதுகுறித்து எவரும் வாக்குவாதம் பண்ணவில்லை. முந்தைய துரவுகளைப் போல இப்பொழுது வாக்குவாதம் (ஏசேக்) எதிர்ப்பு (சித்னா) என்று எதுவுமே ஏற்படவில்லை. ஆகவே இது கர்த்தரின் சித்தம் என்று எண்ணி அந்தத் துரவிற்கு விசாலம் (ரெகொபோத்) என்று பேரிட்டான். கர்த்தரின் சித்தத்தில் தான் இருப்பதாக ஈசாக்கு எண்ணினான். அவன் தேவ சித்தப்படி இருக்க வேண்டிய இடம்

பெயர்செபா. கேராரூரின் பள்ளத்தாக்கிலே இருந்துகொண்டே பிரச்சனை இல்லாததினால் அவ்விடத்தை தேவசித்தம் என்று தவறாக எண்ணினான்.

எதிர்ப்புகள், போராட்டங்கள், பயமுறுத்தல்கள் ஆகிய இவை இல்லாததினாலே ஓரிடம் தேவசித்தமான இடமாக மாறிவிடாது. ரெகொபோத் என்று அந்த இடத்திற்குப் பேரிட்டது ஈசாக்கின் மனம். கர்த்தர் அதை ரெகொபோத் என்றழைக்கவில்லை. ஏனெனில் அங்கிருந்து அவன் பெயர்செபாவிற்குப் போகவேண்டியது அவசியமாயிற்று. பெயர்செபா தேவ சித்தம். கேராரூர் தேவசித்தத்திற்கு சமீபமான இடம். தேவ சித்தத்தில் இருப்பதற்குப் பதிலாக ஈசாக்கு தேவ சித்தத்திற்கு சமீபமான இடத்திலிருந்தான். இப்படி அவன் இருப்பது தேவனுக்குப் பிரியமானதல்ல.

சபைக் கட்டடத்திற்குள் நீ இருந்தால் இரட்சிப்பின் சீதோஷ்ண நிலைக்கு சமீபமாய் இருக்கிறாய், ஆனால் இரட்சிப்பில் இல்லை. வேதத்தை வாசித்து நீ கீழ்ப்படியாமலிருந்தால் வேத எழுத்துக்களுக்கு சமீபமாயிருக்கிறாய். சத்தியத்திற்கு தூரமாயிருக்கிறாய், இந்த சமீபமான இடத்திலேயே நீ தொடர்ந்து இருக்கக்கூடாது என்று கர்த்தர் உன்னைத் தொந்தரவு செய்கிறார். இதனை நீ புரிந்துக்கொள்கிறாயா?

ஈசாக்கு கர்த்தரின் நடத்துதலைப் புரிந்துக்கொண்டான். அங்கேயிருந்து பெயர்செபாவுக்குப் போனான். ***"அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன். பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்றார்."*** (ஆதி. 26:24)

எகிப்துக்குப் போகாததினால் ஈசாக்கை கேராரூரிலே நூறு மடங்கு ஆசீர்வதித்த கர்த்தர் இப்பொழுது தேவசித்தப்படி பெயெர்செபாவிலே தங்கியிருந்தபடியால் ஈசாக்கை மிகவும்

ஆசிர்வதிக்க சித்தங்கொண்டார். ஈசாக்கை கர்த்தர் ஆசிர்வதித்ததைக் கேள்விப்பட்ட அபிமெலேக் ஈசாக்கை சந்தித்து "கர்த்தர் நிச்சயமாய் உம்மோடே இருக்கிறார்" என்று அறிவித்து ஈசாக்கோடு சமாதானம் பண்ணிக்கொண்டான். ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே ஒப்புரவாவார்கள் என்ற சத்தியம் அவன் வாழ்க்கையில் நிறைவேறிற்று.

இந்த ஆசிர்வாதத்தின் விளைவு என்ன? கர்த்தருடைய கரத்தினால் ஒருவனுக்கு தோட்டமும் துரவும், காடும் கழனியும், ஆடு மாடுகளும் பெருகியிருப்பதினால் கர்த்தருக்கு என்ன லாபம்? ஆசிர்வாதத்தைப் பெற்ற ஈசாக்கு பெயர்செபாவிலே பலிபீடத்தைக் கட்டினான். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான். பலிபீடத்தருகே தான் வாழ்வதற்கு கூடாரத்தைப் போட்டான். கூடாரமும் பலிபீடமும் இணைந்திருந்தன.

சாலொமோனுடைய அரண்மனையிலிருந்து ஆலயம் செல்ல ஒரு நடை மண்டபம் இருந்தது. ஈசாக்கின் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நேரடிப் பாதை உண்டு. உனக்கும் உன் ஆலயத்திற்குமுள்ள பாதை சரியாக இருக்கிறதா? இந்தப் பாதையில் நீ போக்கும் வரத்துமாயிருக்கிறாயா? உன் வீட்டிற்கும் சபைக்கும் உள்ள பிணைப்பு பலமாயிருக்கிறதா? அப்படியாயின் நீ கர்த்தரால் ஆசிர்வதிக்கப்பட்டவன்.

# தடுமாறும் தகப்பனும் தவறிப்போகும் தாயும்

(அதிகாரம் - 27)

கடவுளின் சித்தம் என்னவென்று ஈசாக்குக்கும், அவன் மனைவி ரெபெக்காளுக்கும் நன்றாகவே தெரியும். யாக்கோபை ஆசீர்வதிப்பதே கடவுளின் சித்தம் என்று தெரிந்தாலும், ஈசாக்கு தன் மாம்சீக ஆசையில் ஏசாவையே ஆசீர்வதிக்க விரும்புகிறான். கர்த்தரே தன் மகன் யாக்கோபை ஆசீர்வதிக்கப் போகிறாரே என்று அமைதியாயிருக்க வேண்டிய ரெபெக்காள் தன் பங்கிற்கு மாம்சீகமான வழியில் செயல்பட்டாள்.

ஒருவனை ஆசீர்வதிப்பது ஆவிக்குரிய செயல். இதனைச் செய்வதற்கு உபவாசமும், ஜெபமுமே உதவியாயிருக்கும். புசிப்பும் குடிப்பும் இதற்கு எந்த விதத்திலும் உதவியாயிருக்க முடியாது. தன் மகனை ஆசீர்வதிக்க ஈசாக்கு அவனிடம் விருந்தொன்றினைக் கேட்டது, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முரண்பாடானது. அதிலும் தன் மரண நாள் நெருங்குகிறது என்று இந்த விருந்தை அவன் கேட்டது பரிதாபமே! மரணத்திற்கு ஆயத்தப்படாமல் விருந்திற்கு ஆயத்தப்படுவது வயதான தகப்பனுக்கு அழகல்ல.

தன் மகன் கையினாலே சாப்பிட வேண்டும் என்பதைவிட தனக்குப் பிடித்தமானதை சாப்பிட வேண்டும் என்பதிலே அதிக அக்கறையுள்ளவனாய் இருந்தான். ***"வனத்துக்குப் போய் எனக்காக வேட்டையாடி, எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ளப் பதார்த்தங்களாக சமைத்து, நான் புசிக்கவும் நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டு வா என்றான்."*** (ஆதி. 27:4)

தன் மனைவியாகிய ரெபெக்காளுக்குத் தெரியாமலேயே இந்த விருந்தை ஆயத்தப்படுத்தச் சொல்லுகிறான். குடும்பம் முழுவதற்கும் ஆயத்தப்படுத்தச் சொல்லாமல் தனக்கு மட்டும் ஆயத்தப்படுத்தச் சொல்லுகிறான். சுயநலம் நிரம்பிய அவன் ஆத்துமா ஏசாவை ஆசீர்வதிக்க விரும்புகிறது. கர்த்தரை விட்டு விலகி மனைவியைத் தேடிக்கொள்ளும் ஏசாவிற்கு, தாய்க்கும் தம்பிக்கும் தெரியாமல் ஆசீர்வாதத்தைப் பெறுவது ஒரு பிரச்சனையே இல்லை. ஏசா வனத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

ரெபெக்காளின் உள்ளம் தந்திரம் செய்தது. யாக்கோபிடம் தொழுவத்திலிருந்த இரண்டு வெள்ளாடுகளைப் பிடித்து வரச் சொன்னாள். அவற்றை அவனுடைய தகப்பனுக்குப் பிரியமான பதார்த்தங்களாக சமைப்பதாகவும் அதை யாக்கோபு தன் தகப்பனிடத்துக்கு எடுத்துக் கொண்டு போகும்படியும் ரெபெக்காள் சொன்னாள். (ஆதி 27 : 9,10) தன் தாயின் செயல் ஒரு பாவமென்று யாக்கோபு கண்டிக்கவில்லை.

***"நான் அவருக்கு எத்தனாய் காணப்படுவேனே"*** என்று பாவத்தின் விளைவிற்குத்தான் அவன் பயந்தான். அவன் தன் தகப்பனை ஏமாற்றுவதற்குப் பயப்படவில்லை. தன் ஏமாற்று கண்டுபிடிக்கப்பட்டுவிடுமே என்று பயந்தான். தன் மகன் எத்தனாய் போய் விடுவானே என்று யாக்கோபின் வார்த்தைகளினால் உணர்த்தப்பட்ட ரெபெக்காள் தன் வஞ்சகத் திட்டத்தை உடனே நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவளோ பாவத்தை மூடுவதற்கு வழி சொல்லிக் கொடுத்தாள்.

ஏசாவின் வஸ்திரத்தை யாக்கோபு அணிந்து கொள்ளவும் வெள்ளாட்டின் தோலை அவன் கைகளிலும் கழுத்திலும் போடவும் ரெபெக்காள் யோசனை சொன்னாள். ஆள் மாறாட்டம் என்ற வஞ்சகத்திற்கு ரெபெக்காளே காரணம். இதனால் தன் குடும்பத்தில் கடும் பிரச்சனைகளை உருவாக்கினாள்.

தாய்மார்களே, உங்கள் குடும்ப விவகாரங்களில் எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் பாரபட்சமான செயல்கள், ஆத்திரமான வார்த்தைகள் சரி செய்யப்பட முடியாத அளவிற்கு பிரச்சனைகளை உருவாக்கிவிடும். ஆகவே கர்த்தருடைய வழியை விட்டு விட்டு சுய வழியில் சாய்ந்துவிடாதீர்கள். பாசத்தினால் தேவசித்தத்திற்கு மாறாக நடந்த தாய்மார்களினால் குடும்பங்கள் நரகங்களாகின்றன. கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக் கொடுக்க வேண்டிய தாய் பொய் சொல்ல கற்றுக்கொடுக்கிறாள்.

குணசாலி என்றழைக்கப்பட்ட யாக்கோபு முற்றிலும் தந்திரவாதியாகிப் போனான். நீ யார் என்று தகப்பன் கேட்டவுடன் "நான் உமது மூத்த குமாரனாகிய ஏசா" என்று ஆள் மாறாட்டம் செய்தான். தன் தாய் சொன்னபடி வஞ்சகமாய் நடந்த பின், "நீர் எனக்கு சொன்னபடி செய்தேன்" என்று தன் தகப்பனிடத்தில் பொய் சொன்னான். தொழுவத்தில் வெள்ளாடுகளைப் பிடித்து விட்டு, தன் தகப்பனிடத்தில் வனத்தில் வேட்டையாடிப் பிடித்த மான்கள் என்று பொய் சொன்னான். தன் தந்திரத்தால் பிடித்ததை கர்த்தர் வாய்க்கப் பண்ணினார் என்று கடவுள் மேல் பாரத்தைப் போட்டு கடைசி பொய்யைச் சொன்னான். இப்படி தன் தகப்பனை யாக்கோபு ஏமாற்றினான்.

ஐயோ! பாவம் ஈசாக்கு. பார்வையிழந்த அவனை யாக்கோபு ஏமாற்றிவிட்டானே என்று பரிதாபப்படுகிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். நடைபெறும் சம்பவத்தைக் கவனியுங்கள். தன் முன்னால் நிற்பது யாரென்று ஈசாக்குக்குத் தெரியவேயில்லை. அவன் தடவிப் பார்த்து ஏசா என்று எண்ணினான். தொடு உணர்ச்சி தோற்றுப் போய்விட்டது. யாக்கோபு ஈசாக்கை முத்தஞ் செய்தான், அது ஏசாவின் வாசனைப் போலிருந்தது. மோப்ப உணர்வும் தோற்றது. இப்படி கண், மூக்கு, கைகள் எல்லாமே தன் உணர்வுகளில் தோற்றுப் போகும்போது ஈசாக்கு என்னதான் செய்ய முடியும்? ஏமாந்து போவதைத் தவிர வேறு வழியே இல்லை.

சகோதரனே, சகோதரியே பல வகைகளிலும் வஞ்சிக்கப்பட்ட நீங்கள் சூழ்நிலைகளையே குற்றப்படுத்துகிறீர்களா? இந்தப் பாவத்தை செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்று வாதிடுகிறீர்களா? அதற்கு ஈசாக்கின் நிலையையே உதாரணமாக எடுத்துக் கொள்கிறீர்களா? இன்னும் கொஞ்சம் பொறுங்கள்.

"சத்தம் யாக்கோபின் சத்தம்" என்று அவன் காதுகள் தெளிவாய் உணர்த்தின. எல்லா உணர்வுகளும் மங்கிப் போனாலும் அவன் செவி உணர்வு மங்கிப் போகவில்லை. சூழ்நிலைகளில் கர்த்தரின் வழி நடத்துதல்தான் என்று நீ அறிந்துகொள்ள முடியாத பல நிலைகள் உனக்கு ஏற்படலாம். ஆனால் நீ கேட்ட தேவனுடைய வார்த்தை மங்கிப் போகாது. கர்த்தரின் சத்தம் உன் காதில் தொனித்துக் கொண்டேதான் இருக்கும். யாக்கோபின் சத்தத்தைக் கேட்ட பிறகும் அவனை ஏசா என்று ஈசாக்கு எண்ணியது அவனுடைய தவறு.

குறுக்கு வழியில் அசீர்வாதத்தைப் பெற்ற யாக்கோபு வீட்டை விட்டு, நாட்டை விட்டே ஓட வேண்டியதாயிற்று. குறுக்கு வழியைக் கற்றுக் கொடுத்தத் தன் தாயை அவன் திரும்பப் பார்க்கவே இல்லை. "நான் ஆளனுப்பி உன்னைத் திரும்ப அழைப்பேன்" என்று சொன்ன ரெபெக்காள் ஆள் அனுப்பவுமில்லை. அவனைத் திரும்ப அழைக்கவுமில்லை. குறுக்கு வழியின் பலன் இதுதான்.

தடுமாறிய ஈசாக்கு, தவறிப்போன தாய் ரெபெக்காள் இவர்களால் பரிசுத்தவான்களுடைய வீடு பரிதாபக் கூடாரமாயிற்று.

# நள்ளிரவு ஓர் நல்லிரவு

(அதிகாரம் - 28)

கொஞ்ச நாள்கள் மட்டுமே யாக்கோபு தன் பெற்றோர்களை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமென்பது ஈசாக்கின், ரெபெக்காளின் யோசனை. ஆனால் கர்த்தர் யாக்கோபை இருபது ஆண்டுகள் பிரித்து வைத்துவிட்டார். நமது எண்ணங்களின்படியெல்லாம் கடவுள் செயற்பட மாட்டார். நம்முடைய உடனடியான வருங்காலத்தைப் பற்றி கடவுள் வெளிப்படுத்த மாட்டார். ஆனால் நமது நித்தியமான எதிர்காலத்தைப் பற்றி உறுதியாகவே நிறைய சொல்லியிருக்கிறார். ஆகவே நமது கர்த்தரை நம்பி எதிர் காலத்தை நோக்கிப் பயணிப்பதே விசுவாச வாழ்க்கை. இயேசு கிறிஸ்துவும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் தான் சிலுவையைச் சகித்தார்.

யாக்கோபு பெயர்செபாவை விட்டு, ஆரானுக்குப் புறப்பட்டபின் அவனைக் குறித்து கர்த்தருக்கு ஓர் நோக்கமுண்டு. ஈசாக்கின் பாரபட்சமோ, ஏசாவின் பகையோ, ரெபெக்காளின் குறுக்கு வழியோ கடவுளின் திட்டத்தை மாற்றியமைக்கவே முடியாது. கடவுள் யாக்கோபிற்காக வைத்திருக்கும் தேவதிட்டத்தை ஒருவராலும் மாற்றவோ, திருத்தவோ முடியாது. இந்த நம்பிக்கை, இந்துக்களின் நம்பிக்கையான தலைவிதி அல்ல, தலைவிதிக் கொள்கை மனிதனை அடிமையாக்குகிறது. நாமோ கிறிஸ்துவுக்குள் சுதந்திரப் பறவைகள்.

நம் வாழ்க்கையில் சில இடங்களைக் கர்த்தர் தெரிந்தெடுக்கிறார். ஒரு இடத்தில் வந்து சூரியன் அஸ்தமித்த படியினால் அங்கே அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து தன் தலையின் கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்

கொண்டான். (ஆதி. 28 : 11) இந்த இடம் ஆபிரகாம் ஏற்கெனவே பலிபீடம் கட்டின இடம். லூஸ் பட்டணம் பக்கத்திலிருந்தாலும் இந்த மலைப் பிரதேசத்தில்தான் ஆபிரகாம் தங்கினான். ஜன சந்தடிகளுக்கு அப்பால் அமைதியான இடத்தில் ஆபிரகாம் பலிபீடம் கட்டி தேவனைத் தேடினான். அதே இடத்திற்கு இப்போது யாக்கோபு வந்து சேர்ந்தான்.

இதே இடத்தின் வழியாய் ஈசாக்கிற்குப் பெண்பார்க்க ஒட்டகங்களோடு ஆரவாரமாய் ஆபிரகாமின் வேலைக்காரன் பல வருடங்களுக்கு முன்பு சென்றிருந்தான். ஆனால் இன்று தனி மனிதனாக இதயத்தில் பாரத்தோடு, யாக்கோபு அங்கு வந்து சேர்ந்தான். சூரியன் அஸ்தமித்து காரிருள் சூழ ஆரம்பித்தது. அந்தக் காரிருளில் தேவதூதர்கள் அவனுக்காக கீழே இறங்கியிருந்ததை அவன் ஆரம்பத்தில் காணவில்லை.

தங்கள் சொந்த மண்ணில் துன்மார்க்கர் பச்சை மரம் போல் வளரலாம். ஆனால் கர்த்தர் தன் பிள்ளைகளையோ இடமாற்றி நடுகிறார். இந்தக் காரிருளில் இந்த இடத்திற்கு கர்த்தர் யாக்கோபை கொண்டு வந்ததின் நோக்கம், வானத்தைத் திறந்து அவனை ஆசீர்வதிக்கவே. எல்லா உறவுகளையும் துண்டித்து யாக்கோபை தனிமையாக்கியது, அவனை அனாதையாய் விட்டு விடுவதற்கல்ல. தன்னுடன் நீங்கா உறவு வைத்துக் கொள்ளவே தேவன் இப்படிச் செய்தார்.

பஞ்சு மெத்தையில் கர்த்தரை மறந்து உறங்குபவனை கல் தலையணையிலேப் படுக்க வைத்து தன்னைத் தேடும்படி கர்த்தர் செய்வார். விழித்திருக்கும்போது கர்த்தரின் வழியை மறந்தவனுக்கு தூக்கத்தில் தன் சித்தத்தை வெளிப்படுத்துவார். ஆம்! சொப்பனத்தில் கர்த்தர் யாக்கோபுக்குத் தோன்றினார்.

வழிப்போக்கனாய் படுத்திருந்த யாக்கோபைப் பார்த்து படுத்திருக்கும் தேசத்தையே அவனுக்கு சொந்தமாகத் தருவேன் என்று வாக்களித்தார் கர்த்தர். ஏனெனில் ஆபிரகாமிற்கும் ஈசாக்கிற்கும் தாம் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை அவர் மறக்கவே இல்லை.

எதிர்காலத்தைக் குறித்து பயந்து நடுங்கிக் கிடந்த யாக்கோபைப் பார்த்து, ***"நான் உன்னோடே இருந்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்."*** (ஆதி. 28:15) "நான் உன்னை நடத்தும் இடமெல்லாம் உன்னை நான் காப்பேன்" என்று கர்த்தர் சொல்லியிருந்தால் அதுவே ஒரு அற்புதமான வாக்குத்தத்தம்தான். ஆனால் "நீ போகுமிடமெல்லாம் நான் உன்னைக் காப்பேன்" என்று கிருபை யாக்கோபின் மேல் பெருகிற்று. யாக்கோபு சீகேமிற்கு சென்றது தேவசித்தமல்ல. ஆனால் அங்கேயும் கர்த்தர் தம் வாக்கின்படி அவனைக் காப்பாற்றினார்.

சகோதரனே, சகோதரியே தன் மனம்போன வழிகளிலெல்லாம் சென்ற யாக்கோபை தன் கிருபையினால் காத்தக் கர்த்தர் அவருடைய வழிகளில் நீ கருத்தாய் நடக்கும்போது உன்னைக் காப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகவே உன் பாதுகாப்பைக் குறித்துப் பயப்படாதே. உன் பாதையைக் குறித்துக் கவலைப்படுவதைவிட கர்த்தருக்குள் உன் வழியைக் குறித்துக் கவலைப்படு. ஆவிக்குரிய உன் வழியைக் காத்துக்கொள். பூமிக்குரிய உன் பாதைகளைக் கர்த்தர் காத்துக் கொள்வார்.

எத்தனையோ பரிசுத்தவான்கள் கர்த்தருடைய ஊழியத்திலேயே விபத்தில் சிக்கி மரித்து விடுகிறார்களே, அவர்களுடையப் பாதையைக் கர்த்தர் காக்கவில்லையே என்ற கேள்வி எழலாம். இப்படி நடக்கும் சம்பவங்களின் காரணங்கள் நமக்குத் தெரியாது. ஆனால் காப்பேன் என்று கர்த்தர் சொன்னால் நிச்சயமாய் கர்த்தர் காப்பார் என்பது நமக்குத் தெரியும். நீ அறிந்த சத்தியத்தில் துணிந்து நட, நீ பத்திரமாய் இருப்பாய்.

விழித்தெழுந்த யாக்கோபு அந்த இடத்திற்கு வானத்தின் வாசல் என்று பேரிட்டான். ஆகவே அதற்கு பெத்தேல் என்று பெயராயிற்று. உலகத்தில் சில இடங்கள் வானத்தின் வாசல்களாய்

இருக்குமெனில் அவை புண்ணிய ஸ்தலங்களாகும். எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் நமக்கு புண்ணிய ஸ்தலமே கிடையாது. எங்கெல்லாம் நீ உன் முழங்காலைத் தாழ்த்தி இதயத்தை உயர்த்தி கர்த்தரைத் தேடுவாயோ, அவ்விடமெல்லாம் வானத்து வாசலாகும்.

***“அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்தான்.”*** (ஆதி. 28:18) அந்தத் தூணில் எண்ணெய் வார்த்தது சாதாரண செயல் அல்ல. என் ஜீவனையே உமக்கு அர்ப்பணிப்பேன் என்பதுதான் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையின் அர்த்தம்.

ஜீவன் தப்ப ஓடும் தன் பிரயாணத்தில் தன் தாயைப் பிரிந்த யாக்கோபு, “எப்பொழுதும் நான் உன்னோடு இருப்பேன்” என்ற கர்த்தரின் வாக்குத்தத்தத்தைப் பெற்றான். தன்னை ஏசா பின்தொடர்வானோ என்று பயந்திருந்த அவனை, “உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்” என்று உற்சாகமூட்டிய வார்த்தைகளை வழியிலே பெற்றான்.

இனி இங்கே தங்கியிருந்தால் பாதுகாப்பில்லை என்று சொந்த வீடு கைவிட்ட நிலையில், யாருமே அவனுக்கு கரம் கொடுக்காத சூழ்நிலையில், “நான் உனக்கு சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை'' என்ற அருமையான ஜீவ வார்த்தைகளைக் கர்த்தர் அவனுக்குக் கொடுத்தார்.

நம்பிக்கையற்ற அந்த நள்ளிரவு ஜீவனைத் தரும் நல்லிரவாயிற்று. தேவபிள்ளையே! உன் நம்பிக்கையற்ற வேளைகளைக் கர்த்தரிடம் கொடு. காரிருள் சூழ்ந்த வேளை ஆசிர்வாதம் நிறைந்த விடியலாக மாறிவிடும்.

# ஏமாற்றிய யாக்கோபு ஏமாந்தான்

(அதிகாரம் - 29)

தன் தாயின் ஆலோசனைப்படி பதான் அராமுக்கு யாக்கோபு சென்றான். பெயர்செபாவிலிருந்து பெத்தேல் வரும்வரையிலும் அவன் திரும்பித் திரும்பிப் பார்த்து நடந்தான். ஏசா தன்னைப் பின் தொடர்கின்றானா என்று பயந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு நடந்தான். ஆனால் பெத்தேலிலிருந்து பதான் அராமுக்குப் போகும்பொழுது கர்த்தர் தன்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையில் ஏசாவை மறந்து முன்னேறிச் செல்கிறான்.

***"யாக்கோபு பிரயாணம்பண்ணி கீழ்த்திசையினரின் தேசத்தில் போய்ச் சேர்ந்தான்."*** (ஆதி. 29:1) இந்தக் கீழ்த்திசையாரின் தேசம் ஆவிக்குரிய வனாந்திரம். கர்த்தரின் வெளிச்சமில்லா இருண்ட தேசம். ஆனால் யாக்கோபை தேவ வார்த்தையினால் நிரப்பி தமது சமுகத்தின் உத்திரவாதத்தோடு கர்த்தர் ஆயத்தம் பண்ணியே இத்தேசத்துக்கு அனுப்பியிருந்தார்.

யாக்கோபு நின்ற வயல்வெளிக்கு ராகேல் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்தது தற்செயலாய் நடந்த செயலல்ல. கர்த்தருடைய கரமே அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்தது. சகோதரனே, சகோதரியே கல்லூரி வாசல், பஸ் நிறுத்தங்கள், பூங்காக்கள், கடற்கரைகள் இங்கெல்லாம் காவல் கிடந்து வழிப் பிரயாணத்துப் பெண்களை விழித்துப் பார்த்து காலத்தை வீணாக்கும் இந்தப் பொல்லாத உலகில் வாழ்க்கைத் துணைக்காக கர்த்தரின் பாதத்தில் காத்திருப்பது நல்லதல்லவா?

இன்றைய சுய சித்த திருமணங்கள் விரைவில் மன முறிவைச் சந்தித்து, மணமுறிவைத் தேடிக் கொள்கிறது. மாம்சீக ஓட்டத்தின் முடிவு இதுதான். எந்த ஒரு குறிப்பிட்ட பெண்ணிற்காகவும் யாக்கோபு பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கவில்லை. தாயின் சொற்படி அங்கு வந்தான். கர்த்தரே அவன் காரியத்தை வாய்க்கப்பண்ணினார்.

ராகேலுக்காக ஏழு வருடம் வேலை செய்ய ஆயத்தமானான் யாக்கோபு. ஒரு ரோஜாப் பூ, ஒரு துண்டு கடிதம், ஒரு ஐஸ்கிரீம் இவற்றைக் கொண்டே தன் வாழ்க்கைத் துணையைத் தேடுகின்ற இம்மலிவு நாள்களில் ஏழு வருட கடின உழைப்பு என்பது பைத்தியக்காரத்தனமாய் இருக்கும். ஆனால் ராகேல் மீது யாக்கோபு கொண்ட உண்மையான பாசம் ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனையை ஏற்றுக்கொள்ளச் செய்தது.

அவள் வரவில்லையே என்று பத்து நிமிடம் காத்திருக்கும் வாலிபன் அதனைப் பத்து வருடங்களாக எண்ணுகிறான். மாம்சீக வேகம் எதனையுமே மிக நீண்ட காலமாக எண்ணிச் சோர்ந்து போகிறது. ***"ராகேல் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த ஏழு வருடங்கள் யாக்கோபுக்கு கொஞ்ச நாளாகத் தோன்றினது."*** (ஆதி. 29:20)

அன்பு சகலத்தையும் தாங்கும், சகிக்கும். இன்றைய காதலோ சகலத்தையும் தாக்கும், தகிக்கும். யாக்கோபோ ராகேலுக்காய் பொறுமையாய்க் காத்திருந்தான். திருமண நாள் வந்தது, லாபான் யாக்கோபை ஏமாற்றிவிட்டான். லாபான் தன் மூத்த மகளாகிய லேயாளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

கிழக்கத்திய பழக்கத்தின்படியான பலமான முகத்திரைகள் லேயாளை மறைத்து விட்டன. தான் ஏமாற்றப்பட்டு விட்டதை காலையில் கண்டுகொண்ட யாக்கோபு தன் மாமனாரிடம் கடுங்கோபங் கொண்டான்.

கண் தெரியாத தன் தகப்பனை அன்று யாக்கோபு ஏமாற்றினான். இன்று தன் கண்பார்வை நன்றாய் இருக்கும்பொழுதே தன் மாமனாரால் ஏமாற்றப்பட்டான். மூத்தவளை இளையவளாகக் காட்டியது வஞ்சகமென்று யாக்கோபு கோபப்படுகிறான் இன்று. இளையவனானத் தன்னை மூத்தவனாகத் தன் தகப்பனிடம் காட்டியதை வஞ்சகமென்று அவன் இதயம் ஏற்றுக்கொள்ள வில்லையே. தகப்பன் வீட்டில் எதை விதைத்தானோ மாமனார் வீட்டில் அதையே அறுத்தான்.

ஒரு வாரம் கழித்து ராகேலையும் யாக்கோபு திருமணம் செய்தான். (ஆதி. 29:28) ஆனால் ராகேலுக்காக இன்னும் ஏழு வருஷம் லாபானிடத்தில் அவன் வேலை செய்ய வேண்டியதாயிற்று. ராகேலை அடைந்த பின் அவளுக்காக ஏழு வருட உழைப்பு என்று தன் அன்பிலே யாக்கோபு மிக உறுதியாக இருந்தான். திருமணம்தான் முடிந்து விட்டதே என்று தன் மாமனாரிடம் கொடுத்த வாக்கில் அவன் அலட்சியமாயில்லை. தன்னை ஏமாற்றிய மாமனாரை தானும் ஏமாற்ற விரும்பவில்லை.

இன்றைய திருமணங்களுக்குப் பிறகுதான் மருமக்கள்மார்கள் எப்படியெல்லாம் மாறிவிடுகிறார்கள். திருமணத்திற்கு முன்பு பெட்டிப் பாம்பாக இருக்கிற மருமக்கள் திருமணத்திற்குப் பிறகு கட்டவிழ்க்கப்பட்ட கட்டுவிரியன்களாய் இருக்கிறார்கள். கட்டிய மனைவியை நேசித்திருப்பார்களெனில் மாமனார் ஸ்கூட்டர் வாங்கித் தரவில்லை என்ற கோபத்தில் மனைவியை விட்டுவிட்டு நடைப்பயணம் மேற்கொண்டிருக்க மாட்டார்கள்.

வேட்டையாட மறுத்து வீட்டுத் தொழுவத்தில் ஆடுகளைப் பிடித்து அதனையே மான்கறியென சமைத்து தகப்பனுக்கு கொடுத்த எளிதான வாழ்க்கை அன்று. பதினான்கு ஆண்டுகள் மாடாய் உழைக்கும் வாழ்க்கை இன்று. ஏமாற்றத்திற்கு ஏமாற்றமே பதிலாயிற்று. தேவன் தன்னைப் பரிகாசம் பண்ணவொட்டார்.

# நொண்டி நடக்கும் ஓட்டக்காரன்

(அதிகாரம் - 32)

யாக்கோபு தன் சொந்த வீட்டை நோக்கிப் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தான். "உன்னை இந்தத் தேசத்திற்கு திரும்ப வரப் பண்ணுவேன்" என்று தேவன் சொன்ன வார்த்தை நிறைவேறிக் கொண்டிருந்தது. யாக்கோபு இதை உணராது போனான். வாக்களிக்கப்பட்ட தேவ சமுகம் தன்னோடிருப்பதை மறந்தான். தன்னைக் கொன்றுபோடுவேன் என்று சொன்ன ஏசாவை நினைத்து பயந்தான். "உன்னைக் காப்பேன்" என்று சொன்ன தேவனுடைய வார்த்தையை மறந்தான். "நான் உன்னை அழிப்பேன்" என்று கூறிய ஏசாவின் வார்த்தையை நினைவு கூர்ந்தான்.

யாக்கோபின் பலவீனத்தை அறிந்த தேவன் தேவதூத படையையே அனுப்பினார். ஒரு தூதன் வந்தாலே போதும்; அவனுடைய எல்லா பயத்தையும் அவன் ஒருவனே நீக்கி விடுவான். யாக்கோபு தன்னுடைய ஆடு, மாடு, குடும்பம் என்ற சேனையையே பார்த்துக் கொண்டிருந்தான். இந்தச் சேனையை தன் புத்தியினால் இரண்டாகப் பிரித்து வைத்தான். ஏசா ஒரு பகுதியை அழித்தாலும் மற்றொரு பகுதி தப்புமே என்று பிரித்து வைத்தான். தேவதூத சேனையை அவன் முற்றிலும் மறந்தான்.

தன் சொத்து, குடும்பம் என்ற சேனையையும் வானத்து சேனையையும் ஒன்றாகக் கணக்கிட்டு அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான். மக்னாயீம் என்றால் இரட்டை சேனை என்று அர்த்தம். இப்படி பேரிட்டு என்ன பயன்? அதனால் அவன் பயம் தெளிந்ததா? தன் சேனையைக் காக்க தேவதூத சேனை இருந்தது

என்று விசுவாசித்தானா? கர்த்தர் நல்லவர் என்று கூவி கூவி பாடிவிட்டு சோதனை வந்ததும் ஐயோ, என்று உட்கார்ந்துவிட்டால் என்ன அர்த்தம்? வீட்டுக்கு கிருபையின் இல்லம் என்று பெயரிட்டு அழைத்து விட்டு வஞ்சகத்தையும் ஏமாற்றையும் கொண்டிருந்தால் அதற்கு என்ன அர்த்தம்?

தன்னைச் சந்திக்க வந்த அண்ணனையே எதிராளி என்று எண்ணிக் கலங்கினான் யாக்கோபு. யாக்கோபின் மாம்சீக ஓட்டம் தளர்ந்தது. விசுவாசம் முற்றிலும் விடைபெற்று விட்டது. யாக்கோபு ஆற்றங்கரையில் தன்னந்தனியாய் அமர்ந்து விட்டான். அவனை அப்படி அமர வைத்தது கர்த்தர். திடீரென்று ஒரு கரம் அவனைப் பிடித்தது. யாக்கோபு திடுக்கிட்டான். அவனைப் பிடித்தக் கரம் அவனோடு போராட ஆரம்பித்தது. விடியுமட்டும் இந்தப் போராட்டம் ஓயவில்லை. தன்னோடு போராடுவது யாரென்றும் அவனுக்குத் தெரியவில்லை.

அவனுடைய மனைவி, பிள்ளைகள், ஆடுமாடுகள் அனைத்தையும் அவனை விட்டு புறம்பாக்கி அவனைத் தனிமைப் படுத்தி, யாப்போக்கு ஆற்றங்கரையில் உட்கார வைத்தார் கர்த்தர். யாப்போக்கு என்றால் வெறுமையாகுதல் என்று பொருள். இப்படி கர்த்தர் யாக்கோபை வெறுமையாக்கினார். இது நிரந்தர வெறுமையல்ல. இந்தத் திடீர் வெறுமை அவனுக்கு தேவ சமுகத்தைக் காட்டியது. யாக்கோபு தேவனோடு போராடவில்லை; தேவன் யாக்கோபோடு போராடினார். யாக்கோபு தன் மாம்சீகத்தை விடவே இல்லை. மாறாக அழுது, அழுது அவரிடம் கெஞ்சினான்.

சகோதரனே, சகோதரியே உன் மாம்சீகப் பிடிவாதத்தை தளர்த்தும்படி தேவன் உன்னோடு எவ்வளவு போராடியும் நீ இன்னும் கீழ்ப்படியாமல் இருக்கின்றாயோ? உன் மீது தேவக்கோபம் பற்றியெரியாமல் அவருடைய ஆவி உன்னோடு இன்னும் போராட என்ன காரணம் தெரியுமா? உன் அறியாமையை எண்ணி தேவன்

பரிதாபப்படுவதுதான். "அவளை மறந்து விடு, அவனை மறந்து விடு" என்ற கர்த்தரின் வார்த்தை உன்னை எவ்வளவாய் எச்சரித்தும் நீயோ கண்ணீர் விட்டுக் கதறி கதறி உன் பிடிவாதத்திலேயே நிலை நிற்கிறாயே. "உன் மாம்சீகத்திற்கு உன்னை எப்படி ஒப்புக் கொடுப்பேன்; உன்னை எப்படிக் கைவிடுவேன்" என்று இரக்கத்தினால் இன்னும் கர்த்தர் உன்னோடு போராடுகிறார்.

யாக்கோபு போராட முடியாமல் அழுது அழுது தன் கண்ணீரின் போராட்டத்தைத் துவக்கினான். கர்த்தரோ அவன் மாம்சீகத்தைப் பலமாய்த் தொட்டார். ஒரு மனிதனுடைய மிகுந்த வலுவான பாகம் தொடைச்சந்து. ***"கர்த்தர் யாக்கோபுடைய தொடைச் சந்தைத் தொட்டார்; அதனால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று'.'*** (ஆதி. 32:25)

வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், தோல்விகள் எதுவுமே அவனுக்குக் கர்த்தரைத் திரும்பிப் பார்க்க உதவவில்லை. ஆகவே கர்த்தர் இப்பொழுது அவன் மாம்சீகத்தை உடைத்தார். நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். நம்முடைய தோல்வியையே வெற்றியாக மாற்றுவார். ஆனால் நம் மாம்சீகத்தையே ஆவிக்குரியதாக மாற்ற மாட்டார். மாம்சீகம் ஒன்றுக்கும் உதவாது. ஆகவே அதை உடைத்தெறிவார். தேவசித்தத்திற்கு மாறாக ஓடிக் கொண்டிருந்த யாக்கோபு இப்போது நொண்டியானான். ஓடி ஓடி நரலோகம் செல்வதைவிட நொண்டி நொண்டி பரலோகம் செல்வதே மேல்.

அவனை நொண்டியாக்கி நடுவழியில் நிறுத்திவிட்டு கர்த்தர் போய் விடவில்லை. ***"நான் போகட்டும், பொழுது விடிகிறது"*** என்று கர்த்தர் அவனிடம் அனுமதி கேட்டார். இப்பொழுதாவது அவன் தன்னை உணரவேண்டும் என்று அவர் விரும்பினார். தன்னை நொண்டியாக்கி விட்ட கர்த்தரைப் பார்த்து, "நீர் இங்கேயிருந்து போய்விடும்" என்று ஆத்திரப்படவில்லை. அவன் மாம்சீகம் அடங்கியது.

***"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன்"*** என்று ஜெபத்திலே போராட ஆரம்பித்தான். தன்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்று கண்ணீர் விட்டுக் கதறினான்.

கர்த்தர் அவனை உடனே ஆசீர்வதித்து விடமாட்டார். இன்றைய மலிவுப் பிரசங்கிமார் மேடையில் நின்று, "கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கிறார். உன் கண்ணீர் யாவையும் துடைக்கிறார்" என்று சொல்வது போல் கர்த்தர் செய்வதேயில்லை. ஒருவன் தன்னை உணராதிருப்பானானால் அவனைக் கர்த்தர் ஆசீர்வதிக்கவே மாட்டார்.

அவனை ஆசீர்வதிப்பதற்கு முன்பு, "உன் பேர் என்ன" என்று கேட்டார். அவனது இயற்பெயரையல்ல கர்த்தர் கேட்டது. அவனுடைய உள்ளான மனுஷன் யார் என்பதையே கர்த்தர் கேட்கிறார். "ஆகாரே எங்கே போகிறாய்" என்ற கேள்வியினால் அவள் போகும் இடத்தை அறிய விரும்பவில்லை. என்ன காரணத்தினால் வீட்டை விட்டு வந்தாய் என்றே கேட்கிறார். "ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்" என்பது இடத்தைக் குறித்த கேள்வியல்ல, ஆவிக்குரிய நிலையைக் குறித்த கேள்வியே. அதுபோல "ஆபேல் எங்கே" என்ற கேள்வியும் ஆபேலைத் தேடும் கேள்வியல்ல. காயீனின் பாவத்தைச் சுட்டிக் காட்டும் கேள்வி. "உன் பேர் என்ன" என்ற கேள்வி யாக்கோபில் மறைந்து கிடக்கும் சுபாவத்தைப் பற்றிய கேள்வி. ஆண்டவருடைய கேள்விக்கு அவன் "யாக்கோபு" என்று பதிலளித்தான்.

தீய நோக்குடையவன், பொல்லாதவன், ஏமாற்றுக்காரன், வஞ்சகன் என்ற பொருள்படும்படியாகவே அவன் தன்னை யாக்கோபு என்று வெளிப்படுத்தினான். உடனே கர்த்தர் அவனைப் பார்த்து, "தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே" என்றார். ஏமாற்று, வஞ்சகம், தந்திரம் இவைகளினால் ஏசாவை, தகப்பனாகிய ஈசாக்கை, மாமனாகிய லாபானை வென்றான். இப்படித்தான் மனிதர்களைத் தோற்கடித்தான். ஆனால் போராட்டத்தில் தோற்று கண்ணீரால் கர்த்தரைப் பற்றிக் கொண்டு தேவ இரக்கத்தைப் பெற்றானே, அதுதான் தேவனை மேற்கொண்ட வெற்றி.

தன்னை உணர்ந்த யாக்கோபை "இஸ்ரவேல்" என்றார் கர்த்தர். இஸ்ரவேல் என்றால் இளவரசன் என்று பொருள். கர்த்தர் அவனுக்கு இளவரசன் என்று பெயர் சூட்டினார். அதாவது கர்த்தர் அரசாளுகிறார் என்று பொருள். யாக்கோபு தோற்று இனி அவனில் கர்த்தர் அரசாளுவார் என்பதுதான் இதன் பொருள்.

உன் பெயரென்ன என்று ஒருவர் கேட்கும்பொழுது அவர் அதிகாரமுடையவராகவே இந்தக் கேள்வியைக் கேட்கிறார். தன் பெயரைச் சொல்லுகிறவன் பெயரைக் கேட்டவருக்கு அடிமையாகிறான். (அன்றாடக சம்பாஷணையில் அல்ல) யாக்கோபு என்று அவன் தன் பெயரை சொன்னதினால் ஆண்டவருக்குத் தன்னை அடிமையாக்கினான். "உம்முடைய நாமம் என்ன" என்று யாக்கோபு கர்த்தரைப் பார்த்துக் கேட்டான். சர்வ வல்லமையுள்ள தேவன் எவருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை. ஆகவே அவர் மௌனமாய் இருந்தார். தன்னோடு பேசுகிறவர் தேவன்தான் என்றறிந்து "தேவனது முகத்தைத் தரிசித்தேன்" என்று அந்த இடத்திற்கு பெனியேல் என்று பேரிட்டான்.

யாப்போக்கு ஆற்றைக் கடப்பதற்கு முன் அது வெறுமையாக்குதலாய் இருந்தது. ஆம்! யாக்கோபு முற்றிலும் வெறுமையாக்கப்பட்டான். ஆற்றைக் கடந்து மறுகரை வந்த பிறகு அவன் தேவனது முகத்தைச் சந்தித்தான். ஆகவே அந்த இடத்திற்கு பெனியேல் என்று பெயர். மறுகரையில் யாக்கோபு நொண்டி நொண்டி நடந்தான். இதுவரைக்கும் யாக்கோபு சுயநீதி என்ற வெளிச்சத்தில் நிமிர்ந்து நடந்தான், ஓடினான். இப்பொழுது கர்த்தருடைய வெளிச்சத்திலே நொண்டி நொண்டி நடந்தான். இது மேலான அனுபவமில்லையா?

# குடும்பம் ஜாக்கிரதை !

(அதிகாரம் - 34)

சமூகப்பணி, பொதுநலம் இவற்றில் பெரிதும் கருத்துச் செலுத்துவோர் தங்கள் குடும்ப நலத்தைக் காக்கத் தவறி விடுகின்றனர். சில நிலைகளில் இது தியாகம் என்று போற்றப் பட்டாலும், சில சமயங்களில் இது மதிகேடாகவும் முடிந்து விடுகின்ற பரிதாபமான நிலையையும் நாம் வாழ்வில் சந்திக்கிறோம்.

நம் பிள்ளைகளின் பொழுதுபோக்கு, அவர்களின் நண்பர்கள் இவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எங்கு போகிறார்கள், வீட்டிற்கு எப்பொழுது திரும்புகிறார்கள் என்பதைப் பற்றி அக்கறைப் படுவதேயில்லை. தங்கள் பிள்ளைகள் கெட்டுப்போகவே மாட்டார்கள் என்று மிதமிஞ்சின நம்பிக்கை அவர்களுக்கு.

இப்படித்தான் இருந்து விட்டான் யாக்கோபு. "லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்." (ஆதி 34:1) அவள் எங்கு போகிறாள், யாரைப் பார்க்கப் போகிறாள் என்று யாக்கோபு விசாரித்துப் பார்த்திருக்க வேண்டும். ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படுவது வாலிபத்தின் இயல்பு. அப்படிப்பட்ட ஆர்வமில்லையேல் வாழ்க்கையில் முன்னேற்றமே இல்லை.

பதிமூன்று வயதான தீனாள் கூடாரத்திலேயே முடங்கிக் கிடக்க விரும்பவில்லை என்பது இயற்கைதான். ஆனால் பெற்றோர்கள் அவள் பத்திரமாகப் போய் வரவேண்டுமென்பதில் ஜாக்கிரதையாயி-

ருந்திருக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே போகாதே என்று வீட்டுக் காவல் தண்டனை கொடுத்தால் கால்கள் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கும். இதயமோ பலகணி வழியாய் ஊர்சுற்றும்.

***"அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் கண்டு, அவளைக் கொண்டு போய், அவளோட சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்தினான்."*** (ஆதி. 34:2)

ஸ்ட்ராபெர்ரி கொடியில் அழகாகப் பூக்கும் ஆரம்பப் பூக்களை இளமையிலேயே பறித்து விடவேண்டும். ஏனெனில் ஸ்ட்ராபெரி கொடி கனி கொடுப்பதற்கு முன்பு பலமுள்ளதாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நல்ல கனிகள் கிடைக்கும். அதுபோல வாலிப உள்ளத்தில் பூக்கும் பல வீண் ஆசைகளைப் பெற்றோர்கள் அழித்து விடவேண்டும். இல்லையேல் பிள்ளைகள் நல்ல குணங்களோடு இருக்கமாட்டார்கள்.

தீனாளின் தாயாகிய லேயாள் தன் தங்கை ராகேலை ஏமாற்ற ஆள் மாற்றாட்டம் செய்தவள்தானே. அந்தத் தந்திர குணம் மகள் தீனாளுக்கு இருக்காதா? சீகேம் தேவனற்றவன். அவனை அதிகமாய் குற்றப்படுத்த முடியாது. தீனாள் தான் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். யாக்கோபும் லேயாளும் அவளை ஜாக்கிரதைப்படுத்த தவறிவிட்டார்கள்.

வாலிபப் பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியே போகும்போது பெற்றோர்கள் விழிப்போடு இருக்கவேண்டும். அஞ்ஞானிகளின் பட்டணத்திற்கு தீனாளை அனுப்பியது யாக்கோபின் மிகப்பெரியக் குற்றம். சீகேமின் இன்பமான பேச்சிற்கு தீனாள் பலியானது அவளுடைய குற்றமே. பெற்றோர்கள் வெகு விரைவில் பையனைக் குறை கூறுவார்கள். ஆனால் தங்கள் பெண்ணை ஜாக்கிரதையாய் வளர்த்திருக்க வேண்டும்.

தீனாள் தீட்டுப்பட்டாள். தீட்டுப்படுத்தியவனைத் திருமணம் செய்துக்கொள்வதினால் அந்தத் தீட்டு மறைந்துவிடாது. திருமணம் பரிசுத்த வாழ்க்கைக்கு ஆரம்பமே தவிர பழைய அந்தரங்க பாவ வாழ்க்கைக்கு மூடுதிரையல்ல. அவளைத்தானே திருமணம் செய்யப்போகிறோம் என்று திருமணத்திற்கு முன்பே, தாறுமாறாய் நடக்கின்றனர். சமுகம் சுற்றம் அதனைக் கண்டுக் கொள்வதேயில்லை. கர்த்தரோ அதனை உற்று கவனிக்கிறார்.

ஈசாக்கு ரெபெக்காளை மனைவியாக்கி நேசித்தான். ஆனால் இன்றைய உலகமோ நேசித்து மனைவியாக்குகிறது. ஆகையால் திருமணத்திற்குப் பிறகு அவர்களிடையே நேசமே இல்லை! தன் மகள் தீட்டுப்பட்டுவிட்டாள் என்று கேள்விப்பட்ட யாக்கோபு வெகுண்டு எழவில்லை. புயலென சீறிப் பாய்ந்து விடவில்லை. பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடந்தான். நியாயமாய் கோபப்பட வேண்டிய நேரத்தில் அவன் அமைதி காத்தது கோழைத்தனம்.

ஒரு கட்டுக்கதை ஒன்றை கூற விரும்புகிறேன். ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் ஒரு பாம்பு சென்று தான் முக்தியடைய ஆலோசனைக் கேட்டது. "நீ கொத்தும் சுபாவமுடையவன். அதனால் மனிதர்களைக் கொத்தி துன்புறுத்திவிடாதே. அப்படியிருந்தாலே போதும் நீ முக்தியடைவாய்'' என்றார். அன்றிலிருந்து பாம்பு யாரையும் தீண்டுவது கிடையாது. அதைக் காணும் யாராவது கல்லெடுத்து அடித்தாலோ, அடிக்க வந்தாலோ அமைதியாய் ஊர்ந்து போய்விடும். இதனால் ஜனங்களுக்கு அந்தப் பாம்பைக் குறித்து பயமில்லாமல் போய்விட்டது. சிறு பிள்ளைகளும் அதை அடித்துத் துன்புறுத்த ஆரம்பித்தனர். பாம்பு முனிவரிடம் சென்று இதைக் குறித்து முறையிட்டது.

அப்போது முனிவர் சொன்னார், "நான் உன்னைத் தீண்ட (கொத்த) வேண்டாம் என்றுதான் சொன்னேனே தவிர சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே. உன்னைத் தற்காத்துக் கொள்ள நீ சீறி இருந்தால் உன்னைத் துன்புறுத்தியவர்கள் பயந்திருப்பார்கள். எனவே

நீ சீறி பயமுறுத்தலாம் உன்னைத் தற்காத்துக் கொள்ள" என்றார். அதுபோல கோபப்பட வேண்டிய காரியத்திற்கு கோபப்படாதிருப்பது கோழைத்தனம். யாக்கோபு கோழையாக இருந்தான்.

தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று அவன் மௌனமாய் இருக்கவில்லை. கடவுள் பார்த்துக் கொள்வார் என்று விசுவாசத்திலும் மௌனமாயிருக்கவில்லை. மந்தைக்கு சென்ற தன் மகன்கள் பழிக்குப்பழி வாங்குவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை எதிர்பார்த்து மௌனமாயிருந்தான். (ஆதி. 34:5)

ஏசாவோ லாபானோ யாக்கோபை பழிவாங்கவேயில்லை. ஆனால் யாக்கோபோ இப்பொழுது பழிவாங்கத் துடிக்கிறான். ஆவிக்குரிய மனிதனாக செயல்பட வேண்டிய நேரத்தில் முற்றிலும் மாம்சத்திற்குரியவனாக மாறிப்போனான். சீகேமின் தகப்பனாகிய ஏமோர் யாக்கோபின் மகளைத் தன் மகனுக்கு திருமணம் செய்விக்கவே விரும்பினான். ஆனால் யாக்கோபின் குமாரருடைய உள்ளத்தில் வஞ்சகம் குடியேறியது.

விருத்தசேதனம் என்கின்ற ஆவிக்குரிய வேலையை தன் வஞ்சகத்தின் கருவியாகப் பயன்படுத்தி துணிகரமாய் அந்தப் பட்டணத்தின் ஆண் மக்களைக் கொன்றுப் போட்டார்கள். தன்னைக் கொல்ல வரும் கொலைபாதகனுக்கு சத்தியம் சொல்லி அவனை இரட்சிப்பில் நடத்தும் போதகர், கொலை பாதகன் மனந்திரும்பியதினிமித்தம் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது, அவனை தண்ணீரில் மூழ்கடித்து கொலை செய்ய நினைத்தால் எப்படியிருக்கும்? அதுபோலவே யாக்கோபின் குமாரரும் நடந்துக் கொண்டார்கள்.

யாக்கோபு தன் குமாரர்களைப் பார்த்து எல்லாரையும் சங்காரம்பண்ணி அந்த தேசத்திலே அவன் வாசனையைக் கெடுத்து அவன் இதயத்தைக் கலங்கப்பண்ணினார்கள் என்று குற்றப்படுத்தினான். "நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்களே" என்று யாக்கோபு கலங்கினான். (ஆதி. 34:30)

யாக்கோபே இப்பொழுதும் நீ உன் உயிருக்கு பயந்துதானே கலங்குகிறாய். உன் குடும்பம் தேவமகிமையை இழந்துவிட்டது என்று கலங்குகிறாயா? உன்னுடைய தந்திர குணம் உன் பிள்ளைகளுக்கும் வந்தது. உன் அண்ணன் ஏசாவை முந்திப்போகச் சொல்லி நீ பிந்தி வருவேனென்று வாக்களித்தாயே, நீ போனாயா? ஏசா சேயீருக்குப் புறப்பட்டுப்போனானே நீ அங்கே போவேனென்று சொல்லிவிட்டு சுக்கோத்துக்குப் போனாயே. இதையெல்லாம் உன் பிள்ளைகள் கவனித்தார்கள். நீ எதை விதைத்தாயோ அதையே அறுத்தாய்!

"எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலாமா?" என்று யாக்கோபின் குமாரர்கள் கேட்டார்கள். (ஆதி. 34:31) அவர்களது செயலை நியாயப்படுத்துவது போல் இந்தக் கேள்வி அமைந்திருக்கிறது. என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்ற கேள்வி எவ்வளவு நியாயமற்றதோ, அவ்வளவு நியாயமற்றது இந்தக் கேள்வியும். ஏனெனில், "எங்கள் சகோதரி" என்ற தன்னலம் தான் அவர்களில் மேலோங்கி நின்றது. வேறு எந்தச் சகோதரிக்கும் இந்தக் கெடுதி நடந்திருந்தால் இவர்களும், யாக்கோபைப்போல் பேசாமலே இருந்திருப்பார்கள்.

# யாக்கோபே, நீ எழு... போ

(அதிகாரம் - 35)

புத்தி தெளிந்தவுடன் கெட்ட குமாரன் தன் இடத்தை விட்டு எழுந்தான். தன் தகப்பன் வீட்டை நோக்கி நடந்தான். இப்பொழுது யாக்கோபு சீகேமை விட்டு எழவேண்டும். பெத்தேலை நோக்கி நடக்கவேண்டும். உலக வழிகளிலிருந்து நாம் பிரிந்தால் தான் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க முடியும். யாக்கோபு இப்பொழுது தேவனுக்காகப் பிரிய வேண்டும். சீகேமில் யாக்கோபு தங்கியிருக்கிற வரையிலும் கர்த்தரைப் பற்றி நினைக்கவேயில்லை. ஆனாலும் அங்கேயும் யாக்கோபு தேவனுடைய பிள்ளையாகயிருந்தான். ஆனால் தேவ சித்தத்திலில்லை.

பிள்ளை என்பது உறவு. உறவு ஒருபோதும் முறியாது. வீட்டைவிட்டு ஓடி பிதாவின் சொத்தை அழித்து துன்மார்க்கமாய் ஜீவித்தாலும் அவன் இன்னும் கெட்டக்குமாரன். ஆம்! குமாரன் என்ற உறவு முறிந்துப்போகவேயில்லை. ஆனால் பிதாவோடிருக்கிற ஐக்கியத்தை இழந்தான். தேவபிள்ளையாய் இருந்துக்கொண்டே தேவ ஐக்கியத்தை முறித்தவுடன் கர்த்தர் ஒருவனைத் தூக்கியெறிய மாட்டார். தேவ அன்பு யாக்கோபின் ஐக்கியத்தைப் புதுப்பிக்க விரும்பியது.

முப்பது கல் தொலைவில்தான் பெத்தேல் இருந்தது. ஆம்! கடவுளுடைய வீடு அவ்வளவு சமீபமாய் இருந்தது. ஆனால் பத்து வருடம் சீகேமிலே தங்கிவிட்டான். சீகேமிலே அவன் கட்டிய பலிபீடம் "ஏல் எல்லாஹி இஸ்ரவேல்" இந்தப் பலிபீடத்தை தேவன் அங்கீகரிக்கவேயில்லை. தேவ சித்தம் இல்லாத இடத்தில் ஒருவனுடைய தொழுகையையோ அர்ப்பணிப்பையோ கர்த்தர் அங்கீகரிக்கவேமாட்டார்.

பெத்தேலுக்கு ஓடிப்போய் அங்கே பலிபீடத்தைக் கட்டு என்றார். தேவ சித்தமில்லாத நூறு ஆராதனைகளை விட தேவனுக்குச் சித்தமான ஒரே ஒரு ஆராதனை மேன்மையானது.

குற்ற உணர்வு ஒரு மனிதனை இரட்சிக்காது. குற்ற உணர்வு இரட்சகரை நோக்கி ஒருவரை வழிநடத்தும். இரட்சகரின் அன்பே ஒரு மனிதனை இரட்சிக்கும் ஒரு கிறிஸ்தவன் தவறிப்போனால் அவன் மீண்டும் இரட்சிக்கப்படுவது இரட்சிப்பின் சந்தோஷத்தை மீண்டும் நினைவுக் கூருவதினால். கெட்டக் குமாரன் பிதாவின் வீட்டிற்கு திரும்பியது பசியினால் அல்ல. தகப்பனுடைய வீட்டினுடைய மேலான காரியங்களைக் குறித்த நினைவினால்தான். (லூக். 15:17)

தாவீது தன் பாவத்திலிருந்து விடுதலைப் பெற இரட்சிப்பின் சந்தோஷத்தைத் திரும்பவும் நினைவுகூர்ந்தான். (சங். 59:12) யாக்கோபின் ஐக்கியத்தை புதுப்பிக்கத் தூண்டிய தேவன் அவன் நினைவைத் தொட்டார். பெத்தேலில் அவன் பெற்ற தேவ தரிசனத்தை அவன் நினைவில் வைத்தார். "உனக்குத் தரிசனமான தேவனுக்கு" என்று கர்த்தர் யாக்கோபுக்கு நினைவூட்டினார்.

செயல்பட வேண்டிய நேரத்தில் செயலற்று நின்ற யாக்கோபு இப்பொழுது மிகப்பெரிய ஆவிக்குரிய மாற்றத்தை அடைந்தான். உடனே தீவிரமாய் செயல்பட ஆரம்பித்தான். ***"உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்"*** (ஆதி. 35:2) என்று யாக்கோபு தன் குடும்பத்தாருக்குக் கட்டளையிட்டான்.

யாக்கோபின் பிள்ளைகள் சீகேமின் வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளையிட்டார்கள். இப்பொழுது அந்த நகைகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். சீகேமின் நகைகள் விக்கிரகத்தின் சாயலில் இருந்தன. ஆகவே அவற்றை

விலக்கிப்போடும்படி, யாக்கோபு கட்டளையிட்டான். அந்நிய தெய்வங்களைச் சுட்டிக் காட்டும், எந்த அடையாளத்தையும் கர்த்தரின் பிள்ளைகள் அணியக்கூடாது.

பொட்டுவைப்பது தவறா? பொட்டு வைக்கக்கூடாது என்று வேதத்தில் எங்கே சொல்லப்பட்டிருக்கிறதென்று கேட்கிறார்கள். ***"இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே. மற்ற ஜனங்களைப்போல் களிகூராதே"*** (ஓசியா 9:1) என்று அஞ்ஞான மார்க்கத்தாரை விட்டு நாம் பிரிந்திருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. பொட்டு இந்து மத கலாச்சாரமும் இந்து மத நம்பிக்கையுமே. தன் கணவர் ஜீவனோடு இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில்தான் ஒரு இந்துப் பெண் பொட்டு வைத்துக்கொள்கிறாள். இந்தப் பொட்டு எந்த மனிதனுடைய ஜீவனையும் காக்காது.

எடுத்துக்காட்டாக ஒன்று சொல்ல விரும்புகிறோம். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடியும் அவரது துணைவியார் ஜாக்குலினும் இந்தியாவிற்கு வந்திருந்தபோது இந்தியா, திருமதி. கென்னடிக்கு பொட்டு வைத்து வரவேற்புக் கொடுத்தது. ஆனால் அவர்கள் அமெரிக்கா திரும்பிய பின் ஜான் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். பொட்டுக்கும் கணவனுடைய நீடித்த வாழ்க்கைக்கும் சம்மந்தமேயில்லை.

யாக்கோபு நகைகளைக் கழட்டச் சொன்னது தன் பிள்ளைகளை நகையணியக் கூடாது என்பதற்காக அல்ல. எல்லா நகைகளும் விக்கிரகங்களல்ல. அப்படி விக்கிரகங்களாயிருந்தால் ஆபிரகாம் ரெபெக்காளுக்கு கொடுத்த நகைகளெல்லாம் விக்கிரகங்களாய்ப் போகும். யோபு பிற்காலத்தில் ஆசீர்வதிக்கப்பட்டப் பிறகு அவனைச் சந்தித்தவர்கள் ஒவ்வொரு தங்கக் காசையும் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்களே. இந்த நகைகள் தூக்கியெறியப்பட வேண்டிய விக்கிரகங்களுமல்ல, கழற்றி அகற்றப்படவேண்டிய அசுத்தங்களுமல்ல.

யாக்கோபு கழற்றச் சொன்ன நகைகளெல்லாம் சீகேமில் கொள்ளையடித்த நகைகள். ஆகையால் அவையெல்லாம் அசுத்தமானவைகள். நிச்சயமாகவே அவை அகற்றப்படவே வேண்டும்.

சகோதரனே! சகோதரியே!! நீங்கள் அணிந்திருக்கும் நகைகளெல்லாம் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளென்றால் உடனே கழற்றிப் போடுங்கள். நீங்கள் அணிந்திருக்கும் நகைகள் இந்து விக்கிரகங்களான பிள்ளையார், முருகன், ராமன், கிருஷ்ணன், இவைகளில் ஒன்றின் சாயலில் இருக்குமானால் அவைகளை உடனே கழற்றுங்கள். எல்லா நகைகளையும் விக்கிரகம் என்றும் அசுத்தம் என்றும் உங்கள் போதகர் சொல்வாரானால் நகைகளைக் கழற்றிக் காணிக்கைப் பெட்டியில் போடாதீர்கள். அசுத்தங்களை கர்த்தர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

தங்கள் கையிலிருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும் விக்கிரகத்தின் சாயலிலிருந்த தங்கள் காதணிகளையும் அவர்கள் யாக்கோபினிடத்தில் கொடுத்தார்கள். அவன் அவற்றை சீகேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழே புதைத்துப்போட்டான். (ஆதி 35:4) இந்த நகைகளோடு அவர்கள் பெத்தேலுக்குப் போகக்கூடாது. இவை தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்படக் கூடாது. இவை புதைக்கப்படவேண்டும். ஆகவே யாக்கோபு அதைக் கர்வாலி மரத்தின் கீழ் புதைத்தான். இன்று நகைகளைக் கழற்றும் கிறிஸ்தவர்கள் கர்வாலி மரத்தின் கீழ் அல்ல காட்ரேஜ் பீரோவில் புதைக்கிறார்கள்.

"உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்" என்று யாக்கோபு அவர்களுக்குக் கட்டளையிட்டான். வஸ்திரம் சுபாவத்தைக் குறிக்கிறது. ***"எங்களுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தைப் போலிருக்கிறது என்று"*** ஏசாயா தீர்க்கதரிசி (ஏசா 64:6) குறிப்பிடுகிறார். நம் உயர்ந்த சுபாவங்கள்கூட கர்த்தருடைய பார்வையிலே அழுக்கானவைகளே. ஆகவே நம்முடைய அழுக்கானக்

கந்தையைத் தூரத் தள்ளிவிட்டு, தேவனது தெய்வீக சுபாவங்களைத் தரித்துக் கொள்ளவேண்டும். இத்தனையும் செய்து முடித்தப்பின் யாக்கோபு, "நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள்" என்றான்.

பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது. ஆகவே தன் குடும்பத்தையும் தன்னையும் பரிசுத்தப்படுத்திக்கொண்டு யாக்கோபு புறப்பட்டுவிட்டான். பெத்தேலிலே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்று யாக்கோபு தீர்மானித்தான். அவனை முதன்முதலாக சந்தித்த இடம் பெத்தேல். அங்கே ஏற்கனவே யாக்கோபு ஒரு தீர்மானம் எடுத்திருந்தான்.

***"அப்பொழுது யாக்கோபு தேவன் என்னோடு இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லி..."***

(ஆதி.28:20,21,22)

உண்மையில் கர்த்தர் தன் பங்கை நிறைவேற்றினார். ஆனால் யாக்கோபு தன் வார்த்தைகளில் ஒன்றையாகிலும் நிறைவேற்றவில்லை. தன் பிள்ளைகள் தன் பொருத்தனையை நிறைவேற்றாமல் விடவேமாட்டார். "உமது பாத்திரத்தில் பானம்பண்ணுவோம்" என்ற யாக்கோபையும் யோவானையும் பானம்பண்ணவே வைத்தார். "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்ற பேதுரு தன் ஜீவனைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

பெத்தேலுக்குப் புறப்பட்ட யாக்கோபின் பிரயாணம் பத்திரமாக இருந்தது. தேவனால் பயங்கரம் உண்டானதினால் யாக்கோபைத்

தொட கானானியர் பயந்தனர். கர்த்தருடைய பிள்ளைகள் செம்மையாயிருந்தால் அவர்களுடைய வழிகள் பாதுகாப்பாயிருக்கும். யூதாவின் ராஜாவாகிய யோசபாத் கர்த்தருடைய வழிகளில் உத்தமனாயிருந்தபடியால் கர்த்தருடைய பயங்கரம் உண்டாகி ஒருவரும் அவனுக்கு விரோதமாக யுத்தம் பண்ணாதிருந்தார்கள். (2 நாளா. 17:10)

பெத்தேலுக்குச் சென்ற யாக்கோபு ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு ஏல் பெத்தேல் என்று பெயரிட்டான். இதற்கு கடவுளுடைய வீட்டின் கடவுள் என்று அர்த்தம். கடவுளை மறந்து கடவுளுடைய வீட்டை மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். கடவுளை நினைவுகூர இந்தப் பலிபீடத்தை யாக்கோபு கட்டினான்.

சகோதரனே ! சகோதரியே !! சபை வைராக்கியத்தோடு இருக்கிறாயே, சபையின் தலைவராகிய கிருஸ்துவின் வைராக்கியத்தில் இருக்கிறாயா? கிறிஸ்தவ மத வைராக்கியத்தோடு இருக்கிறாயா, கிறிஸ்தவ உபதேசங்களில் வைராக்கியமாய் இருக்கிறாயா? கிறிஸ்துவை யாராவது தாக்கிப் பேசினால் ஆத்திரம் அடைகிறாயே, உன் வாழ்க்கையில் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதில் இந்த ஆத்திரம் இருக்கின்றதா?

மீண்டும் தேவன் யாக்கோபுக்கு தரிசனமாகி, "இனி உன் பெயர் யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்று வழங்கும்" என்றார். இது ஏற்கனவே யாக்கோபுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதம். ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்க யாக்கோபு மறந்தாலும், கொடுத்த தேவன் மறக்கவேயில்லை. தேவன் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லியும் நீ தேவனுக்கு விரோதமான வழியில் போனால் உன்னைத் திருத்தி திரும்ப தன் வழிக்குக் கொண்டு வந்து ஆசீர்வதித்தே தீருவார். நீ தேவனுடைய ஆசீர்வாதத்தை மறந்துப்போனால் ஆசீர்வாதத்தை நினைவூட்டி உன்னை ஆசீர்வதிப்பார்.

சீகேமில் தேவனை விட்டு முற்றிலும் விலகிப்போய்விட்டான் யாக்கோபு. கர்த்தரோடு தன் ஐக்கியத்தை மீண்டும் புதுப்பிக்க விரும்பினான். தன்னோடு மீண்டும் கர்த்தர் பேசின இடத்திலே ஒரு கல் தூணை நிறுத்தி எண்ணையை வார்த்தான். தன் ஜீவனையே கர்த்தருக்கு அர்ப்பணிக்கிறேன் என்று இப்படி கர்த்தருக்குப் பலிசெலுத்தினான். முன்பு இப்படி பலி செலுத்தியவன் தேவனை மறந்து போனான். ஆகவே கர்த்தரோடு உள்ள உறவைப் புதுப்பித்து அந்த இடத்திற்கு பெத்தேல் என்று மீண்டும் பெயரிட்டான்.

சகோதரனே ! சகோதரியே!! இரட்சிக்கப்பட்ட பிறகு நீ மீண்டும் ஏதேனும் பாவம் செய்வாயானால் உன்னால் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவே முடியாது என்று கிறிஸ்துவை விட்டு ஓடிவிடாதே. மீண்டும் நீ கல்வாரிக்கு வா, உன் பரிசுத்த வாழ்க்கையைத் தொடங்கு, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். கடவுளின் வீடான சபையில் நீ இருப்பது மாத்திரம் இரட்சிப்பின் அடையாளமல்ல. கடவுளில் நீ வாழ்வதே இரட்சிப்பின் அடையாளம்.

# சுவரில் படரும் கொடி

(யோசேப்பின் வரலாறு)

(அதிகாரம் 37 முதல் 50 வரை)

**இளங்கொடி** (அதிகாரம் - 37)

யாக்கோபு தன் தகப்பன் தங்கியிருந்த கானான் தேசத்திலே குடியிருந்தான். (ஆதி 37 :1) யாக்கோபினுடைய அலைந்துத் திரியும் வாழ்க்கை முடிந்தது. தன் மனம் போல அங்கேயும் இங்கேயும் அலைந்து திரிந்த யாக்கோபின் மாம்சீக வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது. தேவன் வாக்களித்த கானான் தேசத்திலே இப்பொழுது குடியிருந்தான். இது முதற்கொண்டு அவன் வாழ்க்கை நிலைவரப்படும்.

பாவத்தில் வாழ்கிற மனிதன் நிலையில்லாமல் அலைகிறான். அவன் ஆத்துமா வனாந்திரத்தில் அமைதியற்று அலைகிறது. ஆனால் கிறிஸ்து இயேசுவை இரட்சகராக ஒருவன் கண்டபின் அவனுடைய ஆத்துமா அலைகிறதில்லை. கர்த்தருக்குள் இளைப்பாறுகிறது. யாக்கோபினுடைய இளைப்பாறுதலின் மகன்தான் யோசேப்பு.

தன் 17 வது வயதிலே யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் செய்கிற துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லி வருவான். (ஆதி. 37 :2) சிறு வயதிலேயே யோசேப்பு பாவத்தைச் சகித்துக் கொள்ளாதவன். தன் சகோதரர் செய்கின்ற தப்பிதங்களை தன் தகப்பனுடைய கவனத்திற்கு உடனே கொண்டு வருவான். இது ஒரு நல்ல பழக்கம். வீடுகளில் அக்காளின் தவறைத் தங்கையும், தம்பியின் தவறை அண்ணனும் மூடி மறைப்பதினால் கொடியப் பாவத்திற்கு வழி திறந்து விடுகின்றனர்.

யோசேப்போ தன் சகோதரர்கள் கெட்டுப் போகக் கூடாது என்பதில் உறுதியாயிருந்து அவர்கள் பாவங்களைத் தன் தகப்பனுக்குத் தெரிவித்தான். நீங்களும் எவருடைய பாவத்தையும் கண் ஜாடையாய் விடாதீர்கள். உண்மையைச் சொன்னதினால் யோசேப்பு சகோதரர்களுக்குச் சத்துருவானான். சத்தியத்தை சொல்வதினால் பலருக்கு நீங்கள் சத்துருவாவீர்கள்.

யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டான். அதாவது "வயலில் அறுத்த அரிகளை சகோதரர்கள் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது யோசேப்பின் அரிக்கட்டு நிமிர்ந்து நின்றது. மற்றவர்களுடைய அரிக்கட்டுகள் அவனுடைய அரிக்கட்டை சுற்றி வணங்கி நின்றன." (ஆதி 37: 7)

கர்த்தர் யோசேப்பைத் தன் சகோதரர்களுக்கு மத்தியில் தலைவனாக்கினார். இது கடவுளுடைய சித்தம். திருச்சபையிலோ, உலகிலோ கடவுள் தம் பிள்ளைகளை எந்தப் பதவியில் வைக்கிறாரோ அதில் அவர்கள் திருப்தியாயிருக்க வேண்டும். இன்று திருச்சபையை சீரழிக்கிறது பதவிச் சண்டைகள். யாக்கோபின் வீட்டிலும் இது ஆரம்பமாயிற்று.

தேவன் தனக்குத் தெரியப்படுத்திய ஆவிக்குரிய இரகசியத்தை யோசேப்பு தன் இருதயத்தில் வைத்துக் காத்துக் கொள்ளவில்லை. மாறாக தன் சொப்பனத்தை தன் சகோதரரிடத்தில் சொல்லி மகிழ்ந்தான். முதிர்ச்சி அடையாததினால் இந்தத் தவறை யோசேப்பு செய்துவிட்டான்.

சகோதரனே ! சகோதரியே !! தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தின ஆவிக்குரிய இரகசியங்களை எல்லாரிடமும் சொல்லாதீர்கள். மரியாளைப்போல இருதயத்தில் வைத்து சிந்தித்துக் கொண்டிருங்கள். யோசேப்பின் சொப்பனத்தைக் கேட்ட யாக்கோபு அதனை தன் மனதிலே வைத்துக் கொண்டான் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியே நீங்களும் ஆவிக்குரிய இரகசியங்களை மனதில் காத்துக் கொள்ளுங்கள்.

ஆவிக்குரிய இரகசியத்தைக் காத்துக்கொள்ளாததினால் யோசேப்பின் சகோதரர்கள் அவன்மீது பொறாமைக் கொள்ள நேரிட்டது. தன் அஜாக்கிரதையினால் தன் சகோதரர்களின் விரோதத்தைச் சம்பாதித்தான். யோசேப்பு சொன்னதெல்லாம் உண்மைதான். "நாம் பேசுவதெல்லாம் உண்மையாயிருக்க வேண்டும். ஆனால் உண்மையையெல்லாம் சொல்லக்கூடாது.'' தன் அஜாக்கிரதைக்கு யோசேப்பு மிகப்பெரிய விலை கொடுக்க வேண்டியதாயிற்று. அது என்ன விலை? யோசேப்பையே அவர்கள் விற்றுப் போட்டார்கள்.

ஒரு வெள்ளாட்டுக் கடாவை அடித்து அதின் இரத்தத்தை யோசேப்பின் அங்கியில் தோய்த்து அதனை யாக்கோபினிடத்தில் அனுப்பினார்கள். ***"யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது. யோசேப்பு பீறுண்டு போனான் என்று புலம்பினான்."*** (ஆதி 37: 33).

தன் மகன் உயிரோடிருக்கும்போதே அவன் இறந்துப் போனான் என்ற பரிதாப நிலை யாக்கோபுக்கு நேரிட்டது. தன் மனதில் வைத்திருந்த யோசேப்பின் கனவை நினைத்திருந்தால் அவன் அழுதிருக்க வேண்டாம்.

சகோதரனே! சகோதரியே!! கர்த்தர் எத்தனையோ வாக்குத்தத்தங்களைத் தந்திருந்தும் சாத்தான் காட்டுகிற அடையாளங்களை நீ நம்புவாயானால் நீ வீணாகப் புலம்பித் தவிக்க வேண்டியிருக்கும். உன் இரத்தத்தைப் பற்றிய மருத்துவ அறிக்கை கவலைத் தருவதாக இருக்கலாம். உடனே புலம்பி அழாமல் கர்த்தர் என்ன சொல்கிறார் என்று கேள். யோசேப்பின் இளமையின் அஜாக்கிரதை பல தவறுகளைச் செய்து விட்டது.

## **அவன் வில் உறுதியாயிருந்தது** (ஆதி 39:8-23)

ஒரு மனிதனுக்கு வரும் சோதனைகளில் மிகப்பெரிய சோதனை இச்சை. ஒரு ஆவிக்குரிய மனிதன் பெண்களினால்

இழுக்கப்படுவானானால் அவன் மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்து வெட்கமடைவான். எத்தனையோ தேவப்பிள்ளைகள் பெண்ணாசையில் விழுந்து தேவ அழைப்பை இழந்துப் போனார்களே! இன்றைய ஊழியக்காரர்களை மறைமுகமாகத் தாக்குகிற புற்றுநோய் பெண்ணாசை.

ஆரம்பத்தில் தடுக்காவிடில் குணப்படுத்த முடியாத நிலைக்கு புற்றுநோய் வளர்ந்து விடும். அதுபோல பெண்ணாசையை ஆரம்பத்திலேயே தடுக்காவிட்டால் சரீரத்தில் ஆரம்பித்த இச்சை ஆவி, ஆத்துமாவை வீழ்த்திவிடும்.

யோசேப்பு இப்பொழுது எகிப்து தேசத்தில் இருக்கிறான். அவனுடைய எஜமான் போத்திபாருடைய மனைவி யோசேப்பின் மீது தவறான ஆசை வைக்கிறாள். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல. நித்தம் நித்தம் அவள் யோசேப்பை நிர்ப்பந்தப்படுத்துகிறாள். யோசேப்போ உள்ளத்தில் தடுமாறவேயில்லை. அவன் மன வில் உறுதியாயிருந்தது.

நான் எப்படி எஜமானுக்கு விரோதமாய் பாவம் செய்வேன் என்று எஜமானுக்கு மட்டும் பயந்திருக்கவில்லை. இத்தனைப் பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு கடவுளுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான். சமூகம், உறவு, இன ஜனம் இவற்றைப் பற்றிய பயம் ஒரு மனிதன் பாவம் செய்வதைத் தடுக்கும் சக்தி இல்லாதவை. தெய்வ பயமே ஒரு மனிதனைப் பாவம் செய்யத் தடுக்கும். யோசேப்பை பாவம் செய்ய விடாமல் தடுத்தது அவனுடைய தெய்வ பயம்.

பாவம் செய்துவிட்டு யோசேப்பு அதன் பழியை வெகு எளிதில் போத்திபார் மனைவி மீது போட்டுவிட முடியும். ***“பாவிகள் நயங்காட்டி இழுத்தால் அதற்கு சம்மதியாதே”*** என்ற வார்த்தைக்கு யோசேப்பு பயந்தான். இன்றைக்கு எத்தனை வாலிபர்கள் நயங்காட்டி இழுக்கும் வார்த்தைகளுக்கு விழுந்துப் போனார்கள். அழகான முகம், கனிவானப் பேச்சு, நல்ல இளமை இவற்றினால்

நிலை தடுமாறிப்போகிறவன் மனசாட்சியில்லாமல் இது வாலிபத்தின் இயற்கை என்கிறான்.

இந்தப் பொல்லாத உலகில் நல்ல வாலிப வயதில் யோசேப்பு தன் பரிசுத்தத்தில் உறுதியாய் இருக்கவில்லையா? அவனைக் கண்காணிக்க பெற்றோர்கள் இல்லை. அவனை அறிந்தவர்கள் ஒருவரும் அவன் அருகே இல்லை. அவன் கையிலே வேத புத்தகம் இல்லை. அவன் மனசாட்சியில் எழுதப்பட்ட வேத எழுத்துக்கள் எவ்வளவாய் அவனைக் காப்பாற்றியது. வாலிபனே! உன் கண்களை இச்சையில் பறக்கவிடாதே. தன் கண்ணுக்குப் பிரியமானவளென்று இச்சையில் தன் கண்களைப் பறக்கவிட்ட சிம்சோன் தன் கண்களையே இழந்தான்.

சில மனிதர்களைச் சூழ்நிலை மாத்திரம் காப்பாற்றி விடுகிறது. நாலு பேர் தன்னைக் கவனிக்குமிடத்தில் பரிசுத்தமாகவே இருப்பார்கள். யோசேப்போ வீட்டில் தனித்திருந்தான். வீட்டு மனிதரில் ஒருவனும் வீட்டில் இல்லை. போத்திபாரின் மனைவி கையைப் பிடித்து இழுத்தாள். படுக்கையறைக்கே அவனை அழைத்தாள். யோசேப்போ அவளைவிட்டு வெளியே ஓடிப் போனான்.

யோசேப்பு ஏன் படுக்கையறைக்குள் போகவில்லை என்றால் அவளுடன் இருக்கவும் அவன் சம்மதிக்கவில்லை. அடுத்தப் பெண்களோடு இருக்கவும், பேசவும் சம்மதிப்பாயானால் அடுத்தது படுக்கையறைக்கும் செல்ல சம்மதிப்பாய். பக்தன் ஜான் வெஸ்லி சொல்வதை இங்கு நினைவூட்டுகிறேன். *"ஒரு பெண்ணிடம் நீ மூன்று நிமிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவளோடு பேசுவது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருந்து, இன்னும் அவளோடு பேச வேண்டும் என்று உன் மனம் விரும்புமானால் அதோடு பேச்சை நிறுத்திவிடு."* இதுதான் ஜான் வெஸ்லியின் ஆலோசனை.

பாவத்தை வெறுப்பதைவிட, பாவ சமுகத்தை வெறுத்துவிடு. பாவ சமுகத்தில் இருந்துக் கொண்டே உன்னால் பாவத்தை ஜெயிக்க

முடியாது. யோசேப்பு தான் பலமுள்ளவனாயிருந்து அந்த சமுகத்தை விட்டே ஓடிப்போனான்.

இச்சை மிகக் கொடிதானது. பயந்து நடுங்கியிருக்க வேண்டியவள் போத்திபாருடைய மனைவி. அவன் புருஷனிடத்தில் யோசேப்பு உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவளே யோசேப்புக்கு விரோதமாய் எழும்பினாள். படுக்கையறைக்கு இழுத்தக் கரங்கள் இப்பொழுது சிறையறைக்குத் தள்ளத் துடித்தன. இச்சையின் கரங்கள் கொடுமையானவைகள். எச்சரிக்கையாயிருங்கள்.

## எகிப்தில் படர்ந்த கொடி

இப்பொழுது யோசேப்பு என்கிற கொடி எகிப்திலே படர்ந்திருக்கிறது. யோசேப்பின் சகோதரர்கள் தானியத்திற்காக எகிப்திற்கு வரவேண்டியதாயிற்று. இஸ்ரவேலின் மக்களைப் போஷிக்க தானியக் களஞ்சியம் எகிப்தில். வேண்டாம் என்று தூக்கியெறிந்தக் கொடியே அவர்களின் அப்பத்தின் ஆதரவு கோலாயிற்று. யோசேப்பின் அரிக்கட்டு நிமிர்ந்து நிற்கின்றது. கனவு நினைவாயிற்று.

தாங்கள் விற்றுப்போட்ட தங்கள் சகோதரனே எகிப்தின் அதிபதி என்பதைக் கண்ட சகோதரர்கள் கலக்கமுற்றனர். தங்கள் சகோதரர்களுடைய பாவத்தைக் குறித்து யோசேப்பு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. தன்மீது அநியாயக் குற்றஞ்சாட்டின போத்திபாரின் மனைவியைக் குறித்தும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று பொறுமையாயிருந்தான். இப்பொழுது அவன் தன் சகோதரரையும் குற்றப்படுத்தவில்லை. "ஜீவரட்சனை செய்யும்படிக்கு தேவன் உங்களுக்கு முன்னே என்னை அனுப்பினார்" (ஆதி 45:5) என்று கர்த்தரையே சார்ந்துக் கொண்டான்.

நான் துக்கத்தோடே என் யோசேப்பினிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்று யாக்கோபு ஒரு நாள் புலம்பினான். யோசேப்பு தன் கைகளினால் உன் கண்களை மூடுவான் என்று கர்த்தர்

வாக்களித்தார். எந்த சூழ்நிலையும் தேவனுடைய வார்த்தையைத் தடுத்து நிறுத்த முடியாது. யாக்கோபு மரணப் படுக்கையில் இருந்தான். யோசேப்பு தன் குமாரர்களோடு யாக்கோபைச் சந்திக்கிறான். உடனே யாக்கோபு தன் வாழ்க்கையின் வருத்தங்களை சங்கடங்களைப் பேச ஆரம்பிக்கவில்லை.

***"யாக்கோபு யோசேப்பை நோக்கி, சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி என்னை ஆசீர்வதித்து, நான் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்னோடு சொன்னார்."*** (ஆதி. 48: 3,4) இப்படி யாக்கோபு தன் ஆவிக்குரிய அனுபவங்களையே பேசினான்.

பெற்றோர்களே ! உங்கள் பிள்ளைகளோடு உங்கள் பள்ளி வாழ்க்கை, உங்கள் குடும்ப வாழ்க்கை இவற்றையெல்லாம் சொல்லி மகிழ்கிறீர்கள். உங்கள் ஆவிக்குரிய சிலாக்கியங்களை பகிர்ந்துக்கொள்கிறீர்களா? பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்கின்ற ஆவிக்குரிய சிலாக்கியங்கள் உண்டா?

யாக்கோபு ஏறக்குறைய குருடனாயிருந்தான். மரணத் தருவாயில் இருந்தான். யோசேப்பின் பிள்ளைகளை யாக்கோபு ஆசீர்வதிக்கத் துவங்கும்போது யோசேப்பு எப்பிராயீமை யாக்கோபினுடைய இடது கைக்கு நேராகவும், மனாசேயை யாக்கோபின் வலது கைக்கு நேராகவும் விட்டான். ஆனால் யாக்கோபு வேண்டுமென்றே தன் கைகளை மாற்றி தன் வலது கையை எப்பிராயீமினுடைய தலையின் மீதும் தன் இடதுகையை மனாசேயினுடைய தலையின் மீதும் வைத்தான். பழக்கம், சம்பிரதாயம் இவற்றை மீறி தேவசித்தத்தின்படி தான் யாக்கோபு ஆசீர்வதித்தான். அப்படியே நீங்களும் உலகப் பழக்க வழக்கங்கள், சடங்காச்சாரங்கள், சடங்குகள், வழிபாடுகள் இவைகளைத்தள்ளி தேவசித்தம் செய்ய ஆயத்தமாயிருங்கள்.

பிதாவின் வலதுகரம் இஸ்ரவேல் மேலும் இடதுகரம் புறஜாதிகள் மீதும் இருந்தன. ஆனால் சிலுவையில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வலது கரத்தை புற ஜாதியாராகிய நம் மீதும், இடதுகையை இஸ்ரவேலர் மீதும் வைத்தார். ஆகவே நாம் இன்று தேவ பிள்ளைகளாகிறோம்.

**உதிரும் கொடி :** (யோசேப்பின் கடைசி நாட்கள்)

யோசேப்பு நூற்றுப் பத்து வருடம் உயிரோடிருந்தான். தேவனுடைய வார்த்தையின்படி தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டான். யோசேப்பின் மரண நாள் நெருங்கியது. தன் மரண வேளையில் தன் குடும்பத்தாருக்கு நல்ல ஆவிக்குரிய தரிசனத்தைக் கொடுத்தான். யோசேப்பின் வாழ்க்கையில் எத்தனையோ விசுவாச முத்திரைகள் இருந்தபோதிலும், இந்த மரணவேளை மிகப்பிரகாசமான விசுவாச முத்திரை வேளை.

***"தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்திற்குப் போகப் பண்ணுவார் என்றான்."*** (ஆதி. 50: 24)

ஆபிரகாமுக்குக் கர்த்தர் சொன்ன வார்த்தையை யோசேப்பு முழு நிச்சயமாய் நம்பினான். எகிப்திலே வாழ்ந்தாலும் அவன் நம்பிக்கை இஸ்ரவேலில் இருந்தது. மிகப்பெரிய தேசமாகிய எகிப்துக்கு விரோதமாக இஸ்ரவேல் தோன்றும், வளரும் என்ற யோசேப்பின் விசுவாசம் மிகப்பெரியது.

அடுத்து அவன் கூறியது, அவனுடைய விசுவாசத்திற்கு மற்றுமொரு சான்று. ***"தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்றும் சொல்லி, யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான்".*** (ஆதி. 50:25)

மரித்து மண்ணோடுப் போய்விடுவோம் என்று யோசேப்பு சொல்லவில்லை. மரித்தாலும் உயிர்த்து எழுவோம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தான். உயிர்த்தெழும் நாளில் தேவன் வாக்களித்த தேசத்தில் இருந்து தான் உயிர்த்தெழ வேண்டும் என்று அவன் வாஞ்சித்தான். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிற தேவன் மரணத்திலிருந்தும் விடுவிப்பார் என்பதில் உறுதியாயிருந்தான்.

மரணத்தினின்று உயிர்த்தெழுவோம் என்ற விசுவாசம் ஆதி பக்தர்களை விசுவாச வீரர்களாக்கிற்று. இம்மைக்காக மாத்திரம் உள்ள நம்பிக்கை நம்மைப் பரிதாபத்திற்குரியவர்களாகவே மாற்றும். பரலோக நம்பிக்கை நம்மை தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும்.

***''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்''*** என்று கெம்பீரத்தோடு தொடங்கிய ஆதியாகமம், ***“எகிப்திலே ஒரு சவப்பெட்டி”*** என்று துக்கமாய் முடிந்து விட்டது. ஆனாலும் கடைசி நாளில் கர்த்தர் பெட்டியைத்திறப்பார், யோசேப்பு உயிர்த்தெழுவான்.

மீண்டும் வாழ்வோம்; நித்தியமாய் வாழ்வோம் என்ற நம்பிக்கையின் துவக்கத்தோடு, ஆதியாகமம் முடிவடைகிறது. நித்தியம் என்ற நம்பிக்கையின் துவக்கமாகவே நம் வாழ்க்கை அமைய கர்த்தராகிய இயேசு உதவி செய்வாராக!

## இனிவரும் ஆய்வுகள் பற்றி ஓர் முன்னோட்டம்

### "ஆதியாகமமும் தியானமும்"

என்ற நூலிருந்து ஒருசில பக்கங்களையும்.

### "விஞ்ஞானமும் ஆதியாகமமும்"

என்ற நூலிருந்து ஒருசில பக்கங்களையும்

இந்த நூலில் தந்திருக்கிறோம். மேற்கூறப்பட்ட இரு நூற்களும் விரைவில் வெளிவர ஜெபியுங்கள்.

# ஆதியாகமமும் தியானமும்

(ஓர் முன்னோட்டம்)

# விளக்கமும் தியானமும்

(அதிகாரம் - 1)

வசனம் - 1

*"ஆதியிலே..."*

கடவுள் புது துவக்கங்களின் கடவுள். நம் வாழ்வின் துவக்கம் அல்லது ஆதி கடவுளால் ஆரம்பிக்கப்பட வேண்டும். நம்முடைய ஒவ்வொரு முயற்சியின் ஆதியிலே கடவுளின் கரம் இருக்க வேண்டும். கடவுளில்லா ஆதி அல்லது துவக்கம் பாதியில் துக்கமாக முடிந்துவிடும்.

நம்மைச் சுற்றிலுமாய் இருக்கும் மரம், செடி, கொடி, மலர், பழம் மற்றும் நாம் காணும் வாவி, அருவி, கடல் மற்றும் தாரகைகள் கதிரவன், சந்திரன் இவற்றிற்குப் பின்னால் துவக்கத்தில் கடவுளின் மனம், அதில் உருவான சித்தம் இருந்தன. கடவுளின் சித்தமே நம் செயல்களுக்கு ஆதியாக இருக்க வேண்டும்.

**தியானம் :-**

*"பிதாவே, ஒன்றுமே இல்லாத ஆதியில் உமது கரம் இப்பிரபஞ்சத்தை உருவாக்கியது. இயற்கையைக் கண்டு அந்தப் பரவச உணர்வில் உமது கரத்தை நான் மறந்துவிடாதபடி என்னைக் காத்துக் கொள்ளும். இந்த வையகமும் அதன் நிறைவும் உம்முடையன என்பது என் நினைவை விட்டு நீங்காதிருப்பதாக. காலையில் உதித்துவரும் இளஞாயிறைக் கண்டு இரு கரம் கூப்பித் தொழுகிறவன் ஞாயிறைப் படைத்த கடவுளை மறந்தவன். அந்த மறதிக்கு என்னை விலக்கிக் காத்திடும்."*

வசனம் - 2

***"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. கடவுளின்***

*ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.”*

வாழ்க்கை ஒழுங்கின்மையாக இருந்தால் மகிழ்ச்சி, சமாதானம், திருப்தி இவற்றை இழந்து வெறுமையாக இருக்கும். அழகாகப் படைக்கப்பட்ட இந்தப் பூமி சாத்தானிமித்தம் ஒழுங்கின்மையையும் வெறுமையையும் அடைந்தது.

வெறுமையும் ஒழுங்கின்மையும் கடவுளின் நோக்கமல்ல. ஒழுங்கும் நிறைவுமே கடவுளின் நோக்கம். இந்த நோக்கம் தவறியவுடன் உலகை இருள் மூடியது.

**தியானம் :–**

*“கடவுளின் துவக்க காலத்திட்டத்தை ஆத்துமா தள்ளி விட்டால் இருதயம் வெறுமையாகி விடுகிறது. உடனே அது ஒழுங்கீனமாகச் செயற்படுகிறது. தவறான சிந்தனை, தவறான பேச்சு, தவறான செயல் இவ்வாறு மனித வாழ்வு ஒழுங்கீனப் பள்ளத்தாக்கில் விழுந்து விடுகிறது. உடனே கடவுளின் வழியைக் கண்டுகொள்ள முடியாத இருள் மனசாட்சியைப் பற்றிக் கொள்ளவே மனிதன் அந்தகாரமாய் மாறிப்போகிறான்.”*

*‘‘ஆவியானவர் அதன் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.”*

ஒழுங்கின்மையும் வெறுமையுமான உலகத்தைக் கடவுள் அந்த நிலையிலேயே விட்டுவிடவில்லை. ஆவியானவர் உலகத்தின் மேல் அசைவாடினார். எப்படியும் மீண்டும் ஒழுங்கு நிறைவு என்ற ஜீவனைக் கொண்டு வரும்படி ஆவியானவர் உலகின் மேல் அசைவாடினார். அப்படி அவர் அசைவாடாவிட்டால் உலகம் அப்படியே அழிந்துப் போயிருக்கும்.

**தியானம் :–**

*“ஆவியானவரே, நீர் என் ஆத்துமாவில் அசைவாடுவதை நான் உணர முடியாத நிலை எனக்கு வரவே கூடாது. உமது அசைவாடுதலினால் உண்டாகும் மன அதிர்வுகளை என்*

*மனசாட்சியில் நான் உணர எனக்கு உதவி செய்யும். உமது உறுத்தல்களை என் மனது உணர்வதோடு நின்றுவிடாமல் அவைகளின்படி என்னைச் சீர்திருத்த, புதுப்பிக்க எனக்கு உதவி செய்யும்."*

<u>வசனம் - 3</u>

***"தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று."***

கடவுள் முதலாவது இருளை விலக்கினார். இருளைச் சபிப்பதை விட்டுவிட்டு ஒரு விளக்கை ஏற்று என்பது பழமொழி. கடவுளது வார்த்தை அல்லது கட்டளை அப்படியே நிறைவேறிற்று. ***"அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும் என்பது மாறா சத்தியம்."*** (சங். 33 : 6-9) ***"காற்றே, இரையாதே! கடலே அமைதியாயிரு"*** என்றவுடன் அமைதி நிலவியது.

உண்டாக்கும் வல்லமை மட்டும் அல்ல, ஆளுகைச் செய்யும் அதிகாரமுடையது அவருடைய வார்த்தை. ***"லாசருவே, வெளியே வா"*** என்ற கர்த்தரின் வார்த்தை நாலு நாளாய் அழுகிக் கிடந்த பிணத்தையும் எழுப்பியது.

**தியானம் :-**

***"இயேசுவே, உமது வார்த்தையின் மேல் சார்ந்திருக்க எனக்கு உதவி செய்யும். சூழ்நிலைகளின் சத்தம் என்னை அதைரியப்படுத்துகின்றன. பிரச்சனைகளின் கர்ஜனைகள் என்னை நடுங்க வைக்கின்றன. என் ஆத்துமாவோ உமது வார்த்தைகளின் மேல் தாகமாய் இருக்கிறது. உமது வார்த்தை வெளிப்பட்டவுடன் கர்ஜனைகள் அடங்கிவிடும். சுகக்குரல்கள் அமைதியாகிவிடும். உம் வார்த்தையே எனக்கு ஆறுதல்."***

<u>வசனம் - 4</u>

***"வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார், வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்."***

கடவுள் வெளிச்சத்தை நல்லது என்று கண்டார். வெளிச்சம் மறைவிடத்தை அம்பலமாக்குகிறது.

"விபச்சாரக்காரனுடைய கண் மாலை மயங்குகிற வேளைக்குக் காத்திருந்து, என்னை ஒரு கண்ணும் காணமாட்டாதென்று முகத்தை மூடிக்கொள்கிறான். விடியுங்காலமும் அவர்களுக்கு மரண இருள் போல் இருக்கிறது. அப்படிப்பட்டவன் மரண இருளின் பயங்கரத்தோடு பழகியிருக்கிறான்." (யோபு 24:15-17)

**தியானம் :-**

*"பிதாவே, உம்மண்டை வருவதற்கு முன்பு நான் இருளில் அல்ல, இருளாகவே இருந்தேன். ஆனால் இப்பொழுது நான் வெளிச்சமாய் இருக்கிறேன். தொடர்ந்து நான் வெளிச்சத்தின் பிள்ளையாயிருக்க எனக்கு உதவி செய்யும். குன்றின் மேலிட்ட விளக்காக என்னை விளங்கச் செய்யும்."*

<u>வசனம் - 5</u>

***"கடவுள் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார். இருளுக்கு இரவு என்று பெயரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகிய முதலாம் நாள் ஆயிற்று."***

கர்த்தர் ஒரு நாளை இரவு பகல் என இரண்டாகப் பிரித்தார். மனிதனின் கடும் உழைப்பிற்கு பகல் காலத்தையும் இளைப்பாறுவதற்கு இரவு நேரத்தையும் உண்டாக்கினார்.

பொழுது விடிந்தவுடன் மனிதன் வீட்டை விட்டு வெளி உலகிற்கு வருகிறான். பொழுது சாய்ந்து இரவு வேளை வந்தவுடன் விலங்கினங்கள் தங்கள் மறைவிடத்தை விட்டு வெளி உலகிற்கு வருகின்றன. மனிதனும் விலங்கும் தனித்தனியே வாழும்படி கர்த்தர் இந்த ஒழுங்கை உண்டு பண்ணினார்.

**தியானம் :-**

***"இயேசுவே என் சரீரத்தில் பகல் காலம் இருக்கும் மட்டும் நான் முடங்கி படுத்துவிடாமல் உமக்காக ஓடி ஆடி வேலை***

*செய்ய எனக்கு உதவி செய்யும் என் சரீர உறுப்புகளில் இராக்காலம் வருவதற்கு முன் நான் ஞானமாய் நடக்க உதவி செய்யும் கண்ணில் இராக்காலம் வருமுன் வேதத்தை வாசித்துணர உதவி செய்யும் கால்களில் இராக்காலம் வந்து நடக்க முடியாத சூழ்நிலை வருமுன் உமக்காக உழைக்க எனக்கு பகல் காலத்தை இன்னும் கட்டளையிடும்."*

<u>வசனம் - 6</u>

***"பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக்கடவது என்றும் அது ஜலத்தினின்று ஜலத்தை பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்."***

ஆகாய விரிவுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் வெகு தூரம்தான். ஆனாலும் பரலோகத்திற்கும் நரகத்திற்கும் இடையே உள்ள நுழைய முடியாத தூரமல்ல இது. இந்த விரிவு நம்மைப் பிரிக்கும் தடுப்புச் சுவர் அல்ல. நம்மை இணைக்கும் வழியே இது. ஆகாய விரிவு கடவுளின் விரல்களின் வடிவமைப்பு. இந்த விரல்கள் பூமியின் தண்ணீரினின்று ஆகாய விரிவின் தண்ணீரைப் பிரிக்கிறது.

பூமியின் தண்ணீர் எகிப்து தேசத்தைப் போல பாடுகளின் பிரயாசை, கானான் தேசத்தின் தண்ணீர் வானத்தின் மழை. இது மனிதர்களின் பிரயாசத்தின் பலன் அல்ல. பாடுபட்டு சேகரிக்கும் தண்ணீர் பூமியில் பண்டகசாலையில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர். கானான் தேசத்தின் ஆகாய விரிவு நமக்காக கடவுள் உண்டாக்கிய தண்ணீரின் பண்டசாலை.

**தியானம் :-**

*"பிதாவே, எங்கள் வாழ்க்கை பாவத்திற்கு அடையாளமான எகிப்து தேசமாய் இருந்தாலும், எங்கள் பிரயாசங்களை நீர் ஆசீர்வதிக்கிறீர். கடவுளற்றோர், அக்கிரமக்காரர்கள் யாவருக்கும் நீர் உலக நன்மைகளைப் பங்கிடுகிறீர். ஆகவே இம்மைக்கான ஆசீர்வாதங்களை வைத்து*

*நீர் எங்களோடு இருக்கிறீர் என்று எண்ணாமல் ஆவிக்குரிய கண்களினால் உம்மைக் காண உதவி செய்யும்."*

வசனம் - 8

*"தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாளாயிற்று."*

கடவுள் மற்ற நாட்களில் உண்டு பண்ணின எல்லாவற்றையும் நல்லது என்று கண்டார். ஆனால் இரண்டாம் நாளில் தான் உண்டுபண்ணின ஆகாய விரிவை நல்லது என்று காணவில்லை.

ஏனெனில் பரத்திலிருந்து தள்ளப்படப் போகும் சாத்தானின் இருப்பிடமாக, அலுவலகமாக இந்த வானம் இயங்கப் போகிறபடியால் அதனை அவர் நல்லது என்று அழைக்கவே இல்லை.

**தியானம் :-**

*"பிதாவே, என் வாழ்க்கையில் நான் மிகவும் விரும்பியும் அதற்காகப் பிரயாசப்பட்டு இருந்தாலும் நான் விரும்புவதை நீர் தீமையாகக் காண்பீரானால் அதை எனக்கு அனுமதியாதேயும். நீர் இல்லை என்று சொல்வதை ஆமென் என்று நான் ஏற்றுக்கொள்ள என்னைத் தைரியப்படுத்தும்."*

வசனம் - 9 - 12, 21, 24, 25

*"அந்தந்த ஜாதியின்படியே..."*

கடவுள் ஒழுங்கின் கடவுள். அவரது படைப்பிலிருக்கும் ஒழுங்கு சிருஷ்டிகள் தானாகவே உண்டானவை அல்லவென்றும் அவை ஒருவராலே படைக்கப்பட்டவை என்பதையும் புலப்படுத்துகிறது. உயிருள்ள, உயிரற்ற படைப்புகளிலும் ஓர் ஒற்றுமை இருப்பதால் அவை சிருஷ்டிகரின் கரத்தினால் உருவானவை என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன.

சூரியக்கிரணம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தெரியும் என்பது விஞ்ஞானத்தின் சரியான கணக்கு. இப்படி இயற்கை ஒரு ஆணையில் இயங்குவது ஆண்டவனின்

கட்டளை தானே! ஆகவே கடவுளின் கட்டளையால், வார்த்தையால் உலகம் இயங்கக் காரணம், இந்தப் பிரபஞ்சமே அவரது வார்த்தையால் உருவானதே.

**தியானம் :-**

*"பிதாவே, சர்வ வல்லமையுள்ள உமது வார்த்தையே என்னைச் சுற்றிலுமாய் இருக்கும் பிரபஞ்சத்தைப் படைத்திருக்கிறது. அவை உமது புகழை, வல்லமையை வெளிப்படுத்துகின்றன. ஆகவே உம் சித்தத்தை அறிய, உம் மெல்லிய சத்தத்தைக் கேட்க என் செவிகளை நீர் கூர்மையாக்கும். ஆமென்."*

<u>வசனம் - 22</u>

***"தேவன் அவற்றை ஆசீர்வதித்தார்."***

மிருக ஜீவன்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். சாத்தான் நிமித்தம் பூமி சபிக்கப்படும்வரை எல்லாமே பூமியில் ஒழுங்காகவே இருந்தன. இன்றோ சாபத்தின் விளைவாக இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. (ரோ. 8:23)

மிருகங்கள் இன்று படும் பாடு, வேதனை இவைகளினின்று விடுதலை பெற கர்த்தரின் இரண்டாம் வருகையை எதிர்பார்க்கின்றன. அவர் மீண்டும் வந்த பிறகு அவர் ஆட்சியில், பசுவும் கரடியும் கூடி மேயும்; ஓநாய் ஆட்டுக்குட்டியோடு படுத்துக் கொள்ளும்; கன்றுக் குட்டியும் பால சிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும்.

**தியானம் :-**

*"பிதாவே, இயேசுவே, உமது ஆட்சியில் கொடிய மிருகங்கள் கூட குணமாறி அமைதியாயிருக்குமே! ஆறறிவு உடைய நாங்கள் மனிதர்களுக்கு விரோதமாக மாறி கொடிய மிருகங்களைவிட பயங்கரமாய் பட்சிக்கிறோமே! உமது ஆவியில் நாங்கள் தங்கியிருந்து ஓநாய் மந்தையில் ஆடுகளைப் போல் நாங்கள் இரையாகிப் போனாலும், சாவிலும் எங்கள் அமைதியை, பொறுமையைக் காட்ட உதவி செய்யும்."*

வசனம் - 26

*"பின்பு தேவன் மனுஷனைத் தமது சாயலாகவும் தமது ரூபத்தின் படியேயும்..."*

கடவுள் ஆவியாயிருக்கிறார்; அவருக்கு ரூபமொன்றில்லை. ஆகவே மனிதன் சரீர அளவில் கடவுளின் சாயலில் உருவாக்கப்படவில்லை. கடவுளுக்கு ஆவிக்குரிய ஒரு ரூபம் உண்டு. அதுதான் திரித்துவம்.

கடவுள் அன்பாக இருக்கிறார் என்பது ஒரு தத்துவம். ஒன்றுமே படைக்கப்படாத நிலையில் கடவுள் யார் மீது அன்பாக இருக்கிறார்? ஒன்றிற்கு மேற்பட்ட ஆள்தத்துவத்தில் கடவுள் இருந்தால் கடவுள் தமக்குள்ளே அன்புடையவராக இருக்க முடியும். பிதா குமாரனில், குமாரன் ஆவியானவரில், ஆவியானவர் பிதாவில் என்று கடவுள் அன்பு கூரமுடியும்.

ஆகவே கடவுளின் ரூபம், திரித்துவம். மனிதனும் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று தன்மைகளோடு படைக்கப்பட்டான். கடவுளின் சாயல் பரிசுத்தம், நீதி, இரக்கம். இவைதான் கடவுளின் சாயல் இந்தச் சாயலில்தான் ஆதாம் படைக்கப்பட்டான்.

**தியானம் :-**

*"பிதாவே, நீர் என்னில் உண்டாக்கிய திரித்துவம் உமது சிருஷ்டிப்பின் ஒழுங்கை மீறி விடக்கூடாது. என் சரீரம் என் ஆத்துமாவை ஆளக்கூடாது. என் சுய ஆவி ஆத்துமாவை ஆளக்கூடாது. என் ஆவி, ஆத்துமா, சரீரம் இவை மூன்றும் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்பட்டிருந்தால் உருவாவதே தேவசாயல். ஆமென்."*

வசனம் - 28

*"நீங்கள் பலுகிப் பெருகுங்கள்."*

நீங்கள் பெருகுவீர்கள் என்பது கர்த்தரின் வாக்குத்தத்தம். தன் பிள்ளைகள் பலுகிப் பெருகி நிறைவோடு இருக்க வேண்டும் என்பதே நம்மைப் பற்றிய கடவுளின் சித்தம்.

இலை, பூக்கள் என்று நிறைய இருந்தும் கனி இல்லாதிருப்பது மிகப் பரிதாபம். அதுபோல ஆதாம், ஏவாளுக்கும் பிள்ளைகளே இல்லாதிருந்தால் மனுக்குலம் துவக்கத்திலேயே தன் முடிவை அடைந்திருக்குமே.

ஆவிக்கேற்றபடி நாம் பலுகிப் பெருக வேண்டுமெனில் கிறிஸ்துவில் நாம் தங்கியிருக்க வேண்டும்

**தியானம் :-**

***"ஆண்டவரே, நான் இரட்சிப்பின் ஆரம்ப நிலையிலேயே இருந்துவிடாமல் ஆவியின் கனி நிறைந்தவனாக இருக்க நீர் எனக்கு உதவி செய்யும். கனி இல்லாத என் வாழ்க்கை கிறிஸ்துவே உமக்கு அவமானத்தைக் கொடுக்குமே! கனி கொடுக்க என்னை வெட்டித் திருத்தும். என்னை வெட்டித் தீர்த்து விடாதேயும்."***

<u>வசனம் - 31</u>

***"அவர் எல்லாவற்றையும் நல்லது என்று கண்டார்."***

படைப்பில் எதுவும் தீமையாக இருக்க முடியாது. படைப்பில் லூசிபர் நல்லவன். நாளடைவில் அவன் பிசாசாக மாறினான். அழகான ரோஜா மலர் நல்லது. புழுக்கள் அந்த மலரை அரித்துவிடும் என்பது கடவுளின் சட்டம். இந்தச் சட்டமும் நல்லது. இதை நாம் ஒத்துக் கொள்வது நல்லது. கடவுள் நம் வாழ்வில் அனுமதிக்கும் எல்லாமே நல்லதுதான்.

**தியானம் :-**

*"ரோஜா எப்படி நல்லதோஅப்படியே அந்த மலரில் இருக்கும் முள்ளும் நலமானது என்பதைக் காண பிரகாசமான மனக்கண்களைத் தருவீராக. ஆமென்!"*

# விஞ்ஞானமும் ஆதியாகமமும்

(ஓர் முன்னோட்டம்)

# விஞ்ஞானமும் ஆதியாகமமும்

(அதிகாரம் - 1)

"ஆதியாகமம் விஞ்ஞானத்திற்கு முரண்பட்டது. ஆகவே ஆதியாகமத்தை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று சிலர் தர்க்கம் செய்கின்றனர். விஞ்ஞானம் என்பது எங்கோயிருந்து பூமிக்கு அனுப்பப்பட்ட அற்புதம் அல்ல. உண்மைகளை ஆராயும் மனித முயற்சியே விஞ்ஞானம். வேதம் பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளைக் கொண்டது.

மனிதன் அவ்வளவு எளிதாக ஆவியானவர் வெளிப்படுத்தும் உண்மைகளை ஏற்றுக் கொள்வதில்லை. அதாவது மனிதன் தான் கண்டுபிடித்த உண்மைகளை, ஆவியானவர் வெளிப்படுத்தும் உண்மைகளைவிட மேலானவை என்றே எண்ணுகிறான். முந்நூறு வருட கால வளர்ச்சி பெற்று வரும் விஞ்ஞான முயற்சியின் வெற்றியினால் பாதிக்கப்பட்டுள்ள கலாச்சார யுகத்தின் காலத்தில் நாம் வாழ்கிறோம்.

கொலை செய்வது தவறு. ஏனென்றால் அது சமுதாயத்தை நிலைகுலையச் செய்து சமுதாயத்தைத் தொந்தரவுப் படுத்துகிறது என்று சமூகவியல் விஞ்ஞானி தர்க்கம் செய்யலாம். ஆனால் நல்ல சமுதாயமாக இருப்பது என்பது எவ்வாறு?

கடவுள் இல்லை என்று சொன்னால் பின்னர் மனித வாழ்வில் ஒழுக்க நெறிகளை வலிறுத்துவதற்கான அடிப்படையே அற்றுப் போய் ஒழுக்க நெறிகள் அர்த்தமற்றவையாய்ப் போய்விடும் என்று நாத்தீக தத்துவ ஞானி கூறுகிறான். ஆகவே அவன் கடவுள் இல்லை என்றாலும் கடவுள் தேவை என்கிறான்.

வெளிச்சம் எப்படி உண்டாகிறது என்று விஞ்ஞானி கூற முடியுமே தவிர, அது சுமந்து வரும் செய்தியைப் பற்றி ஒன்றும் கூற இயலாது. "ஒரு பெரிய சமய இயக்கத்தின் அதிகாரப்பூர்வமான குழந்தைதான் விஞ்ஞானம். அந்த வம்ச வரலாறு இயேசு கிறிஸ்துவிடமிருந்து ஆரம்பிக்கிறது." (Prof. Mac Murray)

உலகம் எத்தனையோ சிறந்த நாகரீகங்களை அறிந்திருந்தாலும் நவீன அறிவியல் ஏன் மத்திய காலத்தின் கடைசியில் கிறிஸ்தவ ஐரோப்பாவில் தோன்றியது?

ஆதி. 1 : 26, 27 ன்படி மனிதர்கள் கடவுளுடைய ரூபத்தின் படியும் சாயலின்படியும் படைக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலம் கடவுளுடைய மனதின் பிரதிபலிப்புதான் தங்கள் மனம் என்று உணர்ந்த ஆதி விஞ்ஞானிகள் தாங்கள் கடவுளுடைய படைப்பையும் அவரது இயற்கை விதிகளையும் அறிந்து கொள்ள முடியும் என்ற நிச்சயத்தைப் பெற்றனர்.

## விஞ்ஞானம் எல்லாவற்றையும் விளக்கிக் கூறமுடியாது.

உலகத்தின் தோற்றம், சூரிய குடும்பத்தின் தோற்றம், பூமியில் உயிரினங்களின் தோற்றம் இவைகளைப் பற்றிய கொள்கைகள் நவீன விஞ்ஞானத்தில் உள்ளன. கடவுளைப் பற்றி எதுவும் குறிப்பிடாமலேயே உலகப் பிரகாரமாகவே இவைகள் விவரிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கொள்கைகள் வரும் போகும். சில சமயங்களில் பெரும் மாற்றத்தைக் கூட சந்தித்திருக்கின்றன.

## விஞ்ஞானிகள் கூற்று உண்மை, வேதம் தவறானது. அப்படியா?

சில கிறிஸ்தவர்கள் கூட ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள் சிலவற்றை இக்கண்ணோட்டத்தில் படித்து விட்டு வேதம் கர்த்தருடைய வார்த்தை என்பதை விட்டுவிட்டனர்.

விஞ்ஞானிகளின் கூற்றுதான் சரி, வேதத்திற்கு நாம் தரும் விளக்கம் தவறானதே என்கிறார்கள். அப்படியே வைத்துக் கொண்டாலும் நமது விளக்கம் தானே தவறானது, வேதமில்லையே.

நாலாம் நாளில் சூரியன் படைக்கப்பட்டிருந்தால் முதல் மூன்று நாட்களில் வெளிச்சம் எப்படி வந்தது? சூரியன் இல்லாமல் காலையும் மாலையுமாகி முதலாம் நாளாயிற்று. காலையும் மாலையுமாகி இரண்டாம் நாளாயிற்று. காலையும் மாலையுமாகி மூன்றாம் நாளாயிற்று என்று சொல்வதினால் முதல் நாளிலே சூரியன் உண்டாயிருக்க வேண்டும். இல்லையெனில் எப்படி காலை மாலையுமாகும் என்ற கேள்வி விஷ்வரூபமெடுத்து நிற்கிறது.

விஞ்ஞானம் இப்பொழுது சொல்கிறது, சூரியன் மாத்திரமே வெளிச்சம் கொடுப்பதில்லை. பூமியும் குறைந்த பட்சம் மற்றொரு கோளமும் தானாகவே ஒளிர முடியும். (ஆதாரம் : Earths Earliest Ages Pepper)

வெளிச்சம் ஒரு பொருளல்ல, அதனை உண்டாக்க முடியாது. கடவுள் ஒளியாயிருக்கிறார். அவருடைய ஒளி பூமியில் விழுவதாக என்பதுதான் வெளிச்சம் உண்டாகக்கடவது என்பதின் பொருள். சூரியன் இல்லாமலே கடவுளால் வெளிச்சத்தையும் இருளையும் உண்டாக்க முடியும்.

அப்படியாயின் கடவுள் ஏன் சூரியனைப் படைத்தார் என்ற கேள்வி எழுகிறது. வெளிச்சம் உண்டாகக்கடவது என்றவுடன் முழு பூமியும் பிரகாசம் அடைந்தது. (வசனம் 3) இதன்பின் வெளிச்சம் ஒரு குறிப்பிட்ட நிலையில் விழும்படிச் செய்தார். (Concentrating the source of light at a given point) இப்படியாக வெளிச்சத்தையும் இருளையும் பிரித்தார். ஆகவே பூமியின் ஓர் பாதி வெளிச்சமாகவும் ஓர் பாதி இருளாகவும் இருந்தது. அப்படியாயின் வெளிச்சமான ஓர் பாதி எப்பொழுதும் வெளிச்சமாகவும் இருளான ஓர் பாதி எப்பொழுதும் இருளாகவே இருக்கும்.

சூரியன், சந்திரன் இவற்றைக் கடவுள் ஆகாய விரிவிலே வைத்தார். (God set them on the fourth day) அதாவது சூரியனைப் பூமிக்கு ஏற்றவாறு கடவுள் ஆகாய விரிவிலே பொருத்தினார். பூமி 23 டிகிரி சாய்வாக அமைந்து சுழல ஆரம்பித்தது. சூரியன், சந்திரன்,

நட்சத்திரங்கள் அடையாளங்களாகவும் காலங்களையும், நாள்களையும், வருடங்களையும் குறிக்கிறதற்காக இருக்கக்கடவது என்றார். (ஆதி. 1 : 14) ஆகவே பூமியில் வெளிச்சமும் இருளும் மாறி மாறி வந்தன.

மிகச் சிறந்த வான சாஸ்திரியான ஜோஹான் ஹெப்லர் கூறுகிறார், ஆதியில் சூரியன் சுழற்சியின் மையத்தில் இல்லை. (The Sun was not in the centre of Earth orbit) மற்றொரு வான சாஸ்திரி டிம்பிளே தன்னுடைய Date of Creation என்ற நூலில் கூறுகிறார், நாலாவது நாளில் தான் சூரியன் இப்பொழுதுள்ள ஓடு பாதையில் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த நாலாம் நாளிலிருந்து மனுஷனால் காலை, மாலை, நாள், மாதம், வருடம் இவற்றைக் கணக்கிட முடியும்.

## ஆரம்ப சிருஷ்டிப்பும் விஞ்ஞானமும்

| ஆதியாகமம் கூறும் வரிசை | விஞ்ஞானம் கூறும் வரிசை |
|---|---|
| பூமி வானம் | பொருள் |
| வெளிச்சம் | வெளிச்சம் |
| பசுமை | பசுமை |
| நீர் வாழ்வன | நீர் வாழ்வன |
| நிலம் வாழ்வன | நிலம் வாழ்வன |
| மனிதன் | மனிதன் |

விஞ்ஞானமும் மனிதன் கடைசியில் தான் தோன்றினான் என்பதை ஒத்துக் கொள்கிறது. ஆதி. 1 : 11 ன்படி புல், பூண்டு, செடி, கொடி இவை உண்டாயின என்று இந்தப் பசுமையினால் காற்றில் பிராணவாயு உண்டாகுகிறது என்று விஞ்ஞானம் சொல்கிறது. பிராண வாயு உண்டான பின்பே உயிரினங்கள் உண்டாக்கப்பட்டன என்பது விஞ்ஞான உண்மைக்கு மிகவும் ஒத்திருக்கிறது.

## The Succession of life through Geological Time British Museum Book தரும் சில குறிப்புகள்.

1. பூமி, சூழ்ந்திருக்கும் வெப்ப வாயுவில் ஆரம்பித்து தண்ணீர் நிலையை அடைந்திருக்கும். பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது.

2. பூமி நீண்ட காலமாக அடர்த்தியான நீராவியினால் சூழ்ந்திருந்தது. ( பூமியின் ஆழத்தின் மேல் இருள் இருந்தது )

3. பூமியின் மேற்பாகம் குளிர்ச்சியடைந்து நீராவி மழையாகப் பெய்யவே ஆறுகள், கடல்கள் உருவாயின. ( ஜலத்தினின்று ஜலத்தைப் பிரித்தார். )

4. கடவுள் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடம் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். (ஆதி. 1 : 9) விஞ்ஞானம் கூறுகிறது, ஆரம்பத்தில் முழு உலகமும் ஒரு கண்டமாக இருந்தது, பின்பு அது இப்பொழுதிருக்கும் பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ( பேலேகுவின் நாள்களில் பூமி பகுக்கப்பட்டது. ) (ஆதி. 10 : 25)

## பறவைகள், விலங்குகள்

தங்கள் தங்கள் ஜாதியின்படியே (Kind) தோன்றக்கடவது என்றார். அப்படியே உயிரினங்கள் தோன்றின. ஒரு இனம் மற்றொரு இனமாக மாறுவதில்லை என்று விஞ்ஞானம் ஒத்துக் கொள்கிறது. மேலும் உயிரினங்கள் படிப்படியாக வளர்ந்து இன்றைய நிலையை அடையாமல் முழு நிலையிலேயே ஆரம்பத்தில் இருந்தன என்றும் விஞ்ஞானம் கூறுகிறது. ஆகவே அவை திடீரென்று படைக்கப்பட்டன என்பது வேத சத்தியமே.

# எங்கள் வெளியீடுகள்

## ஒலி நாடாக்கள்

## Live VCD & DVD தேவசெய்திகள்

பாதைமாறிய புறா

(வழிதப்பிய தீர்க்கன் யோனாவின் வரலாறு)

அந்நிய பாஷையின் தெளிவு

ஆவிக்குரிய பிரசங்க மேடை

எதிர்த்து வரும் ஏவுகணைகள்

# எங்கள் ஊழியங்கள்

- திங்கள் ஒருமுறை பரலோக அக்கினியாய் வெளிவரும் "சத்திய முழக்கம்" பத்திரிகை
- மூடத்தனத்தின் முடைநாற்றம் நீங்கிட இருமாதங்களுக்கு ஒரு முறை மலரும் "இரட்சண்ய மலர்"
- இல்லங்கள் தோறும் வழங்க நற்செய்தி கைப்பிரதிகள் வெளியிடுவது
- ஆண்டுக்கு இருமுறை "சத்திய முழக்கக் கூட்டங்கள்"
- ஊழியப் பயிற்சியும் கருத்தரங்குகளும்
- இளையத் தலைமுறையை இரட்சிப்பின் இலட்சியத்திற்கு அழைத்துவரும் அறைகூவல் கூட்டங்கள்